**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY THIRUNELVELI- 627012**

**DDE, DEPARTMENT OF HISTORY**

# HISTORY OF EUROPE (1789 A.D – 1945 A.D)- Tamil

**Study Material Prepared by**

**Dr. D. Latha Kumari, MA, M.Phil, B.Ed, Ph.D**

**Assistant Professor (T), Department of History**

**MS University, Tirunelveli- 12.**

## HISTORY OF EUROPE (1789 A.D – 1945 A.D)

**Unit I:**

French Revolution - Causes, Course and Results - Rise of Napoleon Bonaparte - Napoleonic Wars - Continental System - Domestic reforms - Causes for the failure of Napoleon.

**Unit II:**

Vienna Congress - Holy Alliance - Concert of Europe - Metternich System – Charles X - Revolution of 1830 and 1848 - Napoleon III.

**Unit III:**

Unification of Italy- various stages - Unification of Germany - Role of Bismarck in the Unification of Germany.

**Unit IV:**

Eastern Question - Greek War of Independence - The Young Turk Movement - The Crimean War - Balkan Wars.

**Unit V:**

First World War - Treaty of Versailles - League of Nations - The Russian Revolution of 1917 - Lenin - Fascism in Italy - Nazism in Germany - Second World War - Formation of UNO.

**Reference Books:**

1. A.J.Grant, *Europe in the Nineteenth and Twentieths Centuries*, 1789 - 1950, Longman Publications, London, 1980.

2. H.A.L. Fisher, *A History of Europe,* Vol. II, Surject Publications, Delhi, 1994.

3. B.V. Rao, *History of Europe,* Sterling Publishers, New Delhi, 2002.

4. J. Dharmaraj, *History or Europe*, 1789 to Present day (Tamil) Tensy Publications, Sivakasi, 2014.

5. S.P. Nanda, History of Modern Europe and the World, Anmol Publications, New Delhi, 2000.

# History of Europe (1789-1945 A.D.)

## பிரஞ்சுப் புரட்சிக்கு முன் ஐரோப்பிய நிலை

## (Europe on the eve of Franch Revolution)

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்புள்ள காலம் மன்னராட்சிக்காலம் என்றும், புரட்சிக்குப் பின் உள்ள காலம் மக்களாட்சிக்காலம் என்றும் கூறப்படுகிறது. இந்த இரண்டு காலங்களையும் பிரித்துவைக்கும் எல்லைக் கோடாக பிரெஞ்ப் புரட்சி விளங்குகிறது. (French Revolution is the dividing line between the age of kings and the age the people) புரட்சிக்கு முன்பு ஐரோப்பிய நாடுகள் எல்லாமே மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்கள் 'அரசர்களின் தெய்வீக உரிமைக் கொள்கைப்படி' ஆட்சி செய்தார்கள். மக்களுக்கு அரசாங்கத்தில் எந்தப்பங்கும் கிடையாது. எந்த உரிமைகளும் கிடையாது. ஆனால் பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக ஐரோப்பாவில் பல நாடுகளில் அரசர்களின் ஆட்சி தூக்கி எறியப்பட்டு மக்களாட்சி முறை ஏற்பட்டது. ஜனநாயகக் கருத்துக்களும் தேசியக் கருத்துக்களும் வேகமாகப் பரவின. ஒரு சில நாடுகளில் பழைய அரசர்களே ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தாலும் அவர்கள் மக்களின் விருப்பப்படியே ஆட்சி புரிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

பதினைந்தாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, மதசீர்திருத்தம் ஆகியவைகளின் விளைவாக ஐரோப்பிய அரசியலில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இடைக்கால ஐரோப்பாவில் காணப்பட்ட போப்பாண்டவரின் செல்வாக்கும், திருச்சபையின் அதிகாரங்களும் குறைக்கப்பட்டன. இதன் விளைவாக மன்னர்களின் அதிகாரம் உயர்ந்தது. மன்னர்கள் அரசாங்கத்தின் தலைவர்களாகவும் சமயத்தின் தலைவர்களாகவும் மாறினர். தேய்வீக உரிமைக் கோட்பாடும், வல்லாட்சி முறையும் சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தது. புதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் பல நாடுகளில் 'ஒளியூட்டும் வல்லாட்சி முறை'(Enlightened Despotism) என்ற முடியாட்சி முறை தோன்றியது.

இங்கிலாந்தில் எட்டாம் ஹென்றி, முதலாம் எலிசபெத், பிரான்சில் 14-ம் லூயி, ரஷ்யாவில் மகாபீட்டர், இரண்டாம் காதரீன், பிரஷ்யாவில் மகாபிரடரிக், ஆஷ்திரியாவில் மரியதரசா, இரண்டாம் ஜோசப் ஆகியோர்கள் ஒளியூட்டும் வல்லாட்சியாளர்கள் வரிசையில்

குறிப்பிடத்தக்கவர்கள். நல்லெண்ணம் கொண்ட இந்த அரசர்களிடம் எல்லா அதிகாரங்களும் சேர்ந்ததனால் நன்மைதரும் வகையில் பல மாறுதல் ஏற்பட்டன. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு இந்த ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட பொதுவான நிலை பற்றி இனி காணலாம்.

**பிரஷ்யா (Prussia):**

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு பிரஷ்யாவில் மகாபிரடரிக் (1740-1786) சிறந்த ஆட்சியை நடத்தி வந்தார். இவருடைய ஆட்சிவல்லாட்சியாக விளங்கிய போதிலும் நாட்டு நலனிற்கும், மக்களின் வாழ்க்கைக்கும் ஒத்த வகையில் ஆட்சியை அமைத்துக் கொண்டார். இங்கு ஆடம்பரங்களும், சடங்குகளும் இல்லை. அரசாங்கத்தில் மன்னர் கடுமையாக உழைக்கும் வேலைக்காரராக இருந்தார். மன்னர் கடினமான வேலைகளைத் தான் மேற்கொண்டதோடு, தன் நாட்டிலுள்ள மக்களையும் கடுமையான வேலைகளைச் செய்ய ஏவினார். நாட்டின் பொது நலத்தையே எல்லோரும் ஒரே நோக்கமாகக் கொள்ள வேண்டியதிருந்தது. மகாபிரடரிக 'அறிவு வளர்ச்சி இயக்கத்தின்' அடிப்படையில் முற்போக்குக் கொள்கைகளை பிரஷ்யாவில் செயல்படுத்தினார். இவர் காலத்தில் பிரஷ்யப்படை ஐரோப்பாவிலேயே தலைசிறந்த படையாக இருந்தது மட்டுமின்றி, ஐரோப்பிய நாடுகளுக்கே ஒரு எடுத்துக்காட்டாகவும் விளங்கியது. ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் (1740-58), ஏழாண்டுப் போர் (1756-63), போலந்துப் பிரிவினை (1772) ஆகியவற்றின் மூலமாக பிரஷ்யாவின் பரப்பு ஐரோப்பாவில் இரு மடங்காக விரிவடைந்தது. இந்த பிரஷ்யாவின் தலைமையில்தான் பின்னர் ஜெர்மானிய இணைவு எற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு பிரஷ்யா ஐரோப்பாவில் ஒரு வல்லரசு என்று கருதப்படும் நிலையை அடைந்திருந்தது.

**இங்கிலாந்து (England) :**

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு இங்கிலாந்து ஒரு பெரிய குடியேற்றப் பேரரசிற்குச் சொந்தமாக இருந்தது. அப்போது மூன்றாம் ஜார்ஜ் (1760-1820) இங்கிலாந்தின் மன்னராக இருந்தார். இங்கிலாந்து தனது குடியேற்ற நாடுகளிடம் 'பழைய குடியேற்றக் கொள்கை' களையே (old colonial policy) பின்பற்றி வந்தது. இக்கொள்கையின்படி 'குடியேற்ற நாடுகள் தாய்நாட்டின் உடமைகளே. தாய் நாட்டின் நலன்களைக் கருத்தில் கொண்டே குடியேற்ற நாடுகளில் ஆட்சி செய்தல் வேண்டும்'என்ற முறை இருந்தது. இங்கிலாந்து இக்கொள்கையை தனது குடியேற்ற நாடுகளில் ஒன்றான அமெரிக்காவிலும் பின்பற்றியது.இதன் விளைவாக அமெரிக்காவிலுள்ள பதிமூன்று காலனிகள் இங்கிலாந்தை எதிர்த்து 1774-ல் சுதந்திரப் போரை ஆரம்பித்தன. இந்த போரில் பிரான்ஸ் பதிமூன்று காலனிகளை ஆதரித்தது. போரின் இறுதியில் இங்கிலாந்து தோற்கடிக்கப்பட்டு அமெரிக்க

ஐக்கிய நாடுகள் சுதந்திரமடைந்தன. வல்லாட்சி முறையையும், அடக்கு முறையையும் எதிர்த்து அமெரிக்க மக்கள் பெற்ற வெற்றி ஐரோப்பிய மக்களின் சிந்தனையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. தேசிய உணர்வு, மக்களாட்சி முறை, அடிப்படை உரிமைகள் ஆகிய கருத்துக்கள் ஐரோப்பிய நாடுகளில் பரவின. இக்கருத்துக்களே பிரெஞ்சுப் புரட்சி ஏற்படவும் ஒரு காரணமாக அமைந்தது.

**ரஷ்யா(Russia) :**

ரஷ்யப் பேரரசி இரண்டாம் காதரீன் (1762-1796) சிறந்த வல்லரசியாக விளங்கினார். பீட்டரின் கொள்கைகளை அப்படியே பின்பற்றி ரஷ்யாவைச் சிறந்த வலிமைமிக்க நாடாக்க அயராது உழைத்தார். அவரது ஆட்சியில் ரஷ்யா ஒவ்வொரு துறையிலும் பீடு நடைபோட்டது. இவர் தன்னுடைய குறிக்கோளை அடைய அறநெறி ஒழுக்கங்களைக் காற்றில் பறக்கவிட்டார். 1772, 1793, 1795-ம் வருடங்களில் நடைபெற்ற போலந்துப் பிரிவினையே இதற்கு சான்று. போலந்து பங்குபோடப்பட்டதன் விளைவாக ரஷ்யாவின் எல்லை பிரஷ்ய, ஆஸ்திரிய நாடுகளின் எல்லைகட்கு அருகே வந்துவிட்டது. இதனால் ரஷ்யா நிலவியல் ரீதியாக ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாகக் கருதப்படுவதற்கான தகுதியைப் பெற்றது. ரஷ்யாவின் இந்த பெரும் வளர்ச்சி ஸ்வீடன், போலந்து. துருக்கி ஆகிய நாடுகளின் வளர்ச்சியை மிகவும்பாதித்துவிட்டது. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு ரஷ்யா ஐரோப்பிய அரசியலில் முக்கியப் பங்கை ஆற்றும் அந்தஸ்தை அடைந்திருந்தது.

**ஆஸ்திரியா (Austria) :**

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு ஆஸ்திரியா ஹாப்ஸ்பர்க் வம்ச அரசரான இரண்டாம் ஜோசப் (1740-1790) என்பவரால் ஆளப்பட்டு வந்தது. ஜோசப் புதுமையில் அளவு கடந்த மோகமும், பற்றும் கொண்டவர். பகுத்தறிவு, முற்போக்குச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். ஐரோப்பாவில் அப்போது நிலவிய முற்போக்குக் கருத்துக்களால் கவரப்பட்டவர். சம்பிரதாயம் சிறப்புரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இயங்கிவந்த நிறுவனங்கள், சட்டங்கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அடியோடு ஒழித்து பகுத்தறிவுக்கு ஒத்த அமைப்புகளை நிறுவவேண்டுமென விரும்பினர். ஆனால் நாட்டிலிருந்த பிரபுக்களும், சமயவாதிகளும் வணிகக் கோமான்களும் இவரது கொள்கைகளையும் சீர்திருத்தங்களையும் எதிர்த்தனர். எனவே இவரது திட்டங்கள் தோல்வியடைந்தன. பிரெஞ்சுப் புரட்சியின் போது ஆஸ்திரியப் பேரரசு அதிகமான கிளர்ச்சிகளாலும், குழப்பங்களாலும் புளித்துப் பொங்கும் நிலையினைப் போன்றிருந்தது.

**இத்தாலி (Italy):**

பிரெஞ்சுப் புரட்சியின் போது இத்தாலி ஒரு வெறும் ‘‘நிலவியல் சொல்லாகவே’’(Geographical expression) இருந்தது. ஆத பல நாடுகளாகப் பிளவுபட்டு

வலிமை குன்றியிருந்தது. முதலில் ஸ்பானிய நாட்டின் ஆதிக்கம் இருந்தாலும் ஸ்பானிய வாரிசுரிமைப் போருக்குப் பின்பு (1702-1713) இத்தாலியில் ஸ்பானிய ஆதிக்கம் ஒழிந்து ஆஸ்திரியாவின் ஆதிக்கம் மலர்ந்தது. இத்தாலியில் தனது செல்வாக்கை நிலை நாட்டும் வகையில் முனைந்து நின்றது. வருங்காலத்தில் இத்தாலியைத் தனது தலைமையின் கீழ் இணைப்பதற்குத் தேவையான வலுவினைப் பெற்றுத்திகழ அது தன்னைப் பலவகையிலும் பக்குவப்படுத்தி வந்தது.

**பிரான்ஸ் (France) :**

14-ம் மன்னர் (1643-1715) காலத்தில் பிரான்ஸ் ஐரோப்பாவில் புகழிலும் வலிமையிலும் உச்சநிலையிலிருந்து ஐரோப்பிய நாகரிகத்தின் தலைவியாக விளங்கியது. ஆனால் 14-ம் லூயி செய்த இடைவிடாத, பொருளற்ற போர்களால் சுமார் இருபது ஆண்டுகள் ஐரோப்பாவே ரத்தக்காடானது. போர்களினால் பொருளாதாரச் சிக்கல் தோன்றின. படைச் செலவைச் சரிகட்ட மக்கள் மீது தாங்க முடியாத வரி விதிக்கப்பட்டது.மன்னரின் ஆடம்பரச் செலவுகளால் இந்த வரிப்பளு மேலும் அதிகமானது. 1715-ல் அவர் இறந்த போது தேசக்கடன் தேசவருமானத்தைவிட பதினாறு மடங்கு அதிகமாக இருந்தது. இந்தப் பொருளாதாரச் சீர்கேட்டை அவருக்குப்பின் பதவிக்கு வந்த 15-ம் லூயி மன்னரால் தீர்க்கப்பட முடியவில்லை.

**புதினைந்தாம் லூயி (Louis XV, 1715-1774)**

புதினான்காம் லூயிக்குப் பிறகு பதினைந்தாம் லூயி 1715-ல் பிரெஞ்சு அரியணை ஏறினார். இவர் பதினான்காம் லூயியின் மகன் டாபின் (Dauphin) என்பவரின் மகனான பர்கண்டி கோமகனின் (Duke of Burgundy) மகன் ஆவார். அதாவது பதினான்காம் லூயியின் கொள்ளுப் பேரன். இவர் அரியணை ஏறிய போது வயது ஐந்து! எனவே இவரது மாமன் ஆர்லியன்ஸ் கோமகன் பிலிப் பதிலாட்சி புரிந்தார். 1743-ல் அதிகாரத்தை நேரடியாக ஏற்றுக் கொண்டார் பதினைந்தாம் லூயி. இவர் ஒரு திறமையற்ற மன்னர். சுகபோக இன்ப வாழ்க்கையாலும், திறமையின்மையாலும் மக்களுக்கு மன்னரிடத்திலிருந்த மதிப்பும், மரியாதையும் குலைந்தன. இவருடைய ஆட்சிக்காலத்தில் பிரான்ஸ் நாட்டின் பெருமையும், புகழும் மங்கியது.

**ஆர்லியன்ஸ் கோமகன் ஆட்சி (1715-1723)**

பதினைந்தாம் லூயி பதவியேற்றபோது அவருக்கு வயது ஐந்து. எனவே அவருடைய மாமா ஆர்லியன்ஸ் கோமகன் பிலிப் என்பவர் 1715 முதல் 1723 வரை காப்பாளராக பதவியேற்று ஆட்சி நடத்தினார். பதினான்காம் லூயியின் ஆடம்பரச் செலவுகளும் ஐரோப்பியப் போர்களும் நாட்டின் நிதி நெருக்கடியை எற்படுத்தின. எனவே பொருளாதார நிதித்துறைகளைச் செப்பனிட்டு அமைக்க

வேண்டியது,உடனடியாகமேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாகும். இவருடைய ஆட்சியில் பதினான்காம் லூயியின் கொள்கைகள் கைவிடப்பட்டு நிர்வாக முறையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. பதினான்காம் லூயி காலத்தில் அதிகாரங்களை இழந்த பார்லிமெண்டுகள் இழந்த அதிகாரத்தை மீண்டும் பெற்றுக் கொண்டன. சமயத்தில் இவர் பொறையுடைமைக் கொள்கையைப் பின்பற்றினார். எனவே தான் ஜேன்சனிசம் என்ற சமயப்பிரிவினருக்கு ஆதரவு அளித்தார்.

**ஜாண்லா (John Law):**

ஆர்லியன் கோமகன் ஆடசிப் பொறுப்பை ஏற்றபோது பிரான்சின் நிதிநிலை மிக மோசமாக இருந்தது. நாட்டின் கடன் சுமை வளாந்துகொண்டே போனது. செலவுக்கேற்ற வருவாய் கிடையாது. எனவே நித நிலையைச் சீர்படுத்த ஜாண்லா என்ற ஸ்காட்லாந்துக்காரர் அர்லியன்ஸ் கோமகனிடம் இரண்டு திட்டங்களைச் சமர்ப்பித்தார்.

a) இங்கிலாந்தைப் போல பிரான்சிலும் ஒரு தேசிய வங்கியை நிறுவி அதன் மூலம் காகித நாணயத்தை அச்சிட்டு வெளியிட வேண்டுமென்பது இவரது முலாவது திட்டம். இதன் மூலம் நாட்டின் வியாபாரத்தை ஊக்குவிக்க முடியும் என்று இவர் கருதினார்.

b) அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட வர்த்தக் கம்பெனி ஒன்றை நிறுவி பிரான்சின் வியாபாரம் முழுவதும் ஏகபோக உரிமையாக அதனிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது இவரது இரண்டாவது திட்டம்.

ஜாண்லாவின் திட்டத்தின்படி 1716-ல் ஒரு வங்கி நிறுவப்பட்டது. அது நல்ல முறையில் செழித்து ஓங்கவே 1718-ல் ஆர்லியன்ஸ் பிரபு அதையே மத்திய அரசாங்க வங்கியாக ஆக்கினார். ஜாண்லாவின் மற்றொரு திட்டத்தின்படி 1717-ல் ‘மேற்கத்திய கம்பெனி’என்ற வியாபாரக் கம்பெனி நிறுவப்பட்டது. அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த இக்கம்பெனி நன்கு செயல்பட்டு வந்தது. 1720-ல் ஜாண்லாவின் தலைமையில் வங்கி நிர்வாகமும், கம்பெனி நிர்வாகமும் ஒன்றாக இணைக்கப்பட்டது, நிதித்துறையின் தலைமை அதிகாரியாக அவர் நியமிக்கப்பட்டார்.

**டூபாய் (Dubois) :**

ஆர்லியன்ஸ் கோமகன் ஆட்சியில் அயல் நாட்டு விவகாரங்களை டூபாய் என்ற அமைச்சர் கவனித்து வந்தார். பதினான்காம் லூயியின் அயல்நாட்டுக் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட்டன. ஸ்பெயினுடனான சகோதர உறவைவிட்டு, இங்கிலாந்துடன் ஒரு நட்புறவு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. 1717-ல் பிரான்ஸ் இங்கிலாந்து, ஹாலந்து அகியவை ஒரு முக்கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டு தேவையில்லாமல் ஸ்பெயினுடன் ஒரு போர் ஏற்பட்டது. இதற்கிடையில் 1723-ல் லூயி ஆட்சிப் பொறுப்பை

ஏற்கக்கூடிய பதினைந்து வயதையடைந்து விட்டார் என்று அறிவிக்கப்பட்டது. அத்துடன் ஆர்லியன்ஸ் கோமகன் ஆட்சி முடிவடைந்து விட்டது. அதேயாண்டில் அவர் காலமானார்.

**கார்டினல் புளுரி (Cardinal Fleury -1726-1743)**

பதினைந்தாம் லூயியின்நேரடி ஆட்சி துவங்கினாலும் அரசர் சிறுவர் என்ற காரணத்தினால் பூர்பான் கோமகன் (Duke Bourborn)முதலமைச்சராகப் பதவியேற்று அரச காரியங்களை கவனித்து வந்தார். ஆனால் கார்டினல் பு;ரி என்பவருக்கு மன்னிரிடத்தில் அதிக செல்வாக்கு இருந்தது. இவர் பூர்பான் கோமகனை பதவியிலிருந்து விலக்கி தானே 1726-ல் முதலமைச்சரானார். நாட்டில் போரைத் தவித்து, அமைதியை நிலைநாட்டி, சுபிட்சத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது இவருடைய நோக்கம். இவரது ஆட்சியில் பிரான்சின் வர்த்தகம் பெரும்வளர்ச்சியடைந்தது. இங்கிலாந்தின் முதலமைச்சர் வால்போலுடன் பு;ரியை ஒப்பிடுகிறார்கள். சில வரலாற்றாசிரியர்கள் இவருடைய காலத்தில் நிதி நெருக்கடிக்கு அடிப்படையான காரணங்களான ஆடம்பரச் செலவுகள், பிரபுக்கள், மதகுருமார்களின் சிறப்புரிமைகள் ஆகியவற்றை நீக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இவருடைய பதவிக்காலத்தில் பொதுவாக அமைதிக் கொள்கையே கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும் பிரான்சு போலந்து வாரிசுரிமைப் போரில் ஈடுபட வேண்டியதாயிற்று 1473-ல் கார்டினல் பு;ரி மரணமடைந்தார்.

**பதினைந்தாம் லூயியின் நேரடி ஆட்சி: (1743-1774)**

கார்டினல் பு;ரியின் மரணத்திற்குப் பிறகு தானே நேரடியாக நிர்வாகத்தை நடத்த முடிவு செய்தார் லூயி. ஆயினும் இதுவரை சுமார் 23 ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பை பிறரிடம் ஒப்படைத்து விட்டு சுகபோக வாழ்க்கையிலேயே ஈடுபட்ட பதினைந்தாம் லூயி காலத்தில் சுமார் இருபது ஆண்டுகள் இவரது ஆசை நாயகியான மேடம்டி பாம்படூர் (Madam de Pompadour) என்ற பெண்மணி இவரை ஆட்டிப்படைத்தார். உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்கள் அனைத்தையும் நிர்வகித்து வந்தவர் இவரே. பிரபுக்களும், குருமார்களும் மக்களை சுரண்டி வாழ்ந்தனர். கொடுமைப்படுத்தினர், மக்கள் மீது ஏராளமான வரி விதிக்கப்பட்டது. எனவே நாட்டின் பல பாகங்களில் மக்கள் கிளர்ச்சி செய்தனர். ஆனால் அவைகள் கொடுமையான முறையில் ஒடுக்கப்பட்டன.ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரிலும், ஏழாண்டுப் போரிலும் பிரான்ஸ் தோல்வியடைந்து ஐரோப்பாவில் தன் பெருமையை இழந்து நின்றது. அரச சபையில் மேடம் டு பரி (Madam du Barri) என்ற அம்மையாரின் ஆதிக்கமே ஓங்கியிருந்தது.

இவ்வாறு பதினைந்தாம் லூயியின் ஆட்சியில் நிர்வாகம் சீர்கேடடைந்தது. மக்களுக்கும் மன்னருக்கும் இடைவெளி அதிமானது. நாட்டின் கடன் சுமை அதிகரித்தது. நிதிநிலை மோசமாகிக் கொண்டே வந்தது. மன்னரின் ஆட்சியில் குறைபாடுகளும்,

சீர்கேடுகளும் சுட்டிக்காட்டபட்டு கண்டிக்கப்பட்டன. ஆனால் அரசரோஅவைகளைக் கண்டுகொள்ளவேயில்லை. வருங்காலத்தை பற்றி அவர் கவலைப்படவேயில்லை. தன்னுடைய ஆட்சிக்காலத்ததிற்குப் பிறகு பிரான்சின் வீழ்ச்சி ஏற்படப்போகிறது என்பதை ஓரளவு உணர்ந்திருந்த பதினைந்தாம் லூயி “என்னுடைய இறப்பு வரை நிலைமை ஓரளவு சரியாக இருக்கும். எனக்குப் பிறகு பிரளயம்” என்றார்.“Things will hold together till my death; after me the deluge (Aprosmoi, le deluge)” என்றார். இவரது கூற்று பதினாறாம் லூயி காலத்தில் மெய்ப்பிக்கப்பட்டு விட்டது.

**பதினாறாம் லூயி (Louis XVI-1774-1792)**

தனது இருபதாம் வயதில் பதவியேற்ற பதினாறாம் லூயி தன் தாத்தா பதினைந்தாம் லூயி விட்டுச் சென்ற எல்லாப் பிரச்சனைகளையும் சுமக்க வேண்டியதாயிற்று. இவர் பல நல்ல குணங்களையும் எண்ணங்களையும் கொண்டிருந்த போதிலும் அரசனாக ஆவதற்குச் சிறிதும் தகுதியில்லாதவர். வேட்டையாடுவதிலும், சாப்பிடுவதிலுமே நேரத்தைக் கழித்தார். சுயமாகச் சிந்தித்துச் செயலாற்றாமல் தனது அழகிய மனைவி மேரி அண்டாய்னட்டின் சொற்கேட்டு ஆட்சி நடத்தினார். இவர் காலத்தில் ஆட்சிமுறையில் சீர்கேடுகளும், ஊழல்களும் உச்சக்கட்டத்தையடைந்தன. நிர்வாகத்தில் சாதாரண மக்களுக்கு சிறிதளவு பங்கும் இல்லை. பிரெஞ்சு சமுதாயத்தில் ‘பூர்ஷ்வா’(Bourgeoisie) என்றழைக்கப்பட்ட நடுத்தர வகுப்பினரும், சமுதாயத்தின் அடித்தளத்திலிருந்த குடியானவர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களும் ஒடுக்கப்பட்டு, உரிமைகள் எதுமின்றி அடிமைகளாக வாழ்ந்தனர். ஏற்றத்தாழ்வு எங்கும் தலைவிரித்தாடி சமுதாய அமைப்பையே ஆட்டங்கொள்ளச் செய்தது.

நாட்டின் வரித்துறையில் குறைபாடுகள் மலிந்து காணப்பட்டன. பிரபுக்களும், மத குருமார்களும் பெருமளவில் வரிவிலக்கு பெற்று சுகபோக வாழ்க்கை வாழ்ந்தனர். வரிச்சுமை முழுவதுமே வசதியும், சலுகையுமற்ற பாமரமக்கள் மீது விழுந்தது. நாட்டில் சட்டமும் நீதியும் நிலைகுலைந்து கிடந்தன. குழப்பமான சட்டங்களைப் பின்பற்றிய நேர்மையற்ற நீதி மன்றங்களே இயங்கி வந்தன. இவ்வாறு பிரான்சில் அரசியல், நிதி, நீதீ, படை, திருச்சபை ஆகிய துறைகள் அனைத்தும் செயலிழந்த குழப்பத்தை ஏற்படுத்தின. மோதல்கள் எங்கும் காணப்பட்டது. நாட்டுப் புறத்தவர்கட்கும், நகர மக்களுக்குமிடையே மோதல், ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமிடையே பகைமை, நடுத்தர மக்களுக்கும் பிரபுக்களுக்குமிடையே சச்சரவு, மன்னருக்கும் நீதிமன்றங்களுக்குமிடையே பகைமை, போராட்டம், இவ்வாறு 15-ம் லூயி மன்னர்களின் காலங்களில் பிரான்சில் நிலவி அரசியல், சமுக. பொருளாதார நிலை பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்கியது.

## பிரெஞ்சுப் புரட்சி

## 1. The French Revolution – 1789

1789-ல் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சி உலக வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். மன்னா்களின் எதேச்சதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களால் உருவாக்கப்படும் ஆட்சி அமைவதற்கு வழிவகுத்தது. மக்களாட்சி சகாப்தத்தின் ஆரம்பம்தான் பிரெஞுசுப் புரட்சி! அரசியல் புரட்சியாக ஆரம்பித்தது, பின்னா் இது ஒரு சமுதாயப் புரட்சியாக உருவெடுத்தது. ஐரோப்பாவின் வாழ்க்கை முறையில் புதிய, குறிப்பிடத்தக்க விளைவுகளை எற்படுத்தியது. 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'என்ற மூன்று கொள்கைகளை உலகிற்கு அளித்தது. இப்புரட்சியின் இறுதியில் பிரான்சில் நெப்போலியனின் வல்லாட்சி ஏட்பட்ட போதிலும் முடிவாக புரட்சிக் கருத்துக்களே வெற்றியடைந்தன. இப்புரட்சிக் கருத்துக்கள் அடுத்த ஒரு நூற்றாண்டின் உலக அரசியலில் பெரும் மாறுதல்களையும், சிறப்பான விளைவுகளையும் ஏற்படுத்தியது.

**பிரெஞ்சுப் புரட்சி ஏற்படக் காரணங்கள்:**

1.சமுதாயக் காரணங்கள் : (Sociel causes)

**பிரபுக்களும் மதகுருமாா்களும் அனுபவித்து வந்த சிறப்புச் சலுகைகள்:**

பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட முக்கியக் காரணமாக விளங்கியது பிரெஞ்சு சமுதாயத்தில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வே ஆகும். பிரெஞ்சு சமுதாயம்,'சலுகை பெற்ற பிரிவினா் மத்தியதரக் குடும்பத்தினரும், ஏழைத் தொழிலாளா்களும், விவசாயிகளுமே சலுகை பெறாதவா்கள். பிரான்சின் மக்கள் தொகையில் இரண்டு சதவீதமே உள்ள பிரபுக்களும், குருமாா்களும் நாட்டின் வளமான நிலத்தில் மூன்றில் ஒரு பகுதி நிலப்பகுதிக்கு உரிமையாளா்களாக இருந்தாா்கள். இவா்கள் சமூகத்தில் சிறுபான்மையினராக இருந்தாலும் எல்லாச் சலுகைகளையும். உரிமைகளையும் அனுபவித்து வந்தனா். பிரபுக்கள் பாமர மக்களுடன் எவ்விதத் தொடா்பு இல்லாமல் வாழ்ந்து வந்தனா். ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வந்தனா். அரசாங்கத்திலும், படையிலும், திருச்சபையிலும் உயா்பதவி இவா்களுக்கே வழங்கப்பட்டது. கோவில்களிலும் தியேட்டா்களிலும் தனிஇடம் இவா்களுக்கு ஒதுக்கப்பட்டது. தங்கள் நிலங்களைக் குத்தகைக்கு விட்டு பெருந்தொகையைக் குத்தகைதாரா்களிடமிருந்து பெற்றனா். இவா்களது கொடுங்கோன்மை ஆட்சி கிராமங்களில் தலைவிரித்தாடியது. வேட்டையாடுதலிலும், சூதாட்டங்களிலும் ஈடுபட்டனா். பாமர மக்களின் நிலைபற்றி

இவர்கள் கவலைப்படவே இல்லை. மதகுருமார்களும் சிறப்புரிமைகளை அனுபவித்து வந்தார்கள். திருச்சபையின் உயர்பதவிகள் யாவும் இவர்களே பெற்றிருந்தனர். தங்கள் கடமைகளை மறந்து சிற்றின்ப வாழ்க்கையில் ஈடுபட்டு செல்வச் செருக்குடன் இருந்தார்கள். வரி கொடுப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தனர். இதனால் பாமர மக்களின் வெறுப்புக்கும் கோபத்திற்கும் உள்ளானார்கள்.

**டி) குடியானவர்களின் தாழ்வான நிலை:**

பிரெஞ்சு சமுதாயத்தின் மூன்றாவது பிரிவைச் சார்ந்தவர்கள் ஏழைக் குடியானவர்கள் ஆவர். இந்த நடுத்தர வகுப்பில் இவர்கள் தவிர வியாபாரிகள், தொழிலதிபர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோர்களும் இருந்தனர். இந்த மூன்றாவது பிரிவில் பல வகுப்பினர் இருந்தாலும், அவர்கள் அனுபவித்துவந்த இன்னல்கள் பொதுவாகவேயிருந்தது. சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருந்த குடியானவர்கள், தொழிலாளர்களின் நிலை மிக மோசமாக இருந்தது. பிரபுக்களும், குருமார்களும் அனுபவித்து வந்த உரிமைகள் இவர்களுக்கு மறுக்கப்பட்டது. ஒரு ஏழைக் குடியானவன் தன் வருமானத்தில் பாதிக்கு மேல் வரியாகச் செலுத்த வேண்டியதிருந்தது. டைத் (Tithe) என்ற திருச்சபை வரியும், டெய்லி (Taile) என்ற அரசனுக்குச் செலுத்தும் நிலவரியும், விங்டைம் (Vingtieme) என்ற வருமான வரியும், காபெல்லி (Cabellle) என்ற உப்புவரியும் பாமர மக்கள் செலுத்த வேண்டியதிருந்தது. கார்வி (Corvee) என்ற கட்டாய வேலையும் குடியானவர்கள் செய்ய வேண்டியதிருந்தது. இவ்வாறு பொது மக்கள் வரிச்சுமையினால் பெரும் அல்லல்பட்டனர்.

உயர்குடியினர் பலவகைகளில் சலுகைகளையும், உல்லாச வாழ்க்கையையும் அனுபவித்து வந்தபோது பாமர மக்கள் வஞ்சிக்கப்பட்டனர். வறுமையால் வாடினர். எனவே தான் ‘பிரபுக்கள போரிட மதகுருமார்கள் வழிபாடு செய்ய, மக்கள் வரி கொடுக்க’(The nobles fight, the clergy pray and the people pay) என்ற கூற்று உண்மையாக இருந்தது. இவ்வாறு சமுதாயத்தில் காணப்பட்ட அதிருப்தியும் ஏற்றத்தாழ்வுமே பிரெஞ்சுப் புரட்சிக்குக் காரணமானது. ‘பிரெஞ்சுப் புரட்சி வல்லாட்சி முறையை எதிர்த்து நடந்த புரட்சி என்று கூறுவதை விட சமுதாயத்தில் காணப்பட்ட எற்றத்தாழ்வுகளை எதிர்த்து நடந்த ஒன்று என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்’ என்று மாட்லின் என்ற ஆசிரியர் கூறுகிறார்.

**2. அரசியல் காரணங்கள் : (Pollitical causes)**

**பிரெஞ்சு மன்னர்களின் எதேச்சதிகாரத்தன்மை:**

ஐரோப்பாவிலேயே பிரெஞ்சு அரசர்கள் தான் எதேச்சதிகாரத்தின் உச்ச எல்லையில் இருந்தார்கள். அவர்கள், தெய்வீக உரிமைக் கோட்பாட்டின்படி ஆட்சி புரிந்தார்கள். பூர்பான் வம்சத்தைச்சார்ந்த 14-ம்லூயி மன்னர் காலத்திலிருந்தே நாட்டு மக்கள்

அரசாங்கத்தின் மீது வெறுப்படைய ஆரம்பித்தனர். இதற்குக்காரணம், 14-ம் லூயி பல போர்களில் ஈடுபட்டு நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்தார். 'நானே நாடு' என்று கூறிக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபைகளை ஒழித்தார். சட்டம் இயற்றுதல், வரி விதித்தல், நீதி வழங்குதல், அதிகாரிகளை நியமித்தல் ஆகிய அனைத்து அதிகாரங்களும் அரசன் கையிலேயே இருந்தது. 1614-ம் வருடத்திற்கு பிறகு 'ஸ்டேட் ஜெனரல்'(States General) என்ற பிரெஞ்சுப் பாராளுமன்றம் கூட்டப்படவே இல்லை. அரசனால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் மூலமே ஆட்சி நடந்தது. 14-ம் லூயி மன்னருக்குப்பின் பதவியேற்ற 15-ம் லூயியினாலும் நிலைமையைச் சீர்படுத்த முடியவில்லை. இவரும் திறமையற்றவர், ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தார். இவர் தனது ஆசை நாயகிகளான மேடம்-டி-பாம்டூர், மேடம்-டு-பாரி ஆகியோரின் சொற்கேட்டு ஆட்சி நடத்தினார்.மக்களின் தேவைகளைப் பற்றி அரசனோ அதிகாரிகளோ கவலைப்படவில்லை.

இந்த பிரெஞ்சு மன்னர்கள் பாரிசிலிருந்து பன்னிரெண்டு மைல் தொலைவிலுள்ள வெர்செயில்ஸில் உள்ள ஆடம்பர மாளிகையில் வாழ்ந்து வந்தனர். அங்கு மன்னருக்கு வேலை செய்ய 18 ஆயிரம் பேர் இருந்ததாகவம், அரசிக்கு வேலைக்காரர்களாக மட்டும் 500 பேர் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. பாமர மக்களின் பிரச்சனைகளைப் புரிந்துகொள்ளாமலும். எந்த சீர்திருத்தங்களும் செய்யாமலும் கொடுங்கோலாட்சி புரிந்த வந்த பிரெஞ்சு மன்னர்கள் இப்புரட்சி ஏற்படப் பொதும் காரணமாயினர்.

**டி) மேரி அன்டாய்னட் (Mary Antoinette):**

15-ம் லூயி மன்னருக்குப் பின் பதவிக்கு வந்தவர் 16-ம் லூயி ஆவார். இவர் காலத்தில்தான் புரட்சி வெடித்தது. இவர் மிகவும் நல்லவர்தான், ஆனால் திறமையற்றவர். இவரது பொழுதுபோக்கு வேட்டையாடுதல், சாப்பிட்டுவிட்டு உறங்குதல் ஆகியவையாகும். அப்போது நாட்டை எதிர்நோக்கி இருந்த பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குரிய திறமையோ, விவேகமோ, மனப்பக்குவமோ இல்லாதவர். எனவேதான் இவரது அழகான மனைவி அன்டாய்னட் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை தன்கையில் எடுத்துக்கொண்டு, தன் விருப்பப்படி ஆட்சி புரியலானாள்.

ஆஸ்திரிய நாட்டுப் பேரரசி மரியதரசாவின் மகளான மேரி அன்டாய்னட் ஒரு பேரழகி. ஆடம்பர வாழ்க்கை வாழ அரசு பணத்தைச் செலவு செய்தாள். அரச குடும்பத்தில் பிறந்து வளர்ந்த காணரத்தினால் எழை மக்களின் இன்னல்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. உதாரணமாக சாப்பாட்டிற்கு 'ரொட்டி கூட கிடைக்காமல் மக்கள் அரண்மனை முன்பு கூடி கோஷமிட்ட போது, ரொட்டி கிடைக்காவிட்டால் கேக் வாங்கி சாப்பிடுவது தானே' என்று கூறினாராம் அன்டாய்னட் (If they don't have bread let them eat cake), மக்களால் 'பற்றாக்குறை அரசி'(Madam deficit) என்று பட்டம் சூட்டப்பட்டாள்.

ஏழாண்டுப் போரில் பிரான்ஸ் தோற்றுக் கேவலப்பட்டதற்கு இவளே காரணம். அரண்மனை விவகாரங்களில் தன்னை ஆதரித்தவர்கட்கே உயர்பதவி வழங்கினாள்.தன்னை எதிர்த்தவர்களுக்குச் சிறைத் தண்டனை. இதனால் நிர்வாகம் சீர்கேடடைந்தது. பிரான்சை இழிநலைக்கு கொண்டுவந்த இவளை மக்கள் வெறுத்தனர். எனவே புரட்சி எற்பட முக்கியக் காரணங்களில் ஒன்றாக மேரி அன்டாய்னட்டைக் கருதலாம்.

உ) சீர்கெட்ட நிர்வாகம்:

பிரான்சில் தனிமனித சுதந்திரம் இல்லை. பொதுக் கூட்டங்கள் நடத்துதல், சங்கங்கள் அமைத்தல் போன்ற உரிமைகள் மக்களுக்கு மறுக்கப்பட்டன. நாடு நாற்பது மாநிலங்களாகப் பிரிக்கப்படடிருந்தது. ஒவ்வொரு பகுதியிலும் பல வகையான சட்டங்களும் பல வகையான வழிமுறைகளும் செயல்பட்டு வந்தன. இதனால் நிர்வாகத்தில் குழப்பம் நிலவியது. அரசு பணியாளர்கள், சோம்பேறிகளாகவும், லஞ்சப் பேர்வழிகளாகவும், பகட்டான இன்பம் அனுபவிப்பவர்களாகவும் காணப்பட்டனர். எனவே நிர்வாக முடக்கம் எற்பட்டது. மன்னர்கள் மாளிகையிலேயே காலம் கழித்தனர். பெண்களின் சொற்கேட்டு கொடுங்கோலாட்சி புரிந்தனர். ‘பிரெஞ்சு அரண்மனை தேசத்தின் கல்லறை’ என்று பழித்துக் கூறப்பட்டது.

ஊழல்களை எடுத்துக் கூறியவர்கள் விசாரணையின்றி சிறையிலடைக்கப்பட்டனர். தனக்குப் பிடிக்காத யாரையும்அரசன் எவ்விதக் காரணமும் கூறாமல், விசாரணையும் இல்லாமல் “‘Letter-de-Cachet’என்ற அரசனின் முத்திரையிடப்பட்ட வாரண்டுகள் மூலம் கைது செய்து சிறையிலடைக்க முடியும். இந்த வாரண்டுகளை அரசனிடமிருந்து பிரபுக்கள் பெற்றுக்கொண்டு தங்களை எதிர்த்த மக்களைச் சிறையிலடைத்தனர். சித்திரவதை செய்தனர். இவ்வாறு நாட்டு நிர்வாகம் சீர்கேடு அடைந்து காணப்பட்டது. இது புரட்சி எற்படக் காரணமானது.

டி) குழப்பமான நீதித்துறை:

பிரான்ஸ் நாட்டின் சட்டம் மற்றும் நீதிமுறைகள் குழப்பத்தைஏற்படுத்தின. பிரான்ஸ் முழுவதிற்குமான ஒரே மாதிரியான சட்ட அமைப்பு இல்லை. அரசன் தீர்மானித்தவை எல்லாம் சட்டங்களாக அமுல் செய்யப்பட்டன.நாட்டில் முரண்பாட்டுடன் கூடிய 285 வகையான சட்டத் தொகுப்புகள் காணப்பட்டன.எனவே தான் ஒரு சாதாரணக் குற்றத்திற்கு ஒரு நீதிமன்றம் சாதாரணத் தண்டனையும், பிரிதொரு நீதிமன்றம் பத்து ஆண்டு சிறைத்தண்டனையும் வழங்கும் அவலநிலை காணப்பட்டது. மேலும் சட்டங்கள் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டிருந்ததால், மக்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியவில்லை.

பிரபுக்களில் சிலர் ஆயுள் முழுவதும் நீதிபதிகளாக இருந்தனர். வழக்கை விசாரணை செய்யும் முறை இல்லை. சித்திரவதை சர்வ சாதாரணமாக இருந்தது. மரணதண்டனை கொடூரமான முறையில் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு சீர்கெட்ட நிர்வாகத்தினாலும், மோசமான நீதி முறையினாலும் மக்கள் இன்னலடைந்தனர். பொறுமையிழந்த மக்கள் புரட்சி செய்யத் தயாராயினர்.ஆட்சிமாற்றத்தை விரும்பினர்.

3. **பிரஞ்சு நாட்டுத் தத்துவ ஞானிகளின் பங்கு:**

**(French Philosophers)**

18-ம் நூற்றாண்டில் பிரான்ஸ் அறிவு வளர்ச்சி இயக்கத்தின் (Englightenment) பிறப்பிடமாக விளங்கியது. இந்த அறிவு வளர்ச்சியின் செல்வாக்கிற்குட்பட்ட சிந்தனையாளர்களும், தக்துவஞானிகளும் பகுத்தறிவின் அடிப்படையில் அப்போது நிலவிவந்த அரசியல், சமூக, சமய அமைப்புகளை ஆராயந்து விமர்ச்சிக்க ஆரம்பித்தனர். அவற்றில் மலிந்து கிடந்த குறைபாடுகளைச் சட்டிக்காட்டி அவற்றை அகற்ற வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினர். வல்லாட்சி முறையில் நியாயமில்லையென்றும் சித்திரவதை செய்தல், அடிமை முறை போன்ற சீர்கேடுகளை களையவேண்டுடென்றும், மதத்தில் மலிந்து கிடந்த ஊழல்களையும் திருச்சபையின் தவறான போக்கையும் மாற்ற வேண்டுமென்றும் வலியுறுத்தினர். அரசாங்கத்தினாலும், திருச்சபையாலும் கொடுமைகளுக்கு உள்ளான பாமர மக்களின் நிலையை உயர்த்த வேண்டும், அவர்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும் போன்ற முற்போக்குக் கருத்துக்கள் இந்த தத்துவ ஞானிகளால் வலியுறுத்தப்பட்டன. இவ்வாறு பழைய மரபுகள் அமைப்புகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைக் கண்டித்தலின் மூலம் மக்கள் மனதில் புரட்சி உணர்வை ஏற்படுத்தி புரட்சி தோன்றுவதற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கினர்.எனவே இவர்கள் மக்கள் எண்ணங்களை புரட்சிப்பாதையில் செலுத்தியதின் மூலம் புரட்சிக்கு முன்னோடிகளாக விளங்கினர். அவர்களில் முக்கியமானவாகள் வால்டர்,மாண்டஸ்க்யூ,ரூசோ போன்றவர்கள் ஆவார்கள்.

**வால்டர் (Voltaire-1694-1778):**

இவரது இயற்பெயர் பிராங்காய் மரியா அரோட் (Francoise Maris Arouet) என்பதாகும். ஆனால் தன்னை வால்டர் என்று அழைத்துக்கொண்டார். இவர் ஒரு சிறந்த எழுத்தாளர், சிந்தனையாளர், தத்துவஞானி கட்டுரைகள் கவிதைகள், நாவல்கள் முதலியவற்றை எழுதி அதன்மூலம் நாட்டின் பழைய அமைப்பின் (Ancient regime) தூண்களாக விளங்கிய எல்லா நிறுவனங்களையும் கடுமையாகத் தாக்கினார். இவர் எழுதிய நூல்களுள் மிகச்சிறந்தவை,'14-ம் லூயியின் காலம்'Age of Louis XIV.தத்துவ

அகராதி,(Philosophical Dictionary) கேன்டிட் (Candid) 1758 போன்றவையாகும். இவரது நூல்கள் அழியாப் புகழ் பெற்றவை.

நியூட்டன், லாக் போன்ற அறிஞர்களின் கோட்பாடுகளைக் கற்றறிந்த அவர் தன்காலத்து சமூக, அரசியல், சமய அமைப்புகளில் காணப்பட்ட ஊழல்களையும் சீர்கேடுகளையும் அநீதிகளையும் வன்மையாகக் கண்டித்தார். முக்கியமாக கத்தோலிக்க மதத்தையும் திருச்சபையையும் கடுமையாகத் தாக்கினார். மனிதனின் சிந்திக்கும் ஆற்றலுக்கு ஒரு தடையாவும்,வெறியுணர்ச்சி, மூடநம்பிக்கைகளுக்கு ஒரு புகலிடமாகவும் திருச்சபை விளங்குகிறது என்றார். திருச்சபையின் தீவிரவாதப் போக்கைக் கண்டித்தார். மனிதனின் சிந்தனைகள் வளரவேண்டுமானால் திருச்சபையின் ஆதிக்கம் ஒழிய வேண்டுமென்றார்.அரசியலில் மக்களாட்சியை இவர் விரும்பவில்லையென்றாலும் எதேச்சதிகார மன்னராட்சியும் இவருக்குப் பிடிக்கவில்லை. ஒளியூட்டும் வல்லாட்சியை விரும்பினார். ''நியாய, அநியாயங்களைப் பார்க்காமல், நாட்டிற்கு நன்மை செய்யும் மன்னரே சிறந்த மன்னர்'' என்றார். ''தான் நூறு எலிகளால் ஆளப்படுவதைவிட ஒரு சிங்கத்தால் ஆளப்படுவதையே விரும்பினார்''.இக்கருத்துக்களைக் கொண்ட இவரது நூல்கள் ஆயிரக்கணக்கான மக்களால் படிக்கப்பட்டன. இவரது கருத்துக்களினால் ஏராளமான இளைஞர்கள் ஈர்க்கப்பட்டனர். முக்கியமாக திருச்சபையில் சீர்த்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பதையும்,சமுதாயத்தில் எற்றத்தாழ்வுகள் அகற்றப்படவேண்டும் என்பதையும் மக்களுக்கு உணரவைத்தது இவரது கோட்பாடுகளேயாகும். இவரது பகுத்தறிவுக் கருத்துக்கள் பிரெஞ்சுப்புரட்சிக்கு முக்கிய காரணமாகும். 'பகுத்தறிவுக் காலத்தின் விடிவெள்ளியாக' விளங்கினார் வால்டர்.

### மாண்டஸ்க்யூ (Baron de Montesquieu-1689-1755):

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னோடியாக இருந்த அறிவுப் புரட்சியை உருவாக்கியவர்களில் மாண்டஸ்க்யூவும் ஒருவர். இவர் ஒரு திறமைவாய்ந்த பிரெஞ்ச் வழக்கறிஞர். சட்டத்தின் மேன்மையை நன்கு உணர்ந்தவர். இவர் இங்கிலாந்திற்குச் சென்று அங்கு நிலவிய, சுதந்திரத்தையும். சமத்துவத்தையும், அரசியலைப்பையும் கண்டுணர்ந்தார். தனது கருத்துக்களை எல்லாம் தொகுத்து **'சட்டத்தின் கருப்பொருள்'**(Spirit of laws) என்ற புத்தகத்தில் எழுதி 1748-ல் வெளியிட்டார். இப்புத்தகம் மக்களால் அதிகமாக விரும்பிப்படிக்கப்பட்டன. வெளியிட்ட 18 மாதங்களில் 22 பதிப்புகள் வெளியிடப்பட்டன என்றால் அதன் பெருமை புலப்படும்.

அப்புத்தகத்தில்இங்கிலாந்தில் நிலவிய ‘வரம்புக்குட்பட்ட முடியாட்சியின் நன்மைகளையும், பிரான்சில் நிலவிய வரம்பு கடந்த முடியாட்சி’யின் தீமைகளையும் ஒப்பிட்டார். இங்கிலாந்தில் நிலவிய ஆட்சி அமைப்பு முறை போன்று, பிரான்சிலும் அமைக்கப்பட வேண்டுமென்றார். மாண்டஸ்க்யூவின் ‘அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு’(Seperation of powers) மிகவும் பிரசித்தி பெற்றதாகும். ‘‘சட்டமியற்றும் துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய மூன்றும் ஒரே நபரின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடாது. இவை தனித்தனி அமைப்பின் கீழ் சுதந்திரமாக இயங்க வேண்டும். அப்போதுதான் தனிமனிதன் சுதந்திரத்தை அனுபவிக்க முடியும். இவை மூன்றும் ஒரே நபரிடம் இருந்தால் அது கொடுங்கோன்மைக்கும், சர்வாதிகாரத்திற்கும் வழிவகுக்கும’’ என்றார்.

மாண்டஸ்க்யூவின் இந்த அதிகாரப்பிரிவினைக் கோட்பாடு பிரெஞ்சு மக்களிடையே பெரும் செல்வாக்குப்பெற்றது. புரட்சிகரமான இக்கருத்துக்களுக்கு மக்ளிடம் நல்ல வரவேற்பு இருந்தது.அவர்கள் புதிய அரசியலை உருவாக்கத் துடித்தனர். புரட்சியாளர்கட்கு புதிய அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு இக்கொள்கைகள் பெரிதும் உதவின என்று கூறலாம்.

**ரூசோ (JeanJaeques Rousseau, 1712-1778):**

பிரெஞ்சுத் தத்துவ ஞானிகளிலேயே மிகவும் சிறந்தவரும், தீவிரவாதியாகவும் விளங்கியவர் ஜீன் ஜேக்கஸ் ரூசோ ஆவார். இவரது கருத்துக்களை சாதாரண மக்கள் எளிதில் புரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும், அவர்களின் சிந்தனைகளை பெரிதும் தூண்டியது. பிரெஞ்சுப் புரட்சியைப் பொருத்தவரையில் ரூசோவின் கருத்துக்கள் வலிமை பொருந்தியவையாகக் காணப்பட்டன. இவர் எழுதிய நூல்களில் மிகவும் புகழ்பெற்றது **‘சமூக ஒப்பந்தம்’** (Social contract) என்ற நூலாகும். இது 1762-ல் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் புரட்சிக் கருத்துக்களைக் கொண்டிருந்ததால் பாரிசு பாராளுமன்றம் இதனைத் தடைசெய்தது. ரூசோ சுவிடசர்லாந்து ஓடிவிட்டார்.

புரட்சியாளர்களின் வேதநூல் என்று கருதப்படும் ‘சமூக ஒப்பந்தம்’ என்ற நூலில்தான் பிரெஞ்சுப் புரட்சிக்குத் தத்துவ அடிப்படையை அளித்த ரூசோவின் முக்கியக் கருத்துக்கள் காணப்படுகின்றன. இப்புத்தகத்தின் முதல் அத்தியாயத்தின் முதல் வரிகள் இதோ “‘Man is born free, and everywhere he is in chains. How did this change come about? I don’t know what can make it legitimate? that question, I think I can answer.”இந்த நூலில் மனிதனைப் பற்றியும் மக்களாட்சியைப் பற்றியும் தெளிவாகக் கூறுகியார் ரூசோ.‘‘இயற்கையில் மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான். ஆனால் அவன்

எங்கும் கட்டுண்டு அடிமையாகக் கிடக்கிறான். நாகரிகமும், விஞ்ஞான வளர்ச்சியும் படிப்பும் மனிதனைக் கெடுத்துவிட்டன.ஆகவே மனிதன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த "இயற்கையோடு இயைந்த வாழ்வுக்கு" மீண்டும் செல்ல வேண்டும் (Bank to the State of Nature). அங்குதான் அவன் நீதியையும் அமைதியையும்மகிழ்ச்சியையும் பெற முடியும" என்றார்.

"அரசாங்கமும்,சட்டமும் மனிதனுடன் பிறக்கவில்லை. தனது நல்வாழ்க்கைக்காக பிற்காலத்தில்தானே ஓர் அரசு முறையை வகுத்துக்கொண்டான். ஆளும் பொறுப்பு மக்களிடமே உள்ளது. மக்கள் தான் அப்பொறுப்பை மன்னரிடன் அளித்தனர். எனவே தவறு செய்த, தனது கடமையை நிறைவேற்றத் தவறிய அரசாங்கத்தை நீக்கவும், மாற்றவும் மக்களுக்கு உரிமை உள்ளது. ஆளும்பொறுப்பு என்பது மக்களும் மன்னரும் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்ட ஓர் ஒப்பந்தமே!" என்று கூறினார்.

இவ்வாறு ரூசோ தனது நூலில் 'இறைமை' மக்களிடத்தில் தான் உள்ளது என்றார். 'கொடுங்கோலாட்சியைப் புரட்சியின் மூலம் அகற்றும் உரிமை மக்களுக்கு உண்டு' என்ற கருத்தையும் வலியுறுத்தினார். இது மக்களைப் பரட்சி செய்யத் தூண்டியது. இந்த நூல் பிரெஞ்சுப் புரட்சிக்கு ஒரு தீக்கொள்ளையைப் போலப் பயன்பட்டது. ரோபஸ்பியரைபுரட்சியின் தலைமை மதகுருவாக்கியது. அவர் ரூசோவின் கருத்துக்களைக் செயல்படுத்த முற்பட்டார். 1789-ம் வருட 'மனித உரிமைப் பிரகடனத்'திலும், 1781-ம் வருட அரசியலமைப்பிலும் ரூசோவின் கோட்பாடுகளைக் காணலாம். ரூசோவின் 'சமுதாய ஒப்பந்தம்' சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம் என்ற கோட்பாடுகளை உலகிற்கு அளித்தது. அடுத்த ஒரு நூற்றாண்டு காலத்தில் மக்களின் கருத்துக்களில் எற்பட்ட வளர்ச்சி இந்த நூலிலிருந்தே எழுந்தது என்று கூறலாம்.

டென்னிஸ் திதரோ (Danis Diderot), தி ஆலம்பர்ட் D 'Alembert ஆகியோர் சேர்ந்து இருபத்தெட்டு பகுதிகளைக்கொண்ட,'கலைக் களஞ்சியம்' ஒன்றை (Encyclopaedia of Science, Arts and Crafts) 1751 முதல் 1765 வரைக்குள் வெளியிட்டனர். அதில் தி ஆலம்பர்ட், வால்டர்,ரூசோ, தர்கோ, மிராபோ போன்ற அறிஞர்கள் கட்டுரை எழுதினார்கள். பகுத்தறிவுதான் இவர்களுக்கு வழிகாட்டி. அக்காலத்தில நிலவிய சமூக, சமய, அரசியல் கருத்துக்களையும், நிறுவனங்களையும் திறனாய்வு செய்து தங்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.திருச்சபையையும், அரசையும்குறை கூறினர். தொழிற்துறையில் அரசாங்கத் தலையீட்டைக் கண்டித்தனர். அரச ஆணைப்படி இந்த நூல் பறிமுதல் செய்யப்பட்டு கொளுத்தப்பட்டது. ஆனால்,

பின்னர் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இவர்கள் தவிர ஹெல்பாக் ஆகியோர் மன்னரது தவறுகளையும், மக்களின் அடிமைத்தனத்தையும் எடுத்துக் காட்டினர்.

இவ்வாறு பிரெஞ்சு அறிஞர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரின் எழுத்துக்களும், பேச்சுக்களும் மக்களின் எண்ணங்களை வெகுவாகப் பாதித்தன. அவர்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை எற்படுத்தின. தாங்கள் அநீதிக்கு ஆளானவர்கள், கொடுமைப்படுத்தப்படுபவர்கள் என்ற வேண்டுமென்ற உறுதியை அவர்களுக்கு அளித்தன என்றால் மிகையாகாது. பிரெஞ்ச் தத்துவஞானிகளால் புரட்சி துரிதப்படுத்தப்பட்டது என்றும் கூறலாம்.

**4. அமெரிக்க சுதந்திரப் போரின் தூண்டுதல்:**

1776-ல் அமெரிக்கக் குடியேற்றங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சுதந்திரப்போரை ஆரம்பித்தன. இப்போரில் அமெரிக்காவுக்கு ஆதரவாக பிரான்ஸ் பண உதவி, படை உதவி செய்தது. இது இரண்டு வழிகளில் புரட்சி எற்படக் காரணமானது. முதலாவதாக, இப்போரின் மூலம் பிரெஞ்சு அரசுக்கு அதிகச் செலவு எற்பட்டது. அரசு கருவூலம் காலியானது. இது பொருளாதார நெருக்கடியை அதிகப்படுத்தியது. இரண்டாவதாக இப்போரில் ‘லபாயட்’(Lafayette) என்பவரின் தலைமையில் ஒரு பிரெஞ்சுப் படை அமெரிக்காவுக்கு ஆதரவாகப் பங்கேற்றது.போரின் இறுதியில் அமெரிக்க குடியேற்றங்கள் வெற்றியடைந்தன. போரில் பங்கு கொண்டு நாடு திரும்பிய லபாயட்டும் அவரது வீரர்களும் அமெரிக்காவின் வீரப்போட்டத்தையும், புரட்சிக் கருத்துக்களையும் எதரித்து அமெரிக்க மக்கள் வெற்றியடைந்ததைப் போல, தாங்களும் பிரெஞ்ச மன்னரின் எதேச்சதிகாரத்தை ஒழித்துக்கட்ட முடியும் என்று திடமாக நம்பினர். மக்கள் மனதிலும் இந்த எண்ணம் தோன்றி புரட்சிக்கு வழிவகுத்தது.

**5. மோசமான பொருளாதார நிலை (பொருளாதாரக் காரணங்கள்) :**

பிரான்ஸ் நாட்டின் பொருளாதார நிலை மிகவும் மோசமான நிலையிலிருந்தது. 14-ம் லூயி, 15-ம் லூயி ஆகியோரின் செலவுமிக்க போர்களினாலும், ஆடம்பரச் செலவுகளினாலும் அரசு கருவூலம் வற்றியது. இதனால் பிரான்சிற்கு கடன் ஏராளமாக இருந்தது. ஆண்டுதோறும் அக்கடன் வளர்ந்துகொண்டே இருந்தது. அதிக வட்டிக்கு வாங்கும் நிலை ஏற்பட்டதால் பொதுக் கடன் மேலும் அதிகமாகியது. “பொதுக்கடனுக்குச் செலுத்தப்படும் வட்டித் தொகையைவிட தேசிய வருமானம் குறைவாகவே இருந்தது.” பிரான்ஸ் நாட்டின் மோசமான பொருளாதார நிலைக்கு மேலும் பல காரணங்கள் உண்டு.

a) முதலாவதாக, வரி மதிப்பீடு செய்வதில் பல தடைகள் காணப்பட்டன. சலுகைகள், வரிவிலக்கு ஆகியவற்றினால் வரி மதிப்பீடு சரிவரச் செய்ய முடியவில்லை. இதனால் நாட்டின் வருமானம் குறைந்தது. மேலும் வரிவசூல் செய்வதில் அதிகச் செலவும் ஊழலும் காணப்பட்டது.

b) இரண்டாவதாக, நாட்டில் வரவு செலவுத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. அரசாங்க நிதியைத் திட்டமிட்டு செலவு செய்யாமல் போனதால் மக்களின் தேவைகளுக்கும், சீர்திருத்தங்களுக்கும் போதிய பணம் இல்லாம்ல போனது. எனவே ஆட்சியின் செலவை ஈடுகட்ட பதிய வரிகள் விதிக்க நேரிட்டது. ஆனால் இந்த விதிப்பு பாமர மக்களையும் நடுத்தர மக்களையும் தான் அதிகம் பாதித்தது.

c) மூன்றாவதாக ஒரு சில பணக்காரர்கள் அரசனுக்கு அதிக அளவில் பண உதவி செய்து, அதற்கு ஈடாக, அதே அளவிற்கு வரிவசூலித்துக் கொள்ள உரிமை பெற்றுக் கொண்டனர். ஆனால் அவர்கள் தாங்கள் கொடுத்த பணத்திற்கு அதிகமாகவே வரி வசூலித்தனர். இதனால் அரசாங்கத்திற்கு பெரு நஷ்டம் எற்பட்டது.

d) நான்காவதாக பிரான்ஸ் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் பொருட்களுக்கு சுங்க வரி வசூலிக்கும் முறை இருந்ததாலும், ஒரு பகுதியிலருந்து மெற்பொரு பகுதிக்கு தானியங்கள் எடுத்துச் செல்லக் கூடாது என்று சட்டங்கள் இருந்ததாலும் வியாபாரிகளும், மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பஞ்சம் ஏற்பட்ட பகுதிகளில் உடனடி நிவாரணம் மேற்கொள்ள முடியவில்லை.

இவ்வாறு பிரான்ஸ் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி மக்களைப் புரட்சியின் பாதைக்கு இழுத்துச் சென்றது.

**பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க பதினாறாம் லூயி மேற்கொண்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள்:**

சிறப்புரிமை காரணமாக நாட்டின் பிரபுக்களும், செல்வந்தர்களும் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கும் வரை பிரான்ஸ் நாட்டின் நிதி நிலைமையை மேம்படுத்தி நாட்டிற்குத் தேவையான வருவாயைப் பெறுவது என்பது இயலாத ஒன்றாகும். எனவே நிதிநிலையை மேம்படுத்த 16-ம் லூயி உண்மையாகவே சில நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

**a**. டர்காட் (**Turgot**-1774 – 1776) :

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க டர்காட் என்ற நிதியமைச்சரை நியமித்தார் 16-ம் லூயி. இவர் நிதியமைச்சராக பதவி ஏற்கும் முன்பு

லிமாஜஸ் (Limoges) என்ற மாநிலத்தில் நிலச்சீர் திருத்தங்களைச் செய்து புகழ் பெற்றிருந்தார். இவர்பிரான்சில் சலுகை பெற்ற வகுப்பினர் அனுபவித்து வந்த தனி உரிமைகளை ரத்து செய்யவும் வரிப்ப;வை எல்லாப் பிரிவினருக்கும் சமமாகப் பங்கிடவும், தடையிலா வாணிபத்தை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்தார். இவை தவிர அரசாங்கத்தின் அதிகப்படியான செலவைக் குறைக்கவும், நாட்டின் தொழில்துறைகள் மீது இருந்த கட்டுப்பாட்டைத் தளர்த்தவும்நடவடிக்கை எடுத்தார். பிரபுக்கள் அனுபவித்துவந்த வரிச்சலுகைகளை நேரடியாகக் கண்டிக்காவிட்டாலும் முறைகேடாகப் பெற்றிருக்கும் வரிச்சலுகைகளைப் பற்றி ஆராய முற்பட்டார். எனவே பிரபுக்களும் குருமார்களும் இவருடைய சீர் திருத்தங்களை எதிர்த்தனர். மேரி அன்டாய்னட்டின் துர் ஆலோசனையின் பேரில் 1776-ல் டர்காட்டை பதவியிலிருந்து நீக்கினார் 16-ம் லூயி. இதனால் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நம்பிக்கை மறைந்து போனது.

**b**) நெக்கர்(**Necker-**1776-81)

டர்காட்டுக்குப்பின் நெக்கர் என்பவரை நிதியமைச்சராக நியமித்தார் 16-ம் லூயி. இவர் ஜெனிவாவைச் சார்ந்த ஒரு வங்கியாளர், சிறந்த நிதிநிபுணர். இவர் சிக்கன முறையாலும், திறமையுடனும் கடன் பெறுதலையும், நாட்டின் வரவு செலவுகளைச் சரிகட்டுதலையும் ஓரளவு சரி செய்தார். 1777-79-க்குள் சமார் 500 பதவிகளை ஒழித்தார். பிரான்ஸ் நாட்டின் வரலாற்றிலேயே முதல் முறையாக நாட்டின் வரவும் செலவும் வெளியிடப்பட்டது. வாணிபம், மற்றும் தொழில் வளர்ச்சிக்கு காகித நாணயத்தை அதிகமாக வெளியிட்டார். 1781-ல் நாட்டில் பொதுவான பொருளாதார நிலையை பொதுமக்களுக்கு வெளிப்படையாக அறிவித்தார். இவரது காலத்தில்தான் பிரான்ஸ் அமெரிக்க விடுதலைப் போரில் பங்கு கொண்டது.இப்போர் பிரான்சுக்கு வெற்றியளித்தாலும் நிதி நிலையை மோசமாக்கியது. நெக்கரின் சீர்திருத்தங்கள் சமாதான காலத்தில் மட்டும் தான் வெற்றியளிப்பவையாகும். கடைசியில் எல்லா வழிகளும் பயனற்றுப் போனதால் வரிவிலக்குப் பெற்றிருந்தவர்கள் மீது வரிவிதீக்க முயற்சித்தார். இதனால் இவரையும் பதவியிலிருந்து 1781-ல் நீக்கினார் 16-ம் லூயி.

**c**) கலோன் (**Calonne**-1781-1787):

16-ம் லூயியால் புதிதாக நியமிக்கப்பட்ட கலோன் என்பவர் திறமையற்றவர். அரசுடன் ஒத்துப்போனால்தான் பதவியில் நீடிக்க முடியும் என்பதைப் புரிந்து கொண்டு அரசியின் கையாளாக செயல்பட்டார். “இவரது லட்சியமே, அதிகச் செலவு செய்வது அதற்காக அதிகமாகக் கடன் வாங்குவது ஆகும்.” இவரது கட்டுப்பாடு இல்லாத

செலவுகளால் 1786-ல் மட்டும் 100 மில்லியன் லயர் (Lire) பற்றாக்குறை ஏற்பட்டது. மூன்று வருடங்களில் 487 மில்லியன் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆனால் நாட்டில் உள்ள நிதி நிலைமையை அரசரிடமோ, அரசவையிடமோ கூறாது மறைத்து விட்டார். 1786-ல் நிலைமை மோசமடைந்ததால் மன்னரிடம் தெரிவித்த போது இதற்கு முந்தய மந்திரிகளின் சீர்திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்று ஆலோசனை கூறினார் மன்னர். அரசநிலம் உட்பட எல்லா நிலங்களுக்கும் வரி விதிக்கவும், தடையிலா வியாபாரத்தை நாடு முழுவதும் செயல்படுத்தவும் நடவடிக்கை எடுத்தார். ஆனால் சலுகை பெற்ற பரிவினர் இதனை எதிர்த்ததால் இவரும் 1787-ல் பதவி விலக நேரிட்டது.

**d)பிரைன் (Cardinal de Brienne-1787):**

கலோன் டிஸ்மிஸ் பண்ணப்பட்ட பின் பிரைன் நியமிக்கப்பட்டார். ஆனால் Council of Notables என்ற அமைப்பின் எதிர்ப்பால் சீர்திருத்தங்களை மேற்கொள்ள இயலவில்லை. எனவே 16-ம் லூயியின் ஆலோசனையின்படி Council of Notables கலைக்கப்பட்டது. இச்சமயத்தில்தான் லபாயட் என்பவர் முப்பேராயத்தைக் (States general) கூட்டும்படி அரசருக்கு ஆலோசனை கூறினார். அதற்குத்தான் சீர்திருத்தங்களை செய்யவும், வரிவிதிக்கவும் உரிமை உண்டு என்று கூறினார். இது வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலோசனையாகும்.

**6. உடனடிக்காரணம்: ஸ்டேட்ஸ் ஜெனரல் கூட்டப்படுதல் மே 1-1789**

நெருக்கடியான நிதி நிலையைச் சமாளிக்க 16-ம் லூயி புதிய வரிகள் விதித்து ஆணைகளை வெளியிட்டார். ஆனால் அரசனின் ஆணைகள் பார்லிமெண்டால் (Parliament) பதிவு செய்யப்பட்டாலொழிய சட்டங்களாகக் கருதப்படமாட்டாது. பார்லிமெண்டுகள் என்பது பிரான்சில் செயல்பட்டு வந்த நீதிமன்றங்களாகும். இவை வெறும் நீதிமன்றங்களாக மட்டுமின்றி அரசனால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை ஏற்கவோ, மறுக்கவோ செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருந்தன. பாரிசு பார்லிமெண்டு 16-ம் லூயியின் சமமான வரிவிதிப்பை ஏற்க மறுத்தது. நிரந்தரச்சீர்திருத்தம் செய்யும் உரிமை முப்பேராயத்திற்கே (States general) உண்டு என்று 1787, ஜுலை 27-ல் எழுத்து மூலமாகத் தெரிவித்தது.

எனவே 16-ம் லூயி பாரிசு பாராளுமன்றத்தின் உரிமைகளை நசுக்க முயன்றார். ஆனால் இதற்குப் பதிலடி கொடுக்கும்விதமாக அடிப்படைச் சட்டங்கள் (Fundamental laws) என்பதனை பாரிசு பர்லிமெண்ட இயற்றியது. இச்சட்டங்களின்படி ‘‘எல்லோருக்கும் வரிவிதிக்கும் உரிமை முப்பேராயத்திற்கே உண்டுஅரசனின் ஆணைகளை ஏற்காமல்

மறுக்க மாகாண பார்லிமெண்டுகளுக்கு உரிமைஉண்டுநீதிபதிகளை டிஸ்மிஸ் செய்ய அரசருக்கு உரிமை கிடையாது. ஒரு மனிதன் கைது செய்யப்பட்டால் உடனடியாக அவனை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.''

இந்த அடிப்படைச் சட்டங்களை ஏற்றுக்கொள்ள மறுத்த 16-ம் லூயி பாரிசு பார்லிமெண்டைக் கலைத்தார். இதனால் சில இடங்களில் கலவரம் ஏற்படவே பயந்து போன 16-ம் லூயி மீண்டும் பாரிசு பார்லிமெண்டை அழைத்தார். ஆனால் அது மீண்டும் அரசரிடம் முப்பேராயத்தைக் கூட்டும்படி கேட்டது. இது அரசனுக்கு அவமரியாதையை ஏற்படுத்தியது. எனவே வேறு வழியில்லாமல் 1789-மே, 1-ல் முப்பேராயத்தைக் கூட்ட ஆணை பிறப்பித்தார். உடனே நிதிமந்திரி பிரைன் ராஜினாமா செய்தார். நெக்கரை மீண்டும் அழைத்தார் 16-ம் லூயி. முப்பேராயம் கூட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி அவரிடம் கூறினார். 1789-மே 5-ல் முப்பேராயம் 175 ஆண்டுகட்குப் பிறகு வெர்செய்ல்ஸில் கூட்டப்பட்டது. இதுவே புரட்சியின் ஆரம்பம் ஆகும்.

## புரட்சியின் போக்கு (புரட்சியின் போது அரசியலமைப்பு சோதனைகள்- (Constituitional experiements):

1789, மே மாதம் 5-ம் தேதி பிரான்சின் பாராளுமன்றமான ஸ்டேட்ஸ் ஜெனரல் (States general) 175 ஆண்டுகளுக்குப் பிறகு கூட்டப்பட்டபோதே புரட்சி ஆரம்பித்து விட்டது எனலாம். ஸ்டேட்ஸ் ஜெனரலில் மூன்று பிரிவுகள் இருந்தன. அவை பிரபுக்கள் மன்றம், குருமார்கள் மன்றம், பொதுமக்கள் மன்றம் ஆகியவை ஆகும். இச்சபையில் பிரபுக்களின் பிரதிநிதிகள் 300 பேர், பொதுமக்களின் பிரதிநிதிகள் 600 பேர் இருந்தனர். சபை கூடியபோது மக்களின் பிரதிநிதிகள் சபையில் எங்கே அமர்வது? எப்படி வாக்களிப்பது, என்ற பிரச்சனை எற்பட்டது. பழைய முறையின்படி ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு வாக்கு (vote accoding to order) என்பது நடைமுறை. எனவே பொதுமக்கள் மன்றம் கொண்டுவரும் எல்லாத் தீர்மானங்களையும் பிரபுக்களும் குருமார்களும் சேர்ந்த தோற்கடித்து விடுவார்கள்.

ஆனால் தற்போது புதிய வரிகள் விதிப்பதற்கு உரிமை பெறுவதற்காகவே 16-ம் லூயி ஸ்டேட்ஸ் ஜெனரலைக் கூட்டியிருந்தார். மக்களின் பிரதிநிதிகள், மூன்று பிரிவினரும் செர்ந்துதான் அமர வேண்டும் என்றும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு (Vote by head) என்ற முறையைப் புகுத்த வேண்டுமென்றும் வற்புறுத்தினர். எனவே குழப்பம் எற்ப்பட்டது.

1. **தேசிய சட்டமன்றம் (National assembly)** 17,1789:

இதற்கிடையில் பொதுமக்களின் பிரதிநிதிகட்கு ஆதரவாக அநேக குருமார்களும், சிலபிரபுக்களும் சேர்ந்து கொண்டனர். பொதுமக்களின் மிகச்சிறந்த பேச்சுவன்மையுடையவரும், உறுதியான அரசியல்வாதியுமான மிராபோ (Mirabeau) என்பவர் மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும்படி அரசரிடம் வேண்டுகோள் விடுத்தார். இவர் உயர்குடியில் பிறந்தவராயினும் மக்கள் பக்கம் சேர்ந்திருந்தார். தங்கள் கோரிக்கைக்கு அரசன் இணங்க மறுத்து வந்தாலும் ஐந்து வாரங்கள் தொடர்ந்து கூடிக்கொண்டேயிருந்தனர். உக்கமடைந்த பரதிநிதிகள் ஜுன் 17-ம் தேதி தங்கள் மன்றத்தை 'தேசிய சட்டமன்றம்' என்று அறிவித்தார்கள். தேசிய சட்டமன்றத்தினால் இயற்றப்படும் சட்டங்களைத் தடை செய்யவும், அதன் சம்மதம் இல்லாமல் மக்கள் மீது வரி விதிக்கவும் மன்னருக்கு உரிமை இல்லை என்றனர்.

### 2. டென்னிஸ் மைதான உறுதிமொழி (**Tennis court oath ; 20, 1789**):

அதிருப்தி அடைந்த மன்னர் தேசிய சட்டமன்றத்தைக் கலைக்க முயற்சித்தார். 1789, ஜுன் 20-ல் தேசிய சட்டமன்றம் கூடியிருந்த மண்டபத்தைப் பூட்டி, வெளியே ஆயுதம் தாங்கிய போர்வீரர்கள் நிறுத்தப்பட்டனர். எனவே சட்டமன்ற உறுப்பினர்கள் வெர்செய்ல்ஸ் மாளிகை அருகிலுள்ள டென்னிஸ் மைதானத்தில் கூடினர். 'பிரான்ஸ் நாட்டிற்கு ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கும் வரை கலைந்து செல்லப் போவதில்லை' என்று உறுதிமொழி எடுத்தனர். இதற்கு 'டென்னிஸ் மைதான உறுதிமொழி' என்று பெயர். மக்களின் விருப்பத்திற்கிணங்க அவர்கள் அங்கு இருந்ததால்,'துப்பாக்கி முனையைத் தவிர வேறு எந்த சக்தியாலும் அவர்களை அங்கிருந்து வெளியேற்ற முடியாது' என்று மிரபோ கூறினார். எனவே மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கினார் மன்னர். ஸ்டேட்ஸ் ஜெனரலின் மூன்று பிரிவினரும் சேர்ந்து அமரும்படி ஜுன் 27-ல் ஆணையிட்டார். பிரான்ஸ் நாட்டிற்கு புதிய அரசியலமைப்பு இயற்றும் பணியை தேசிய சட்ட சபை 1789 ஜுலை 6-ல் மேற்கொண்டது.

### 3. பாஸ்டைல் சிறைச்சாலையின் வீழ்ச்சி (**Fall of Bastille-ஜுலை 14, 1789):**

16-ம் லூயி பொதுமக்களின் பிரதிநிதிகளின் கோரிக்கைகட்கு நிபந்தனையின்றி கீழ்படிந்ததென்பது பெரிதளவு வெளித்தோற்றந்தான் தினமும் தனது நண்பர்களுடன் கலந்து பேசி, அதன்படி பாரிசில் வளர்ந்து கொண்டிருந்த எழுச்சியை அடக்க பெரும் படை ஒன்றை அனுப்பினார். பொருளாதார மேதையும், பாரிசு மக்களிடையே மதிப்புள்ள வீரராய்த் திகழ்ந்தவருமான நெக்கரை பதவியிலிருந்து நீக்கினார். பிற்போக்கு வாதிகள் பதவியிலமர்த்தப்பட்டனர். மன்னரின் இச்செயல்களைக் கேட்ட பாரிசு மக்கள் மன்னரின்

எண்ணங்கள் மீது சந்தேகம் கொண்டனர். நகர் முழுவதும் எதிர்ப்புப் புயல் வீசத் தொடங்கியது. பதட்டம் நிலவியது. தங்களைப் பாதுகாத்துக்கொள்ள நகரமக்கள் தேசியக்காவல் படை (National Guard) ஒன்றை அமைத்துக் கொண்டனர்.

சினம் கொண்ட நடுத்தர வகுப்பினர் பட்டினியால் வாடிய குடியானவர்கள், எழைத் தொழிலாளிகள் ஆகியோரைக் கொண்ட எட்டாயிரம் பேர் கொண்ட வெறிபிடித்த கும்பல் ஒன்று பாரிசில் கலகம் செய்ய ஆரம்பித்தது. 1789 ஜுலை 14-ல் அரசனின் கொடுங்கோன்மையின் சின்னமாக விளங்கிய பாஸ்டைல் சிறைச்சாலை தகர்த்தெறியப்பட்டது. அங்கு சேமித்து வைக்கப்பட்டிருந்த போர்க் கருவிகள் கொள்ளையடிக்கப்பட்டன. கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். ‘வீழ்ந்தது பாஸ்டைல் சிறைச்சாலை அல்ல, பூர்பான் வல்லாட்சியே’ என்று மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். 100 அடி உயரம், 30 அடி கனமுடைய சுவர்களையும், எட்டு பெரிய பாதுகாப்புக் கோபுரங்களையும், வெளிப்பக்கம் 70 அடி அகலமான அகழியையும் உடைய பாஸ்டைல் சிறைச்சாலையின் வீழ்ச்சி அரசியல் ரீதியாக பிரெஞ்சுப் புரட்சியின் முதல் முக்கிய சம்பவமாகத் திகழ்கிறது. மக்களின் உரிமைகளின்வெற்றியாகத் திகழ்கிறது. கொடுங் கோலாட்சியின் சிகரத்தையே வீழ்த்தியது பொன்ற உணர்வை மக்களிடம் எற்படுத்தியது. ‘பாஸ்டைலின் வீழ்ச்சியைப் போல பரந்த செயல் வினையுடைய, பலவகையான ஆற்றல்களமைந்த விளைவுகளைப் புரட்சியின் வேறெந்த தனி ஒரு நிகழ்ச்சியும் பெற்றிருக்கவில்லை’. பாஸ்டைல் சிறைச் சாலையின் வீழ்ச்சியைக் கண்டு பயந்துபோன 16-ம் லூயி தேசிய சட்டசபையை அங்கீகரித்தார். மக்களின் மதிப்பைப் பெறாத அமைச்சர்கள் விலக்கப்பட்டு, நெக்கர் மீண்டும் பதவியிலமர்த்தப்பட்டார். இது முடியாட்சியின் மீது புரட்சி இயக்கம் பெற்ற முதல் வெற்றியாகும். இதைத் தொடர்ந்து பாரிசு நகரத்திலுள்ள பழைய நிர்வாக அமைப்புகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டு ‘கம்யூன்’(Commune) என்ற ஒரு அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. பாரிசு நகரம் தேசிய காவற்படையை அமைத்துக் கொண்டது. அதன் தலைவராக லபாயட் நியமிக்கப்ட்டார். இது போன்ற கம்யூன்களும், தேசிய காவற்படையும் நாட்டின் ஒவ்வொரு நகரிலும் அமைக்கபட்டன. பூர்பான் மன்னர்களின் கொடி மாற்றப்பட்டு, சிவப்பு, வெள்ளை, நீலம் நிறம் கொண்ட புதிய கொடி தேசியக் கொடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது! அரசனுடைய அதிகாரத்தை நாடே ஏற்க மறுத்துவிட்டது என்ற உண்மை இதனால் தெரியவருகிறது. பிரெஞ்சுப் புரட்சி இப்போது மக்களின் இயக்கமாக மாறியது. இன்றும் பாஸ்டைல் வீழ்ச்சியடைந்த ஜுலை 14-ம் தேதியை ‘மனித உரிமைகள் நாளாக’ பிரெஞ்சு மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

**4. அரசனும் அரசியும் பாரிசு நகருக்குக் கொண்டு வரப்படுதல் (அக். 6,1789):**

தொடக்கத்திலிருந்தே பாரிசு மக்கள்,'மன்னா் பாரிசு நகரத்தில் வந்து தங்க வேண்டும்' என்று விரும்பினார்கள். ஆனால் இதுவரை மன்னா் வெர்செய்ல்ஸ் அரண்மனையை விட்டு வெளியே வருவதற்கு மறுத்து வந்தார். இந்நிலையில் பாரிசு நகர மக்கள் உணவுப் பண்டங்களின் விலையேற்றம் காரணமாகவும், அவை கிடைக்காத காரணத்தினாலும் பட்டினியால் வாடிக்கொண்டிருந்தனர். மேலும் அரசன் புரட்சியை பட்டினியால் வாடிக்கொண்டிருந்தனர். மேலும் அரசன் புரட்சியை அடக்கத் தனியாக பிளமிஷ் (Flemish) என்ற படையைத் தயார் செய்கிறார் என்ற வதந்தியும் பாரிசில் பரவியது. மேலும் மூவர்ணப் புரட்சிக்கொடியை அரசரும், ராணுவ வீரர்களும் அவமதித்ததாகவும் கூறப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த பெண்கள் கூட்டம் ஒன்று ஓரளவு ஆயுதம் தாங்கிய தேசியக் காவற்படை சூழ வெர்செயில்ஸ் அரண்மனையை அடைந்தது. மன்னரைப் பாரிசு வந்து தங்கும்படி கேட்டுக்கொண்டது. மன்னரின் பதில் திருப்தி அளிக்கவில்லை. எனவே அக்.6-ம் தேதி அக்கூட்டம் அரசனும் அரசியும் வசிக்கும் அறைக்குள் நுழைந்தது. பின்னர் அரசன், அரசி, அவர்களின் மகன் ஆகியோரைக் கட்டாயப்படுத்தி அரண்மனையை விட்டு வெளியேற்றினர். இனிமேலும் பாரிசு நகரிலுள்ள 'டியுலரிஸ் (Tuileries) அரண்மனையில் தான் வசிக்க வேண்டுமென்று கூறி அவர்களை பாரிசு நகரை நோக்கி ஊர்வலமாகத் திருப்பி அழைத்து வந்தனர். எட்டு பேர் அடங்கிய அரச குடும்பம் முழுவதும் ஒரே ஒரு வாகனத்தில் அடைக்கபட்டு பாரிசு கொண்டுவரப்பட்டனர்'என்று ஹேசன் (Hazen) கூறுகிறார். வரும்போது 'இதோ ரொட்டி சுடுபவர் அவரது மனைவி, அவர்களது சிறிய சமையல்காரர்! இனி நமக்கு ரொட்டி கிடைக்கும்'('Here is the baker, the baker's wife and the little cook, we shall have the bread') என்று ஏளனமாகக் கூறிக்கொண்டே வந்தனர். இந்த நிகழ்ச்சி அரசனின் வீழ்ச்சியையே காட்டுகிறது. பாரிசு நகரத்தில் மக்கள் கையில் ஒரு கைதி போன்றே அரசன் வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. நாட்டின் வன்முறைச் செயல்கள் பெருகின. நிர்வாகம் சீர்குலைந்தது.

**5. தேசிய சட்ட சபையின் பிற செயல்கள் (1789 முதல் 1791வரை)**

தேசிய சட்டசபை இக்சூழ்நிலையில் பிரான்சுக்குப் புதிய அரசியலமைப்பை உருவாக்க முனைந்தது. இதனால் தன்னை 'அரசியலமைப்பு நிர்ணயசபை'(Constituent Assembly) என்று அழைத்துக்கொண்டது. பின்னர் அது கீழ்க்கண்ட பல சீர்திருத்தங்களை செய்தது.

1)பிரபுக்களும், மதகுருமார்களும் அனுபவித்துவந்த விசேஷ உரிமைகள் ஒழிக்கப்ட்டன. அவர்களின் பட்டங்கள், பதவிகள் ஒழிக்கப்பட்டன. பிரபுக்களுக்கு செலுத்தப்பட்டு வந்த படைமானியக் கட்டணங்கள் (Fuedal dues) ஒழிக்கப்பட்டன. இவ்வாறு படைமானிய முறை (ஆகஸ்ட் 4, 1789) ஒழிக்கப்பட்டது.

2) மிராபோ, லபாயட் கமிலி டிஸ்மோலின்ஸ் (Camillle Desmoulins) ஆகியோரின் தலைமையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இதன்படி 'மக்களின் இறைமை''அதிகாரப் பிரிவினை' ஆகியவற்றின் அடிப்படையில் அமைக்கப்பட்ட வரம்புக்குட்பட்ட முடியாட்சி முறையை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தது.அரசியல் அதிகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்க்ள அடங்கிய ஓரடுக்கு சட்டசபையின் வசம் ஒப்படைக்கப்பட்டது. வரிகள் கட்டிய குடிமக்கள் மட்டுமே தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள். அரசனுக்கு ஆலோசனை கூற அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

3) நாட்டின் நிர்வாக அமைப்பு மாற்றியமைக்கப்பட்டது. அரசனால் நியமிக்கப்பட்ட இன்டெண்டுகள், கவர்னர்கள் பார்லிமெண்டுகள் போன்ற அமைப்புகள் அழைக்கப்ட்டன. நிர்வாகம் நல்லமுறையில் செயல்பட நாட்டு டிபார்ட்மெண்டுகள், கான்டன்கள், கம்யூன்கள் (Departments,Cantons,Communes) என்ற பல பிரிவுகளாகப் பிரிக்கபப்ட்டது.நீதிபதிகள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

4) திருச்சபையின் அதிகாரங்களையும், சிறப்புரிமைகளையும், பறிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காகப் புதிய 'திருச்சபை சட்டம்'(Civil constitution of clergy) ஒன்று இயற்றப்பட்டது. இதன்படி திருச்சபைக் அரசின் கட்டுப்பாட்டிற்குட்படுத்தப்பட்டது. அதன் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. திருச்சபைக் குருமார்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர்களின் ஊதியம் அரசாங்கத்தால் கொடுக்கப்படும். எனவே அவர்கள் அரசாங்கத்திற்குக் கீழ்பணிந்து நடக்க வேண்டும். இந்த மாறுதல்கள் புரட்சியின் சிறப்புத் தன்மையான சமத்துவம், ஜனநாயகம் என்ற கொள்கைகளின் வாசனையைக் கொண்டிருந்தது. எனவே போப்பாண்டவருக்கு ஆத்திரம் ஏற்பட்டது. இச்சீர்திருத்தங்களை மேற்கொ்ணடவர்களைச் சமயவிலக்கு செய்தார். ஆனாலும் மன்னர் இச்சீர்திருத்தங்கட்கு கையொப்பம் இடும்படி நேர்ந்தது.

5) அரசியலமைப்பு நிர்ணயசபை ஆற்றிய பணிகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது அது தயாரித்து வெளியிட்ட 'மனித உரிமை அறிக்கை'யாகும் (Declaration of the rights of man). இந்த உரிமைகளின் அறிக்கையில் ரூசோவின் கோட்பாடுகளின் செல்வாக்கைத் தெளிவாகக் காணலாம். 'எல்லா மனிதர்களும் பிறப்பில் சுதந்திரத்துடன், உரிமைகளில்

ஏற்றத்தாழ்வில்லாமல் சமமானவர்கள். நாட்டின் சட்டங்களை இயற்றுவதில் எல்லா குடி மக்களுக்கும் நேரிடையாகவோ அல்லது பிரதிநிதிகள் மூலமாகவோ பங்கெடுத்துக்கொள்ளும் உரிமை உண்டு. இறைமைக்கு இருப்பிடம் நாட்டு மக்களே. தனிமனித சுதந்திரம், சொத்துரிமை, பேச்சுரிமை, சட்டத்திற்குப் புறம்பாக சிறையிடப்படா உரிமை ஆகியவை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு'. இவ்வாறு மனித உரிமை அறிக்கை புரட்சி வாதிகளின் கொள்கை, குறிக்கோள் என்ன என்பதைத் திட்டவட்டமாக அறிவித்தது. கொடுங்கோலாட்சியை எதிர்க்க மக்களுக்கு உரிமை உண்டு என்ற புரட்சிகரமான கருத்தைக் கொண்டிருந்தது. மேலும் இந்த அறிக்கை பிரான்ஸ் நாட்டிற்கு மட்டுமல்லாமல் மனித சமுதாயத்தின் நலனிற்காகவே வரையப்பட்ட ஒன்றாகும் இந்தக் கருத்துக்கள் அடுத்த கால் நூற்றாண்டு கால ஐரோப்பாவில் முழுமையான ஆதிக்கம் கொண்டது.

### 6. அரசனும் அரசியும் தப்பி ஓடுதல் (ஜுன் 20, 1791)

இந்தப் புதிய அரசியலமைப்பையும் சீர்திருத்தங்களையும் 16-ம் லூயி வெறுத்தார். மேலும் பாரிசில் அவருடைய நிலை வரவரக் கடினமாகிக் கொண்டிருந்தது. மேடைப் பேச்சாளர்களும், பத்திரிகைகளும் அரசரின் எண்ணங்களைப்பற்றி ஐயுற்றன. புரட்சியின் பகைவர் என்று தூற்றினர். பதவி, சொத்துக்களை இழந்த பிரபுக்கள் உயிர் பிழைக்க நாட்டைவிட்டே ஓடினர். இப்படி ஓடிப்போன பிரபுகளுக்கு எமிக்ரி (Emigres) என்று பெயர். நிலைமை பரிதாபமானதாகவே தானும் நாட்டைவிட்டு ஓடத் திட்டம் தீட்டினார் 16-ம் லூயி. 1791 ஜுன் 20-ம் தேதி இரவு பாரிசு நளகரிலிருந்து வேலைக்காரன் போல மாறுவேடம் போட்டுக் கொண்டு தன் மனைவி மக்களுடன் தப்பி ஓடினார். ஆனால் பிரான்சின் எல்லையைக் கடக்க 21 மைல் இருக்கும் போது வாரன்னீஸ் (Varennes) என்ற இடத்தில் மக்களால் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு பாரிசுக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டார். இந்த நிகழ்சியினால் அரசனின் செல்வாக்கு அடியோடு குலைந்தது. 'வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்று, நாட்டை விட்டு ஓடிப்போன பிரபுக்களையும் ஐரோப்பிய மன்னர்களையும் சேர்த்துக் கொண்டு பிரான்சின் மீது படையெடுக்கத் திட்டமிட்டார் 16-ம் லூயி' என்ற வதந்தி பரவியது. எனவே மக்கள் அரசனை ஒரு தேசத் துரோகியாகவே கருத ஆரம்பித்தனர். அவருக்கு வழங்கப்பட்டு வந்த அரச மரியாதைகள் நிறுத்தப்பட்டன. 1791-செப்டம்பர் மாதம் புதிய அரசியலமைப்பை மன்னர் எற்றுக்கொண்டார்.

### 7. சட்டமன்றம்: அக்.1791 முதல் ஆகஸ்ட் 1792 வரை (**Legislative Assembly**)

அரசியலமைப்பை உருவாக்கும் பணி முடிவடைந்தவுடன் அரசியலமைப்பு நிர்ணய சபை கலைந்தது. புதிய அரசியலமைப்பின்படி புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் 1791-அக் முதல் நாள் கூடியது. அதில் 750 உறுப்பினர்கள் இருந்தனர். உறுப்பினர்கள் இளைஞர்களாவும், அரசியல் அனுபவமில்லாதவர்களாவும் இருந்தனர். இம்மன்றத்தில் கீழ்க்கண்ட முக்கியமான மூன்று பரிவினர் காணப்பட்டனர்.

**கிரடிண்டியர்கள் (Girondists):**

இவர்கள் பிரான்சின் தென்மேற்கிலுள்ள 'கிராண்டி' என்ற மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள். எனவே கிராண்டியர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் நல்ல வசதி படைத்தவர்கள். படிப்பாளிகள், பகுத்தறிவாதிகள், அதிக அளவு உறுப்பினர்களை உடையவர்கள். இவர்கள் முடியாட்சியை ஒழித்துக்கட்ட விரும்பினாலும் அதனைச் சட்டப்பூர்வமாகவே செய்ய விரும்பினர். இவர்கள் தீவிரவாதிகள் அல்ல, மிதவாதிகள், ஐரோப்பிய நாடுகளுடன் போர் புரிந்து புரட்சிக் கருத்துக்களைப் பரப்ப விரும்பினர். பிரான்சில் குடியாட்சியை நிறுவ விருப்பம் கொண்டனர்.

**டி) ஜேக்கப்பியர்கள் (Jacobins):**

இவர்கள் பிரெஞ்சுப் புரட்சியின் தீவிரவாதிகள், பாரிசு நகரிலுள்ள தூயஜேக் (St. Jacques) மடாலயத்தில் தங்கள் அலுவலகத்தை நிறுவி இருந்ததால் ஜேக்கப்பியர்கள் என்று அழைக்கப்பட்டனர். இதன் உறுப்பினர்கள் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இரத்தப் புரட்சி செய்தாவது முடியாட்சியை ஒழித்துக்கட்ட விரும்பினர். ரோபஸ்பியர், டான்டன், தூயஜஸ்ட ஆகியோர் இவர்களின் முக்கியத் தலைவர்கள் பொதுவாக ஜேக்கப்பியர்கள் அரசியலில் நாணயமும், நல்லெண்ணமும் இல்லாதவர்கள். சிலர் படிப்பற்றவர்கள், பழி பாவங்கட்கு அஞ்சாதவர்கள். ஜேக்கப்பியர்கள் நாடுமுழுவதும் தங்கள் கட்சியின் கிளையினை அமைத்துக் கொண்டார்கள்.

மாரட் என்பவரின் தலைமையில் 'பிளெய்ன்'(plain or Marsh) என்ற மூன்றாவது பிரிவும் இருந்தது. பாரிசில் மிகவும் செல்வாக்குப்பெற்று விளங்கிய மாரட் தீவிரவாதம் பற்றிப் பேசிய போதிலும் திட்டவட்டமான கொள்கை எதுவும் வகுத்துக் கொள்ளமால் செயல்பட்டு வந்தார். பெரிய நடுத்தர வகுப்பினருக்கும், ஏழை எளியவர்கட்கும் இடைப்பட்ட நடுத்தர வகுப்பினர் இவர் கட்சியில் எராளமாக இருந்தனர். புதிய சட்டமன்றம் கூடியவுடன், பிரான்சில் புரட்சி தொடங்கியதும், புரட்சிக்குப் பயந்தும், புதிய அரசியலமைப்பை ஏற்றுகொள்ள மறுத்தும் நாட்டை விட்டு ஒடிய பிரபுக்கள், குருமார்களின் பிரச்சனை

விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எனெனில் பிரான்சை விட்டு வெளியேறிய இவர்கள் எல்லைக்கப்பாலிருந்த டிரேவ்ஸ், மெயின்ஸ். (Treves Mainz) ஆகிய பகுதிகளில் குடி புகுந்தனர். அங்கிருந்து கொண்டு பிரெஞ்சுப் புரட்சியை நசுக்கவும், பிரான்சின் விவகாரங்களில் தலையிடவும் வெளிப்படையாகப் படைகளைத் திரட்டி பயிற்சி அளித்து வந்தார்கள். இந்த ஓடிப்போன பிரபுக்கள் பிரச்சனையைத் தீர்க்க சட்டமன்றம் 36 திட்டங்களை நிறைவேற்றியது. '1792 ஜனவரி முதல் தேதிக்குள் அவர்கள் நாடு திரும்ப வேண்டும். இல்லையேல் அவர்கள் சொத்துக்கள் பறிமுதல் செய்யபட்டு அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும்'என்று ஒரு சட்டம் கூறியது. சமயகுருமார்களும் இது போலவே தண்டிக்கப்படுவார்கள் என்று மற்றொரு சட்டம் நிறைவேறப்பட்டது. ஆனால் அரசர் இந்த இரண்டு சட்டங்களையும் எற்றுக்கொள்ள மறுத்துத் தள்ளுபடி செய்தார். இதன் மூலம் 16-ம் லூயி மீது மக்களுக்கு இருந்த சந்தேகம் வலுப்பெற்றது.

8. புரட்சிப் போர்கள் (**Revolutionary Wars**):

இதற்கிடையில் ஓடிப்போனபிரபுக்கள், குருமார்களின் ஆதரவுடன் மேரி அன்டாய்னட்டின் சகோதரரான ஆஸ்திரியப் பேரரசர் 2-ம் லியோ போல்டும், 16-ம் லூயியின் தம்பியான கவுன்ட்-டி-அர்டாய்ஸ் (Count-de-Artois) என்ற 18-ம் லூயியின் புரட்சியை நசுக்கவும், பிரான்சில் முடியாட்சியை மீண்டும் நிலைநாட்டவும் படை திரட்டினர். 1791 ஜுலை 6-ம் தேதி 'பதுவா பிரகடனம்' ஒன்றை வெளியிட்டு அதன் படி எல்லா ஐரோப்பிய நாடுகளையும் ஒன்று திரட்டினர்.மேரி அண்டாய்னட்டின் வேண்டுகோளுக்கிணங்க ஆஸ்திரிய அரசர் 2-ம் பிரடரிக் வில்லியமும் சேர்ந்து 1791 ஆகஸ்ட் 22-ல் 'பில்னிட்ஸ் பிரகடனம்'(Declaration of Pillnitz) ஒன்றை வெளியிட்டனர்.'அரசனும், அரசியும் மரியாதையாக நடத்தப்படாவிட்டால் பிரான்ஸ் மீது படையெடுத்து, அந்த நாடு தண்டிக்கப்படும் என்று அந்த அறிக்கை எச்சரித்தது.இதற்கு ஆதரவாக ரஷ்யா, ஸ்பெயின், ஸ்வீடன் ஆகிய நாடுகளும்சேர்ந்துகொண்டன.பிரஷ்ய, ஆஸ்திரியக் கூட்டுப்படை ஒன்று பிரன்ஸ்விக் பிரபு (Duke of Brunswick) தலைமையில் பிரான்சுக்குள் நுழைந்தது. எனவே சட்டமன்றம். 1792 ஏப்ரல் 20-ல் போர்ப் பிரகடனம் செய்தது. இவ்வாறு பிரான்சில் அந்நியர் தலையீடு கரணமாகப் புரட்சியில் வன்முறை தலைதூக்கியது.

9. செப்டம்பர் படுகொலைகள் (**September massacres,** 1792 செப்):

பிரான்சின் மீது நடத்தப்பட்ட பிரஷ்ய ஆஸ்திரிய கூட்டுப்படையெடுப்பிற்கு 16-ம் லூயிதான் காரணம் என்ற செய்தியாலும் பெல்ஜியத்தின் மீது எழுந்த படையெடுப்பு தோல்வியில் முடிந்த காரணத்தினாலும்மன்னர் மீதும், அவரது ஆதரவாளர்கள் மீதும்

மக்களைச் சினம் கொள்ளச் செய்தது. எனவே புரட்சியின் விரோதிகளை ஒழித்துக்கட்ட டாண்டனும், மாரட்டும் விரும்பின. 1762- ஆக்ஸ்ட் 10-ல் புரட்சிக்காரர்கள் அரண்மனையைத் தாக்கினார்கள்.அங்கிருந்த தாக்குதல் நடைபெறும் முன்னரே அரசனும் அரசியும் சட்டசபை கூடும் ஒரு பெரிய அறையில் அடைக்கலம் புகுந்தனர். வெற்றிபெற்ற கலகக்காரர்கள், சட்டமன்றக் கட்டிடத்தை முற்றுகையிட்டு அரசன் பதவி துறக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். அதனை மறுக்க முடியாத 16-ம் லூயி முடிதுறத்தலுக்குச் சம்மதித்தார். மேலும் சட்டமன்றம் கலைக்கப்பட்டு, புதிய அரசியலமைப்பை இயற்ற 'தேசியக் கன்வென்ஷன்' அமைக்கப்பட்டது. இப்போது புரட்சியின் தலைமை நடுத்தர மக்களிடமிருந்து தீவிரவாதிகளின் கைக்கு மாறியது. பாரிசிலுள்ள 'கம்யூன்' கலைக்கப்பட்டு ஜேக்கபியர்களின் தலைமையில் புரட்சிக்கம்யூன் அமைக்கபட்ட்டது. கம்யூனில் செல்வாக்குப் பெற்றிருந்த ஜேக்கபியர்கள், தங்களால் துரோகிகள் என்று கருதப்பட்ட 1500 பேரை 1792-ல் செப்டம்பர் மாதம் பிடித்து தெருக்களில் வைத்து குத்தி படுகொலை செய்தனர். இப்படுகொலை ஐந்து நாள் நீடித்தது. இப்படுகொலை திட்டமிட்டும், ஒழுங்காகவும நடத்தப்பட்டது. இதற்குச் 'செப்டம்பர் படுகொலைகள்' என்று பெயர். துரோகிகளை ஒழித்துக் கட்டியபின் புதிய புரட்சிப்படை ஒன்ற அந்நியர்களை எதிர்க்கப் புறப்பட்டது.

### 10. வால்மி சண்டை (**Battle of valmy**): செப் 19, 1792

பிரான்ஸ்விக், பிரபுவின் தலைமையில் பிரான்சினுள் நுழைந்த அந்நியப்படையினர் எல்லைப்புறத்திலிருந்த பல நகரங்களைத் தங்கள் வசப்படுத்தினர். எவ்வித எதிர்ப்புமின்றி ஆர்கோன்ஸ் (Argonnes) குன்றுகளை அடைந்தார்கள். அங்குதான் டுமோரிஸ் (Domouriz) என்பவரின் தலைமையில் பிரெஞ்சுப்படை ஒன்று நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. பிரான்சின் வடகிழக்கிலிருந்த 'வால்மி'என்ற இடத்தில் 1792 செப். 19-ல் சண்டை நடந்தது. இப்போரில் பிரெஞ்சுப்படைகள் வெற்றி பெற்றன. கூட்டுப்படை பின் வாங்கியது. இந்த வால்மி வெற்றி ஆபத்தான கட்டத்திலிருந்த பிரான்சைக் காப்பாற்றியது. அந்நியத் தலையீடு ஒடுக்கப்பட்டது. இது புரட்சியாளர்கட்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். வால்மிச் சண்டை மிகச் சிறயதானாலும் ஐரோப்பிய வரலாற்றில் மிக முக்கியமானதாகும். புரட்சிப்படைகளுக்கு முதலில் இச்சண்டை நம்பிக்கையூட்டியதோடு மட்டுமல்லாமல் வரிசையான பல ராணுவ வெற்றிகளுக்கு ஒரு தொடக்கமாகவும் அமைந்தது.

### 11. தேசியக் கன்வென்ஷன்(**National Convention**) **Sep**. 1792.

புதிய அரசியலமைப்பின்படி வயது வந்த ஆண்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 749 உறுப்பினர்களைக் கொண்ட தேசியக் கன்வென்ஷன் (or) தேசியப் பேரவை 1792 செப்.20-ல் கூடியது. இதில் தீவிரவாதிகளே பெரும்பான்மை பெற்றிருந்தனர். அரசனின் தலைவிதியை நிர்ணயம் செய்வது அந்நியர்கள் படையெடுப்பிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவது, உள் நாட்டுக் குழப்பங்கட்கு முடிவுகட்டிநாட்டிற்கு ஒரு புதிய அரசியலமைப்பை எற்படுத்துவது ஆகியவையே இக்கன்வென்ஷன் உடனடியாகக் கவனிக்க வேண்டிய பணிகளாகும்.

1792 செப். 21 முதல் பிரான்சில் முடியாட்சி ஒழிக்கப்பட்டது. பிரான்ஸ் ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 16-ம் லூயி மீது விசாரணை நடத்த முடிவு செய்யப்பட்டது. அரசியல் சட்டத்தை மீறியதாகவும், ஓடிப்போன பிரபுக்களுடன் சேர்ந்து தேசத்திற்கு எதிராகச் சதி செய்தார் என்றும், திருச்சபைச் சட்டத்தை ஏற்க மறுத்த குருமார்களுக்கு ஆதரவு அளித்தார் என்றும், அந்நியப் படைகளுக்கு உதவி செய்து தேசத்துரோகச் செயலில் ஈடுபட்டார் என்றும் 16-ம் லூயி மீது குற்றம் சாட்டப்பட்டது. 1792- டிசம்பரில் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டார். குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. 1793 ஜனவரி 21-ம் தேதி காலை 10-30 மணி அளவில் பாரிசிலுள்ள குடியரசுச் சதுக்கத்தில் சேம்சன் (Samson) என்ற கொலையாளி மூலம் 16-ம் லூயி மன்னரின் தலை வெட்டப்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. அப்போது கூடியிருந்த மக்கள் ‘குடியரசு வாழ்க’ என்று முழக்கமிட்டனர். சிலர் அவர் ரத்தத்தை தங்கள் கைக்குட்டையில் லேசாக நனைத்து எடுத்துக் கொண்டு சந்தோஷப்பட்டனர்.

16-ம் லூயி படுகொலை செய்யப்பட்ட செய்தி பரவியதும் பல இடங்களில் முடியாட்சிக்கு ஆதரவாகக் கிளர்ச்சி எற்பட்டது. முக்கியமாக லாவண்டி (Lavendee) மாவட்டத்திலுள்ள குடியானவர்கள் குடியரசுக்கு எதிராகக் கலகம் செய்தனர். மேலும் லயான்ஸ், மார்சையில்ஸ் (Lyons, Marsailies) போன்ற நகரங்களிலும் இக்கிளர்ச்சி பரவியது. ஆனால் கிளர்ச்சிக்காரர்கள் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர். பொதுவாக புரட்சியின் போது நடைபெற்ற படுகொலைகள் எல்லாம் டாக்டர் கில்லட்டின் (Dr.Guillotine) என்பவர் கண்டுபிடித்த தலை வெட்டும் கருவி மூலமாகவே நிறைவேற்றப்பட்டன.அந்த இயந்திரத்திற்கு அவருடைய பெயரே சூட்டப்பட்டது.

இவை தவிர தேசியக் கன்வென்ஷன் மேலும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஓடிப்போன பிரபுக்களின் நிலங்கள் நிலமற்ற ஏழைகளிடையே பகிர்ந்துகொடுக்கப்பட்டது. குடியானவர்கள் செலுத்த வேண்டிய கடன்களும் கட்டணங்களும் ரத்து செய்யப்பட்டன. தேசியக் கல்வித்திட்டம் ஒன்று

உருவாக்கப்பட்டது. புதிய சட்டத்தொகுப்பு தயார் செய்யப்பட்டது. புதிய காலண்டர் முறை புகுத்தப்பட்டது. 12 மாதங்கள் கொண்ட ஒரு ஆண்டு, மூன்று வாரங்கள் கொண்ட ஒரு மாதம், 10 நாட்கள் கொண்ட ஒரு வாரம் என்ற அடிப்படையில் இக்காலண்டர் இயங்கியது. மாதங்களுக்குப் பருவகாலங்களின் பெயர்களான தெர்மிடார், புருமேர், பிரேரியால் (Termidor, Brumairre, Brairial) போன்ற பெயர்கள் கொடுக்கப்பட்டன. மெட்ரிக் அளவு முறை புகுத்தப்பட்டது. கத்தோலிக்க மதத்திற்குப் பதிலாக 'பகுத்தறிவு வழிபாடு'(Worship of reason) என்ற புதிய சமயம் புகுத்தப்பட்டது.

12. பயங்கர ஆட்சி (**Reign of Terror**): 1793 ஜனவரி முதல் 1794 ஜூலை வரை.

பிரான்சில் 1793,1794-ம் வருடங்களில் தேசியக் கன்வென்ஷன் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குப் 'பயங்கர ஆட்சி' என்று பெயர்.

**பயங்கர ஆட்சி எற்படக் காரணங்கள்:**

16-ம் லூயியின் படுகொலை ஐரோப்பிய அரசுகளை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. புரட்சியை எப்படியாவது ஒடுக்கி விட வேண்டுமென்று ஐரோப்பிய அரசுகள் தீர்மானித்தன. புரட்சிக்கருத்துக்களை ஐரோப்பாவில் பரவி விடாமல் தடுக்கவும், பிரான்சில் மீண்டும் முடியாட்சியை ஏற்படுத்தவும், பிரான்சுக்கு எதிராக ஆஸ்திரியா, இங்கிலாந்து, பிரஷ்யா, ஸ்பெயின் ஹாலந்து, சார்டீனியா ஆகிய நாடுகள் சேர்ந்து முதல் கூட்டணியை ஏற்படுத்தின.

பிரான்சின் தென்கரையிலுள்ள டூலன் (Toulon) நகரை ஆங்கிலேயர் கைப்பற்றி அங்கு போட்டி அரசை நிறுவினர். பிரான்சின் பகைவர்கள் அதிகமாகிக் கொண்டே வந்தார்கள். பிரெஞ்சுப்படைகள் தோற்கடிக்கப்பட்டன. பிரான்சின் வீழ்ச்சி உடனடியாக ஏற்படும் போல் தோன்றின.

உள்நாட்டிலும் அரசிலமைப்புக்கு எதிராகவும், மீண்டும் முடியாட்சியைக் கொண்டுவரவும் அரசரின் ஆதரவாளர்கள் பல இடங்களில் கலவரம் செய்தனர்.

மேலும் தேசியக் கன்வென்ஷனில் தீவிரவாதிகளான ஜேக்கபியர்களின் கை ஓங்கி இருந்தது. அவர்களின் தலைவரான டாண்டன், அரசியற் சட்ட முறைகளைக் கையாள இயலாததால், தீவிர முறைகளைக் கையாண்டு உள்நாட்டு வெளிநாட்டு அபாயங்களைச் சமாளிக்க விரும்பினார். இவரால் ஆம்பிக்கப்பட்ட ஆட்சியே பயங்கர ஆட்சியாகும்.

பொது பாதுகாப்புக் குழு (**Committee of Public Safety**):

ஜேக்கபியர்களால் ஆம்பிக்கப்பட்ட பயங்கர ஆட்சி 1793 ஜனவர் முதல் 1794 ஜுலை வரை நீடித்தது. இந்த ஆட்சியின் பொது நிர்வாகப்பொறுப்புகளை ஏற்றுச் செய்ல்படுத்த 12 உறுப்பினர்களைக் கொண்ட ‘பொதுப் பாதுகாப்புக் குழுவை’ தேசியக் கன்வென்ஷன் ஏப்ரல் மாதம் அமைந்தது. இக்குழுவில் முதலில் டாண்டனும் பின்னர் ரோபஸ்பியரும் செல்வாக்குடையவர்களாக இருந்தனர். உள்நாட்டு வெளிநாட்டு அபாயங்களைச் சமாளிக்க கடும் நடவடிக்கைகளை எடுக்க இச்சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இக்குழு எத்தகைய அதிகாரங்களையும் தள்ளி வைத்தது. எனினும் குறிப்பாக படைகளைத் திரட்டுவதிலும் போரை இயக்குவதிலும் அதிகக் கவனம் செலுத்தி இறுதியில் பிரான்சிற்குப் புகழைத் தரவல்ல வெற்றிகளை ஒன்றன்பின் ஒன்றாக பெற்றது.

புரட்சி நீதிமன்றம் (**Revoloutionary Tribunal**): 1793 மார்ச் 29

பொதுப் பாதுகாப்புக் குழுவிற்கு உதவி செய்வதற்காக “பொது மக்கள் பாதுகாப்புக் குழு” (Committee of General Security) ஒன்றும் புரட்சி நீதிமன்றம் ஒன்றும் நிறுவப்பட்டன. அமைதியைப் பாதுகாத்து ஒழுங்கை நிலை நாட்ட வேண்டியது பாதுகாப்புக் குழுவின் பொறுப்பு. உள்நாட்டுக் கலகங்களை இரும்புக்கரம் கொண்டு நசுக்குவதும் ஜேக்கபியர்களின் அதிக்கத்தை நிலை நாட்டுவதும், குடியரசின் விரோதிகள் என்று சந்தேகப்பட்டவர்களை விசாரித்துத் தண்டிப்பதும் புரட்சி நீதி மன்றத்தின் பொறுப்பாகும். இத்தைகைய எதிரிகளை கைது செய்யவும், விசாரிக்கவும் அதிகாரம் வழங்கும் ‘Law of Suspects’ என்ற சட்டம் ஒன்று கன்வென்ஷனால் பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி பிரபுக்கள், புரட்சிக்கு முன் அரசாங்கப் பதவி வகித்தவர்கள், கலகம் செய்தவர்கள், அரச விசுவாசிகள் சந்தேகத்திற்குரியவர்கள் ஆகியோர் இந்த நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்டு கில்லட்டின் மூலம் கொல்லப்பட்டனர். விசாரணை ஒருதலைப்பட்சமாகவும், மிகவும் சுருக்கமாகவும் இருந்தது. கில்லட்டிற்குப் பலியானவர்களில் முக்கியமானவர்கள் மேரி அண்டாய்னட், மேடம்-டு-பாரி, மேடம் எலிசபெத், மேடம் ரோலண்டு ஆகியோர் ஆவர். ஒரே வருடத்தில் 16 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டனர். ஜேக்கப்பியர்களின் அரசியல் எதிரிகளான கிராண்டியர்களும் துரோகிகளாகக் கருதப்பட்டு கொல்லப்பட்டனர். ஜேக்கபியர்களைவிட தீவிரவாதிகளாக இருந்த ஹீபர்ட்டு (Hegbert)) சாமெட்டு (Chaumette) என்பவர்களின் தலைமையில் ஒரு கட்சி இயங்கி வந்தது. இது மிகவும் புரட்சிகரமான சமூக மாற்றங்களை வற்புறுத்தியது. இக்கட்சியினரும் நசுக்கப்பட்டனர்.

ரோபஸ்பியரின் வல்லாட்சி:

இதற்கிடையே பிரான்சின் மீது படையெடுத்த ஆஸ்திரியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. பிரஷ்யாவும், ஸ்பெயினும், பிரான்சுடன் சமாதானம் செய்து கொண்டன. நெப்போலியன் போனபார்ட்டின் திறமையால் டூலன் நகரம் ஆங்கிலேயரிடமிருந்து மீட்கப்பட்டது. இவ்வாறு ரோபஸ்பியரின் திறமையான நடவடிக்கைகளால் அந்நிய ஆபத்து ஒழிந்தது. எனவே இனிமேலும் அடாத செயல்கள் தேவை இல்லையென்றும், கொடுமைகள் தணிக்கப்பட வேண்டும் என்றும் டாண்டன் கூறினார். உடனே ரோபஸ்பியர் அவரை பிற்போக்காளர் என்று குற்றம்சாட்டி, அவரையும் அவரது கூட்டாளிகள் பலரையும் கொன்று குவித்தார்.

டாண்டனின் மறைவிற்குப் பிறகு ரோபஸ்பியர் பிரான்சின் வலிமைபெற்ற தலைவரானார். எதிரிகளே இல்லாத சூழ்நிலையில் திறமையானதும் முறையானதுமான அரசாங்கத்தையே எற்படுத்த முயற்சித்தார். ரோபஸ்பியர் உறுதியான எண்ணமுடையவர், கொள்கையிலும் வெறி கொண்டவர். இப்போது பாரிசு புரட்சிக் கம்யூனும், பொதுபாதுகாப்பு சபையும் இவர் கட்டுப்பாட்டின் கீழ்வந்தது. நாட்டில் அமைதி ஏற்பட்டாலும் தனது வல்லாட்சியைத் தொடர்ந்து நடத்த விரும்பினார். ரூசோவின் போதனைகளை எற்றுக் கொண்டு அதனை செயல்படுத்த முயன்றார். பகுத்தறிவு வழிபாட்டிற்குப் பதிலாக ‘ஒப்புயர்வற்ற சக்தி வழிபாட்டை’ (Worship of Supreme being) புகுத்தினார். நேர்மையின் அடிப்படையில் புதிய சமுதாய அமைப்பை நிறுவ நினைத்தார். ஆனால் இவரது சித்தாந்தங்கள் நடைமுறைக்கு எற்புடையதாக இல்லை. தம்மைப்பகைவர்கள் சூழ்ந்திருந்ததை உணர்ந்த ரோபஸ்பியர், தன்னை எதிர்த்தவர்களையெல்லாம் கொன்றார். கன்வென்ஷன் உறுப்பினர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. ஒருவிதச் சர்வாதிகாரத்தை எற்படுத்துவதற்கு வெளிப்படையாக முயற்சித்தார். இவரது கொடுமைகளைச் சகிக்க முடியாத எதிரிகள், சூழ்ச்சி செய்து, இவரைக் கைது செய்தனர். 1794 ஜுலை 28-ல் விசாரணையின்றி ரோபஸ்பியர் படுகொலை செய்யப்பட்டார். ரோஸ்பியரின் வீழ்ச்சியோடு பிரான்சில் பயங்கர ஆட்சியும் முடிவடைந்தது.

**பயங்கர ஆட்சியைப் பற்றிய மதிப்பீடு:**

1793-ம் ஆண்டு பிரான்ஸ் எதிர்நோக்கிய சிக்கலான பிரச்சனைகளைத் தீர்க்க ‘ஒரு அவசரகால வல்லாட்சி’ தேவைப்பட்டது. இந்தப் பயங்கர ஆட்சியின் மூலம் புரட்சியாளர்கட்குப் பல நன்மைகள் கிடைத்தன என்பது முற்றிலும் உண்மை. முதலாவதாக, உள்நாட்டில் நிலவிய குழப்பங்களும், ஸ்திரமற்ற நிலையும் மாற்றப்பட்டு அமைதி எற்படுத்தப்பட்டது. புரட்சி எதிாப்பு இயக்கம் அடக்கப்பட்டது.

இரண்டாவதாக, வெளிநாட்டவர் படையெடுப்பும், ஆக்கிரமிப்புச் செயலும் வெற்றிகரமாகச் சமாளிக்கப்பட்டு பிரான்சின் ஒற்றுமை நிலைநாட்டப்பட்டது.

இவ்வாறு பிரான்ஸ் நாட்டின் புரட்சியைப் பாதுகாக்கவும், ஐரோப்பாவில் பிரான்சைப் பாதுகாக்கவும் ஒரு கடினமான நடவடிக்கை தேவைப்பட்டது. தேசியப்பற்று பயத்தின் மூலமே மக்களுக்கு ஊட்டப்பட வேண்டியதிருந்தது. 1793 ஜனவரி முதல் 1794 மார்ச் வரை இந்தப் பயங்கர ஆட்சியின் அவசியத்தைப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால் 1794 மார்ச்சுக்குப் பிறகும் இந்த பயங்கர ஆட்சியைத் தொடரச் செய்ததில் அவசியம் இல்லை. மேலும் பயங்கர ஆட்சியின் போது அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். தன்னுடைய மரணத்திற்கு முன்பு மேடம் ரோலண்டு என்பவர் ‘‘ஐயகோ சுதந்திரத்தின் பெயரில் கொடுஞ்செயல்கள் நடைபெறுகிறதே!’’ என்று குமுறினார்.

**டைரக்டரி (Directory):** (இயக்குநர் குழு 1795-99)

இதற்குப் பின் பிரான்ஸ் நாட்டின் நிர்வாகம் ஐந்து பேர் அடங்கிய இயக்குநர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் பிரான்சின் கொள்கைகளுக்கு வழிகாட்டிகளாக இரண்டு சட்டசபைகள் இருக்க வேண்டுமென்று ஏற்பாடாயிற்று. ஐநூறு உறுப்பினர்களைக் கொண்ட Council of five hundred-ம் பழைய பிரிவினர்களைக் கொண்ட Council Ancient-ம் முறையே கீழ்சபையாகவும், மேல் சபையாகவும் செயல்பட்டன. இந்த இயக்குநர் குழு அரசாங்கத்தால் நாடு எதிர்நோக்கி பிரச்சனைகளைத் தீர்க்க முடியவில்லை. மேலும் இது பிறப்பித்த ஆணைகள் மக்களிடையே அதிருப்தியை எற்படுத்தியது. இச்சமயத்தில் தான் நெப்போலியன் போனபர்ட் என்ற தளபதியின் புகழ் வளாந்துகொண்டு வந்தது. நாட்டில் எற்பட்ட பல குழப்பங்களை நெப்போலியன் அடக்கினார். மக்கள் டைரக்டரிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு 1799-ல் டைரக்டரியைக் கவிழ்த்தார். கான்சுலேட் என்ற அரசாங்கத்தை அமைத்து அனைத்து அதிகாரங்களையும், தன் வசம் எடுத்துக் கொண்டார். பிரெஞ்சுப் புரட்சி முடிவடைந்தது. அதன்பின் 1821-வரை பிரான்சின் வரலாறு நெப்போலியன் வரலாறே ஆகும்.

**பிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகள் (முக்கியத்துவம்):**

1. பிரெஞ்சுப்புரட்சி பிரான்ஸ் நாட்டு வரலாற்றில் மட்டுமல்லாது உலக வரலாற்றில் பெரும் மாற்றங்களை எற்படுத்தியது. பிரான்சில் பூர்பான் (Bourbon) மன்னராட்சி முடிவடைந்து குடியாட்சி முறை ஏற்பட்டது. பிரெஞ்சு சமுதாயத்தில் காணப்பட்ட

எற்றத்தாழ்வுகள் மறைந்தன. நாடு முழுவதிலும் அனைவரையும் கட்டுப்படுத்தக்கூடிய ஒரே மாதிரியான நிர்வாக முறையும், சட்ட திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன.

2. பிரெஞ்சுப்புரடசி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற அரிய மூன்று கருத்துக்களை உலகிற்கு அளித்தது. இக்கருத்துக்கள் உலகத்தின் மற்ற நாடுகளில் உணர்ச்சியைத் தூண்டிவிட்டன. அடுத்த ஒரு நூற்றாண்டு காலத்தில் உலக அரசியல் விவகாரங்களில் இக்கருத்துக்களின் ஆதிக்கமே காணப்பட்டது. ஐரோப்பிய அரசியலில் புனிதக் கொள்கைகளாயின. பிற்காலத்தில் பல உலக நாடுகளில் மக்களாட்சி முறை தோன்றவும், தேசியம் வளரவும், அந்நியர் ஆட்சி ஒழிக்கப்படவும் இக்கோட்பாடுகள் தூண்டுதலாக விளங்கின.

3. புரட்சியின் போது வெளியிடப்பட்ட மனித உரிமை அறிக்கையின்படி தனிமனிதனின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டது. அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவம் மக்களால் உணரப்பட்டது. மத வழிபாட்டுரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, சொத்துரிமை, ஸ்தல ஆட்சி அமைக்கும் உரிமை கிடைத்தது.

4. 16-ம், 17-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தெய்வீக உரிமைக் கோட்பாட்டின்படி இயங்கி வந்த வல்லாட்சி முறை அரசாங்கம் ஒழிந்தது. மாறாக, மக்களின் செல்வாக்கு உயர்த்தப்பட்டு அரசியல்மைப்புக்ட்பட்ட அரசாங்கம் அமைவதற்கு வழிவகுத்தது.

5. ஆட்சி செய்யும் பொறுப்பு மக்களுக்கே உண்டு என்ற உண்மை உணர்த்தப்பட்டது. மக்களின் இறைமைத் தன்மை முக்கியத்துவம் பெற்றது.

6. பிரெஞ்சுப் புரட்சியால் தேசியம் என்ற கருத்து நிலை நிறுகத்தப்பட்டது. தேசிய உணர்வு ஐரோப்பிய அரசியலில் பெரும் மாற்றங்களை எற்படுத்தியது.

7. மனிதாபிமானக் கருத்துக்கள் தோன்றுவதற்கு பிரெஞ்சுப் புரட்சி வழிவகுத்தது. சிறைச்சாலைச் சீர்திருத்தங்கள், சித்ரவதை ஒழிப்பு, அடிமை முறை ஒழிப்பு, மத சகிப்புத் தன்மை ஆகிய கருத்துக்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தது.

8. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையை இப்புரட்சி வலியுறுத்தியது. நில உரிமை, படைமானியமுறை ஆகியவை ஒழிக்கப்பட்டது. ஆண்களும் பெண்களும் சம உரிமை பெற்றனர்.

9. பிரான்ஸ் நாட்டின் இலக்கியத் துறையில் மறுமலர்ச்சி ஏற்படவும் இப்புரட்சி வழிகோலியது. புரட்சிக் கருத்துக்களினால் தூண்டப்பட்டு பல இலக்கியங்கள் உருவாயின. புரட்சியின் பிரதிபலிப்புகள் அதில் காணப்பட்டன.

10 ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில் அரசியல் தத்துவஞானிகளும், கவிஞர்களும் பிரெஞ்சுப் புரட்சிக் கருத்துக்களின் செல்வாக்கிற்குள்ளானார்கள். காண்ட, கதே, ஹம்போல்ட், ஷில்லர் (Kant, Goethe, Hamboldt, Shillor) போன்ற ஜெர்மன் எழுத்தாளர்களும், வோர்ட்ஸ்வொர்த், கோல்ரிட்ஜ், ஷெல்லி, கீட்ஸ் (Wordsworth,

Coleridge, Shelly, Keats) போன்ற ஆங்கிலக் கவிஞர்களும், தர்மஸ் பெயின் (Thomas Paine) என்ற அமெரிக்க அறிஞரும் புரட்சிக் கருத்துக்களின் செல்வாக்கிற்குள்ளானார்கள்.

11. பிரெஞ்சுப் புரட்சியின் தூண்டுதலால் பிற நாடுகளிலும் புரட்சிக் கருத்துக்கள் பரவி முக்கிய விளைவுகளை எற்படுத்தியது. இங்கிலாந்தில் 1832, 1867, 1884, 1911, 1918 ஆகிய வருடங்களில் இயற்றப்பட்ட சீர்திருத்தச் சட்டங்கள் பிரெஞ்சுப் புரட்சியின் பிரதி பலிப்புகளே ஆகும். அங்கே பிரபுக்கள் சபையின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டது, பொதுமக்கள் சபை வலிமையடைந்ததும் புரட்சிக் கருத்துக்களின் தூண்டுதலேயாகும். ஸ்பெயின், போர்ச்சுக்கல், பனாமா, பெரு ஆகிய நாடுகளில் குடியாட்சிக் கருத்துக்கள் பரவின. மேலும் இப்புரட்சி இலத்தின் அமெரிக்க நாடுகளின் சுதந்திரத்திற்குத் தூண்டுதலாய் அமைந்தது.

12. ரஷ்யப் புரட்சி தோன்றும் வரை உலகின் பல்வேறு இடங்களில் எழுந்த தேசிய இயக்கங்களும், விடுதலைப் போராட்டங்களும் பிரெஞ்சுப் புரட்சியிலிருந்துதான் உள்ளுணர்வும், உத்வேகமும் பெற்றன!

**பிரெஞ்சுப் புரட்சியின் தன்மை (Nature of the French Revolution):**

பிரான்சில் 1789 ஜூலை 14-ம் தேதி முதல் தொடங்கிய நிகழ்ச்சியை பிரெஞ்சுப்புரட்சி என்று அழைப்பதற்குப் பதிலாக, அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே ஐரோப்பாவெங்கும் பரவிக்கொண்டிருந்த பெரும்புரட்சி இயக்கத்தின் ஒரு கட்டம் என்ற கருதுவதே பொருத்தமானதாக இருக்கும். இங்கிலாந்தில் 1649-ல் முதலாம் சார்லஸ் மன்னன் கொல்லப்பட்டது, 1775-ல் அமெரிக்கக் குடியேற்றங்களின் புரட்சி, 1783-87-ல் ஐக்கிய நெதர்லாந்தின் புரட்சி, 1789-ல் ஏற்பட்ட பிரெஞ்சுப் பரட்சி ஆகிய நிகழ்ச்சிகள் யாவற்றையும் இப்பெரும் புரட்சி இயக்கத்தின் பலவேறு கட்டங்களாகக் கருதலாம். 1792-ல் பெல்ஜியத்திலும், 1795-ல் நெதர்லாந்திலும், 1796-ல் இத்தாலியிலும் 1798-ல் ஸ்விட்சர்லாந்திலும், 1830, 1848-ல் பிரான்சிலும் நடந்த புரட்சிகள் 1798-ல் ஸ்விட்சர்லாந்திலும், 1830, 1848-ல் பிரான்சிலும் நடந்த புரட்சிகள் இப்பெரும் புரட்சி இயக்கத்தின் தொடர்ச்சியே என்றும் கூற வேண்டும்.

பிரெஞ்சுப் புரட்சி ஒரு நடுத்தர வகுப்பினரின் புரட்சி, இதனை உருவாக்கியவர்கள் 'பூர்ஷ்வா' என்ற நடுத்தர வகுப்பினர். உளுத்துப்போன நிலமானிய சமுதாயத்தையும், சிறப்புரிமைகளையும், அதிகாரவர்க்க வல்லாட்சி முறையையும் தகர்த்தெறியும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டதுதான் இப்புரட்சி. சமத்துவம் என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் எழுந்ததுதான் இந்த இயக்கம். இக்கோட்பாடே புரட்சியின் உயிர்நாடியாக விளங்கியது.

பிரெஞ்சுப்புரட்சியினை ஒரு சமுதாயப் புரட்சி என்றும் கூறலாம். ஏனெனில் இப்புரட்சியின் முதன்மையான நோக்கம் சமுதாயத்தை மாற்றியமைப்பதாகும். சமுதாயத்தில் காணப்பட்ட சீர்கேடுகளை ஒழிக்கும் நோக்கத்துடன் துவக்கப்பட்டதுதான் பிரெஞ்சுப்புரட்சி.

'பிரபஞ்சத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய பிளவு' என்று இங்கிலாந்துப் பிரதமர் பிட் கூறினார். "பிரெஞ்சுப் புரட்சி கம்யூனிசக் கொள்கையின் முன்னோடியாக விளங்குகிறது" என்ற கிரோப்டகின் என்பவர் கூறுகிறார். மேலும் "புரட்சிக்காலம் முழுவதும் கம்யூனிசக் கொள்கையே நிலவி வந்தது.'' என்கிறார். ஜவர்கர்லால் நேரு அவர்கள் தனது 'Glimpses of world History' என்ற நூலில் பிரெஞ்சுப' புரட்சியைப் பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"The French revolution was an amazing and an ever changing drama, full of extrodinary incidents that still fascinate us and horrify and thrill."

## 2. நெப்போலியன் போனபார்ட்
## (NAPOLEON BONAPARTE 1769-1821)

'பிரெஞ்சுப் புரட்சியின் குழந்தை' என்று அழைக்கப்படும் நெப்போலியன் போனபார்ட் மத்திய தரைக் கடலிலுள்ள கார்சிகா தீவில் பிறந்தார். இளமையிலேயே பேராற்றல் பெற்று விளங்கினார். துணிவு, தன்னம்பிக்கை, கற்பனைத்திறன், ஆற்றல் ஆண்மை, விரிந்த பொது நலன் ஆகியவற்றின் மொத்த உருவமாக விளங்கினார். பிரெஞ்சுப் புரட்சியில் அதிக ஈடுபாடு கொண்டார். பிரெஞ்சு ராணுவத்தீன் சாதாரண பீரங்கிப் படை வீரராகச் சேர்ந்த நெப்போலியன் உலகம் போற்றும் சாதனைகளை உருவாக்கும் ஆற்றலை படிப்படியாக வளர்த்துக் கொணடார். தனது பேராற்றலின் விளைவாக பிரான்ஸ் நாட்டின் பேரரசராக உயர்ந்தார். போர் முறையில் அவர் காண்பித்த திறமையாலும், சுறுசுறுப்பாலும் ஐரோப்பாவில் தனது எதிரிகளை எல்லாம் முறியடித்தார். ஐரோப்பாவையே ஆட்டிப்படைக்கும் ஆற்றல் பெற்றவராக விளங்கினார். ஆனால் இறுதியில் புரட்சிக் கருத்துக்களைப் புறக்கணித்தாலும் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த தேவையற்ற போர்களில் ஈடுபட்டதாலும் மக்களிடம் மதிப்பிழந்து வீழ்ச்சியடைந்தார்.

**நெப்போலியன் எழுச்சி (வெற்றிகள்)**

**1. நெப்போலியன் வாழ்க்கைக் குறிப்பு:**

மத்தியதரைக் கடலிலுள்ள கார்சிகா தீவின் தலைநகரான அஜாசியோவில் ஒரு சாதாரண நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த கார்லோ போனபார்ட, லடீஷியா ரமோலினி (Carlo Bonaparte, Latitcia Ramolini) என்பவர்களுக்கு மொத்தம் பிறந்த பதிமூன்று குழந்தைகளில் இரண்டாவது மகனாக 1769, ஆகஸ்ட 15-ம் தேதி பிறந்தார். நெப்போலியன், அப்போது கார்சிகாத்தீவு பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்டிருந்தது. நெப்போலியன் தனது ஆறாவது வயதில் கார்சிகாவிலுள்ள ஆரம்பப்பள்ளி ஒன்றில் படிப்பைத் தொடங்கினார். அப்போதிருந்தே நெப்போலியனிடம் துணிச்சலும், அஞ்சாமையும் வளர்ந்து வந்தன.

நெப்போலியன் பத்து வயது ஆன போது கார்சிகாவிலிருந்த பிரெஞ்சு ஆளுநர் ‘மார்போ’ (Marbow) என்பவரின் பரிந்துரையில் பேரில் பாரிசுக்கு அருகிலுள்ள ‘பிரைன்’ (Brienne) என்ற இடத்திலுள்ள ராணுவப்பள்ளியில் சேர்க்கப்பட்டார். அங்கு படிக்கும்போது பல வரலாற்று நூல்களைப் படித்தார். எல்லாப் பாடங்களிலும் முதன்மையாகத் தேறினார். அப்போதிருந்தே ராணுவத்துறையின் மூலம் புகழ்பெற விரும்பினார் நெப்போலியன். 1779 முதல் 1784 வரை பிரைனில் ஐந்தாண்டுப் பயிற்சியை முடித்த நெப்போலியன் இறுதித் தேர்வில் முதன்மையாகத் தேறினார். எனவே பரிசிலுள்ள ராணுவக் கல்லூாயீல் ஓராண்டு கால மேற்படிப்பிற்காக அனுப்பப்பட்டார். 1785-ல் அதிலும் முதன்மையாகத் தேறினார்.

1785, அக்.28-ம் தேதி நெப்போலியன் வாலன்ஸ் (Valence) நகரிலுள்ள பீரங்கிப் படையின் உதவி அதிகாரியாக அவரது 16-வது வயதில் நியமிக்கப்பட்டார். அப்போது மன்னராட்சிக்கு எதிராக பிரான்ஸ் முழுவதிலும் கலவரம் மூண்டிருந்தது. ‘ஆக்சோன்’ என்ற இடத்திற்கு கிளர்ச்சியை வெற்றிகரமாக அடக்கிய நெப்போலியன் பதவி உயர்வு பெற்று பிரான்ஸ் நாட்டின் துணைத் தளபதியானார்.

**2. டூலன் (Toulan) நகரம் மீட்கப்படுதல்:**

பிரெஞ்சுப் புரட்சியின் போது 1793-ல் அரசர் 16-ம் லூயி கொலை செய்யப்பட்டார். எனவே அரசரது ஆதரவாளர்கள் நாடெங்கிலும் கிளர்ச்சி செய்தனர். பல நகரங்களில் அரச ஆதரவாளர்கள் புரட்சி அரசுக்கு எதிராகப் போரில் குதித்தனர். அதில் ஒரு நகரம தான் டூலன். இது மத்திய தரைக் கடலிலுள்ள முக்கிய பிரெஞ்சுத் துறைமுகமாகும். பிரெஞ்சுக்கடற்படைத் தளமாகவும் செயல்பட்டது. ஒரு பெரிய ஆயுதக்கிடங்கும் இங்கு இருந்தது. இந்த நகரைத்தான் அங்கிருந்த அரச ஆதரவாளர்கள் ஆங்கில-ஸ்பானியக் கூட்டுப்படையிடம் ஒப்படைத்துவிட்டார்கள்.

இந்த நகரத்தை மீட்கும் பொறுப்பை நெப்போலியனிடம் ஒப்படைத்தது புரட்சி அரசு. அங்கு அவர் பீரங்கிப் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். தனது

தந்திரமான போர் நுணுக்க முறையால் ஒரே இரவில் டூலனை மீட்டார். டூலனில் நெப்போலியன் வலிமை வாய்ந்த ஆங்கிலப்படையை வென்றார். இந்த வெற்றி அவரது எதிர்கால பல வெற்றிகளுக்கும், புகழுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தது. நெப்போலியனுக்குப் பாராட்டுகள் குவிந்தன. பாரிசில் டூலன் வெற்றிவிழா நடத்தப்பட்டது. நெப்போலியன் புகழ் நாடெங்கும் பரவியது. மக்களும் நெப்போலியனை மனமாற வாழ்த்தினர் வரவேற்றனர். 1794-மார்ச் மாதம் இத்தாலியில் பீரங்கிப்படைத் தளபதியாக (Brigadiar general) நியமிக்கப்ட்டார். 1795 அக்டோபர் 4-ம் தேதி புரட்சியாளர்களால் இயற்றப்பட்ட புதிய அரசியலமைப்பிற்கு எதிராகப பாரிசில் கலவரம் ஏற்பட்டது. இதனை அடக்கும் பொறுப்பும் நெப்போலியனிடமே தரப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நெப்போலியனுக்கு எதிரி பிரெஞ்சு மக்களே! போர்களம் பாரிசு. எனினும் கொடுக்கபட்ட பொறுப்பை திறமையுடன் நிறைவேற்றினார். கலவரம் ஒடுக்கபட்டது. அரசிலமைப்பு நிலை நாட்டப்பட்டது.இந்த நிகழ்ச்சியும் நெப்போலியனின் எழுச்சிக்கு முக்கியக் காணமானது.அப்போது பிரான்சில் ஆட்சிபுரிந்த தேசியப்பேரவை நெப்போலியனைப் பாராட்டியது. பதவி உயர்வு அளித்தது. ஆம், 25 வயதே நிரம்பிய நெப்போலியன் பிரெஞ்சுப் படைகளின் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

**திருமணம்:** தன்னைவிட ஆறுவயது அதிகமான இரண்டு பிள்ளைகட்குத் தாயான ஜோசபைன் என்ற கணவனை இழந்த மங்கையிடம் மனதைப் பறிகொடுத்தார் நெப்போலியன். இப்படி பறிகொடுக்கக் காரணம் ஜோசபைனின் பேரழகே! 1796, மார்ச் 6-ம் தேதி இவர்களின் திருமணம் எவ்விதச் சமயச் சடங்குகளுமின்றி எளிய முறையில் நடைபெற்றது.

### 3. நெப்போலியனின் முதல் இத்தாலியப் படையெடுப்பு: 1796

16-ம் லூயியின் படுகொலையின் விளைவாகப் பிரான்சுக்கு எதிராக இங்கிலாந்து முதல் கூட்டணியை (First coalition) அமைத்திருந்தது. அதில் சேர்ந்திருந்த நாடுகள் ஆஸ்திரியா, பிரஷ்யா, ஸ்பெயின், ஹாலந்து, சார்டீனியா ஆகியவையாகும். அப்போது பிரான்ஸ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பு ‘டைரக்டரி’ என்ற ஐந்து பேர் அடங்கிய குழுவிடம் இருந்தது. குழுவிலிருந்தவர்கள் பேராஸ் கார்னட், லெட்டர்னர், ரீபெல், லிபாக்ஸ் (Barres, Carnot, Letourneur, Rebell, Lepaux) ஆகியோர் ஆவர். இவர்கள் திறமையற்றவர்கள். இவர்களது ஆட்சியில் லஞ்ச ஊழல் மலிந்து காணப்பட்டது. அனால் மக்களிடையே அதிருப்தி நிலவியிருந்த இந்த நிலையில் கூட அவர்கள் தங்கள் போர்த்திட்டங்களைக் கைவிடவில்லை. கூட்டணியிலிருந்த பிரஷ்யா தோற்கடிக்கப்பட்டதால் அது பிரான்சுடன் ‘பாசல்’ உடன்படிக்கை (Treaty of

Basel) செய்து கொண்டது. ஆஸ்திரியா, இங்கிலாந்து, சார்டீனியா ஆகிய நாடுகள் மட்டும் தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருந்தன.

போரை தொடர்ந்து நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட டைரக்டரி ஆஸ்திரியா மீது இருமுனைத் தாக்குதல் நடத்த திட்டமிட்டது. அதன்படி ஒரு பிரெஞ்சுப்படை ஜுர்டன், மொரியோ (Jourdan, Moreau) ஆகிய தளபதிகளின் தலைமையில் ரைன் ஆற்றைக் கடந்து ஜெர்மனி வழியாகச் சென்று வீயன்னாவைத் தாக்குவது என்றும், மற்றொரு படை நெப்போலியனின் தலைமையில் இத்தாலியிலிருந்த ஆஸ்திரியப் பகுதிகளைத் தாக்குவது என்றும் திட்டம் தீட்டப்பட்டது. இதன்படி புயல் வேகத்தில் புறப்பட்டார் நெப்போலியன். ஆல்ப்ஸ் மலையைக் கடந்து முதலில் சார்டீனிய மன்னரைத் தோற்கடித்தார். செவாய், நைஸ் ஆகியவை கைப்பற்றப்பட்டன.அடுத்து மிலான், லம்பாடி, போப்பின் பகுதிகள் கைப்பற்றப்பட்டன. பின்னர் லோடி, அர்கோலா, ரிவோலா, மான்டவா, கேஸ்டிலோன் (Lodi, Arcola, Rivola, Mantua,Castiglone) ஆகிய இடங்களில் நடைபெற்ற போர்களில் ஆஸ்திரியப் படைகளைத் தோற்கடித்து வியன்னாவை நோக்கி முன்னேறினார் நெப்போலியன்.

நடுங்கிப்போன ஆஸ்திரியப் பேரரசர் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள முன்வந்தார். அதன்படி 1797-அக்டோபரில் கேம்போ போமியோ (Treaty of campo Formio) உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி ரைன் நதி பிரான்சின் எல்லையாயிற்று. ஆஸ்திரிய நெதர்லாந்து பிரான்சுக்கு கிடைத்தது. இதற்கு ஈடாக வெனிஷியா ஆஸ்திரியாவுக்குக் கொடுக்கப்பட்டது. லம்பார்டி, பெராரா, பொலோனா, மாடனா, (Lambardy Ferrara, Bologna Modenna) ஆகிய வட இத்தாலியப் பகுதிகள் ‘சிசல்பைன் குடியரசு (Cisalpine Republic) என்ற அரசாக நிறுவப்பட்டது. ஜெனோவா, லெகூரியக் குடியரசாகவும், (Ligurian Republic), ஹாலந்து படாவியக் குடியரசாகவும், (Batavian Rephlic) போப்பின் பகுதிகள் ரோமானியக் குடியரசாகவும், (Roman Republic), நேப்பிள்ஸ், சிசிலி குடியரசுகள் பார்த்தினோபியக் குடியரசராகவும் (Parathonopean Republic) நிறுவப்பட்டன. இவை பெயரளவில்தான் குடியரசுகள், உண்மையில் நெப்போலியனின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தன. இப்படையெடுப்பின் விளைவாக இத்தாலியிலிருந்து மிகுந்த செல்வத்தையும், கலைப் பொருட்களையும் நெப்போலியன் கவர்ந்து வந்தார். நெப்போலியனின் புகழ் அதிகமானது. பிரான்சின் ஒப்பற்ற வீரராகத் திகழந்தார்.

### 4. நெப்போலியனின் எகிப்தியப் படையெடுப்பு: 1799

கேம்போ-போமியோ உடன்படிக்கைக்குப்பின் பிரான்சிற்கு இங்கிலாந்து நீங்கலாக வேறு பகைவர்கள் இல்லை. இங்கிலாந்து கடல்வலிமை அதிகம் பெற்றிருந்ததால் அதனைத் தோற்கடிக்க பிரான்சால் முடியாதது போலிருந்தது. எனவே போரின் அடுத்த போக்கு புதுமையாக இருந்தது. இங்கிலாந்தின் அரசியல் ஆதிக்கத்தை ஒடுக்கவும் அது இந்தியாவுடன் கொண்டிருந்த வியாபாரத் தொடர்பை துண்டிக்கவும், அதற்காக எகிபதின் மீது படையெடுக்கவும் நெப்போலியன் திட்டம் ஒன்ற தீட்டினாா். அதற்கு 'பெருங்கீழ்த் திசைத்திட்டம்' (Grand Eastern Design) என்று பெயர். இத் திட்டத்தை இயக்குநர்கள் உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள். காரணம் மக்களிடம் புகழ்பெற்றுக் கொண்டிருந்த நெப்போலியன் பாரிசை விட்டு எங்காவது போனால் சரி என்று நினைத்தார்கள். மேலும் அதிகதூரம் உள்ள எகிப்துக்குச் சென்றால் நெப்போலியன் திரும்பிவர இயலாது என்பது அவர்களின் எண்ணம்.

டைரக்டரி அரசாங்கத்தின் ஒப்புதலுடன் வலிமை மிக்க ஒரு கப்பற்படையுடனும், காலாட்படையுடனும் டூலனிலிருந்து எகிப்து நோக்கிப் புறப்பட்டார் நெப்போலியன். எகிப்துக்கு செல்லும் வழியில் மால்ட்டா தீவைப் பிடித்துக் கொண்டார். பின்னர் எகிப்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த மம்லூக்குகளை 1798-ல் நடந்த 'பிரமிடுகளின் போரில்' (Battle of Pyramids) வென்று எகிப்து முழுவதையும் தன் வசப்படுத்தினார். ஆனால் ஆங்கிலக் கடற்படைத் தளபதி நெல்சனின் தலைமையில் ஒரு கப்பற்படை நெப்போலியனைப் பின் தொடர்ந்து வந்தது. அவர் 1799 ஆகஸ்ட் 1-ல் நடைபெற்ற 'அபுகார் பே' (or) நைல்நதிப் போரில் (Battle of Abukir Bay (or) the Battle of Nile) பிரெஞ்சுக் கப்பற்படையைத் தோற்கடித்தார். பின்னர் அவர் மேற்கொண்ட சிரியா. ஏக்கர் (Acre) படையெடுப்புகளும் தோல்வியில் முடிவடைந்தன.

எகிப்தில் மேலும் வெற்றி வய்ப்பு இல்லாததாலும், தாய் நாட்டுடன் தொடர்பு துண்டிக்கப்பட்டதாலும், பிரான்சுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் இரண்டாவது கூட்டணியை அமைத்த செய்தியைக் கேள்விப்பட்டதாலும் நெப்போலியன் ஏமாற்றத்துடன் நாடு திரும்பினார்.

**புருமைர் புரட்சி (Brumaire Revloution): 1799 நவம்பர் 18**

எகிப்து நாட்டுப் படையெடுப்புகளுக்குப் பிறகு பிரான்ஸ் திரும்பிய நெப்போலியனின் புகழ் மாசடையவில்லை. அப்போது இருந்த டைரக்டரி அரசாங்கம் மக்களின் ஆதரவை இழந்திருந்தது. காரணம் பிரான்சுக்கெதிராக இரண்டாவது கூட்டணி அமைத்துக் கொண்ட இங்கிலாந்து, ரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் இத்தாலியிலிருந்த பிரெஞ்சுப் படைகளை விரட்டியடித்தன. எனவே இதற்கு எதிராகப் பல இடங்களில் கிளர்ச்சி

நடைபெற்றது. மக்களும் எல்லாக் கட்சியினரும் பிரான்சில் அதியையும், ஒழுங்கையும் ஏற்படுத்த நெப்போலியனால் தான் முடியும் என்ற நம்பினார்கள்.

இச்சூழ்நிலையில் பாராஸ், சீயஸ் (Barrass. Sieyes) என்ற இரண்டு டைரக்டர்களின் உதவியுடன் 1799 நவம்பர் 18-ம் தேதி டைரக்டரி அரசாங்கத்தைக் கவிழ்த்தார் நெப்போலியன். பிரான்சுக்குப் புது அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இது புரட்சி காலண்டரின் படி புருமைர் மாதத்தில் நடைபெற்றதால் 'புருமைர் புரட்சி' என்றழைக்கப்படுகிறது. புதிதாக அமைக்கப்பட்ட அரசுக்கு 'கான்சுல்களின் ஆட்சி' (Consulate) என்று பெயர் மூன்று கான்சுல்களில் முதல் கான்சுலாக நெப்போலியன் பதவியேற்றார். அதிகாரங்கள் அனைத்தையும் தன்வசம் குவித்துக் கொண்டார். கான்சுலேட் என்பது மூன்று பேர் அடங்கியஅரசியலமைப்பாகும். தலைமைக் கான்சுலான் நெப்போலியன் ஏனைய இருவருக்கும் தலைமை அதிகாரியாக விளங்கினார்.

### 6. இரண்டாவது இத்தாலியப் படையெடுப்பு: 1800

நெப்போலியனின் ராணுவ வெற்றிகளின் ஒளியினால்தான் பிரான்சில் அவருக்குப் பல பதவிகள் கிடைத்தது. அவருடைய அதிகார வளர்ச்சிக்கு அவர் பெற்ற வெற்றிகளே எப்பொழுதும் காரணமாக இருந்தது. கான்சுலாகப் பதவியேற்ற பின் இத்தாலியப் படையெடுப்பை மேற்கொண்டார். நெப்போலியன் படைத்தலைவரான மோரே (Moreau) டான்யூப் பகுதியில் ஆஸ்திரியரைத் தாக்க ஆயத்தமானார். இயற்கையினால் எற்பட்ட பல தொல்லைகளையும் மீறி ஆல்ப்ஸ் மலையைக் கடந்தார். ஜுன் மாதத்தில் மாரங்கோ (Marengo) என்ற இடத்தில் நடந்த சண்டையில் ஆஸ்திரியப் படைகள் படுதோல்வியடைந்தன. இந்த வெற்றியைத் தொடர்ந்து 1800, டிசம்பரில் படைத்தலைவரான மோரே பவேரியாவில் ஹோகன் லிண்டன் (Hohenlindon) என்னுமிடத்தில் ஆஸ்திரியர்களை தோற்கடித்தார்.

இந்த இரண்டு தோல்விகளால் ஆஸ்திரியா கீழ்ப்படிய நேர்ந்ததுடன் நெப்போலியனுடன் சமாதானம் செய்து கொள்ளவும் முடிவு செய்தது. அதன் பயனாக 1801-பிப்ரவரியின் லூனவில் (Luneville) உடன்படிக்கை கையெழுத்தானது. இந்த உடன்படிக்கையின்படி கேம்போ-போமிய உடன்படிக்கையின் நிபந்தனைகள் உறுதிபடுத்தப்பட்டன. இத்தாலியில் 'அடிகே' ஆற்றின் அப்பாலிருந்த பகுதிகளையெல்லாம் ஆஸ்திரியா கைவிட நேர்ந்தது. ரைன் நதிக்கு மேற்கிலிருந்த எல்லா ஜெர்மன் பகுதிகளையும் பிரான்சிடம் நிபந்தனையின்றி ஒப்படைத்தது.

### 7. ஏமியன்ஸ் உடன்படிக்கை (**Peace of Amiens**): 1802, மார்ச்

ஆஸ்திரியா தோற்கடிக்கப்பட்ட பின், பிரான்சுக்கெதிராக அமைக்கப்பட்ட இரண்டாவது கூட்டணி வலிமை இழந்தது. மேலும் அந்த நாடுகளுக்கிடையே மனத்தாங்கல் ஏற்பட்டு கூட்டணி முறிந்தது. எனெனில் இங்கிலாந்து வெளிநாடுகளிலிருந்து பிரான்சுக்கு எந்த உதவியும் கிடைக்காமல் செய்வதற்காக நடுநிலை நாடுகளில் கப்பல்களைச் சோதனை செய்யும் உரிமையைக் கோரியதே ஆகும். இதனை ரஷ்யா, டென்மார்க், ஸ்வீடன், பிரஷ்யா ஆகிய நாடுகள் எதிர்த்தன. வடக்கு நாடுகளின் கூட்டு (Northern League) என்ற அமைப்பையும் ஏற்படுத்தி இங்கிலாந்துடன் போருக்கு ஆயத்தமாயின. இதற்கு எதிராக பார்கர், நெல்சன் ஆகிய தளபதிகளின் தலைமையில் உருவாக்கப்பட்ட கப்பற்படை 1801-ஏப்ரலில் டென்மார்க்கின் கடற்படையை 'கோபன் ஹேகன்' (Copenhegan) போரில் தோற்கடித்தது. இவ்வாறு இரண்டாவது கூட்டணி உள் சண்டையால் உடைந்தது. தனித்து விடப்பட்டதாலும், நீண்ட நாட்கள் போர் செய்த களைப்பாலும் இங்கிலாந்து சமாதானத்தை நாடியது. களைப்படைந்த பிரான்சும் சமாதானம் செய்து கொள்ள சம்மதித்தது.

இதன்படி இங்கிலாந்தும், பிரான்சும் 1802ம் ஆண்டு ஏமியன்ஸ் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டன. இதன்படி இலங்கை, டிரனிடாட் தவிர மற்ற குடியேற்றங்களை விட்டுவிடுவதாகவும் மைனார்க்காவை ஸ்பெயினுக்குக் கொடுப்பதாகவும், பிரான்சிடமிருந்து, கைப்பற்றிய மால்ட்டாவை சில நிபந்தனைக்குட்பட்டு 'ஜெயின்ட் ஜாண் வாள்வீரர்' வசம் விட்டு விடுவதாகவும் இங்கிலாந்து வாக்களித்தது. பிரான்சும், நேப்பிள்ஸ், போப்பின் அரசு பகுதிகளிலிருந்து வெளியேற சம்மதித்தது. இரு நாடுகளும் எகிப்திலிருந்து வெளியேற சம்மதித்தன. இந்த எமியன்ஸ் உடன்படிக்கைப் பற்றி வேடிக்கையாக ஒரு ஆங்கிலேயர் கூறிதாவது. "Every body was glad; and nobody was proud." ஆனால் இந்த ஏமியன்ஸ் உடன்படிக்கையை ஒரு தற்காலிகமானப் போர் நிறுத்தம் என்றே கருதலாம். மேற்கு ஐரொப்பாவில் ஒரு பலம் மிகுந்த நாடாக பிரான்சும், யாரும் ஜெயிக்க முடியாத கடல் வலிமை பெற்ற நாடாக இங்கிலாந்தும் மாறின. அப்போது சமாதானத்தை எற்படுத்தினாலும், இந்த உடன்படிக்கை பிரான்சுக்கும், இங்கிலாந்துக்குமிடையே இருந்த பிரச்சனைகட்குத் தீர்வு காண இயலவில்லை. எனவேதான் அடுத்த ஆண்டிலேயே உடன்படிக்கை முறிந்து இரு நாடுகளுக்கிடையே மீண்டும் போர் மூண்டது.

**8. நெப்போலியன் பேரரசர் ஆகுதல்:** 1804

ஏமியன்ஸ் சமாதானம் எற்பட்டதின் பயனாக போர் நின்று நாட்டில் அமைதி நிலவியது. அப்போது உள்நாட்டுச் சீர்திருத்தங்களை மேற்கொண்டார் நெப்போலியன். (அவை விரிவாகத் தனிப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன) அவை நெப்போலியன் புகழை

மேலும் உயர்த்தின. 1799-ல் நெப்போலியன் முதல் கான்சலாக நியமிக்கப்பட்டபோது பதவிக்காலம் பத்தாண்டுகள் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் பெரும் வெற்றிகளின் காரணமாக இவரது செல்வாக்கு உயர்ந்தது. நெப்போலியனே வாழ்நாள் முழுமைக்கும் கான்சலாக இருக்கவேண்டும் என்று 1802-ல் பிரெஞ்சு மக்கள் வாக்களித்தனர். 25 லட்சம் பேர் சாதகமாகவும், எட்டாயிரம் பேர் எதிராகவும் வாக்களித்தனர்.ஆனாலும், பிரெஞ்சு மக்களின் மனதில் ‘‘நெப்போலியன் பிரான்சின் மன்னராக வேண்டும், பகைவர்களின் தாக்கதல்களிலிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும்’’ என்ற எண்ணம் குடிகொண்டது. எனவே நெப்போலியனை மன்னராக்குவது அவசரத்தேவை என மக்கள் எண்ணினர். பிரஷ்யா, ஆஸ்திரியா, ஸ்பெயின் போன்ற நாடுகளும் ஆட்சி மாற்றத்திற்கு ஆதரவளித்தன. எனவே பிரெஞ்சு செனட் இதுபற்றி விவாதித்து இறுதியில் ‘‘நெப்போலியன் போனபார்ட் அரசர் என்று அழைக்கப்படல் வேண்டும். பிரெஞ்சுக் குடியரசு அவரிடம் ஒப்படைக்கப்படுகிறது’’ என்ற தீர்மானத்தை எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேற்றியது. அப்போது நெப்போலியன் செயின்ட் கிளவுட் (St. Cloud) என்ற பாரிசுக்கு ஐந்து மைல் தூரத்திலிருந்த மாளிகையில் தங்கியிருந்தார். தீர்மானத்தின் நகல் 1804-ல் நெப்போலியனிடம் கொடுக்கப்பட்டது. முடிசூட்டு விழாவிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1804, டிசம்பர் 2-ம் தேதி ‘நோட்ரிடேம்’ ஆலயத்தில் (The Church of Notre Dame) விழா நடைபெற்றது. போப்பாணடவர் எழாம்பயஸ் இந்த முடிசூட்டு விழாவில் பங்கு கொண்டார். பேரரசின் வாள், செங்கோல், மணி முடி ஆகியவைகளை ஆசீர்வதித்தார் போப்.

பின்னர் மணி முடியை எடுத்து நெப்போலியனுக்குச் சூட்டிக் கொண்டார். தம்மைவிட போப் உயர்ந்தவரல்ல என்பதை வெளிப்படுத்தவே இவ்வாறு செய்தார் நெப்போலியன். அப்போது, ‘மாமன்னர் நெப்போலியன் வாழ்க’ என்று மக்கள் முழங்கினர். இவ்வாறு ஒரு சாதாரணக் குடிமகன், அரசகுலத்திற்கு அப்பாற்பட்டவர் பிரெஞ்சு அரியணையில் அமர்ந்தார். நெப்போலியன் தனது அரசியல் வாழ்வின் உச்சியை எட்டினார். பிரெஞ்சுக் குடியரசு மீண்டும் முடியரசானது. நெப்போலியனின் வாரிசே அவாருக்குப் பின் பேரரசராக வேண்டும் என்பது பற்றி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதற்கு ஆதரவாக, 30,50,000 வாக்குகளும், எதிராக இரண்டு ஆயிரம் வாக்குகளும் கிடைத்தது. நெப்போலியன் போனபார்ட்டின் பரம்பரையினர் பிரான்சை ஆள்வதற்கு அங்கீகாரம் கிடைத்துவிட்டது!

9. டிரபால்கர் போர் **(Battle of Trafalgar)** : அக் 21, 1805

ஏமியன்ஸ் சமாதான உடன்படிக்கையில் எற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் இரு நாடுகளுமே அக்கறை கொள்ளவில்லை. உதாரணமாக மால்டா தீவிலிருந்து வெளியேற இங்கிலாந்து மறுத்து விட்டது. பிரான்ஸ், இத்தாலிய விவகாரங்களில் தலையிட்டது. இத்தாலியில் நெப்போலியனின் ஆதிக்க வளர்ச்சியைக் கண்டு ஆங்கிலேயர் அஞ்சினர். மேலும் 1803-ல் இங்கிலாந்து மன்னருக்குச் சொந்தமான ஹனோவர் அரசை பிரான்ஸ் பிடித்துக் கொண்டது. இவைதவிர குடியேற்ற ஆதிக்கத்துறையிலும், வர்த்தகத் துறையிலும் இவ்விரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட போட்டி பகைமை உணர்ச்சியை மேலும் வளர்த்தது. எனவே மீண்டும் இங்கிலாந்திற்கும் பிரான்சுக்குமிடையே 1804-ல் போர் மூண்டது. ஸ்பெயின் நாட்டு கடற்படை உதவியைப் பெற்று ஆங்கில் கால்வாயைக் கடந்து இங்கிலாந்தைத் தாக்கத் திட்டம் தீட்டினார் நெப்போலியன். இதற்காக ஆங்கிலக் கால்வாயில் பௌலாங் (Boulogne) என்ற இடத்தில் நிலையான படை ஒன்றை திரட்டி வைத்திருந்தார். இங்கிலாந்தின் கப்பற்படைத் தளபதி நெல்சனின் தலைமையில் ஒரு படை ஆங்கிலக் கால்வாயைக் கண்காணித்து வந்தது. எனவே திட்டமிட்டபடி நெப்போலியனின் படையெடுப்பு நடைபெறவில்லை. ஸ்பானிய பிரெஞ்சு கூட்டுக் கப்பற்படையை ‘டிரபால்கர்’ என்ற இடத்தில் நடைபெற்ற போரில் தோற்கடித்து அழித்தார் நெல்சன். இப்போரில் காயப்பட்டு பின்னர் உயிரிழந்தார். ஆனாலும் அவரது சிறந்த வெற்றியினால் இங்கிலாந்தின் கடலாதிக்கம் நிலைநாட்டப்பட்டது. அத்துடன் இங்கிலாந்தின் மீது படையெடுக்கும் திட்டத்தைக் கைவிட்டார் நெப்போலியன்.

**10. ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா தோற்கடிக்கப்படுதல்:**

நெப்போலியன் ஆதிக்க வெறியை ஒடுக்கவும், அவரது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முறியடிக்கவும் இங்கிலாந்தின் பிரதமர் ‘இளையபிட்’ ரஷ்யா, ஆஸ்திரியா, ஸ்வீடன் போன்ற நாடுகளுடன் கூட்டணி ஒன்றை 1805-ல் எற்படுத்தினார். இது பிரான்சுக்கு எதிராக அமைக்கப்பட்ட மூன்றாவது கூட்டணியாகும். டிரபால்கர் போரில் நெப்போலியன் அடைந்த தோல்வி ஜெர்மனியில், அவர் பெற்ற வியக்கத்தக்க வெற்றிகளால் விரைவில் மறைந்து போனது. 1805-ல் ஆஸ்திரியப் படைத்தளபதி மாக் (Mack) என்பவரின் தலைமையில் போரிட்ட படைகளை உல்ம் (Ulm) என்ற இடத்தில் தோற்கடித்தார் நெப்போலியன், 33,000 ஆஸ்திரிய வீரர்கள் சரணடைந்தனர். வெற்றி பெற்ற பிரெஞ்ப்படைகளை வீயன்னா நோக்கி வேகமாக முன்னேறின.

1805 டிசம்பர் 2-ம் தேதி நெப்போலியன் பேரரசராகப் பதிவி ஏற்ற முதலாண்டு நிறைவு நாள் அன்று, மறுபடியும் ஆஸ்டர்லிட்ஸ் (Austerlitz) என்ற இடத்தில் நடந்த பெரிய போரில் ஆஸ்திரியா படுதோல்வியடைந்தது. நெப்போலியன் வியக்கத்தகு வெற்றி

பெற்றார். வீயன்னா கைப்பற்றப்பட்டது. இவ்வாறு ஆஸ்திரியாவின் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டது. பிரான்சுடன் 1805- டிசம்பரில் பிரஸ்பர்க் (Treaty of Pressburg) உடன்படிக்கை செய்து கொண்ட ஆஸ்திரியா மூன்றாவது கூட்டணியிலிருந்து விலகியது. ரஷ்யா பின் வாங்கியது. இவ்வுடன் படிக்கை மூலம் வடஇத்தாலியில் ஆஸ்திரிய ஆதிக்கம் மறைந்தது. ஆஸ்திரியாவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கி.பி. 10-ம் நூற்றாண்டில் மகா ஆட்டோ காலம் முதல் நிலைபெற்றிருந்த புனித ரோமப் பேரரசு மறைந்ததுபோனது.

ஆஸ்திரியாவீன் வீழ்ச்சிக்குப் பின் சிறிது காலத்திலேயே நெப்போலியனுக்கும் பிரஷ்யாவிற்குமிடையே போர் எற்பட்டது. இதற்குக் காரணம் ஜெர்மனியில் பிரான்சின் ஆதிக்கம் முழுமையாக ஏற்படுத்தப்பட்டதை பிரஷ்யா ஏற்கவில்லை. மேலும் மேற்கு ஜெர்மனியில் பதினாறு அரசுகளை இணைைத்து 'ரைன் கூட்டரசு' (Confederation of Rhine) என்ற புது அமைப்பை உருவாக்கி பிரஷ்யாவுக்குப் போட்டியை உண்டுபண்ணினார் நெப்போலியன். எனவே சாக்சனி, மற்றும் ரஷ்யாவின் ஆதரவுடன் பிரான்சுக்கெதிராகப் பிரஷ்யா போர் அறிவிப்பு செய்தது. 1806-ல் அக்டோபரில் நடைபெற்ற ஜீனா சண்டையில் (Battle of Jena) பிரஷ்யப்படைகளை அழித்தார் நெப்போலியன். பெர்லின் நகரம் கைப்பற்றப்பட்டது. இத்தோல்வி படைதுறையில் பிரஷ்யா பெற்றிருந்த புகழுக்கே இழுக்காக அமைந்தது. இந்தத் தோல்விக்கும் பிறகும் ரஷ்யப் படைகளுடன் சேர்ந்து வடகிழக்குப் பகுதியில் மீண்டும் பிரெஞ்சுப் படைகளுடன் மோதின. 1807, ஜுன் மாதத்தில் நடைபெற்ற பிரிட்லாந்து போரில் (Battle of Friedland) ரஷ்யப்படைகளும், ஆஸ்திரியப் படைகளும் தோற்கடிக்கப்பட்டன. ரஷ்யா அடி பணிந்தது. ரஷ்யா சார் அலக்சாந்தர் நெப்போலியனுடன் 1807-ல் டில்சிட் என்ற இடத்தில் நிமன் நதியின் மையப்பகுதியில் ஒரு படகில் சந்தித்து, டில்சில்ட் உடன்படிக்கை (Treaty of Tilsit) செய்து கொண்டார்.

11. **டில்சிட் உடன்படிக்கை (Treaty of Tilsit):** 1807 டில்சிட் உடன்படிக்கையின்படி,

a) ஐரோப்பாவில் நெப்போலியனால் உருவாக்கப்பட்ட அரசியல் எற்பாடுகளை ரஷ்யா ஒப்புக் கொண்டது. நெப்போலியனின் பகைவர்களுக்கு எதிராக குறிப்பாக இங்கிலாந்திற்கு எதிராக உதவி செய்வதாக ரஷ்யா வாக்களித்தது.
b) எல்ப் ஆற்றிற்கு மேற்குப் பகுதியிலுள்ள இடங்களை பிரஷ்யா பிரான்சுக்குக் கொடுக்கச் சம்மதித்தது. இப்பகுதிகளில் 'வெஸ்ட் பேலிய அரசு' அமைக்கப்பட்டது.
c) போலந்திடமிருந்து பிரஷ்யா பெற்ற பகுதிகள் யாவும் வார்சா கோமக நாடு (Grand Duchy of Warsaw) என்ற அரசாக நிறுவப்பட்டு அது நெப்போலியனின் கூட்டாளியான சாக்சனி கோமகனிடம் கொடுக்கப்பட்டது.

d) பிரஸ்யா ஒரு போர் நஷ்ட ஈட்டுத் தொகையை பிரசான்சுக்குக் கொடுக்க வேண்டும். இத்தொகை செலுத்தப்படும் வரை பிரெஞ்சுபடை ஒன்று பிரஷ்யாவில்' இருக்கும்.

e) பிரஷ்யாவின் படைபலம் 42,000 ஆக குறைக்கப்பட்டது.

டில்சிட் உடன்படிக்கையின் ரஷ்யா எதையும் இழக்கவில்லை. ஆனால் பிரஷ்யா மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.டில்சிட உடன்படிக்கை நெப்போலியனின்' அதிகாரம், புகழ ஆகியவை உச்ச நிலையிலிருந்ததைக் குறிக்கிறது. ஐரோப்பாக்கண்டம் முழுவதும் நெப்போலியனின் காலடியில் கிடந்தது. ஐரோப்பி சக்தி சமநிலை தகர்த்தெறியப்பட்டது.டில்சிட் சமாதானத்திற்கு பிறகு உடனே 1807-ல் நெப்போலியன் இறந்திருப்பாரேயானால் அவரது இாணுவ வெற்றிகள் உலக வரலாற்றின் பொன்னேடுகளில் நிரந்தர இடத்தைப் பெற்றிருக்கும். அவர் இயற்கையை கடந்த நிலையை அடைந்தவராகக் கருதப்பட்டிருப்பார். ஒவ்வொரு ஐரோப்பிய நாடும்' ஒன்றன் பின் ஒன்றாக நெப்போலியனுடன் மோதி தோல்வியடைந்தன. வெற்றியில்லாமல் இதுவரை நெப்போலியன் எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை. எதிரிகளையெல்லாம் முறியடித்த நெப்போலியன் ஐரோப்பிய எல்லைகளை தனது இஷ்டப்படி மாற்றியமைத்தார்.அவருக்கு அரசியல் எதிரிகளே இல்லை.ஐரோப்பாவையே ஆட்டிப்படைக்கும் சக்தி பெற்றிருந்தார்.

இவைதவிர, தனது குடும்பம் முழுவதற்கும் பொருளும், புகழும் அதிகாரத்தையும் அளித்தார். நெப்போலியனின் மூத்த சகோரதரர் ஜொசப் ஸ்பானிய அரியணையில் அமர்த்தப்பட்டார். மூன்றாவது சகோதரர் லூயி ஹாலந்து மன்னராக்கப்பட்டார். இவரது சகோதரி கரோலினை மதிப்புமிக்க மூரட் என்பவருக்குத் திருமணம் செய்து வைத்தார். பின்னர் மூரட் நேப்பிள்சின் அரசராக்கப்பட்டார். இவருடைய அரசியல் எதிரி இங்கிலாந்துப் பிரதமர் பிட் அப்போது இறந்துவிட்டார். 1797-லிருந்து 1807 உரை உளடள 10 ஆண்டுகளில் ஐரோப்பிய மக்களின் வாழ்க்கையிலும் எண்ணங்களிலும் நெப்போலியனே நிலைபெற்றிருந்தார். இதற்கு ஜுலியஸ் ஜீசரையம், சார்லிமனையும் தான் (Julius Caesar, Charlemagne) சொல்ல வேண்டும். ஆனாலும் டில்சிட சமாதானமே நெப்போலியனின் வீழ்ச்சியின் தொடக்கமாகவும் அமைந்தது.

**கண்டதிட்டம் (Continental system): 1806-1812**

நெப்போலியனுக்கு இன்னும் அடிபணியாமல் போரிட்டுக் கொண்டிருந்த நாடு இங்கிலாந்து மட்டுமே. இங்கிலாந்தின் கடல் வலிமை நெப்போலியனுக்க ஒரு சவாலாகவே அமைந்தது. எனவே இங்கிலாந்தை அடிபணியச் செய்ய நெப்போலியனின் மூளையில் ஒரு நூதனமான புதிய திட்டம் உதித்தது. அத்திட்டத்திற்குக் கண்ட

திட்டம் அல்லது ஐரோப்பியப் பொருளாதரத் திட்டம் என்று பெயர்.இங்கிலாந்தின் செல்வத்திற்கும், வளத்திற்கும் கடல் ஆதிக்கத்திற்கும் காரணம் அந்நாட்டின் அயல்நாட்டு வாணிபம் தான். எனவே இங்கிலாந்தின் வாணிப நடவடிக்கைகளை, ஒழித்துவிட்டால், நாட்டின் பொருளாதார வளம் கன்றி, செல்வம் சுருங்கி எழை நாடாகிவிடும். அதன்பின் அதன் அரசியல் ஆதிக்கத்தை ஒழித்துவிடலாம். இதுவே நெப்போலியனின் கண்ட திட்டம்.

இங்கிலாந்தின் மீது பொருளாதாரத் தாக்குதலை மேற்கொள்ளும் தனது திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு 1806, நவம்பரில் பெர்லின் ஆணைகள் (Berlin Decress) எனப்பட்டன. இதன்படி இங்கிலாந்து மீது பொருளாதார முற்றுகையிடப்பட்டது. பிரான்சும் அதன் கடியேற்ற நாடுகளும், மற்றும் சார்பு நாடுகளும் இங்கிலாந்துடன் வியாபாரம் செய்வது தடுக்கப்பட்டது. ஐரோப்பியத் துறைமுகங்களில் இங்கிலாந்து கப்பல்கள் நழைய அனுமதி மறுக்கப்பட்டது. நெப்போலியனின் இந்த பொருளாதார முற்றுகையைக் கண்டு இங்கிலாந்து பயப்படவில்லை. இதற்குப் பதில் நடவடிக்கையாக கவுன்சில் உத்தரவுகள் (Order in–Council) என்ற ஓர் எதிர் ஆணையை 1807-ல் பிறப்பித்தது.அதன்படி பிரான்சுடனோ, அதன் கூட்டாளி நாடுகளுடனோ, வர்த்தகத்தில் அதன்படி “பிரான்சுடனோ, அதன் கூட்டாளி நாடுகளுடனோ, வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் கப்பல்கள் இங்கிலாந்துத் துறைமுகங்களுக்கு வந்து அனுமதிபெற்ற பின்னர்தான் பிரான்சுக்குச் செல்ல வேண்டும்” என்று இந்த ஆணைகள் கூறின.மிலான் ஆணைகள் (1807,Milan decrees) வார்சா ஆணைகள் (1807,Warsaw decrees) போன்டெயின்புளோ ஆணைகள் (1810,fontaineblea decrees) ஆகியவை மூலமாக நெப்போலியன் தனது கண்ட திட்டத்தை மேலும் தீவிராமாகச் செயல்படுத்தினார்.

**கண்ட திட்டத்தின் விளைவுகள்:**

தொடக்கத்தில் கண்ட திட்டம் நெப்போலியனுக்கு வெற்றியைத் தேடித் தந்தது. ஐரோப்பாக் கண்டத்தின் பெரும்பகுதி அவர் ஆதிக்கத்தின் கீழ் இருந்ததால் இத்திட்டத்தைச் செயல்படுத்துவது சாத்தியமாயிற்று. நடுநிலை நாடுகளான டென்மார்க், ஸ்வீடன் கூட அவர் ஆணைகட்குக் கீழ்ப்படிந்தன. ரஷ்யாவும் இத்திட்டத்தைச் செயல்படுத்த ஒப்புக்கொண்டது. ஆனால் இங்கிலாந்து தன் எதிர் நடவடிக்கையைத் தீவிரமாகச் செயல்படுத்தியதால் கீழ்கண்ட விளைவுகள் ஏற்பட்டன.

- நெப்போலியனின் கண்ட திட்டத்தினால் ஐரோப்பிய நாடுகளுடன் இங்கிலாந்து செய்துவந்த வியாபாரம் தடைப்பட்டது. ஆனால் அமெரிக்க, கனடா போன்ற நாடுகளுடன் இங்கிலாந்தில் வியாபாரம் தங்குதடையின்றி நடைபெற்றது.

- பிரான்ஸ் பிற நாடுகளுடன் தொடர்புகொள்ள முடியவில்லை. அமெரிக்காவிலிருந்து வந்த தானிய இறக்குமதி நின்று போனதால் ஐரோப்பிய நாடுகளில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் விலை ஏறியது. நெப்போலியனுக்கு எதிர்ப்பு பல நாடுகளில் தோன்றின.
- இங்கிலாந்துப் பொருட்களையே உபயோகித்து வந்த ஐரோப்பிய மக்கள் தொப்பி, பூட்ஸ், பருத்தி ஆடைகள், கம்பளி ஆடைகள் போன்ற பொருட்களை கள்ளக்கடத்தல் மூலம் பெற ஆரம்பித்தனர். ஸ்பெயினும், பொர்ச்சுக்கல்லும் கள்ளக் கடத்தல் மையங்காளாயின.
- இத்திட்டத்தைப் போப்பாண்டவர் ஏழாம் பயஸ் ஏற்க மறுத்த போது அவரைக் கைது செய்ததால் பிரெஞ்சு கத்தோலிக்க மக்கள் நெப்போலியன் மீது வெறுப்படைந்தனர்.
- இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் பல இடையூறுகள் இருந்ததால் ஐரோப்பிய நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக எதிர்க்க ஆரம்பித்தன. முதலில் போசச்சுக்கல்லும்,பின்னர் ஸ்பெயின், ரஷ்யா ஆகிய நாடுகளும் கண்ட திட்டத்தை எற்க மறுத்தன. எனவே அந்த நாடுகளுடன் நெப்போலியன் போரில் ஈடுபட்டார். அதுவே அவர் வீழ்ச்சிக்கும் காணமானது.

**கண்ட திட்டத்தில் இங்கிலாந்து வெற்றியடையக் காரணங்கள்:**

1. இங்கிலாந்து கடல்வலிமை மிக்க நாடாக இருந்தமையால் நெப்போலியனில் கண்டதிட்டத்திற்குப் போதுமான தடைவிக்க முடிந்தது.
2. பிரான்சிற்கு வலிமையான கப்பற்படையில்லாததால் இங்கிலாந்துப் பொருட்கள் கடத்தி வரப்பட்டதை தடுக்க முடியவில்லை. நெப்போலியனின் வீரர்கள் கூட இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை அணிந்திருந்தனர்.
3. உலகத்தின் பல இடங்களில் குடியேற்றங்களை ஏற்படுத்தியிருந்ததால் இங்கிலாந்தின் வியாபாரம் பாதிக்கவில்லை.
4. இங்கிலாந்தின் பொருட்கள் ஐரோப்பாவில் அதிகமாகத் தேவைப்பட்டது. அப்பொருட்கள் கிடைக்காத பிரெஞ்சு மக்களே இத்திட்டத்தை எதிர்க்க ஆரம்பித்தனர்.
5. இங்கிலாந்துடன் செய்துவந்த ஒயின் வியாபாரம் தடைப்பபட்டதால் போர்ச்சுக்கல்லில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. எனவே போர்ச்சுக்கல் 1801ல் கண்ட திட்டத்தை மீறி இங்கிலாந்துடன் வியாபாரம் செய்ய ஆரம்பித்தது.

மொத்தத்தில் நெப்போலியனின் கண்டதிட்டம் சரிவரச்செயல்படுத்தப்படமுடியாத காரணத்தினாலேயே தோல்வியடைந்தது. இதுவே நெப்போலியனின் வீழ்ச்சியின் ஆரம்பம் ஆகும். ஊ.னு. ஹேசன் என்ற வரலாற்றாசிரியர் ''நெப்போலியனின் கண்ட திட்டம் அவரது மிகப்பெரிய தவறின் விளைவாகும்'' என்று குறிப்பிடுகிறார்.

1. **தீபகற்ப போர்** (Peninsular War): 1801-1814

போர்ச்சுக்கல் ஸ்பெயின் ஆகிய நாடுகள் அமைந்த பகுதிக்கு ''ஐபீரியத் தீபகற்பம்'' என்று பெயர். நெப்போலியன் இந்த இரு நாடுகளுடன் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் இதற்கு 'தீபகற்பபோர்' என்று பெயர் எற்பட்டது.

**தீபகற்ப போருக்கான காரணங்கள்:**

a) இங்கிலாந்தின் நட்புநாடான போர்ச்சுக்கல் தனது வாணிபம் பாதிக்கப்பட்டதால் இங்கிலாந்துடன் உறவை வளர்த்துக்கொண்டு கண்டதிட்டத்தை ஏற்க மறுத்தது. எனவே போர்ச்சுக்கல் மீது நெப்போலியன் படையெடுத்தார். லிஸ்பன் பிடிபட்டது. அங்கிருந்த அரசகுடும்பம் பிரேசிலுக்குத் தப்பி ஓடியது.

b) போர்ச்சுக்கல்லை நிரந்தரமாகத் தன் ஆதிக்கத்தின்கீழ் வைத்திருக்க வேண்டுமானால் வழியில் அமைந்திருந்த ஸ்பெயினையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று நெப்போலியன் நினைத்தார்.

c) ஸ்பானிய நாட்டை மிக இழிந்த நாடாகக் கருதினார் நெப்போலியன். அது மிகவும் நலிந்ததாகவும், ஒற்றுமையின்றிக் காணப்பட்டதாகவும் அவர் கண்களுக்குத் தெரிந்தது.

d) அப்போது ஸ்பெயினை ஆட்சி புரிந்த நான்காம் சார்லசுக்கும் அவரது மகன் பெர்டினாண்டுக்கும் இடையே பல காரியங்களில் சச்சரவு எற்பட்டது. இதனைத் தீர்த்து வைப்பது போல பாசாங்கு செய்து ஸ்பானிய உள்நாட்டு விவகாரத்தில தலையிட்டார் நெப்போலியன். இறுதியில் தகப்பனையும், மகனையும் ஏமாற்றி உதறித்தள்ளி ஸ்பானிய அரியணையில் தனது சகோரதரன் ஜோசப்பை அமர்த்தினார். இதனால் ஸ்பானிய மக்களிடம் தேசிய உணர்வு எற்பட்டு நாட்டின் பலவேறு நகரங்களிலும், நாட்டுப்புறங்களிலும் எதிர்ப்புக்கள் அதிகரித்தன. பிரெஞ்சுப் படைகள் தாக்கப்பட்டன. அவற்றின் பாதுகாப்பு நிலையங்களும் தாக்கப்பட்டன.

**போரின் ஆரம்பம்:**

இவ்வாறு போர்ச்சுக்கல்லிலும், ஸ்பெயினிலும் மக்களிடையே எற்பட்ட தேசிய உணர்வு, நெப்போலியனுக்கு எதிராகப் பெரும் கிளர்ச்சியாக வெடித்தது. 1808- ஜுலை மாதம் ஸ்பெயினின் தென்பாகத்தில் எற்பட்ட ஒரு கலத்தை அடக்குவதற்காக தளபதி டூபான்ட் (General Dupont)என்பவர் தலைமையில் நெப்போலியன் ஒரு படையை அனுப்பினார். ஆனால் அவர் தனது எல்லா வீரர்களுடன் பைலன் (Bailen) என்ற இடத்தில் தோல்வியடைந்து சரணடைந்தார். நெப்போலியனின் எழுச்சிக்குப்பிறகு மிகப்பெரிய அளவில் பிரெஞ்சுப் படைகளுக்கு ஏற்பட்ட முதல் தோல்வி இதுவேயாகும்! இதன் விளைவாக நாடெங்கும் பெரும் கலகங்கள் தோன்றின.இச்சூழ்நிலையில் ஸ்பானிய மக்களுக்கு உதவி செய்யத்தயாராக இருப்பதாக இங்கிலாந்து அறிவித்ததோடு மட்டுமல்லாமல். ஆர்தர் வெல்லெஸ்லி என்பவர் தலைமையில் (இவரே பின்னர் வெல்லிங்டன்பிரபு என்ற அழைக்கப்பட்டார்) ஒரு ஆங்கிலப்படை 1808 ஆகஸ்டில் ஸ்பெயின் வந்தடைந்தது. எனவே இப்போது நெப்போலியன் தானே படைத்தலைமையை ஏற்று ஸ்பெயினில் நுழைந்தார். ஆனால் பிரெஞ்சுப்படைகள் விமேறா, தலவரா, சாலமன்கா, விட்டோரியா (Vimiera, Talavara 1809, Salamanca 812, Vittoria 1813) ஆகிய இடங்களில் தோற்கடிக்கப்பட்டன. ஸ்பெயினிலிருந்தும்,போர்ச்சுக் கல்லிலிருந்தும் பிரெஞ்சுப்படைகள் விரட்டியடிக்கப்பட்டன. இதுவே தீபகற்ப போர் என்றழைக்கப்படுகிறது.

**போரின் விளைவுகள்:**

a) இந்த தீபகற்ப போரில் தான் முதன்முதலாக பிரெஞ்சுப்படைகள் தோல்வியடைந்தன. இத்தோல்வி, பிரெஞ்சுப் படைகளும் தோல்வியுறக் கூடியவை என்பதை வெளிப்படையாகக் காட்டியது. நெப்போலியனுக்கு அவமானம் ஏற்பட்டது. தோற்கடிக்கப்பட முடியாத வீரர் என்ற பெருமை மறைந்தது. நெப்போலியன் மீது வைத்திருந்த நம்பிக்கை, மதிப்பை பிரெஞ்சு மக்கள் இழக்க ஆரம்பித்தனர்.

b) தீபகற்ப போர் 1814வரை நடைபெற்றது. இப்போர்களினால் நெப்போலியன் தலைசிறந்த போர்த்தலைவர்களையும், சிறந்த போர் வீரர்களையும் இழக்க நேர்ந்தது.

c) இப்போரின் விளைவாக பிரான்ஸ் நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி எற்பட்டது. நாட்டின் செல்வம் கரைந்தது.

d) நெப்போலியனின் ஸ்பானியத் தோல்வி ஐரோப்பாவெங்கும் காட்டுத்தீ போல பரவியது. இது நெப்போலியனின் எதிரி நாடுகளுக்கு மீணடும் நம்பிக்கையைக் கொடுத்தது. பல நாடுகள் நெப்போலியனுக்கெதிராக மீண்டும் போர்கோலம் பூண்டன.

இவ்வாறு ‘‘ஸ்பெயின் நெப்போலியனின் பேரரசினுடைய ஆதிக்கத்தின் வலிமையைக் குலைத்த புற்றுநோயைப் போன்று இருந்தது.’’ ஸ்பானியர்களின் வெற்றிக்கு ஆங்கிலத்தளபதி வெல்லஸ்லியின் திறமையும், எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்பானியர்களின் தேசிய உணர்வும், அவர்களின் கொரில்லாப் போர் முறையுமே காரணம் ஆகும்.

2. மணமுறிவும் மறுமணமும் :1809

இதற்கிடையில் நெப்போலியனுக்கும் ஜோசபைனுக்கும் திருமணமாகி பதினைந்துஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால் அவர்களுக்கு குழந்தை ஏதும் பிறக்கவில்லை. நெப்போலியனுக்குப் பிறகு பேரரசைக் கட்டிக்காக்க ஒருவர் தேவை. அவர் நெப்போலியனின் மகனாகவே இருக்க முடியும் என்ற மக்கள் நம்பினர். எனவே நெப்போலியன் மறுமணம் செய்து கொள்வதை அவரை சுற்றியிருந்தவர்களும் மக்களும் வரவேற்றனர். இக்கோரிக்கையை நெப்போலியன் எற்றுக்கொண்டார். இதுவரை அளவற்ற அன்புடனும், பண்புடனும் தன் துணைநின்ற இணைபிரியாத அன்பு மனைவி ஜோசபினை விவாகரத்து செய்ய முடிவு செய்தார். நெப்போலியனின் முடிவை அறிந்த ஜோசபின் கொதித்தாள் குமுறினாள். கண்கள் குளமாயின. துன்பத்தில் துவண்டாள். பலன் எதும் இல்லை. 1809 டிசம்பர் 15-ம் மணமுறிவு ஒப்பந்தத்தில் இருவரும் கையெழுத்திட்டனர். உடனே நெப்போலியனின் மறுமணத்திற்கு பெண் தேடும் படலம் ஆரம்பம் ஆனது. ஆஸ்திரியப் பேரரசர் பிரான்சிஸ் தனது பதினெட்டே வயது நிரம்பிய அழகும், அடக்கமும் நிறைந்த தனது மகளான ‘மரிய லூயிசா’(Marie Louise) வை நாற்பது வயதை அடைந்த நெப்போலியனுக்கு மணமுடித்துக் கொடுப்பதில் மகிழ்ச்சிடைந்தார்! இத்திருமணத்தை எற்பாடு செய்தவர் பின்னர் ஐரோப்பிய அரசியலில் பெரும் பங்காற்றவிருக்கும் ஆஸ்திரிய நாட்டு ‘பீரின்ஸ் மெட்டர்னிக்’ என்பவராவார். திருமணம் அழகுமிக்க St. Cloud என்ற நெப்போலியனின் அரண்மனையில் மிகச் சிறப்பாக 1810 மார்ச் 11-ல் நடைபெற்றது. அடுத்த வருடமே 1811-மார்ச்சில் மரியலூயிசா அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். மன்னருக்கு வாரிசு கிடைத்ததில் மக்களுக்கு மகிழ்ச்சி. தனக்குப்பிறகு நாட்டை ஆளுவதற்கு வாரிசு வேண்டும் என்பதற்காக உயிருக்குயிராக நேசித்த தன் மனைவியை விவாகரத்து செய்து விட்டு மறுமணம் புரிந்து மகனையும் பெற்றெடுத்தார் நெப்போலியன். ஆனால் அந்த மகன் ஆட்சிக் கட்டிலில் அமர்வதற்கு காலம் சந்தர்ப்பமே கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஜோசபின் வடித்த கண்ணீரும் நெப்போலியனின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமோ?

3. நெப்போலியனின் ரஷ்யப் படையெடுப்பு: 1812

டில்சிட் உடன்படிக்கைக்குப்பின் பிரெஞ்சு-ரஷ்ய நட்புறவு சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தது. இதன் விளைவாக ரஷ்யா மீது நெப்போலியன் படையெடுத்தார். அதற்கான காரணங்கள் பின் வருமாறு.

a) இங்கிலாந்துக்கு எதிராக நெப்போலியன் கண்ட திட்டத்தின் மூலம் பொருளாதாரப் போர் தொடுத்தபோது தனக்கு உதவி செய்வதில் ரஷ்ய மன்னர் பின் வாங்கி விட்டதாக நெப்போலியன் நினைத்தார். ஏனெனில் கண்ட திட்டத்தினால் ரஷ்யாவில் உணவு பற்றாக்குறை ஏற்பட்டபோது அதனைக் கைவிடுவதாக 1811-ல் ரஷ்யா அறிவித்தது. இதனால் ரஷ்யா மீது நெப்போலியன் ஆத்திரமடைந்தார்.

b) நெப்போலியன் ஒல்டன்பர்க் (Oldenburg) என்ற ஜெர்மனியின் பரந்த நிலப்பகுதியை வெற்றியின் மூலம் இணைத்துக்கொண்டதால், அவரது ஆதிக்க வெறியை ரஷ்ய மன்னர் சார் அலெக்சாந்தார் வெறுத்தார்.

c) நெப்போலியன் ஆஸ்திரிய இளவரசி மரியலூயிசாவை திருமணம் செய்து கொண்டு ஆஸ்திரியாவுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டது ரஷ்ய மன்னருக்கு பிடிக்கவில்லை

d) மேலும் நெப்போலியன் 'வார்சா கோமக நாட்டை' நிறுவியது, பின்னர் அதனை விரிவுபடுத்தியது ஆகியவை தான் போலந்து மக்கள் வாழும் பகுதிகளை வெற்றிபெற்று இணைத்துக் கொண்டதற்கு எதிரான நடவடிக்கை என்ற ரஷ்யா நினைத்தது. இவ்வாறு ஏற்பட்ட அரசியல் பிரச்சனைகளால் ரஷ்யா மீது போர் தொடுக்க முடிவெடுத்தார் நெப்போலியன். இதற்கான ஐந்து லட்சம் பேர்கொண்ட மாபெரும் படை ஒன்றதைத் திரட்டினார். இதைப்போன்ற ஒரு பெரும்படையை ஐரோப்பாவிலேயே யாரும் கண்டதில்லை என்ற புகழ் ஏற்பட்டது.

1812 ஜுன் மாதம் தனது 'Grande Armee' மிகப்பெரிய படையுடன் ரஷ்யாவை நோக்கிப் புறப்பட்டார் நெப்போலியன். இப்பெரும் படையைக் கண்ட ரஷ்யப் போர்த் தலைவர்கள் போரிடாமலேயே பின்வாங்கினார்கள். ஆனால் அவர்கள் 'நாசமாக்குதல் கொள்கை'யைப் பின்பற்றி உணவுக்கிடங்குகள், பாலங்கள், பயிர்கள் ஆகியவற்றை அழித்துச் சென்றனர். பொரோடினா (Borodina) என்ற ஆற்றங்கரையில் ரஷ்யப் படைகளின் தளபதி 'குடுசோவ்'(Kutusov) என்பவர் தலைமையில் பிரெஞ்சுப்படைகளைச் சந்தித்தன.இறுதியில் நெப்போலியன் வெற்றி பெற்றாலும் நாற்பது ஆயிரம் போர் வீரர்களை இழந்தார்.அதன்பின் நெப்போலியன் மாஸ்கோவை அடைந்தார். மாஸ்கோவில் ரஷ்யா சரணடைவர் என்ற நினைத்த நெப்போலியன் எமாற்றமடைந்தார். ஏனெனில் அங்கு யாவருமே இல்லை. உணவுக்கிடங்குகள் காலியாகவும், தீப்பற்றி எரிந்து கொண்டும் காணப்பட்டன.எனவே 1812, அப்டோபரில் நெப்போலியன் மாஸ்கோவிலிருந்து பின்

வாங்கினார். நெப்போலியன் மாஸ்கோவிலிருந்து பின்வாங்கிய (retreat) நிகழ்ச்சி வரலாற்றில் நடைபெற்ற பெரிய சோகமான நிகழ்ச்சியாகும். அச்சமயம் ரஷ்யாவில் குளிர்காலம் ஆரம்பித்தால் எங்கும் பனிமூட்டம், ஆறுகள் உறைந்து பனிக்கட்டிகளாயின. உணவின்றி பிரெஞ்சுப் போர்வீரர்கள் பெருந்துன்பப்பட்டனர். அப்போது ரஷ்யத் தளபதி குடுசோவ் தலையையில்ரஷ்ய வீரர்கள் கொரில்லாத் தாக்குதல் நடத்தினர். இவ்வாறு இயற்கைச் சீற்றத்தாலும், கொரில்லாத்தாக்குதலாலும் நெப்போலியன் 1,70,000 வீரர்கள் மடிந்தனர். 1,70,000 பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இந்தப் பேரழிவிற்கு இணையாக வரலாற்றில் எதையும் கூறமுடியாது. தனது படையின் ஒரு சிறிய பகுதியுடன் நெப்போலியன் ஜெரிமானிய எல்லைக்குள் நுழைந்தார். நெப்போலியன் ரஷ்யப் படையெடுப்பு, அவர் செய்த மாபெரும்தவறாகும். நாட்டின் செல்வத்தையும், மக்களின் ஆற்றலையும் விலைமதிக்க முடியாத வீரர்களின் உயிரையும் நெப்போலியன் வீணாக்கினார். ரஷ்யப் படையெடுப்புதான் நெப்போலியன் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணம் என்று சொல்லப்படுகிறது. கெட்டில்பி கூறுவதாவது: “The expendition to Mosco was the act in the great tragedy of Napoleon’s fall.”

### 4. நாடுகளின் பேர் 1813 (**Battle of Nations**) (லீப்சிக்போர்)

ரஷ்யப் படையெடுப்பில் நெப்போலியன் தோற்றுப்போன செய்தியால் ஐரோப்பிய நாடுகள் விழிப்புற்றன. நெப்போலியனின் தோல்வி அந்நாடுகளுக்கு ஊக்கம் அளிப்பதாக இருந்தது. இங்கிலாந்து, ஆஸ்திரியா, பிரஷ்யா, ரஷ்யா ஆகிய நாடுகள் 1813ல் நெப்போலியனுக்கெதிராக நான்காவது கூட்டணியை அமைத்தன. மிகப்பெரிய மூன்று லட்சம் வீரர்கள் கொண்ட படை திரட்டப்பட்டது. நெப்போலியனும் நம்பிக்கை இழக்கவில்லை. 1,85,000 வீரர்களைக் கொண்ட ஓர் படையைத் திரட்டினார். முதலில் ‘டிரெஸ்டன்’(Dresdon) என்ற சண்டையில் நெப்போலியனே வெற்றிபெற்றார். ஆனால் மீண்டும் ஒரு போர் 1813 அக்டோபர் 13-ல் லீப்சிக் (Leipzig) என்ற இடத்தில் நடைபெற்றது. இப்போருக்குத்தான் ‘நாடுகளின் போர்’அல்லது ‘மக்களின்போர்’ என்று பெயர். மூன்று நாட்கள் கடுமையாக நடைபெற்ற இப்போர் நெப்போலியனின் முழுமையான தோல்வியில் முடிவடைந்தது.மொத்தம் 1,30,000 வீரர்கள் இறந்தனர். அதில் 50,000 பேர் பிரெஞ்சு வீரர்கள்.பிரெஞ்சுப்படையின் ஒரு பகுதியுடன் நெப்போலியன் தப்பி பாரிசுக்கு ஓடினார். மீதியிருந்த வீரர்கள் சரணடைந்தார். கூட்டுப்படையின் தளபதியான வெலிங்டன் பிரான்சின் தென்பகுதி வழியாக பிரான்சினுள் நுழைந்தார்.

இப்போது பிரான்ஸ் தன்மீது ஒரு பெரிய படையெடுப்பை எதிர்நோக்கியது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அரசு விசுவாசிகள் மீண்டும் பூர்பான்

வம்சத்தை பதவிலமர்த்த முயன்றனர். ஆனாலும் நெப்போலியனுக்கே ஆதரவு இருந்தது. மீண்டும் ஒரு படையைத் திரட்டினார் நெப்போலியன். இதற்கிடையில் ஐரோப்பிய ராஜ தந்திரிகள் 1813-டிசம்பரில் அமைதியான உடன்படிக்கைக்கு பேச்சுவார்த்தையை ஆரம்பித்தனர். நெப்போலியனுடன் உடன்பாடு ஏதும் எற்படவில்லை.எனவே போரின் மூலம் பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டது. கூட்டுப்படைகள் பாரிசை நோக்கி முன்னேறின. பாரிசு மீது பெரிய தாக்குதலை எதிர்பார்த்த நெப்போலியன், தலைநகரை பாரிசிலிருந்து 'லாயிர்'(Loire) என்ற இடத்திற்கு மாற்ற உத்தரவிட்டார்.ஆனால் அந்த ஆணையை எற்றுக் கொள்ளவோ, செயல்படுத்தவோ யாரும் தயாராக இல்லை.படைவீரர்களை விட தளபதிகள் போர் செய்துகளைப்டைந்தவர்களாகக் காணப்பட்டனர்.சூழ்நிலையைப் புரிந்து கொண்ட நெப்போலியன்,'ஐரோப்பாவில் அமைதியை நிலைநாட்ட நான் தடையாக இருப்பதாக எல்லோரும் நினைப்பதால் பதவி விலகுகிறேன்' என்று கூற 1814 ஏப்ரல் 6-ல் முடிதுறப்பு பத்திரத்தில் கையெழுத்திட்டார்.

வல்லரசுகளுடன் தான் செய்து கொண்ட தனிப்பட்ட போன்டேன்பிளு (Treaty of Fontainebleau) உடன்படிக்கையின்படி பிரான்ஸின் மீது தனக்கிருந்த உரிமையை விட்டுக் கொடுத்தார். மேலும் இதன்படி, நெப்போலியனுக்கு வருடத்திற்கு இரண்டு மில்லியன் பிராங்குகள் ஓய்வூதியமாகவும், அவர் மனைவி மரியலூயிஸாவிற்கு இத்தாலியப் பகுதியான பார்மாவும், நெப்போலியனின் குடும்பத்தினருக்கு வருடத்திற்கு 2.5 மில்லியன் பிராங்குகள் ஓய்வூதியமாகவும் கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. அடுத்த இரண்டு வாரத்திற்குள்ளாக இத்தாலிக்கு அப்பாலுள்ள சிறிய எல்பா (Elba) தீவில் வெற்றுப் பட்டத்துடன் ஓய்வெடுக்கச் செல்ல அனுமதிக்கப்பட்டார்.அதன்படி நெப்போலியன் 400 மெய்காப்பாளர்களுடன் தன் தாய் மற்றும் சகோதரி பாலினுடன் சேர்ந்து 'Undaunted'என்ற பெயருடைய ஆங்கிலக் கப்பல் மூலம் 1814 ஏப்ரல் 27-ல் எல்பா தீவிற்குப் புறப்பட்டார். நெப்போலியனின் மனைவி மரியலூயிசாவும் மகனும்வீயன்னா சென்றார்கள். நெப்போலியன் எல்பாத் தீவிற்கு போகும் போது தனது மாஜி மனைவி ஜோசபினுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் புகழ்பெற்ற வரி Never forget him who has never forgotton you and will never forget you 1814 மே 3-ம் தேதி எல்பா தீவிலுள்ள போர்ட்டோ பெரைரோ (Portoferraio) என்ற இடத்திற்கு போய்ச் சேர்ந்தார்.

அந்த நூறு நாட்கள் (**Hundred days**) 1815 மார்ச் 20 முதல் 1815 ஜுன் 29 வரை.

நெப்போலியன் எல்பாத் தீவிற்கு அனுப்பப்பட்ட பின்னர் ஐரோப்பிய நாடுகள் ஆஸ்திரியாவில் தலைநகரான வீயன்னாவில் மாநாடு ஒன்றைக் கூட்டின. பிரான்சில் 16-ம் லூயியின் தம்பி 18-ம் லூயி மன்னராக்கப்பட்டார். ஐரோப்பிய அரசியல் சூழ்நிலையை ஒழுங்குபடுத்த விவாதத்தில் ஈடுபட்டனர். இதற்கிடையே எல்பாத்தீவில் எவ்விதப் பாதுகாப்பிலும் வைக்கப்படாத நெப்போலியனுக்கு தீவிலிருந்து தப்பிச்செல்லும் எண்ணம் எற்பட்டது. அத்துடன் தன்னை இதைவிட தூரமான இடத்திற்கு அனுப்பிவிட ஏற்பாடு நடப்பதாகவும், பிரெஞ்சுப்படையில் அதிர்ப்தி வளர்ந்து வருவதாகவும் ரகசிய தகவல்கள் கிடைத்தது. எனவே மீண்டும்பிரான்ஸ் செல்ல முடிவு செய்தார். தனது முடிவை தன் தாயிடம் சொன்ன போது அவர் ஆசீர்வதித்து அனுப்பினார். “Go my son, fufill your destiny”தீவில் தனது செலவுகளுக்குக் கொடுக்கப்படுவதாக வாக்களிக்கப்பட்டிருந்த பணம்கொடுக்கப்படாததால் அதனையே காரணமாக வைத்து 1815 பிப்ரவரி 26-ம் எல்பாத் தீவிலிருந்து Inconstant என்ற கப்பல் மூலம் புறப்பட்டு பிரான்சின் தெற்கு கடற்கரையிலுள்ள கேன்ஸ் (Cannes) என்ற இடத்திற்கருகே மார்ச் 1ல் வந்தடைந்தார். பின்னர் அங்கிருந்து தனது ஆதரவாளர்களுடன் நடைபயணமாகவே பாரிசு நோக்கி புறப்பட்டார். மார்ச் 1-முதல் 20-ம் தேதி வரை சுமார் 720 மைல்கள் பயணம் மேற்கொண்டு மார்ச் 20 இரவு 9 மணி அளவில் பாரிசு வந்து சேர்ந்தார். 18-ம் லூயியின் ஆட்சியில் வெறுப்படைந்த மக்களும் நெப்போலியனை வரவேற்றனர். படை முழுவதும 18-ம் லூயியைக் கைவிட்டது. அவர் நாட்டைவிட்டே ஓடினார். 1815 மார்ச் 20-ம் நாள் முதல் 1815 ஜுன் 29-ம் தேதிவரை நெப்போலியன் தனது ஆற்றலையும், வலிமையும்பெருக்கினார். மீண்டும் நெப்போலியன் பிரான்சிலிருந்த அந்த நூறு நாட்கள் வரலாற்று சிறப்பு பெற்ற நாட்களாகும்.

### 7. வாட்டர்லூ போர் (**Battle of Waterloo):** 1815

நெப்போலியன் எல்பாத் தீவை விட்டு வந்து மீண்டும் பிரான்சிற்குள் நுழைந்து விட்டார் என்ற செய்தியைக் கேட்ட வீயன்னா மாநாட்டில் கூடியிருந்த ஐரோப்பிய நாடுகள் அதிர்ச்சியிடைந்தன. தங்களது நடவடிக்கைகளை நிறுத்தி வைத்துவிட்டு உலக அமைதியை கெடுப்பவரான (Destroyer of world peace) நெப்போலியனை தோற்கடிப்பதற்கு பெரும்படை ஒன்றை திரட்டினர். ஆங்கிலப்படைகள் வெல்லிங்டன் பிரவு தலைமையிலும் பிரஷ்யப் படைகள் ‘புளுச்சர்’(Blucher) தலைமையிலும் அணி வகுத்து நின்றன. இப்படைகளைத் தனித்தனியாகச் சந்தித்து குவாட்ரிபிராஸ், லிக்னி (Quatrebras, Ligny) ஆகிய இடங்களில் வெற்றி பெற்றார் நெப்போலியன். ஆனால் மீண்டும் கூட்டணிப் படைகள் ஒன்று சேர்ந்து ‘வாட்டர்லூ’ என்னுமிடத்தில் 1815 ஜுன் 18,ஞாயிற்றுக்கிழமை

நெப்போலியனை முழுமையாகத் தோற்கடித்தன. பிரெஞ்சுப்படைகள் நிலைகுலைந்தன. நெப்போலியன் பாரிசை நோக்கி ஓட்டம் பிடித்தார்.

### 8. நெப்போலியனின் சோசகமான முடிவு:

வாட்டர்லூ போரில் தோல்வியடைந்த நெப்போலியன் ஜுன் 21-காலை பாரிசுக்கு ஓடிவந்தார். பரிசு நகரம் இன்னும் சில நாட்களில் எதிரிகளின் கையில் வீழ்ந்துவிடும் என்ற செய்தி பாரிசு முழுவதும் காட்டுத்தீ போல் பரவியது. இச்சூழ்நிலையில் சட்டமன்றத்தில் நெப்போலியனின் அரசியல் எதிரிகளின் கை ஓங்கியது. ஐரோப்பிய நாடுகள் நெப்போலியனுக்கு எதிராகத்தான் போர் புரிகிறார்கள். பிரான்சுக்கு எதிராக அல்ல. எனவே "பாரிசு மீது நடைபெறப்போகும், தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டுமானால் நெப்போலியன் பதவியைத் துறக்க வேண்டும்" என்ற தீர்மானம் இயற்றினர். இதனை நெப்போலியன் முழுமனதுடன் எற்றுக்கொண்டு 1815 ஜுன் 22-ல் தனது 'எலைசி'(Elysee) அரண்மனையிலிருந்து பதிவி துறக்கும் சாசனத்தை எழுதி அனுப்பினார். ஜோசப் பௌச்சி (Joseph Fouche) என்ற நெப்போலியன் அமைச்சரவையில் இருந்த காவல்துறை மந்திரியின் தலைமையில்தற்காலிக அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. "நெப்போலியன் மீது விரோதமும், காழ்ப்புணர்ச்சியும் கொண்ட இவர் அவசரமாக சட்டமன்றத்தைக் கூட்டி நெப்போலியன் உடனடியாகப் பிரான்சை விட்டு வெளியேற வேண்டும்" என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார். இதனையும் ஏற்றுக் கொண்ட நெப்போலியன், 1815 ஜுன் 29-ல் பாரிசிலிருந்து அமெரிக்கா செல்வதற்காக ரோச்போர்ட் (Rochefort) துறைமுகம் வந்து தனது நண்பர்கள் குழுவுடன்இரண்டு கப்பல்களில் அமெரிக்க புறப்பட்டார். எல்பா தீவிலிருந்து தப்பி வந்ததிலிருந்து ஜுன் 29-ல் பிரான்சை விட்டு வெளியேறியது வரையுள்ள அந்த நூறு நாட்கள் நெப்போலியனின் சோகம் நிறைந்த நாட்களாகும். அதன் பிறகும் நெப்போலியன் வாழ்ந்த நாட்கள் சோக நாட்களே!

### நேப்போலியன் கைது செய்யப்படுதல்:

பிரான்சைவிட்டு வெளியேறிய நெப்போலியன் எத்திசையிலும் செல்ல முடியாதபடி ஆங்கிலக் கப்பல்கள் தடுப்புச் சுவர் போல் நின்றன. எனவே 'பெல்லரோபன்'(HMS Bollerophon) என்ற ஆங்கிலக் கப்பலின் தளபதியான 'பிரடரிக் மெயிட்லாண்ட்'(Frederick Maitland) என்பவரின்ஆதரவுடன் இங்கிலாந்துக்கே செல்ல முடிவு செய்தார். அத்துடன் ஆங்கில மன்னர் நான்காம் ஜார்ஜுக்கு 'ஆங்கிலச் சட்டதிட்டங்கட்கு உட்பட்டு ஆங்கில மக்களின் ஒருவனாக வாழவிரும்பி இங்கிலாந்து வருகிறேன்'. என்று ஒரு கடிதமும் எழுதி அனுப்பினார். ஆனால் அந்தக் கடிதம் அரசர் கைக்குப் போய் கிடைக்கவில்லை என்று

சொல்லப்படுகிறது. அதன் அடிழப்படையில் 1815 ஜுன் 15-ல் பெல்லரோபன் என்ற கப்பலில் ஏறினார். கப்பல் தலைவன் மெயிட்லாண்ட ஒரு பேரரசரக்குரிய மரியாதையுடன் நெப்போலியனை வரவேற்றார்.

நெப்போலியன் பயணம் செய்த கப்பல் ஜுலை 26-ல் இங்கிலாந்திலுள்ள பிளைமவுத் (Plymouth) துறைமுகம் வந்து சேர்ந்தது. அப்போது அந்த துறைமுகத்தின் காவலர் விஸ்கவுண்ட் கீத் (Visount) Keith) என்பவர் 'நெப்போலியன் சிறைப்படுத்தப்பட்டுள்ளர்' என்ற செய்தியை மெயிட்லாண்ட மூலம் நெப்போலியனுக்குச் சொல்லி அனுப்பினார். இதனைக் கேட்ட நெப்போலியன்அதிர்ச்சியடைந்தார். கொதித்தார். குமுறினார். "இங்கிலாந்தின் விருந்தினராக வந்த தன்னை ஆங்கிலச் சட்டத்தின் கீழ் வாழ்வதற்கு அடைக்கலம் தேடிவந்த தன்னை ஆங்கில அரசாங்கம் வஞ்சித்து விட்டது" என்று கூறி பொறுமினார். இங்கிலாந்தின் இந்த மனித நாகரிக மற்ற செயலைக் கண்டித்தார்.

**நெப்போலியனின் இறுதி நாட்கள்:**

நெப்போலியன்கைது செய்யப்பட்டபின் அவரைச் சுட்டு கொல்வதா அல்லது தெற்கு அட்லாண்டிக் கடலிலுள்ள செயின் ஹெலினாத் தீவிற்கு அனுப்புவதா என்று பராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. இறுதியில் ஆப்பிரிக்காவின் மேற்கு கரையிலிருந்து 1200 மைல் தொலைவிலுள்ள செயின்ட் ஹெலினாத் தீவிற்கு அனுப்பிவிட முடிவு செய்யப்பட்டது. அதன்படி 1815- ஆகஸ்ட் 9-ல் 'நார்தம்பர்லேண்ட்' என்ற கப்பலில் அவர் தனது நண்பர்களுடன் செயின்ட ஹெலினா என்ற பாறைத் தீவிற்கு அனுப்பப்பட்டார். கப்பல் புறப்பட்டபோது பிரான்சுக் கடற்கரையை நோக்கி 'எனதருமை பிரான்சே' என்று உரக்கக் கத்தினார் சுற்றி நின்றவர்கள் கண்கள் பனித்தன.

1815-ல் அக்டோபர் 15-ல் நெப்போலியன் ஹெலினாத் தீவில் இறங்கினார். அங்கு ஜேம்ஸ்டவுண் என்ற சிற்றூரில் வசதிக் குறைவான ஒரு சிறிய வீட்டில் சிறை வைக்கப்பட்டார். ஐரோப்பிய வல்லரசுகளையெல்லாம் வீழ்த்தி தனது காலடியில் போட்ட மாவீரன் நெப்போலியன் சாகும் வரை ஒரு கைதியாகவே வாழவேண்டிய அவலநிலை ஏற்பட்டுவிட்டது. சிறிது சிறிதாக நோய்வாய்ப்பட்டு ஆறு ஆண்டுகள் கழித்து 1821 மே 5-ம் தேதி நெப்போலியன் உயிர் நீத்தார். நெப்போலியனின் கடைசி விருப்பப்படி அவரது உடலை பிரான்சிலுள்ள சீன் நதிக்கரையில் அடக்கம் செய்ய ஆங்கில் அரசு அனுமதி அளிக்க மறுத்துவிட்டது. எனவே அவரது உடன் ஹெலினாத் தீவிலேயே ஒரு நீரூற்று அருகே அடக்கம் செய்யப்பட்டது. கல்லறையில் 'தளபதி நெப்போலியன்' என்று மட்டுமே பொறிக்க அனுமதியளிக்கப்பட்டது.

**நெப்போலியனின் வீழ்ச்சிக்கான காரணங்கள்:**

உலக வரலாற்றில் பெயர் பெற்ற போர் வீரர்களில் மிக உயர்ந்த இடத்தை வகிப்பவர் நெப்போலியன். அலக்ஸாந்தர். சீசர், போன்றவர்களைப் புகழில் பின்னுக்குத் தள்ளியவர். வீரம் செரிந்த உடலும், உள்ளமும் கொண்டவர். உயர்ந்த சிந்தனையும் அயரா உழைப்பும் கொண்டவர். ஆயினும் நாடாளும் பேராசை அவரை ஆட்டிப் படைத்தது. அவருடைய போர்களை மக்கள் வெறுத்தனர். தனி ஒருவனின் பெருமைக்காகவும் கீர்த்திக்காகவும் தொடுக்கப்பட்டவை அந்தப் போர்கள். அப்போது மக்களிடையே பரவிய 'தேசிய எண்ணத்தை' மதிக்கத் தவறி விட்டார். இவருடைய வீழ்ச்சி படிப்படியாக எற்பட்ட பல நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியே ஆகும்.

1. **நெப்போலியனின் கண்டத்திட்டம்:**

நூற்றுக்கணக்கான போர்களில் வெற்றிவாகை சூடிய நெப்போலியன், இங்கிலாந்தைத் தோற்கடிப்பதற்கு "கண்ட திட்டத்தைச்" செயல்படுத்தினார். இத்திட்டம் ஒரு தோல்வித் திட்டமாகும். சரியான கப்பற்படை இல்லாமல் இத்திட்த்தைத் செயல்படுத்த முடியாது. மேலும் நெப்போலியனிடம் சிறந்த கப்பற்படைத்தளம் கிடையாது. எனவே இத்திடடம் தோல்வியடைந்தது. இது தான் தீபகற்ப பொருக்கும் பின்னர் ரஷ்யப்படையெடுப்புக்கும் வழி வகுத்தது. எனவே நெப்போலியனின் வீழ்ச்சிக்கு கண்டதிட்டமே அடிப்படைக் காரணம் ஆகும்.

2. **தீபகற்ப போர்:**

தீபகற்ப போர்தான் தனது வீழ்ச்சிக்குக் காரணம் என்று நெப்போலியனே கூறுகிறார். இப்போர் அவருடைய ஆட்சிக்கும், அதிகாரத்திற்கும் ஆட்டத்தை ஏற்படுத்தியது.போர்ச்சுக்கீசிய, ஸ்பானிய மக்களின் தேசப்பற்றுக்கு முன்பு பிரெஞ்சுப்படைகள் நிற்க முடியவில்லை. இந்த 'ஸ்பானியப் புண்' தான் (Spanish ulcer) நெப்போலியன் வீழ்ச்சிக்கு அடிகோலியது.

**3.** **ரஷ்யப் படையெடுப்பு:**

நெப்போலியனின் ரஷ்யப் படையெடுப்பு அவர் செய்த மாபெரும் தவறாகும். இப்படையெடுப்பு அவர் செய்த மாபெரும் தவறாகும். இப்படையெடுப்பில் லட்சக்கண்கான போர் வீரர்களை இழந்தார். அவர் புகழ் மங்குவதற்கும், ராணுவ வலிமைகுறைவதற்கும் இதுவே காணமாகும். மாஸ்கோவிலிருந்து அவர் திரும்பியது போன்ற சோகமான நிகழ்ச்சி வரலாற்றில் வெகுசிலவே உண்டு.

4. **இங்கிலாந்தில் கடலாதிக்கம்**

இங்கிலாந்தின் கடலாதிக்கம் நெப்போலியன் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் ஆகும். இங்கிலாந்துக்கு எதிராக நடந்த அனைத்துப் போர்களங்களிலும் நெப்போலியனுக்குத் தோல்வியே ஏற்பட்டது. ஆங்கிலத் தளபதிகளான நெல்சன், வெல்லிங்டன் ஆகியோர் நெப்போலியனின் வீழ்ச்சிக்கு காரணமாயினர்.

**5. பேராசை**

அனைத்து நாடுகளையும் தனக்கு அடிபணிய வைக்க வேண்டுமென்ற பேராசையே நெப்போலியனின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது. எனவே போர் வெறி கொண்டு எண்ணற்ற போர்களில் ஈடுபட்டார். அதுவே தோல்வியை நோக்கி இழுத்துச் சென்றது.

**6. நெப்போலியனின் ராணுவமுறை**

நெப்போலியனின் ராணுவ முறை எதிரி நாடுகளின் ராணுவ முறையைக் காட்டிலும் தரம் குறைந்து காணப்பட்டது. வெற்றி பெற்ற பகுதிகளில் சரிவர நிர்வாக அமைப்பை ஏற்பபடுத்தவில்லை. மேலும் இவரது படைவீரர்கள், ஜெர்மானியர், இத்தாலியர் போன்ற பல இனத்தவர்களாக இருந்தனர். அவர்களிடம் உற்சாகமும், பிரெஞ்சுப் புரட்சியின் தூண்டுதலும், தேசிய உணர்ச்சியும் காணப்படவில்லை. வெறும் கூலிக்குப் போரிடுபவர்களாகவே பணியாற்றினர். எனவே ராணுவ அமைப்புமுறை படிப்படியாக சீர்கேடடைந்தது. நெப்போலியனின் வீழ்ச்சிக்குக் காாணம் ஆகும்.

**7. எண்ணிக்கையற்ற எதிரிகள்**

நெப்போலியன் தனது ஆக்கிரமிப்புக் கொள்கையினாலும் ஓயாத படையெடுப்பு, கண்டத்திட்டம் ஆகியவற்றினாலும் ஏராளமான எதிரிகளைச் சம்பாதித்துக் கொண்டார். இங்கிலாந்து, ஸ்பெயின், ஸ்வீடன், பிரஷ்யா, அஸ்திரியா, போர்ச்சுக்கல், சார்டீனியா போன்ற பல நாடுகள் நெப்போலியனின் எதிரி நாடுகளாயின.

**8. நெப்போலியன் தன் ஆற்றலை அறியாமை**

நெப்போலியன் தன்னைப் ' பற்றி அதிகமான மதிப்பிட்டுக்கொண்டார். அனால் அவரும் பலரைப் போல ஒரு மனிதரே தொடக்கத்தில் காணப்பட்ட இராணுவ வலிமை, திறமை, அற்றல்,ஆவேசம், கூரிய சிந்தனை, ஆழ்ந்து திட்டமிடுதல் ஆகியவை நாளடைவில் குன்றிப் போயின. அடிக்கடி போர் செய்ததால் களைப்படைந்தார் நெப்போலியன். எனவே வீழ்ச்சியடைந்தார்.

**9. பழிவாங்கும் உணர்வு**

நெபபோலியனிடம் சிறந்த இராஜதந்திரம் காணப்படவில்லை. லீப்சிக் போருக்குப் பிறகு ஐரோப்பிய நாடுகள் சமர்ப்பித்த சமாதான ஒப்பந்தத்தை ஏற்றக் கொள்ள மறத்தார். தன்னைத் தோற்கடித்த நாடுகளைப் பழிவாங்க நினைத்தார். ராணுவ வலிமை இழந்த நேரத்தில் இவ்வாறு நினைத்ததால் தான் வாடட்ர்லூ போரில்

தோற்கடிக்கப்பட்டார். ஐரோப்பாவில் அத்தனை நாடுகளையும் பகைத்துக்கொண்டார். இவரது பழிவாங்கும் உணர்வு வீழ்ச்சிக்கு வழிவகுத்து.

**10. அதிகாரக் குவிப்பு**

நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் தன்னிடமே வைத்துக்கொண்டார் நெப்போலியன். பேரரசர் ஆனபின் அவரது பழக்க வழக்கங்களை மக்கள் வெறுத்தனர். அதிகாரக் குவிப்பு நிர்வாகச் சுமையை அதிகப்படுத்தியது.

**11. தற்பெருமை**

நெப்போலியன் தனது தவறுகளையும், தோல்விகளையும் ஒத்துகொள்வதில்லை. மேலும் பெருமை ஒருவனை வீழ்த்தும் என்பதை அவர் அறியவில்லை. தனது எதிரிகளின் பலத்தை அலட்சியமாக கருதினார். ஸ்பெயினிலிருந்து அவர் எழுதியதாவது: “ஸ்பானியப் பிரபுக்கள், இராணுவ வீரர்களிடையே காணப்பட்ட கோழைத்தனத்தை நான் வேறெங்கும் காணவில்லை”. இதை எழுதிய சில நாட்கிளல் நெப்போலியனின் படை ஸ்பானியர்களிடம் தோல்வியடைய வேண்டியிருந்தது!

**12. போப்பாண்டவர் கைது செய்யப்படல்**

தனது கண்டதிட்டத்தை போப்பாண்டவர் எழாம்பயஸ் ஏற்காததாலும், கன்கார்டட் உடன்படிக்கையை மீறியதாலும் அவரைக் கைது செய்து அவரது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளை 1808-ல் கைப்பற்றினார். இதனால் ஐரோப்பியக் கத்தோலிக்கர்கள் நெப்போலியனை எதிர்த்தனர். கத்தோலிக்க மக்களின் ஆதரவை இழந்த நெப்போலியன் வீழ்ச்சியடைந்தார்.

**13. ஐரோப்பாவில் பரவிய தேசிய உணர்ச்சி**

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின்னர் ஐரோப்பாவில் தேசிய உணர்வு பரவியது.தன்னையும், தன் நாட்டையுமே பிரதானமாகக் கருதினார் நெப்போலியன். பிறநாட்டு மக்களின் தெசிய உணர்ச்சியை மதிக்கவில்லை. பிறநாடுகள் சுதந்திரத்தை இழந்ததும், அதன் எல்லைகளை தன் இஷ்டப்படி மாற்றியமைத்ததும், பெரிய எதிர்ப்பை ஏற்படுத்தியது. ஐரோப்பிய மக்களிடையே உறங்கிக் கிடந்த தேசிய உணர்வுகளை எழுப்பிவிட்டவர் நெப்போலியன். அதுவே நெப்போலியன் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. நெப்போலியனின் சீர்திருத்தங்கள்

## Reforms of Napoleon

நாடுகளை வெல்லும் திறமை படைத்த நெப்போலியன் நிர்வாகத் துறையிலும் நிகரற்று விளங்கினார். போர்க்காலத்தில் தன்னுடைய திறமைகளை வெளிப்படுத்தியது போல அமைதிக் காலத்தில் உள்நாட்டு நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதில் கவனம் செலுத்தினார். நாட்டில் நிலவிய குழப்பத்தை நீக்கி ஒழுங்கை ஏற்படுத்தினார். சமூகத்தில் மக்களுக்கு அமைதியை எற்படுத்தி அவர்கள் உணர்வுக்கான பல

சீர்திருத்தங்களை மேறகொண்டார். இச்சீர்திருத்தங்கள் 1799 முதல் 1804 வரையுள்ள காலப்பகுதியில் செய்து முடித்தார்."நெப்போலியனின் படைத்துறை வெற்றிகள் நிலைத்து நிற்க முடியாமல் போனாலும் அவருடைய சீர்திருத்தங்கள் கருங்கல் அடித்தளத்தின் மீது அமைக்கப்பட்ட கட்டிடம் போல அழியாமல் நிலைத்து உள்ளன" என்று கூறுகிறார்,H.A.L. Fisher. (If the conquests of Napoleon were ephemeral, his civilian work in finance was built upon granite)

1. **ஸ்தல ஆட்சி சீர்திருத்தங்கள்:**

நெப்போலியன் ஸ்தல ஆட்சி முறையில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். மத்திய அரசைப் பலப்படுத்துவதற்காக ஸ்தல ஸ்தானங்கட்கு அளிக்கப்பட்டிருந்த உரிமைகளையும், அதிகாரங்களையும் மிகவும் குறைத்துவிட்டார். அனால் ஜனநாயக முறைப்படி நிர்வாகம் நடைபெற்றது. டிபார்ட்மென்ட்கள், கம்யூன்கள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. பிரிபெக்ட்கள், துணை பிரிபெக்ட்கள், மேயர்கள் அகிய அதிகாரிகட்கு நிறைய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. வரிவிதித்தல், வரிவசூலித்தல் பொன்றவை மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டது.

2. **நிதிச் சீர்திருத்தங்கள்:**

நெப்போலியன் நாட்டின் நிதி நிலையைச் சீர்திருத்த அதிக கவனம் செலுத்தினார். நிலத்தீர்வைகள் ஒழுங்காக வரைமுறை செய்யப்பட்டன. சுமார் பத்து ஆண்டுகளாக நின்று போயிருந்த வரிவசூல் அரம்பிக்கப்பட்டது. மது, புகையிலை, உப்பு மீது மறைமுகவரி விதிக்கப்பட்டது. இவ்வாறு வருவாய் அதிகப்படுத்தப்பட்டது. அதே சமயம் அரசாங்கச் செலவுகளில் சிக்கனம் கடைப்பிடிக்கப்பட்டது. நாட்டில் ஆண்டு வரவுசெலவுத் திட்டம் சீர்திருத்தப்பட்டது. "பிரெஞ்சு வங்கியை" ஏற்படுத்தி பொதுமக்களுக்குப் பயன்படும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவ்வாறு நிதிநிலையைச் சீர்படுத்தினார் நெப்போலியன்.

3. **கல்விச் சீர்திருத்தங்கள்:**

நெப்போலியன் கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் புகுத்தினார்.

a) ஒவ்வொரு கம்யூன்களிலும் ஆரம்பப்பள்ளிகள் நிறுவப்பட்டன. முக்கிய நகரங்களில் உயர்நிலைப் பள்ளிகள்அமைக்கப்பட்டன. அவை அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றே நிறுவப்பட்டன. இப்பள்ளிகளில் நியமனம் செய்யப்படும் ஆசிரியர் அரசாங்கத்தினாலே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

b) தொழிற் பள்ளிகள், ராணுவப் பள்ளிகள், இலக்கணப் பள்ளிகள் மத்திய அரசின் மேற்பார்வையில் அமைக்கப்பட்டது. பிரெஞ்சு மொழி லத்தீன் மொழி, அரம்ப விஞ்ஞானம் ஆகியவை இலக்கணப் பள்ளிகளில் கற்றுக்கொடுக்கப்பட்டன.

c) பாரிசு நகரில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்பட்டு மாணவர்கட்கு கிறிஸ்தவ மதத்தின் கொள்கைகள், அரசாங்கத்திற்கு மரியாதை, பல்கலைக்கழகச் சட்டங்கட்கு கீழ்ப்படிதல் ஆகியவை கற்றுக்கொடுக்கப்பட்டன.

d) நெப்போலியன் பெண் கல்விக்கு ஆதரவு அளித்தார். பெண்களுக்கு கணிதம், வரலாற, பூகோளம், தாவர இயல், தையல்வேலை, குழந்தை வளர்ப்பு ஆகியவற்றில் போதனை அளிக்கப்பட்டது. நாட்டியம் கற்றுக்கொடுக்கப்பட்டது. ஆனால் நெப்போலியன் பெண்களுக்கு அரசியல் பற்றிய போதனை கூடாது என்றார்.

e) கல்வித்துறையை சீரான முறையில் முன்னேற்ற பாரிசில் 'பல்கலைக்கழகம்'(Imperial University) ஒன்றை நிறுவினார். அதன் தலைவரை நெப்போலியனே நியமித்தார். இது நாட்டின் கல்வித்திட்டம் முழுவதையும் மேற்பார்வை செய்துவந்தது.

**4. மதச் சீர்திருத்தங்கள்: (கன்கார்டட் - Concordat).** 1802

நெப்போலியன் மக்களிடம் காணப்பட்ட கடவுள் பக்தியை மதித்தார். மதம் சமூகத்தை நல்லவழியில் நடத்திச் செல்லும் கருவி என்றார். மக்களுக்கு மதம் அவிசியம்தான், ஆனால் அது அரசாங்கத்தின் கையில் இருக்கவேண்டும் என்றார். மத சம்பந்தமான காரியங்களில் மட்டுமே போர்பாண்டவருக்கு உரிமை உண்டு என்று கூறி 1802-ல் போப்பாண்டவர் "ஏழாம்பயசு" டன் (Pope Plus VII) உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டார். அதற்கு "கன்கார்டட்" என்று பெயர்.

இந்த உடன்படிக்கையின்படி,

- கத்தோலிக்க மதம் நாட்டின் தேசிய மதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- புரட்சியின் போது திருச்சபயின் நிலங்களை அரசாங்கம் பறிமுதல் செய்ததை போப் ஒத்துக்கொண்டார்.
- திருச்சபையின் குருமார்களுக்கு அரசாங்கமே சம்பளம் கொடுக்கும்
- தேவாலயங்கள். மீண்டும் திறக்கப்பட்டு சுதந்திரமான சமய வழிபாட்டிற்கு வகை செய்யப்பட்டது.

இவ்வாறு திருச்சபை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. அரசாங்கத்திற்கும் மதத்திற்குமிடையே நட்புறவு எற்பட்டது. இதன் மூலம் பெரும்பான்மையான பிரெஞ்சு கத்தோலிக்கரின் ஆதரவு நெப்போலியனுக்குக் கிடைத்தது.

5. நெப்போலியனின் சட்டத் தொகுப்பு: (**Code Napoleon**):

நெப்போலியனின் சீர்திருத்தங்களில் மிக முக்கியமானதும் சிறப்பானதும், நீடித்து இன்றுவரை நிலைத்து நிற்பதும் அவரது சட்டத்தொகுப்பே ஆகும். அவர் ஆற்றிய பணிகளில் தலைசிறந்த பணி ஆகும் இது. ரோம் நாட்டுப் பேரரசர்களான தியோடோசியஸ் ஜஸ்டினியன் ஆகியோர் ரோமானியச் சட்டங்களை பல நூற்றாண்டுகட்கு முன்பு தொகுத்ததைப் போன்று பிரான்சின் சட்டங்களைத் தொகுக்க உறுதிபூணடார் நெப்போலியன். இது நெப்போலியனின் பெரும்பணிகளில் ஒன்றாகும்.

நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான சட்டத்தை எற்படுத்தவும் குழப்பம் நிறைந்த சட்டங்களைத் தொகுக்கவும், சட்ட நுணுக்கங்களை ஆராயவும் நான்கு வழக்கறிஞர்களைக் கொண்ட ஒரு குழுவை நெப்போலியன் அமைத்தார். அவர்களின் தீவிர உழைப்பின் பயனாக நெப்போலியன் 1804-ல் “நெப்போலியனின் சட்டத்தொகுப்பு” உருவானது. ஐந்து பெரிய சட்டத்தொகுப்புகள் தொகுக்கப்பட்டன.

இதன் மூலம், சட்டத்துறையில் நிலவிவந்த முரண்பாடுகள் எல்லாம் அகற்றப்பட்டு நாட்டுக்கு ஒரே மாதிரியான சிவில் சட்டம், கிரிமினல் சட்டம், தண்டனைச் சட்டம் ஆகியவை வெளியிடப்பட்டன. நியாயம் வழங்குதலில் இருந்த முரண்பாடுகள் நீக்கப்பட்டன. இத்தொகுப்புகளில் தனிமனித சுதந்திரமும், சமத்துவமும், பொறையுடைமையும் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

கடல் வாணிபம், பொது வாணிபம் மற்றம் வங்கிகளின் வளர்ச்சிக்கு ‘வாணிபச் சட்டங்களை’யும் தொகுத்தார். நெப்போலியனின் சட்டத் தொகுப்புதான் இப்போது பிரான்சில் இருக்கும் சிவில் சட்டத்துக்குரிய அடிப்படையாக அமைந்துள்ளது. எனவே தான் நெப்போலியன் ரோமப் பேரரசுக்கு சட்டங்கள் வகுத்த மாபெரும் மன்னன் “ஜஸ்டினியனுக்கு” ஒப்பிடப்பட்டு ‘இரண்டாம் ஜஸ்டினியன்’ என்று புகழப்படுகிறார். பிற்காலத்தில் செயின்ட் ஹெலினா தீவில் சிறையில் இருந்தபோது நெப்போலியன் கூறியதாவது. My real glory is not my having won forty battles; what will never be effaced, what will endure forever is my code.

5.பொதுப் பணித்துறை சீர்திருத்தங்கள்:

நெப்போலியனது பொதுப்பணித்துறை நன்கு பணியாற்றியது. பழைய சாலைகளைப் புதுப்பித்தல், கால்வாய்களும் உள்நாட்டு நீர்வழிகளும் வெட்டுதல், பழைய துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்ஆகிய நற்பணிகளை மேற்கொண்டார். வெனிஸ், நேப்பிள்ஸ், மிலான், ரோம், டூரின் ஆகிய நகரங்களை பாரிசுடன் இணைக்கும் “டிரான்ஸ் ஆல்பைன்” சாலை அமைக்கப்பட்டது.

விவசாய அபிவிருத்திக்காக அணைகள், கால்வாய்கள். பாலங்கள் கட்டப்பட்டன. சதுப்பு நிலங்கள் திருத்தப்பட்டு விவசாயத்திற்கு ஏற்றதாக மாற்றப்பட்டன.

பாரிசு நகரம் அழகுபடுத்துப்பட்டது. கலைச் செல்வங்களைப் பாதுகாக்க ஒரு கலைக்கூடம் நிறுவப்பட்டது. நாட்டின் அரணமனைகள் புதுப்பிக்கப்பட்டன. இவர் காலத்தில் பாரிசு நகரம் ஐரோப்பாவின் இன்ப பட்டணம் என்று அழைக்கப்பட்டது. தனது வெற்றிகளின் நினைவு சின்னமாக பாரிசில் ஒரு "வெற்றி வளைவை"(Arch de Triumph) நிறுவினார் நெப்போலியன்.

**6. விருதுகள் வழங்கும் முறை (Legion of honour):**

பல்வேறு துறைகளில் சிறப்பாகப் பணி ஆற்றியவர்கட்கு "அரசாங்க விருது" அளிக்கும் முறையை 1802-ல் ஏற்படுத்தினார் நெப்போலியன். இதற்குஅடிப்படைத் தேவை திறமையே. சமயம், பிறப்பு, அந்தஸ்து ஆகிய வேறுபாடு இன்றி அரசு, ராணுவம், தொழில் முதலிய துறைகளில் சிறப்பாகத் தொண்டு செய்தவர்கட்கு விருதுகள் வழங்கப்பட்டன. இந்த விருதுகளைப் பெறுவது பெருமையாகக் கருதப்பட்டது. இவ்வாறு நாட்டிற்குச் செய்யப்படும்தன்னலமற்ற தொண்டிற்கு மதிப்பும் மரியாதையும் வழங்கினார் நெப்போலியன்.

**நெப்போலியனைப் பற்றிய மதிப்பீடு**

நெப்போலியன் ஓர் சிறந்த படைத் தளபதியும் ஒப்பற்ற அரசியல் வல்லுநருமாவார். இவரைப் பற்றியும், இவர்அறிவைப் பற்றியும் வெளிவந்துள்ள எராளமான புத்தகங்களே இவர் பெருமைக்குச் சான்று. பிரான்ஸ் நாட்டில் ஒற்றுமையையும், ஒழுங்கையும் நிலைநாட்டினார். நெப்போலியன் ஒளியூட்டும் வல்லரசர்களின் பட்டியலில் இறுதியிடத்தைப் பெற்றாலும் நவீனகால நிர்வாகிகளில் முதல் இடம் பெறுகிறார். இவருடைய நிர்வாகச் சீரமைப்புப் பணிகளில் சமத்துவமும், சகோரத்துவமும் காணப்பட்டன. நெப்போலியன் சொல்லின் செல்வர். நாவன்மை படைத்த பேச்சாளர் சிறந்த எழுத்தாளரும்கூட. கவர்ச்சி மிக்க இனிமையான பழக்க வழக்க நடைமுறைகள் அவரிடம் குடி கொண்டிருந்தன. இவர் வியக்கத்தகு நினைவாற்றலையும் பெற்றிருந்தார். நெப்போலியன் ஒரு தீரமிக்க வெற்றி வீரர். எப்போதும் வீர உணர்ச்சியுடையவர். ஆங்கிலத்தளபதி வெல்லிங்டன் கூறுவதைப் போல "போர்க் களத்தில்" நெப்போலியனது தோற்றம நாற்பதாயிரம் வீரர்களின் தோற்றத்தைப் போல ஆற்றலுடையது. "போர்க்களத்தில் நெப்போலியனைக்காணும் போர் வீரர்கள் புதிய எழுச்சியும் உற்சாகமும் பெற்றனர்."வீரர்களுக்கு தான் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார். வெற்றியால் அவர் மயங்கினதுமில்லை. தோல்வியால் துவண்டதுமில்லை.

நான்கு அடி பத்து அங்குல உயரமே உடைய நெப்போலியன் குதிரை மீது அமர்ந்திருக்கும் போது மட்டுமே கம்பீரமாகத் தோன்றுவார். நேர்த்தியான உடற்கட்டுடையவர், களைப்பு, சலிப்பு, அயர்வு, சோர்வு ஆகியவை நெப்போலியனைத் தீண்டுவதில்லை. அவரது உடலும் உள்ளமும் ஒரே சீரான உறுதியைப் பெற்றிருந்தன. "பிரெஞ்சுப் புரட்சியே தனது உயர்வுக்கு வழி வகுத்ததால் தன்னைப் புரட்சியின் குழந்தை" என்று குறிப்பிட்டுள்ளார்.

நெப்போலியன் பிரான்சின் சமூக ஏற்றத்தாழ்வை நீக்கத் திட்டங்கள் தீட்டி செயல்படுத்தியதால் 'மக்களின் தலைவர்' என்று பெயர் பெற்றார். "நவீன காலங்களில் தோன்றிய மிகப்பெரிய மனிதர் நெப்போலியன்" என்று மிக்னட் என்பவர் கூறுகிறார். ஆனாலும் இங்கிலாந்தின் ஓங்கிய செல்வ நிலையையும், வன்மையான கடலாதிக்கத்தையும், தம்மை எதிர்த்து நின்ற ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட தேசிய உணர்ச்சியின் வேகத்தையும் அறிந்து கொள்ளாமல் சாம்ராஜ்யத் திட்டங்களை வகுத்ததால் வீழ்ச்சியடைந்தார் நெப்போலியன்.

**இறந்தபின் நெப்போலியனின் வரலாறு:**

பொதுவாக ஒரு மனிதனின் வாழ்க்கை வரலாறு அவன் இறந்தவுடன் முடிவடைந்துவிடுகிறது. ஆனால் மாவீரன் நெப்போலியனின் வாழ்க்கை வரலாறோ அவர் இறந்த பிறகும் தொடரும் அதிசயத்தைக் காணலாம். நெப்போலியன் இறந்த ஒன்பது ஆண்டுகள் கழித்து 1830-ஜுலையில் பிரான்சில் புரட்சி எற்பட்டு 18-ம் லூயி மன்னர் விரட்டப்பட்டார். ஆர்லியன்ஸ் கோமகன் லூயி பிலிப் அரசரானார். அவர் நெப்போலியனின் புகழைப் பரப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1833-ஜுலை மாதம் அரண்மனைக்கெதிரில் 'வெண்டோம்'(Vendom) என்ற இடத்திலும், 1834-ஆகஸ்ட மாதம் இன்வேலிடஸ் (Invalides) என்ற இடத்திலும் நெப்போலியனின் சிலை நிறுவப்பட்டது. சட்ட மன்றங்களிலும், நீதிமன்றங்களிலும் அரசு அலுவலங்களிலும் அவர் உருவப்படங்கள் திறக்கப்பட்டன.

அதன்பின் நெப்போலியனின் கடைசி விருப்பப்படி அவரது உடலை ஹெலினாத் தீவிலிருந்து பிரான்சுக்குக் கொண்டுவந்து சீன் (Sienne) நதிக்கரையில் அடக்கம் செய்வதற்கான எற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. பிரெஞ்சு முதலமைச்சர் தியர்சின் தலைமையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கிலப் பிரதமர் பால்மஸ்டன், நெப்போலியினின் பேரரசர் பட்டத்தை அங்கீகரித்தார். அவரது உடலை ஹெலினாத்தீவிலிருந்து எடுத்துச் செல்வதற்கு அனுமதித்தார். அதன் பின் நெப்போலியனின் உடலை எடுத்துவர இளவரசர் சாயின்வில் (Joinville) என்பவர்

அழகான தங்க வேலைப் பாடுகளுடம் கூடிய சவப்பேழையுடன் இரண்டு கப்பல்களில் புறப்பட்டு 1840 அக்டோபர் 8-ம் தேதி செயின்ட் ஹெலினாத்தீவிற்கு வந்தடைந்தார்.

நெப்போலியன் அடக்கம் பண்ணப்பட்ட கல்லறை தோண்டபட்டு அவர் உடல் வைக்கபட்ட சவப்பேழையைத் திறந்தபோது அனைவரும் வியந்தனர். பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன் இறந்த போது எப்படியிருந்தோரோ அதேபோலவே இருந்தார். முகம் பளிங்கு போல ஒளிவீசியது. பளபளப்பாக இருந்தது. ஏனினல் அவரது உடல் Mahogamy, Lead, Tin ஆகியவைகளால் செய்ப்பட்ட மூன்று அடுக்குகளைக் கொண்ட பேழையில் வைக்கப்பட்டிருந்தது தான் காரணம். அவரது உடலை எடுத்து தாங்கள் கொண்டு வந்த பெட்டியில் வைத்து மூடினர். 'பேரரசர் நெப்போலியனின்' உடல் பிரான்ஸ் நோக்கி புறப்பட்டது. ஒரு பேரரசருக்குரிய முழு ராணுவ மரியாதைகள் கொடுக்கப்பட்டன.

பேரரசரின் உடலைத்தாங்கிய 'நார்மண்டி' என்ற கப்பல் 1840 டிசம்பர் 9-ல் சீன் நதி வழியாக பிரான்சுக்குள் நுழைந்தது. நதியின் இரண்டு பக்கங்களிலும் மக்கள் கூடி நின்று மறைந்த மாவீரனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். நாடு முழுதிலும் துயர வெள்ளம். டிசம்பர் 14-ம் தேதி பாரிசுக்கு அருகே சீன் நதிக்கரையிலுள்ள 'கூர்பிவாய்'(Courbevoie) என்ற சிற்றூரில் நெப்போலியனின் உடல் இறக்கி வைக்கப்பட்டது. மன்னர் பிலிப் தனது குடும்பத்தார் மற்றும் உயர் அதிகாரிகள் புடைசூழ நெப்போலியனின் உடலைப் பெற்றுக் கொண்டார்.

நெப்போலியனின் உடலை அடக்கம் செய்வதற்கான விழா நடவடிக்கைகள் ஆரம்பமாயின. பிரான்ஸ் நாடே அதில் கலந்து கொண்டது. அரச குலத்தவர், தளபதிகள், சமயத்தலைவர்கள் அதிகாரிகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். 1840 டிசம்பர் 15ம் தேதி பேரரசர் நெப்போலியனது உடல் அவரது கடைசி விருப்பப்படி சீன் நதிக்கரையில் சிறப்பான அரசு மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டது. அவரது கல்லறையைச் சுற்றி மிக அழகான, கலை நயமிக்க, காண்போர் மனங்கவரும் பிரமாண்டமான மாளிகை ஒன்று அமைக்கப்பட்டது. ஆண்டுதோறும் நெப்போலியன் அடக்கமம்பண்ணப்பட்ட நாள் பிரெஞ்சு மக்களால் இன்றும் போற்றிக்கொண்டாடப்பட்டு வருகிறது.

## 3. வீயன்னா மாநாடு

## (CONGRESS OF VIENNA, 1815)

நெப்போலியன் லீப்சிக் போரில் தோற்கடிக்கப்பட்டு எல்பா தீவிற்கு அனுப்பட்ட பின்னர் ரஷ்யா, பிரஷ்யா ஆஸ்திரியா இங்கிலாந்து ஆகிய நாடுகள் 1814 மார்ச்

மாதம் சௌமாண்ட உடன்படிக்கை (Treaty of Chaumont) செய்து கொண்டு 1792-ம் வருடத்திற்கு முன்பு நிலவிய அரசியல் நிலை மற்றும் எல்லைக்கோடுகளை ஏற்றுக்கொள்ள முடிவு செய்தனர். அதன் பின் 1814 மே மாதம் செய்து கொண்ட பாரிசு உடன்படிக்கையின்படி பிரான்ஸ் நாட்டின் எல்லை 'புரட்சிப் போர்களுக்கு முன்பு நிலவியபடி அமைக்கப்பட வேண்டும்' என்றும், பொதுவான் ஒரு சமாதான ஏற்பாடு செய்வதற்காக மாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஐரோப்பிய மன்னர்களும் அரசியல் தலைவர்களும் குழம்பிப்போய் கிடக்கும் ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளைச் சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்று ஆஸ்திரியாவின் தலைநகரான வீயன்னாவில் 1814, அக்டோபரில் ஒரு மாநாட்டைக் கூட்டினர். புரட்சிப் போர்களினாலும் நெப்போலியனின் படையெடுப்புகளினாலும் ஐரோப்பிய நாடுகளின் எல்லைகள் வெகுவாகக் குழப்பிக் கிடந்தன. எனவே ஐரோப்பிய தேசப்படத்தை திருத்தி அமைக்க இம்மாநாடு முடிவு செய்தது.

ஆனால் நெப்போலியன் எல்பாத் தீவிலிருந்து தப்பிவிடவே இம்மாநாடு நிறுத்தி வைக்கப்பட்டது. வாட்டர்லூ போரில் மீண்டும் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட பிறகு மாநாடு தொடர்ந்து நடைபெற்றது. ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து போன்ற முக்கிய நாடுகள் இம்மாநாட்டடில் கலந்து கொண்டன. மன்னிக்கப்பட்டு முடியாட்சி மீண்டும் கொண்டுவரப்பட்ட பிரான்சும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டது குகுறிப்பிடத்தக்கது ஆகும். வீயன்னா ஏற்பாட்டு ஒப்பந்தம் 1815 ஜுன் மாதம் கையெழுத்திட்டது.

மாநாட்டில் பங்கு கொண்டவர்கள்:

1. முதலாம் பிரான்சிஸ் (Francis I)

இவர் ஆஸ்திரியாவின் பேரரசர் ஆவார். நெப்போலியனைத் தோற்கடித்ததில் ஆஸ்திரியா பெரும் பங்கு வகித்ததால்தான் அதன் தலைநகரான வீயன்னாவில் இம்மாநாடு கூட்டப்பட்டது. இவர்தான் மாநாட்டின் வரவேற்பாளர்.

2. சான்சலர் மெட்டர் நிக் (COUNT CLEMENS METTERNICH):

இவர் ஆஸ்திரிய நாட்டின் சான்சலர் ஆவார். வீயன்னா மாநாடு கூட்டப்படுவதற்கு இவரே காரணம். மாநாட்டிற்கு தலைமை தாங்கியவரும் இவரே. மிகச்சிறந்த அரசியல்வாதியும், ராஜ தந்திரமும் படைத்த இவர் "18-ம் நூற்றாண்டின் மாக்கியவல்லி"எனப்படுகிறார். மாநாட்டில் எழுந்த சிக்கலான பிரச்சனைகட்கு நல்ல முறையில் தீர்வு கண்டு ஆஸ்திரியாவின் பெருமையை உயர்த்தினார். புரட்சிக் கருத்துக்களும், தேசியமும் வளர்ச்சியடையாமலிருக்க தகுந்த நடவடிக்கைகளை எடுத்தார்.

3. **கேசல் ரீ பிரபு (LORD CASTLEREACH):**

இவர் இங்கிலாந்தின் பிரதிநிதி ஆவார். இங்கிலாந்தின் வெளிநாட்டு அமைச்சரான கேசல் ரீ முற்போக்கான கருத்துக்களையும், தெளிவான எண்ணங்களையும் கொண்டவர். வீயன்னா மாநாட்டில் பிரான்ஸ் நாட்டின் மீது இரக்கத் தன்மையுடன் நடந்து கொண்டார். பழிவாங்கும் வடவடிக்கையில் ஈடுபடவில்லை. இந்த மாநாட்டில் கலந்துகொண்ட மற்ற நாடுகளுடன் எல்லா விவகாரத்திலும் கொள்கையிலும் இவரால் ஒத்துப்போக முடியவில்லை.

4. **லெிராண்ட் (TALLERAND):**

அவர் பிரான்ஸ் நாட்டின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். இவர் தன்னுடைய நிர்வாகத் திறமையாலும் தெளிவான கருத்துக்களாலும் அனைத்து பிரதிநிதிகளையும் கவர்ந்துவிட்டார். இவருடைய ராஜதந்திரத்தினால்தான் பெருந்தன்மையுடனும் மதிப்புடனும் பிரான்ஸ் நடத்தப்பட்டது. இவருடைய பெரும் முயற்சியினால் தான் பிரான்ஸ் நாட்டிற்குச் சாதகமான சில அம்சங்கள் உடன்படிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இதனால் பிரெஞ்சு மக்களிடையே செல்வாக்கும், புகழும் பெற்றார் டெலிராண்ட்.

**5.சார் முதலாம் அலெக்ஸாந்தர் (TSAR ALEXANDER I) :**

இவர் ரஷ்ய நாட்டின் சார்பாகக் கலந்துகொண்டார். இவர் பெருந்தன்மை படைத்தவர் என்றாலும் முரண்பட்ட கொள்கைகளை உடையவர். இவரை மற்ற பிரதிநிதிகள் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதே போல் இவராலும் மற்ற பிரதிநிதிகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை. வீயன்னா எற்பாட்டின் முடிவுகளை செயல்படுத்த புனித உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தினார்.

6. **மூன்றாம் பிரடரிக் வில்லியம (FREDERICK WILLIAM III):**

இவர் பிரஷ்யாவின் அரசர் ஆவார். பிரஷ்யாவின் பிரதிநிதியாக வீயன்னா மாநாட்டில் கலந்து கொண்டார்.

**வீயன்னா மாநாட்டின் நோக்கங்கள்:**

1. **ஐரோப்பிய அரசியல் வரைபடத்தை மறுபடியும் வரைதல்:**

புரட்சிப் போர்களினாலும், நெப்போலியனின் ஆக்கிரமிப்பு போர்களினாலும் ஐரோப்பிய நாடுகளின் எல்லைகள் குழம்பிக் காணப்பட்டன. எண்ணற்ற அரசர்கள் நெப்போலியனால் பதவி இழந்தன. எனவே 1789-ம் வருட பிரெஞ்சுப்புரட்சிக்கு முன்பு இருந்தபடி நாடுகளின் எல்லைகளைத் திருத்தி அமைக்க நினைத்தனர். அதே சமயம் நெப்போலியனால் விரட்டப்பட்ட பழைய அரசவம்சங்களை மறுமடியும் அரியணையில் அமர்த்த வேண்டும் என்றம் நோக்கம் கொண்டது வீயன்னா மாநாடு.

**2.ஐரோப்பாவில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துதல்:**

எதிர்காலத்தில் பிரான்ஸ் நாட்டின் ஆக்கிரமிப்புகளைத் தடுத்து இனிமேல் ஐரோப்பாவில் போர்கள் எற்படாமல் தடுக்க வேண்டும். அதற்காக பிரான்ஸ் நாட்டின் வலிமையை ஒடுக்கி அதனைப் பலவீனப்படுத்த வேண்டும். எனவே பிரான்ஸ் நாட்டின் அண்டை நாடுகளான பிரஷ்யா, நெதர்லாந்து, சார்டீனியா ஆகிய நாடுகளைத் தடுத்து நிறுத்துவதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கம். அத்துடன் நெப்போலியனின் பரம்பரையினர் மீண்டும் பதிவிக்கு வரவிடாமல் தடுத்தலும் மாநாட்டின் நோக்கமாகும்.

**3. புரட்சிக்கருத்துக்கள் பரவவிடாமல் தடுத்தல்:**

எதிர்காலத்தில் 'இனி புரட்சியே வேண்டாம்' என்று அனைத்துப் பிரதிநிதிகளும் விரும்பினர். மக்களாட்சிக் கருத்துக்கள், தேசிய உணர்வு, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய தாராளக் கருத்துக்களை ஒடுக்குவதும் வீயன்னா மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

**4. ஐரோப்பாவில் சக்தி சமநிலையைப் பாதுகாத்தல்:**

பிரான்ஸ் பெரும் வலிமை பெற்றதால்தான் நெப்போலியன் அக்கிரமிப்பு செயல்களில் ஈடுபட்டார். எனவே எந்த ஐரோப்பிய நாடும் இன்னொரு பலமற்ற நாட்டைபயன்படுத்திக் கொண்டு அதிக பலம் பெற்றுவிடக்கூடாது என்று மாநாட்டினர் வருந்தினர். ஆகவே ஐரோப்பாவில் சக்திசமநிலையை எற்படுத்துவதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

**5. போரின் கொள்ளைப் பொருட்களைப் பங்கிடல்:**

பிரான்சும் அதனை ஆதரித்த நாடுகளும், அரசர்களும் கண்டிக்கப்பட வேண்டுமென்று மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் முடிவு செய்தனர். அதே நேரத்தில் நெப்போலியனை முறியடிக்க ஒத்துழைத்த எல்லா ஐரோப்பிய நாடுகட்கும் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றும் நினைத்தனர். இதற்காக பிரான்ஸ் நாடடின் பகுதிகளையும் பொருட்களையும் பங்கு போட்டுக்கொள்ள திட்டமிட்டனர்.

**6. குடியரசுகளை ஒழித்தல்:**

இந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் முடியரசர்கள். அவர்கள் ஐரோப்பாவில் மீண்டும் குடியரசுகள் ஏற்படுவதை விரும்பவில்லை.எனவே ஐரோப்பாவில் குடியரசுகளை ஒழித்தல் வீயன்னா மாநாட்டில் முக்கிய நோக்கமாகும்.

மேற்கண்ட நோக்கங்கள், கொள்கைகளின் அடிப்படையில் வீயன்னா மாநாட்டின் ஏற்பாடுகள் அமைக்கபட்டன.

**வீயன்னா மாநாட்டின் ஏற்பாடுகள் (சாதனைகள்):**

**1. பிரான்ஸ்:**

பிரான்ஸ் நாட்டின் எல்லைகள் 1790-ல் இருந்ததைப் போல் அமைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. வெற்றியடைந்த நாடுகளின் கூட்டுப் படைகள் சுமார் மூன்று ஆண்டு காலத்திற்கு பிரான்சில் நிறுத்தி வைக்கப்பட வேண்டும். பிரான்சு நாட்டில் குடியேற்றப் பகுதிகள் பெரும்பாலனவற்றை இங்கிலாந்து பிடுங்கி கொண்டது. பிரான்சைச் சுற்றியிருந்த நாடுகளின் ராணுவ பலம் அதிகரிக்கப்பட்டது. நெப்போலியனால் அமைக்கப்பட்ட ரைன் கூட்டமைப்பு கலைக்கப்பட்டு, 39 நாடுகளைக் கொண்ட ஜெர்மன் கூட்டமைப்பாக அது மாற்றப்பட்டது. இந்த கூட்டமைப்பு ஆஸ்திரியாவின் கண்காணிப்பில் வைக்கப்பட்டது. இவை தவிர பிற நாடுகளின் தலைநகர்களிலிருந்து எடுத்து வந்த கலைப் பொக்கிஙகளை பிரான்ஸ் அந்த நாடுகளிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

2. ஆஸ்திரியா:

இத்தாலியிலுள்ள லம்பார்டி, வெனிஷியா, இல்லீரியா ஆகிய பகுதிகள் ஆஸ்திரியாவுக்குக் கொடுக்கப்பட்டது. ஆஸ்திரிய அரச வம்சத்தைச் சார்ந்தவர்களே பார்மா, மாடனா, டஸ்கனி ஆகிய இத்தாலியப் பகுதிகளில் அரசர்களாக நியமிக்கப்பட்டனர். அனேகமாக வடஇத்தாலி முழுவதுமே ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இத்தாலி ஒரு ‘நிலவியல் சொல்லாக’(Geographical expression) மாற்றப்பட்டது.

3. ரஷ்யா:

பிரஷ்யாவிடமிருந்து போலந்துப் பகுதிகளும் ஸ்வீடனிடமிருந்து பின்லாந்தும் பிடுங்கப்பட்டு அவை ரஷ்யாவுக்கு கொடுக்கப்பட்டன. வார்சா பிரதேசமும் ரஷ்யாவுக்கு கொடுக்கப்பட்டது.

4. இங்கிலாந்து:

மத்தியதரைக்கடலில் மால்ட்டா, வடகடலில் ஹெலிகோலாந்து செயின்ட்லூசியா, தென்ஆப்பிரிக்காவில் கேப்காலனி, டொபாகோ டிரினிடாட், அயோனியின் தீவுகள், நன்னம்பிக்கைமுனை, ஹோண்டுராஸ், மலாக்கா, இலங்கை ஆகிய பகுதிகள் இங்கிலாந்துக்குக் கிடைத்தன.

5.பிரஷ்யா

பிரஷ்யாவுக்கு வெஸ்ட்பேலியா, சாக்சனி. மேற்கு பொமரேனியா ஆகிய பகுதிகள் கிடைத்தது. இதனால் பிரஷ்யாவின் செல்வமும், செல்வாக்கும் பெருகியது. மோஸஸ், டான்சிக் ஆகிய பகுதிகளையும் பிரஷ்யா தக்கவைத்தக் கொண்டது. ஜெர்மன் கூட்டமைப்பு நாடுகளில் பிரஷ்யாவின் வலிமை பெருகியது.

6. இத்தாலி:

வீயன்னா மாநாடு இத்தாலியைப் பிரித்து அதன் ஐக்கியத்தைக் குலைத்துப் போட்டது.ஆஸ்திரியாவின் செல்வாக்கு இத்தாலியில் வலுத்தது. போப்பாண்டவருக்குச் சொந்தமான பகுதிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு போப்பின் அரசு மீண்டும் உருவாக்கப்படடது. நேப்பிள்ஸ், சிசிலி ஆகியவை பூர்பான் அரசருக்குக் கொடுக்கப்பட்டது. பார்மா (Duchy of Parma) நெப்போலியனின் மனைவியான மரியலூசாவுக்குக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு இத்தாலியின் ஒற்றுமை வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

7. **ஸ்விட்சர்லாந்து:**

ஸ்விட்சர்லாந்து ஒரு சுதந்திரக் குடியரசாக எல்லோராலும் எற்றுக்கொள்ளப்பட்டது. அது தனித்து நிற்கும் உரிமை பெற்றது. அதற்கு மேலும் மூன்று கான்டன்கள் கொடுக்கப்பட்டது.

8. **பெல்ஜியம், ஹாலந்து:**

ஹாலந்தும், பெல்ஜியமும் இணைக்கப்பட்டு நெதர்லாந்து என்ற தனிநாடு அமைக்கப்பட்டது. ஹாலந்து மக்கள் புரட்டஸ் தாந்து மதத்தினர். பெல்ஜியம் மக்கள் கத்தோலிக்கர்கள். இவர்களிடையே ஒற்றுமையும், நட்பையும் ஏற்படுத்துவது கடினமான காரியம் என்று தெரிந்தும் இந்த ஏற்பாட்டை வீயன்னா மாநாடு செய்தது.

7. **நார்வே, ஸ்வீடன்:**

டென்மார்க் நெப்போலியனுக்கு உதவி செய்ததால் அது தண்டிக்கப்பட்டது. அதனிடமிருந்து நார்வே பிடுங்கப்பட்டு ஸ்வீடன் நாட்டுடன் இணைக்கப்பட்டது. இச்செயலினால் இரண்டு நாட்டு மக்களும் மன அமைதி இழந்தனர். இந்த இணைப்பை அவர்கள் விரும்பவில்லை.

8. **ஸ்பெயின், போர்ச்சுக்கல்:**

இவ்விரண்டு நாடுகளிலும் முடியாட்சி மீட்கப்பட்டது. பழைய பூர்பான் அரசவம்சம் அங்கு அரியணையில் அமர்த்தப்பட்டது.

9. **ஜெர்மனி:**

ஜெர்மனி 39 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு அவைகள் புதிதாக நிறுவப்பட்ட அரசியல் ஸ்தாபனமான 'ஜெர்மனிய நாடுகளின் கூட்டமைப்பில்' அங்கத்தினர்கள் ஆகவேண்டும் என்ற கேட்டுக்கொள்ளப்பட்டன. இந்த 39 மாநிலங்களின் பிரதிநிதிகள் சபைக்கு ஆஸ்திரியப் பேரரசர் தலைவராக நியமிக்கப்பட்டடார்.

**வீயன்னா மாநாட்டின் தோல்விக்கான காரணங்கள் (அல்லது) மதிப்பீடு:**

வீயன்னா மாநாட்டின் ஏற்பாடுகள் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு ஐரோப்பாவில் அமைதியை ஏற்படுத்தியது. ஆனாலும் பல முக்கியப் பிரச்சனைகட்கு அமைதி காணத் தவறி விட்டது. இம்மாநாட்டின் மூலம் "ஒரு பொதுப் பிரச்சனையைத்

தீர்ப்பதற்கு ஒன்று சேர்வது" என்ற எண்ணம் முதல் தடவையாக நடைமுறைக்கு வந்தது. இதுவே பிற்காலத்தில் சர்வதேச சங்கம், ஐ.நா.சபை போன்ற உலக நிறுவனங்கள் தோன்றக் காரணமானது. ஆனால் தேசிய உணர்வு, நாட்டுரிமை அகியவற்றை மறந்து ஏற்பாடுகள் செய்யப்பட்டதால் வீயன்னா மாநாட்டின் முடிவுகள் அனைத்தும் விரைவில் அழிந்து போயின.

1. **உரியவர்கட்கு வழங்கும் உரிமை** (Principle of legitimacty)

வீயன்னா மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் 'உரியவர்கட்கு வழங்கும் உரிமை' கோட்பாட்டின் அடிப்படையில் செயல்பட்டனர். ஆனால் இந்தக் கொள்கை காற்றில் பறக்கவிடப்பட்டது. ஏனெனில் நெப்போலியனால் அரியணை இழந்த அனைவருக்கும் அவர்களுடைய அரசு வழங்கப்படவில்லை. மேலும் நியமிக்கப்பட்ட அரசர்களை மக்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளவும் இல்லை.

2. **பெரிய நாடுகளின் பேராசை:**

இங்கிலாந்து, ரஷ்யா, ஆஸ்திரியா. பிரஷ்யா போன்ற பெரிய நாடுகள் தங்கள் சயநலன்களிலேயே அக்கறை எடுத்துக்கொண்டன. இவ்வல்லரசுகள் பழைய பகுதிகளைத் தங்களிடம் வைத்துக் கொண்டதுடன், நல்ல பல பகுதிகளை புதிதாகப் பெற்றுக்கொண்டன. பலவீனமான சிறிய நாடுகளைக் கவனிக்காமல் விட்டுவிட்டனர். சிறிய நாடுகளின் நலன்கள் பறக்கணிக்கப்பட்டன.

3. **தேசியத் தன்மை அவமதிக்கபட்டது:**

நாடுகளின் தேசிய உணர்ச்சியை மதிக்காமல் வீயன்னா மாநாட்டில் பல முடிவுகள் எடுக்கப்பட்டன. மக்களின் சம்மதத்தைப் பெறாமலும், நாடுகளின் விருப்பங்கட்கெதிராகவும் நாடுகளைப் பங்கு போட்டுக் கொண்டனர். (உ.ம்) இத்தாலி ஹாலந்து, பெல்ஜியம். இவ்வாறு தேசிய உணர்வு, ஜனநாயகம் ஆகிய தாராளக் கொள்கைகள் நசுக்கப்பட்டன. சிறிய நாடுகளின் உணர்வுகள் கண்டு கொள்ளப்படவே இல்லை.

4. **பழக்கவழக்கங்கள், மதம், மக்களின் உணர்ச்சிகள் கவனிக்கப்படவில்லை:**

வீயன்னா மாநாடு கத்தோலிக்க பெல்ஜியத்தை புரட்டஸ்தாா்து ஹாலந்துடன் இணைத்தது. இந்த இரண்டுநாட்டு மக்களிடையே பொருளாதாரம், பழக்கவழக்கம், மொழி, கலாச்சாரம் அகியவற்றில் ஒற்றுமை கிடையாது. 1830-ல் பெல்ஜியத்தில் புரட்சி எற்பட்டு அது விடுதலை அடைந்தது. 1905-ல் நார்வே விடுதலை அடைந்தது. ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட பின்லாந்து 1917-ல் விடுதலை அடைந்தது. இத்தாலியிலும், ஜெர்மனியிலும் ஒற்றுமை இயக்கங்கள் தோன்றின.

5. **சுதந்திரம், ஜனநாயகம் அகிய கொள்கைகள் நசுக்கப்பட்டன:**

வீயன்னா ஏற்பாட்டை உருவாக்கியவர்கள் எதேச்சதிகாரிகள், பிற்போக்குவாதிகள் ஆவர். சுதந்திரம், ஜனநாயகம் அகிய சக்திகளின் ஆற்றலை உணராதவர்கள். எனவே நிரந்தரமாக அவற்றை நசுக்க முடியவில்லை. 1830, 1848-ம் ஆண்டுகளில் பிரான்சிலும், மற்ற நாடுகளிலும் புரட்சி எற்பட்டு வீயன்னா மாநாட்டின் ஏற்பாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக தோல்வியடைந்தன.

**6. பகற் கொள்ளை:**

வீயன்னா மாநாட்டின் தோல்விக்கு பெரிய நான்கு நாடுகளின் பேராசையே காரணம். தோற்றவர்களது செல்வத்தையும், பிதேசங்களையும் தங்களுக்குள் பங்குபோட்டுக் கொண்டனர். வலிமையற்ற சிறுநாடுகளை மனம் போல் துண்டாடினர். போலந்து பங்குபோடப்பட்டது பகற்கொள்ளைக்கு ஒப்பாகும். எனவே வீயன்னா ஏற்பாடுகள் அதிககாலம் நிலைத்து நிற்க முடியவில்லை.

**மதிப்பீடு:**

இவ்வாறு வீயன்னா மாநாடு ஐரோப்பாவில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக புரட்சிகளுக்கும், பூசல்கட்கும் வழிவகுத்தது. நெடுநாட்களுக்கு இந்த ஏற்பாடுகள் நிலைத்து நிற்க முடியவில்லை. அப்போது மக்கள் மனதைக் கவர்ந்திருந்த ஜனநாயகம், தேசியம் ஆகிய கொள்கைகளை இம்மாநாடு புறக்கணித்ததால் மாநாடு தோல்வியடைந்தது. முக்கியமாக ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து ஆகிய நாட்கள் தங்கள் ஆசைகளை நிறைவேற்றவே இம்மாநாட்டைக் கூடட்டினர். எனவேதான் மாநாடு தோல்வியடைந்தது.

ஆனால் பொதுப் பிரச்சனைகளை “கூடிப்பேசி முடிவு எடுக்கும் முறை” ஆரம்பமானதுதான் இம்மாநாட்டினால் கிடைத்த பெரிய நன்மையாகும். அத்துடன் போர்காலத்தில் தன் உடமைகளை இழந்த ஒவ்வொரு தனிநபருக்கும் அவரவர் இழந்த உடமைகள் அனைத்தும் திரும்பக் கொடுக்கப்பட்டன. மனித நாகரிகத்திற்கு ஊறுவிளைவித்த அடிமை வியாபார முறையை வீயன்னா ஏற்பாட்டின் மூலமே பல நாடுகள் முக்கியமாக, பிரான்ஸ், ஸ்பெயின், ஹாலந்து, ஸ்வீடன் போன்ற நாடுகள் அறவே கைவிட்டன. சுதந்திரமான பன்னாட்டு நதிப்போக்குவரத்து மற்றும் மற்றும் பன்னாட்டுச் சட்டம் பற்றியும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. வீயன்னா ஏற்பாட்டின் மூலம் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே 1853-ம் வருடம் வரை அமைதி நிலை நாட்டப்பட்டது. பன்னாட்டு மாநாடுகள் என்ற சம்பிரதாயத்தை அரசியலில் ஏற்படுத்தியது வீயன்னா மாநாட்டின் சிறப்பான அம்சமாகக் கருதலாம். வீயன்னா மாநாட்டைப் பற்றி ஊ.னு. ர்நணநெ என்ற வரலாற்றாசிரியர் கூறுவதாவது: “One of the most important diplomatic gatherings in the history of Europe.”

## 3. புனித உடன்பாடு (Holy Alliance)

ரஷ்யாவின் சார் முதலாம் அலெக்சாந்தர் (1801-1825) 1815-ல் ஆரம்பித்த தூய இயக்கமே 'புனித உடன்பாடாகும்.' இவர் சிறந்த கிறிஸ்தவ மதப்பற்று மிக்கவர். வீயன்னா ஏற்பாட்டை உறுதிப்படுத்தவும், ஐரோப்பிய அரசர்களுக்கிடையே சகோதரத்துவத்தின் அடிப்படையில் ஒற்றுமையை எற்படுத்தவும். கிறிஸ்தவ மதத்தின் புனிதக் கோட்பாடுகளான 'நீதி கிறிஸ்தவம், கருணை, அமைதி'(Justice, Christianity, Charity, Peace) அகியவற்றின் அடிப்படையில் அரசியல்கொள்கைகள் செயல்படவும் ஆரம்பிக்கப்பட்ட இயக்கமே 'புனித உடன்பாடாகும்.'

**புனித உடன்பாட்டின் வரலாற்றுப் பின்னணி:**

இந்த புனித உடன்பாட்டில் காணப்பட்ட கருத்துக்கள் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே ஐரோப்பாவில் தோன்றியது. பிரெஞ்சு அரசர் நான்காம் ஹென்றி (1589-1610) எலிசபெத் அரசியின் அரசியல் கொள்கையின் தாக்கத்தினால் மாபெரும்திட்டம் (Grand Design) என்ற அமைப்பை அமைத்தார். பல்வேறு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட 'பொதுக்குழு'(General Council) ஒன்று அமைக்கப்பட்டது. 'ஐரோப்பாவில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்து அமைதியை ஏற்படுத்துவதே' இதன் நோக்கமாகும். இதுபற்றி நான்காம் ஹென்றியின் அமைச்சரும் அவரது நெருங்கிய நண்பருமான சல்லி (Sully) கூறியதாவது. "ஐரோப்பியாவில் அடிக்கடி ஏற்படும் ரத்தக்களரியை நிரந்தமாக தடுப்பதும், ஐரோப்பிய அரசர்களை சகோதரத்துவத்தின் அடிப்படையில் ஒற்றுமையாக வாழச் செய்வதும் மாபெரும் திட்டத்தின் நோக்கமாகும்" என்றார். ஆனால் 1610-ல் நான்காம் ஹென்றி இறந்து விடவே இத்திட்டம் முழுமையடையவும் இல்லை. செயல்படுத்தப்படவும் இல்லை.

இதன் பிறகு ஒரு நூற்றாண்டு கழித்து 1713-ல் மீண்டும் இந்த மாதிரியான திட்டம் ஒன்று யுடிடிந னந ளுவ.நைசசந என்பவரால் ஐரோப்பியக் கழகம் (European league) என்ற பெயரில் அமைக்கப்பட்டது. இந்த ஐரோப்பியக் குழுவில் சேர்ந்த உறுப்பினர்கள் "ஒருவருக்கொருவர் போர்புரியும் உரிமையை விட்டுவிடவேண்டும். தங்களுக்குள் எழும் பிரச்சனைகளை 'நிரந்தர காங்கிரஸ்'(Permanent Congress) என்ற இந்த அமைப்பின் மூலமே தீர்த்துக்கொள்ள வேண்டும்." இவ்வாறு 'ஐரோப்பிய நாடுகள் ஒனறுபட வேண்டும்' என்ற எண்ணம் ஏற்கனவே தோன்றியிருந்தது. அடுத்த நூற்றாண்டில், அதாவது 1815-ல் இதே அடிப்படையில் தான் ரஷ்யாவின் சார் முதலாம் அலெக்சாந்தர் 'புனித உடன்பாட்டைத்' தோற்றவித்தார்.

**புனித உடன்பாட்டின் தோற்றம்:**

ரஷ்யா சார் முதலாம் அலெக்சாந்தர் தனது ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில் தாரளக் கருத்துக்கள் மீது அதிக நாட்டம் கொண்டிருந்தார். தன் ஆட்சிக்குட்பட்ட போலந்தில் ஒரு அரசியலமைப்பை உருவாக்க நினைத்தார். ரஷ்யாவில் கூட ஒரு புதிய அரசிலமைப்பை உருவாக்க நினைத்தார். ஆனால் இந்த தாராளக் கருத்துக்கள் அவரிடம் ஆழமாக வேரூன்றவில்லை. மேலோட்டமாகவே இருந்தது. ‘ஐரோப்பியக் கூட்டமைப்பு’(European Confederation) என்ற கருத்து இவரை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. நெப்போலியனுக்கெதிராக நேசப்படைகள் போர்புரிந்து கொண்டிருந்தபோதே சார் அலெக்சாந்தர் இங்கிலாந்திடம் ‘ஒரு பன்னாட்டு ஒழுங்கை ஏற்படுத்த வேண்டும். பன்னாட்டு ஒழுங்கை ஏற்படுத்த வெண்டுமானால் ஒவ்வொரு நாடும் உள்நாட்டில் ஒழுங்கை நிலைநாட்டவேண்டும்’ என்று கூறினார்.

இதன் அடிப்படையில் இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் வில்லியம் பிட்டுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி “ஐரோப்பாவில் நெப்போலியனுக்கெதிரான போர் முடிந்து அமைதி ஏற்பட்டபின், பொதுவான உலக அமைதிக்கு பங்கம் விளைவிப்பனவற்றைத் தடுக்க ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டும்” என்று முடிவெடுத்தனர். இதில் இங்கிலாந்தின் நோக்கம் ‘பிரான்ஸ் மீண்டும் ஐரோப்பிய அமைதியைக் கெடுப்பதற்கு அனுமதிக்காமல் ஐரோப்பா முழுவதற்குமான ஒரு ஒழுங்கை ஏற்படுத்த வேண்டும்’ என்பதுதான். ஆனால் அலெக்சாந்தரோ நான்காம் ஹென்றியின் ‘மாபெரும் திட்டத்தின்’ அடிப்படையிலும் இந்த புதிய ஒழுங்கு அமைய வேண்டும் என்று விரும்பினார். எனவே 1815 செப்படம்பர் 26-ம் தேதி ‘புனித உடன்பாடு’ உருவாக்கப்படுவதாக அறிவித்தார் சார் முதலாம் அலெக்சாந்தர்.

**புனித உடன்பாட்டின் முக்கிய அம்சங்கள்:**

1. கிறிஸ்தவ மதத்தின் புனிதக் கோட்பாட்டுகளான நீதி, கிறிஸ்தவம், கருணை, அமைதி ஆகியவற்றின் அடிப்படையில் அரசியல் கொள்கைகள் செயல்படவும், ராஜதந்திர நடவடிக்கைகள் நடைபெறவும்.

2. ஐரோப்பியக் கிறிஸ்தவ மன்னர்கள் அனைவரும் கிறிஸ்தவக் குடும்பத்தில் சகோதரர்கள் ஆவர். தங்களுக்குக் கடவுளால் தான் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு தங்கள் மதக்கோட்பாடுகளுக்கு உட்பட்டே ஆட்சி புரிய வேண்டும்.

3. தங்கள் நாட்டின் மக்களை பிள்ளைகளாகவும், தங்களை அவர்களின் அன்பான தந்தையுமாக பாவித்து நடந்து கொள்ள வேண்டும்.

4. விடுதலை இயக்கங்களே பொதுவாக போர்கள் எற்பட முக்கியக் காரணம். எனவே அவை கிறிஸ்தவக் கொள்கைகளுக்கு புறம்பானவை. ஆகவே விடுதலை இயக்கங்கள் ஒழிக்கப்படவேண்டும்.

இவ்வாறு சமயச் சார்புடன் அரசியல் இணைந்து செயல்படுதலின் அவசியத்தின் அடிப்படையில் புனித உடன்பாட்டைத் தோற்றுவித்தார் சார் அலெக்சாந்தர் பன்னாட்டு ராஜதந்திரத்தில் ஒழுக்கத்தையும், ஐரோப்பாவில் அரசியல் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் ஒரு அமைப்பாகவே இதனை நாம் கருதலாம். ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நாடுகள் இப்புனித உடன்பாட்டில் சேர்ந்தன. ஆனால் இங்கிலாந்தோ ஐரோப்பிய சுதந்திரத்திற்கு மறைவான ஆபத்து இதில் உள்ளது. என்ற சந்தேகம் கொண்டு புனித உடன் பாட்டில் கையெழுத்திட மறுத்துவிட்டது.

சார் அலக்சாந்தரின் புனித உடன்பாடு இறந்தே பிறந்த குழந்தை (Still born) போன்றுதான் இருந்தது. இதற்கு யாருமே முக்கியத்துவம் தரவில்லை. எந்த நாடும் முழுமனதுடன் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் கொள்கைகள் ஒரு பெரிதும் செயல்படுத்தப்படவில்லை. ஆரம்பத்திலிருந்தே இந்த உடன்பாடு எல்லோராலும் தவறாகவே புரிந்துகொள்ளப்பட்டது. அதன் நோக்கங்களும் நடைமுறை முக்கியத்துவமும் தவறாகவே விளக்கமளிக்கப்பட்டன. பிற்போக்குவாதத்தின் அடையாளம் என்றும், விடுதலை எண்ணங்களுக்கு விரோதமாகச் செய்யப்பட்ட சதி என்றும் மக்களுக்கு எதிரான மன்னர்களின் கூட்டு என்றும் (a symbol of Reaction, a conspiracy against Liberalism and a league of princess against their people) இந்த உடன்பாடு கண்டிக்கப்பட்டது.

மெட்டர் நிக் (Maternich) என்பவர் இதனை தேவையற்ற வார்த்தைகளின் பத்திரமே (Verbiage) என்றும், a Found sound nothing என்றும் a moral demonstration" என்றும் வர்ணித்தார். டெலிராண்ட் என்பவர் இதனை a ludicrous Contract என்று குறை கூறினார்.

காசில்ரீ (Castiereagh) என்பவர் A piece of Sublime mysticism and nonsense என்று புனித உடன்பாட்டைக் குறை கூறினார்.

லிப்சன் (Lipson) என்பவர் "The Holy alliance was merely a Philanthropic aspiration clothed in a religious garb' என்று மதிப்பிடுகிறார்.

ஜார்ஜ் கானிங் (George Canning) என்பவர் 'It was only the overflow of the pietistic feeling of the Emperor Alexander and the application of Christian principles to politics" என்று கூறுகிறார்.

இவ்வாறு சார் முதலாம் அலெக்சாந்தரால் தோற்றுவிக்கப்பட்ட புனித உடன்பாடு எல்லோராலும் கண்டிக்கப்பட்டது. இது ஒரு புனிதமானதாகவோ, உடன்பாடாகவோ கருதப்படவில்லை. 1825-டிசம்பர் மாதம் அலெக்சாந்தர் இறந்தவுடன் இந்த உடன்பாடு மறைந்து போனது.

## 4. ஐரோப்பியக் கூட்டமைப்பு
## (Concert of Europe)

நெப்போலியன் போனபார்ட் வாட்டர்லூ போரில் தோற்கடிக்கப்பட்ட பிறகு ஐரோப்பிய மன்னர்களும், அரசியல்வாதிகளும் ஐரோப்பாவில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்தவும், எதிர்காலப் போர்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும் முயற்சி எடுத்தனர். 1815-ல் ஆஸ்திரியா நாட்டின் தலைநகரான வீயன்னாவில் கூடி முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது. அந்த முடிவுகளையும், ஏற்பாடுகளையும் எல்லா ஐரோப்பிய நாடுகளும் கடைப்பிடித்து செயல்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு வீயன்னா ஏற்பாடுகளைச் செயல்படுத்தவும், செயல்படுத்தும் போது ஏற்படும் பிரச்சனைகளை அவ்வப்போது கூடி தீர்க்கவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பிற்கு ஐரோப்பியக் கூட்டமைப்பு என்று பெயர்.

இக்கூட்டமைப்பு சுதந்திர வேட்கைக்கு எதிரான ஓர் அமைப்பாகும். இதன் கொள்கைளும், நடவடிக்கைளும் குடியாட்சிக் கருத்துக்களுக்கும் தேசியத்திற்கும் எதிரானவை. எனவேதான் சுமார் எட்டு ஆண்டுகளுக்குள் இக்கூட்டமைப்பு வீழ்ச்சியடைந்தது. ஆனாலும் உலக நிறுவனம் ஒன்று அமைக்கப்பட ஆரம்பிக்கப்பட்ட முதல் முயற்சியாக விளங்கியது என்று கூறலாம்.

**ஐரோப்பியக் கூட்டமைப்பின் நோக்கங்கள்:**

1. ஐரோப்பாவில் புரட்சிப்போர்கள் ஏற்படாதவாறு தடுத்து அமைதியை நிலைநாட்டுதல்.

2. புரட்சி இயக்கங்களையும், விடுதலை எண்ணங்களையும் வளர விடாமல் தடுத்தல்.

3. குடியரசுகளை ஒழித்தல்.

4. வீயன்னா மாநாட்டின் ஏற்பாடுகளை உறுதிப்படுத்தி, அவைகளைச் செயல்படுத்துதல்,

5. கருத்து வேறுபாடுகளை தங்களுக்குள் அமைதியான முறையில் பேசி தீர்த்துக் கொள்ளுதல்.

6. ஐரோப்பாவில் சக்தி சமநிலையைப் பாதுகாத்தல்.

2. நால்வர் உடன்பாடு (**Quadruple alliance**: 1815, **Nov**)

மெட்டர்னிக்கின் முயற்சியாலும், ராஜதந்திரத்தாலும் ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் சேர்ந்து நால்வர் உடன்பாட்டை அமைத்தன. ஐரோப்பாவில் அமைதியை ஏற்படுத்துவதும், வீயன்னா எற்பாட்டை செயல்படுத்திக் காப்பாற்றுவதும், போனபார்ட் வம்ச வழியை மீண்டும் ஐரோப்பாவில் தலைதூக்க விடாமல் பார்த்துக் கொள்வது ஆகியவையே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது. முக்கிய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அடிக்கடி கலந்து பேசி முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்தனர். 1818-ல் இந்த உடன்பாட்டில் பிரான்ஸ் சேர்ந்த போது ஐவர் உடன்பாடாக மாறியது.

ஐரோப்பியக் கூட்டமைப்பின் செயல்பாடுகள்:

தங்கள் கொள்கைகளைச் செயல்படுத்துவதற்கு ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் பல மாநாடுகளைக் கூட்டின. ஏ-லா-சாப்பேல் என்னுமிடத்தில் மாநாடு கூட்டப்பட்டது.

1. ஏ-லா-சாப்பேல் மாநாடு (**Congress of Aix-la- Chappele**): 1818

இந்த மாநாடு மெட்டர்னிக்கின் பெரும் முயற்சியால் கூட்டப்பட்டது. முதலில் பிரான்சு நாடு முடியாட்சியை அமைதியான முறையில் ஏற்றுக் கொண்டதால் அந்த நாட்டையும் ஐரோப்பிய கூட்டமைப்பில் சேஷர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் பல பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டன. இம்மாநாடு ஐரோப்பிய நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சனைகளில் தலையிட்டு புரட்சி இயக்கங்களையும், முன்னேற்றக் கருத்துக்களையும் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட விரும்பியது. அனால் இதனால் இங்கிலாந்து எதிர்த்தது. உதாரணமாக ஜெர்மனியில் ஏற்பட்ட கிளர்ச்சியை வன்முறையில் மெட்டர்னிக் அடங்கியதால், இங்கிலாந்து வெளிப்படையாகவே தனது எதிர்ப்பை காண்பித்தது. முதல் மாநாட்டிலேயே உறுப்பினர் நாடுகளுக்கிடையே. மோதல்களும் கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டன.

### 2. டிராப்போ மாநாடு (**Congress of Troppau**):

1820-ம் ஆண்டு ஐரோப்பாவில் மீண்டும் புரட்சி இயக்கங்கள் தோன்றின. முக்கியமாக ஸ்பெயின் நாட்டிலும், இத்தாலியிலும் நேப்பிள்சிலும் மக்கள் உரிமைகள் நிறைந்த அரசியலைமைப்பைக் கோரினர். ஸ்பானிய அரியணையில் அமர்த்தப்பட்ட ஏழாம் பெர்டினாண்டை எதிர்த்து கர்னல்ரீகோ என்பவரின் தலைமையில் கேடிஸ் நகரில் பெரும் கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டது. இது போன்ற கிளர்ச்சிகள் ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டிலுள்ள இத்தாலிய பகுதிகளிலும் பரவிவிடும் என்று பயந்த மெட்டர்னிக் 1820-ல் டிராப்போ என்னுமிடத்தில் மாநாடு ஒன்றைக் கூட்டினார். இம்மாநாட்டில், ஸ்பெயினில் ஏற்பட்ட புரட்சியை படை பலத்துடன் அடக்க வேண்டும் என்று சார் அலெக்ஸாந்தர் விரும்பினார். ஆனால் மேற்கு ஐரோப்பாவில் ரஷ்ய தலையீட்டை இங்கிலாந்து விரும்பவில்லை. இந்த மாநாட்டில் எங்கெல்லாம் புரட்சி வெடிக்கின்றதோ அங்கெல்லாம் ராணுவத்தை அனுப்பி அதை நசுக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தை இங்கிலாந்து கடுமையாக எதிர்த்தது. எனவே எந்த முடிவும் எடுக்கப்படாமல் இம்மாநாடு முடிந்தது.

### 3. லேபாக் மாநாடு (**Congress of Laibach**) 1821

1821-ம் ஆண்டு லேபாக் என்னுடமிடத்தில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாடு கூட்டப்பட்ட நேரத்தில் கிரிஸ், ஸ்பெயின் இத்தாலி ஆகிய நாடுகளில் புரட்சி இயக்கங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இம்மாநாட்டின் தீர்மானத்தின்படி ஆஸ்திரியப் படைகள் நேப்பிள்ஸில் நேரடியாகத் தலையிட்டு புரட்சியை அடக்கி எதேச்சதிகாரத்தை நிலை நிறுத்தின. பியட்மாண்டில் தோன்றிய புரட்சி ஒடுக்கப்பட்டது. ஆனால் இந்த பிற்போக்கான நடவடிக்கைகளை இங்கிலாந்து வன்மையாக் கண்டித்தது. மேலும் ரஷ்யாவுக்கும் ஆஸ்திரிவிற்கும் இடையேயும் முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்தன.

### 4. வெரோனா மாநாடு (**Congress of Verona**): 1822

1822-ம் ஆண்டு வெரொனாவில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அப்போது துருக்கியின் கீழ் இருந்த கிரிஸில் புரட்சி வெடித்தது. ஸ்பெயினிலும் மீண்டும் புரட்சி ஏற்பட்டு நிலைமை சீர்கேடு அடைந்திருந்து. எனவே ஸ்பெயின், கிரிஸ், ஆகிய நாடுகளிலுள்ள பிரச்சனைகளை இம்மாநாடு விவாதித்தது. மெட்டர்னிக் இத்தாலிய அரசியலில் தலையிட்டது போல ரஷ்ய சார் அலெக்ஸாந்தர் பாலகன் அரசியலில் தலையிட நினைத்தார். இதனை மெட்டர்னிக் விரும்பவில்லை. மெட்டர்னிக் மிகத்திறமையுடன் ஸ்பானியப் பிரச்சனைகளுக்கே மாநாட்டில் முதலிடம் அளிக்க முடிவு செய்தார்.

ஸ்பானிய புரட்சி இயக்கங்களை நசுக்க ஒரு பிரெஞ்சுப் படையை அனுப்ப முடிவு செய்யப்பட்டது. இந்த அனுமதியை எதிர்த்து, மாநாட்டை விட்டே வெளியேறியது இங்கிலாந்து. பின்னர் ஐரோப்பியக் கூட்டமைப்பை விட்டேவிலகியது. மாநாட்டின் முடிவின்படி 1823-ல் பிரெஞ்சுப்படைகள் ஸ்பெயின் நாட்டினுள் நுழைந்து புரட்சி இயக்கத்தை நசுக்கியது. கர்னல்ரீகோ கொல்லப்பட்டார். வெரோனா மாநாட்டுடன் ஐரோப்பியக் கூட்டமைப்பு கலைந்து விட்டது.

**ஐரோப்பியக் கூட்டமைப்பு தோல்வியடைக் காரணங்கள்:**

1. ஒற்றுமை இல்லை: ஐரோப்பியக் கூட்டமைப்பின் உறுப்பினர் நாடுகளான ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கிடையே ஒற்றுமை இல்லை. இங்கிலாந்து ஜனநாயக இயக்கங்களுக்கு ஆதரவு அளித்தது. ஆனால் மற்ற மூன்று நாடுகள் எதேச்சதிகாரத்தை ஆதரித்தன. இவ்வாறு உறுப்பு நாடுகட்கிடையே தோன்றிய அடிப்படை கருத்து முரண்பாடுகள் இக்கூட்டமைப்பு தோல்வியடைய முக்கியக் காரணமாகும்.

2. பிற நாட்டு உள் விவகாரங்களில் தலையிடுவதையும், சிறிய நாடுகளின் நலன்கள் பாதிக்கப்படுவதையும் இங்கிலாந்து ஏற்கவில்லை. ஒவ்வொரு மாநாட்டிலும் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

3. இங்கிலாந்தைத் தவிர, மற்ற நாடுகள் பிற்போக்குவாதத்தில் அடிப்படையில் இயங்கின. முன்னேற்றக் கருத்துகளுக்கு தடையாக விளங்கின. விடுதலை இயக்கங்களை நசுக்கி வந்தன.

4. ஐரோப்பிய மக்களின் தேசிய உணர்வுகளையும், ஜனநாயக இயக்கங்களையும் நசுக்கியதால் இக்கூட்டமைப்பை மக்கள் வெறுத்தன.

5. விடுதலை இயக்கங்களை ஐரோப்பாவை விட்டு ஒழிப்பதற்குத் திட்டமிட்டு செயலபட்டு வந்தது ஐரோப்பிய கூட்டமைப்பு.

6. ஐரோப்பியக் கூட்டமைப்பில் உள்ள வல்லரசு நாடுகள் சிறிய நாடுகள் அனைத்தும் தங்களுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று விரும்பின. எனவே சிறிய நாடுகள் வல்லரசுகளின் எதேச்சதிகாரப்போக்கை எதிர்த்தன.

7. 1823-ல் அமெரிக்க ஜனாதிபதி மன்றோவினால் வெளியிடப்பட்ட மன்றோ கொள்கை ஐரோப்பிய நாடுகளை அமெரிக்க விவகாரங்களில் தலையிடுவதைத் தடுத்து நிறுத்தியது. இதன்படி ஸ்பானிய அமெரிக்கக் குடியேற்றங்களின் விடுதலையை அமெரிக்காவும் இங்கிலாந்தும் வெளிப்படையாக ஆதரித்தன.

இவ்வாறு ஐரோப்பியக் கூட்டமைப்பு, ஐரோப்பா முழுவதிலுமுள்ள மக்களிடையே எழுந்த விடுதலை உணர்ச்சியையும் தேசிய உணர்ச்சியையும் தடைசெய்ய முயற்சித்தது. அதற்காகப் பல நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டாலும் இறுதியில்

தோல்வியே ஏற்பட்டது. இதற்கு அந்த அமைப்பிலிருந்த நாடுகளுக்கிடையே காணப்பட்ட கருத்து வேறுபாடுகளே காரணம்.ஆனால் அனைவரும் ஒன்று கூடி கருத்துப் பரிமாற்றம் செய்வதிலும், பன்னாட்டு ஒற்றுமை உணர்வை ஏற்படுத்துவதிலும் ஐரோப்பியக் கூட்டமைப்பு வெற்றியடைந்தது. அதனை நடைமுறையில் செயல்படுத்தியும் காட்டியது.

## 5. மெட்டர்னிக் சகாப்தம்
## (ERA OF METTERNICH 1815-1848)

1815-ல் வீயன்னா மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய ஆஸ்திரிய நாட்டின் சான்சலர் மெட்டர்னிக் அதிலிருந்து 1848-ம் ஆண்டு வரை ஐரோப்பிய அரசியலில் தலைமை இடம் வகித்தார். அப்பொழுது இவருடைய ஆதிக்கமே ஐரோப்பாவில் மேலோங்கியிருந்ததால் 1815 முதல் 1848 வரை உள்ள காலத்தை மெட்டர்னிக் சகாப்தம் என்று அழைக்கலாம்.

1773, மே 15-ல் பிறந்த மெட்டர்னிக் இளமையிலேயே அரச சேவையில் புகுந்தார். தன்னுடைய தந்தையின் இராஜதந்திர அனுபவங்களை முழுமையாகப் பெற்றார். 1801-முதல் பெரிலன், பாரிசு, டிரஸ்டின் ஆகிய நகரங்களில் ஆஸ்திரிய இராஜதந்திரப் பணியில் அமர்ந்தார். தன்னுடைய அரசியல் தந்திரம், அனுபவம், திறமை இவற்றால் படிப்படியாக முன்னேறினார். இறுதியில் 1809, மே மாதம் தன்னுடைய 36-ம் வயதில் ஆஸ்திரியாவின் சான்சலாரகப் பொறுப்பேற்று 1848-ம் ஆண்டு வரை நீடித்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆஸ்திரியா உருவாக்கிய மாபெரும் ராஜதந்திரியே மெட்டர்னிக் ஆவார்.

**மெட்டர்னிக்கின் கொள்கைகள்:**

**1. விடுதலை மற்றும் புரட்சி இயக்கங்கட்கு எதிர்ப்பு:**

புரட்சி நடந்த காலத்தில் பயங்கர ஆட்சியின் மூலம் பிரான்சில் நடை பெற்ற மனிதத் தன்மையற்ற நிகழ்சிகளைக் கண்டபின், மெட்டர்னிக் புரட்சியின் பரம விரோதி ஆனார். பிரெஞ்சுப்புரட்சி ஒரு சாபக்கேடு என்றும் ஒழிக்கப்பட வேண்டிய ஏரிமலை என்றும் சமூக ஒழுங்கை கெடுக்கும் நச்சுப்பாம்பு என்றும் கருதினார். எனவே தான்.

விடுலை, ஜனநாயகம் மற்றும் புரட்சிக் கருத்துக்களை ஐரோப்பாவிலிருந்தே விரட்டஎண்ணினார்.

**2. பழைய பிற்போக்குக் கொள்கைகளில் விருப்பம்:**

மெட்டர்னிக் பிற்போக்கு கொள்கைகளையும், பழைய ஒழுங்கு நிலையை பாதுகாப்பதிலுமே நம்பிக்கைகொண்டிருந்தார். புரட்சியானது ஐரோப்பிய சமூக அரசியல் அமைப்பை கெடுத்துவிட்டது எனவும், எனவே அதனைச் சரிசெய்யவேண்டியது அவசியம் எனறார். பூரண எதேச்சதிகார முடியாட்சியின் மீது நம்பிக்கைகொண்டார். அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம் ஒரு அரசாங்கமே அல்ல என்றார்.

**3. தேசியத் தன்மை மீது வெறுப்பு:**

மெட்டர்னிக் ஐரோப்பிய மக்களிடையே தேசிய எண்ணம் வளர்வதை விரும்பவில்லை. முக்கியமாக ஆஸ்திரியாவில் தேசிய எண்ணம் பரவவிடாமல் தடுக்க நினைத்தார். இவ்வாறு விடுதலை மற்றும் தேசிய எண்ணங்களின் வளர்ச்சியை அவர் விரும்பவில்லை.

## மெட்டர்னிக் திட்டம் (Metternich System):

மெட்டர்னிக் திட்டம் என்பது, பூரணமான எதேச்சதிகார பிற்போக்கு அரசுகளை அமைத்தலும், ஐரோப்பாவில் விடுதலை, புரட்சி இயக்கங்களை நசுக்குதலுமே ஆகும். இந்தத் திட்டத்தின் அடிப்படையிலேயே இவருடைய செயல்கள் இருந்தன. பேச்சுரிமையும் பத்திரிகை சுதந்தரமும், பாராளுமன்ற ஜனநாயகமும் மெட்டர்னிக் திட்டத்தின் பரம விரோதிகள். எனவே அவற்றை ஒழிப்பதில் தீவரமாக செயல்பட்டார் மெட்டர்னிக்.

**ஐரோப்பாவில் மெட்டர்னிக் திட்டம் செயல்படுத்தப்படுதல்:**

**1. ஆஸ்திரியா:**

ஆஸ்திரியப் பேரரசில் ஜெர்மானியர்கள், மாகியர்கள், இத்தாலியர்கள், செக் ஆகிய பல்வேறு இனத்தவர்கள் காணப்பட்டனர். அவர்களிடம் தேசிய உணர்ச்சியும் அசியல் ஒற்றுமையும் இல்லை. எனவே அமைதியின்மையும், குழப்பங்களும் காணப்பட்டது. எனவே இங்கு எதேச்சதிகார முடியாட்சியை வெற்றிகரமாக அமைக்க முடிந்தது.

1) கல்விக் கட்டுப்பாடு: இளைஞர்களின் சுதந்திர எண்ணங்களை ஒடுக்குவதற்கு அவர்கள் அதிகமாக இருக்கக்கூடிய பல்கலைக் கழகங்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்தார். புத்தகங்கள் தணிக்கை செய்யப்பட்டன. மாணவர்களின் அரசியல் கூட்டங்கள் தடைசெய்யப்பட்டன. அரசியல் வரலாறு போன்ற பாடங்கள் பாடத்திட்டத்திலிருந்தே நீக்கப்பட்டன.

2) பத்திரிக்கைத் தணிக்கை: விடுதலை எண்ணங்களும் தேசீய உணர்வுகளும் பரவாமல் இருக்க பத்திரிக்கைகள் தணிக்கை செய்யப்பட்டன. அப்படி விடுதலை கருத்துக்களைப் பரப்பும் பத்திரிக்கைகள் தடைசெய்யப்பட்டன.

3) எல்லைப் புறங்களில் பாதுகாப்பு: விடுதலைக்கொள்கைகள், புரட்சி எண்ணங்களைக் கொண்ட புத்தகங்கள், பிரதிகள் நாட்டின் உள்ளே வராமல் இருக்க நடவடிக்கைகள் எடுத்தார். வெளிநாட்டுப் பயணங்கட்குத் தடைவிதிக்கப்பட்டது. விடுதலைமற்றும் பரட்சிக் கருத்துக்களைப் பற்றிப் பேசியவர்கள் விசாரணை இன்றி சிறையிலடைக்கப்பட்டனர்.

ஆஸ்திரியப் பேரரசு தழைத்தோங்க வேண்டுமென்றால் விடுதலை, புரட்சிக் கருத்துக்களை நசுக்கவேண்டும் என்றார். எனவே, இவருடைய திட்டம் வெற்றிகரமாக ஆஸ்திரியாவில் செயல்படுத்தப்பட்டது.

**2. ஜெர்மனி:**

ஜெர்மன் கூட்டமைப்பு மக்களின் கூட்டமைப்பாக இல்லாமல் மன்னர்களின் கூட்டமைப்பாகவே காணப்பட்டது. விடுதலை எண்ணம் கொண்ட மக்கள் ஏமாற்றம் நிறைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். 1817-ம் ஆண்டு மார்டின் லூதர் போப்பாண்டவரை எதிர்த்த 300வது ஆண்டு நிறைவை ஒரு விழாவாகக் கொண்டாட ஆரம்பித்தனர். அப்போது பல்கலைக்கழக மாணவர்கள் பிற்போக்கு அரசியல் கொள்கையை எதிர்த்து கிளர்ச்சி செய்தனர். பிற்போக்கு நூல்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

இச்சமயத்தில் மெட்டர்னிக் தன் திட்டத்தை செயல்படுத்த முற்பட்டார். 1819-ல் கார்ல்ஸ்பாட் என்ற இடத்தில் ஜெர்மானிய முக்கிய அரசியல் பிரமுகர்களின் கூட்டத்தை கூட்டி அதன் முடிவில் கார்ல்ஸ்பாட் ஆணை (Garlsbad Decrees)களை வெளியிட்டார். அதன்படி பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மாணவர்கள் கண்காணிக்கப்பட்டனர். அரசுக்கெதிரான புரட்சியாளர்களின் சதித்திட்டங்களைக் கண்டறிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. இதன் விளைவாக பிரன்ஸ்விக், சாக்ஸனி. ஹெசிஹாசல் ஆகிய ஜெர்மானியப் பகுதிகளில் புரட்சி ஒடுக்கப்பட்டது.

**3. இத்தாலி:**

வீயன்னா மாநாட்டின் மூலம் இத்தாலியின் வடபகுதிகளில் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை நிலை நாட்டியிருந்தார் மெட்டர்னிக். நேப்பிள்ஸில் முடியாட்சியை ஏற்படுத்த இரண்டாம் பெர்டினாண்டுக்கு ஆதரவு அளித்தார். அத்துடன் அவருடன் ரகசிய உடன்படிக்கை ஒன்றும் செய்து கொண்டார்.

1820-ல் நெப்பிள்ஸில் கிளர்ச்சி ஏற்பட்டபோது ஆஸ்திரியப் படை அனுப்பப்பட்டு கிளர்ச்சி நசுக்கப்பட்டது. 1821-ல் பீட்மாண்டில் கிளர்ச்சி எற்பட்டபோது அதுவும் ஒடுக்கப்பட்டது. மேலும் பார்மா, மாடனா, போப்பின் பகுதிகளிலும் புரட்சி நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டன.

இதனால்தான் ஹேய்ஸ் என்பவர் ஆஸ்திரியாவின் பிற்போக்குதேர் இத்தாலியின் தலையையும் வாலையும் நசுக்கிப் போட்டது என்கிறார்.

**4. ஸ்பெயின்:**

வீயன்னா ஏற்பாட்டின்படி ஏழாம் பெர்டினாண்டு ஸ்பானிய மன்னராக்கப்பட்டார். இவர் ஸ்பெயின் நாட்டில் விடுதலை இயக்கங்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். விடுதலைக் கருத்துக்களைக் கொண்ட அரச ியலமைப்பை ரத்து செய்தார். ஆனாலும் புரட்சி இயக்கம் பரவியதால், வல்லரசுகளின் உதவியை நாடினார். 1822ல் வெரொனாவில் மாநாடு கூடியபோது, மெட்டர்னிக் ஸ்பானியப் பிரச்சனைகட்கு முக்கியத்துவம் கொடுத்தார். ஒரு பிரெஞ்சுப் படை அனுப்பப்பட்டு கிளர்ச்சி முறியடிக்கப்பட்டது. ஏழாம் பெர்டினாண்டின் எதேச்சதிகாரம் நிலைநாட்டப்பட்டது.

**5. பிரான்சு:**

நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின் பிரான்சை சுற்றி வலிமையான நாடுகளை உருவாக்க முயன்றார் மெட்டர்னிக். பிரெஞ்சுப் புரட்சியின் கருத்துக்கள் ஐரோப்பாவில் பரவாமல் தடுப்பதில் கவனமாக இருந்தார். ஆனால் முடியாட்சியை பிரெஞ்சுமக்கள் எற்றக்கொண்டதால் அதன் பின்மெட்டர்னிக் அங்கு அதிககவனம் செலுத்தவில்லை. எனவேதான் அவருக்குத் தெரியாமலேயே புரட்சி இயக்கங்கள் வளர்ந்து பின்னர் 1830, ஜுலையிலும், 1848, பிப்ரவரியிலும் பிரான்ஸில் பெரும் புரட்சி ஏற்பட்டது. அதன் விளைவாக பல ஐரோப்பிய நாடுகளிலும் புரட்சி ஏற்பட்டது. மெட்டர்னிக் நாட்டை விட்டே ஒடினார். இதுவே மெட்டர்னிக் திடடத்தின் தோல்விக்கும் வழிவகுத்தது.

மெட்டர்னிக் திட்டத்தின் தொல்விக்கானகாரணங்கள்:

**1) புரட்சிக் கருத்துக்களை நசுக்க முடியவில்லை:**

புரட்சிக் கருத்துக்களை நசுக்கினார் மெட்டர்னிக். ஆனால் புரட்சிக் கருத்துக்களின் வளர்ச்சியையும், அவை பரவியதையும் தடுக்க முடியவில்லை. மெட்டர்னிக்கின் கடுமையான சட்டங்களுக்கு மத்தியில் புரட்சிக் கருத்துக்களே வெற்றியடைந்தன. 1848-ல் பிரான்சில் வெடித்த புரட்சி ஆஸ்திரியாவுக்கு பரவ நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே பதவி விலகி இங்கிலாந்திற்கு ஓடிவிட்டார் மெட்டர்னிக். அவர் சகாப்தமும் முடிந்தது.

**2. இங்கிலாந்தின் எதிர்ப்பு:**

பிற நாட்டு விவகாரங்களில் நேரடியாகத் தலையிடும் மெட்டர்னிக் திட்டத்தை இங்கிலாந்து ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்தது. விடுதலை இயக்கங்கள் மீது பற்றுக் கொண்ட இங்கிலாந்து டிராப்போ, வெரோனா மாநாடுகளில் எதிர்த்து, பின்னர் ஐரோப்பிய கூட்டமைப்பிலிருந்தே வெளியேறியது. இதனால் மெட்டர்னிக் திட்டம் தோல்வியடைந்தது.

**3. தேசியத் தன்மையின் வளர்ச்சி:**

ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் தேசியத் தன்மையின் வளர்ச்சி மெட்டானிக் திட்டத்திற்கு ஒருசவாலாகவே இருந்தது. மேலும் தேசிய இயக்கங்கட்கு இங்கிலாந்து வெளிப்படையாக ஆதரவு தெரிவித்து வந்தது. இதனால் மெட்டர்னிக் திட்டம் தோல்வியடைந்தது.

1815 முதல் 1848 வரை ஐரோப்பிய அரசியலில் ஆஸ்திரிய நாட்டிற்கு தலைமையிடம் கிடைக்கச் செய்தவர் மெட்டர்னிக் ஆவார். நாட்டுப்பற்றின் காரணமாகவே ஐரோப்பாவில் பரவிவரும் புரட்சிக் கருத்துக்கள் ஆஸ்திரியாவிலும் பரவிவிடாமல் தடுக்க நினைத்தார். வீயன்னா மாநாட்டிலும், ஐரோப்பியக் கூட்டமைப்பிலும் இவருடைய ஆதிக்கமே இருந்தது. இவருடைய திட்டம் குறுகியகாலப் பயன்களையே தந்தது. இவருடைய பிற்போக்குக் கருத்துக்கள் புரட்சிக் கருத்துக்களுக்கு முன் தொல்வியடைந்தது. ஆனால் ஐரோப்பிய அரசியலில் சுமார் நாற்பது ஆண்டுகள் அமைதியை ஏற்படுத்தியவர் மெட்டானிக் என்று புகழப்படுகிறார்.

## JULY REVOLUTION, 1830

வீயன்னா மாநாட்டின் ஏற்பாட்டின்படி பிரான்ஸ் நாட்டின் 18-ம் லூயி (1814-24) பேரரசராக முடிசூட்டப்பட்டார். இவர் மிதவாத நோக்குடையவர். இவர் பிரெஞ்சுப் புரட்சியை மறக்கவில்லை. நெப்போலியனின் சீர்திருத்தங்களைப் பின்பற்றினார். பிரெஞ்சுமக்களின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் 1814 ஜுன் 4-ம் தேதி அரசியலமைப்புச் சாசனம்" (Charter) ஒன்றை வெளியிட்டார். அதன்படி, இங்கிலாந்தில் அமைந்திருப்பதைப் போன்ற பாராளுமன்றம் அமைக்கப்பட்டது. மக்களின் உரிமைகளை மதித்து பேச்சுரிமை, மத வழிபாட்டுரிமை, பத்திரிக்கை சுதந்திரம் ஆகிய உரிமைகளை வழங்கினார். இது மன்னரே மக்களுக்கு மனமுவந்து கொடுத்த உரிமைகள் ஆகும். ஆனாலும் அதன்பின் நடந்த பல நிகழ்ச்சிகள் 1830-ம் வருட ஜுலைப் புரட்சி ஏற்படக் காரணமாயின.

**ஜுலைப் புரட்சிக்கான முக்கியக் காரணங்கள்:**

**1. வெண் பயங்கரம்: (White terror):**

18-ம் லூயி பிரெஞ்சு மக்களுக்கு 1814-ல் வழங்கிய அரசியலமைப்பு சாசனத்தை (பட்டயம்) தீவிரவாதிகள் எதிர்த்தனர். இவர்கள் பிரான்சில் எதேச்சதிகாரமும்,

சிறப்புரிமைகளும் மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும் என்றனர். பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்படவேண்டும் என்றனர். நிலங்களை இழந்த நிலசுவான்தார்களுக்கு மீண்டும் நிலங்களைக் கொடுக்கவேண்டும் என்றனர். எனவே மக்களுக்கு 18-ம் லூயி வழங்கிய பட்டயத்தை எதிர்த்தனர். வாட்டர்லூ போரில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டபின் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, நாட்டில் பயங்கர நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். இதற்கு வெண் கொட்டம் அல்லது வெள்ளை கொடூர ஆட்சி என்று பெயர். இவர்கள் மிதவாத அரச குடும்பத்தினரையும், கத்தோலிக்கர்களையும் தாக்கமுற்பட்டனர். நாடெங்கிலும் கொலையும், கொள்ளையும் தாண்டவமாடின. இந்த நிலை 1816-ம் வருடத் தேர்தல் வரை பிரான்சில் நீடித்தது.

**2. முடியாட்சியை ஆதரிக்கும் பிரபுக்களின் வலிமை அதிகரித்தது:**

பதினெட்டாம் லூயியின் மிதவாதக் கொள்கைகளை பிரபுக்களும், சமயக் குருமார்களும் எதிர்த்தனர். அவருடைய சீர்திருத்தங்களை விரும்பவில்லை. பிரான்சில் மீண்டும் எதேச்சதிகார முடியாட்சியை அமைக்கவும், இழந்த தங்கள் உரிமைகளையும் சலுகைகளையும் மீண்டும் பெறவும் நினைத்தனர். புதிய பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற இவர்கள் உயர்குடியாளர் ஆட்சியை அமைக்க திட்டமிட்டனர். மேலும் ஐரோப்பிய அரசியலில் மெட்டர்னிக் வழியே பிரான்சும் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பிரான்ஸ் நால்வர் உடன்பாட்டில் சேர்ந்தது. பின் அது ஐவர் உடன்பாடானது.

**3. பிரெஞ்சு மன்னர் பத்தாம் சார்லஸ் (Charlex X) 1824-30:**

1824-ல் 18-ம் லூயி இறந்ததும் அவருடைய சகோதரர் கவுண்ட அர்ட்டாய் பத்தாம் சார்லஸ் என்ற பெயரில் பிரெஞ்சு மன்னரானார். இவர் ஒரு பிற்போக்குவாதி. இவர்தான் ஜுலை புரட்சிக்கு முக்கிய காரணம். இவருடைய ஆட்சிக் காலத்தில் பிரபுக்களும் குருமார்களும், 18-ம் லூயி வழங்கிய தாராள சீர்திருத்தங்களை அகற்றவும், எதேச்சதிகாரத்தை நிலைநாட்டவும் முயன்றனர். ஆனால் மக்கள் மனதில் புரட்சியின் வடுக்கள் ஆழமாகப் பதிந்திருந்ததால், பத்தாம் சார்லஸின் பிற்போக்குக் கொள்கைகளை ஏற்கமறுத்து, பின்னர் புரட்சியின் மூலம் தூக்கி எறிந்தன.

**4. வில்லெல் மந்திரி சபை (Villele Ministry)**

1821-ல் வில்லெல் தலைமையில் புதிய மந்திரி சபை அமைக்கப்பட்டது. அப்போது முடியாட்சியைப் பின்பற்றுகிறவர்கள் அரசாங்கத்தில் ஆதிக்கம் கொண்டிருந்தனர். பிற்போக்கு கொள்கை கொண்ட வில்லெல் மந்திரி சபை 1827 வரை நீடித்தது. அப்போது பத்திரிக்கைத் தணிக்கை முறை அமுல்படுத்தப்பட்டது. மக்களது உரிமைகள் பறிக்கப்பட்டன. மேலும் வில்லெலின் நடவடிக்கைகளால்

தொழிலதிபர்கள் ஆத்தரம் அடைந்தனர். நடுத்தரக் குடும்பத்தினர் இன்னலுற்றனர். எனவே இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். புதிய தேர்தலுக்கு உத்தரவு இடப்பட்டது.

5. மார்டிக்னாக் மந்திரிசபை (**Martignac Ministry**):

அதன்பின் நடைபெற்ற தேர்தலில் மிதவாதிகள் பெரும்பான்மை பெற்று மார்டிக்னாக் தலைமையில் புதிய மந்திரிசபை அமைத்தனர். இது 1829 வரை நீடித்தது. இந்த அமைச்சரவை எடுத்த நடவடிக்கைளையும், இயற்றிய சட்டங்களையும் அரசா் எதிர்த்தார். எனவே மார்டிக்னாக் பதவி விலக்கப்பட்டார். புதிய தேர்தலுக்கு உத்தரவிடப்பட்டது.

6. போலிக்னாக் மந்தரிசபை (**Polignac Ministry**)

முடியாட்சியை ஆதரித்த போலிக்னாக் என்ற பிற்போக்குவாதியின் தலைமையில் புதிய மந்திரிசபை அமைக்கப்ட்டடது. இவர் பாராளுமன்றத்தின் எதிரி. எதேச்சதிகார ஆட்சியில் வழக்கமாகத் தொன்றும் தீமைகள் மீண்டும் தலைதூக்கின. மக்கள் புரட்சியின் போது தாங்கள் அடைந்த உரிமைகளை இழந்து விடுவோமா என்று பயந்தனர்.

7. பத்தாம் சார்லஸின் ஆணவமும் அவர் இயற்றிய அவசரச் சட்டமும்:

நாட்டில் கொந்தளிப்பு அதிகமானதால் போலிக்னாக் மந்திரி சபை கலைக்கப்பட்டது. பாராளுமன்ற பிரதிநிதிகள் சபைக்கு புதிதாகத் தோ்ந்தெடுக்கபட்டவர்களில் மிதவாதிகளே பெரும்பான்மை பெற்றனர். எனவே போலிக்னாக்கின் தூண்டுதலின் பேரில் 1830, ஜுலை 25-ம் தேதி மூன்று அவசர அடக்குமுறை ஆணைகளை வெளியிட்டார் பத்தாம் சார்லஸ். அதற்கு செயின்ட் “கிளௌடு (St. Cloud) ஆணைகள் என்று பெயர் அதன்படி.

1) பிரதிநிதிகள் சபை கலைக்கபட்பட்டு, புதிய தேர்தல் நடத்த உத்தரவிடப்பட்டது.
2) மக்களின் வாக்குரிமை குறைக்கப்பட்டது.
3) பத்திரிக்கை சுதந்திரம் பறிக்கப்பட்டது.

பத்தாம் சார்லஸின் இந்த ஆணைகள் மக்களுக்கு 18-ம் லூயியினால் வழங்கப்பட்ட உரிமைகளின் அப்பட்டமான மீறுதல் ஆகும். எனவே 1830, ஜுலை 28-ல் புதன்கிழமை பாரிசு நகர மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். புரட்சித்தலைவர் லபாயட்டின் (Lafayatte) தலைமையில் Hotel de ville என்ற இடத்தில் தற்காலிக அரசு அமைக்கப்பட்டது. தொழிலாளர்கள், முன்னால் போர் வீரர்கள் மற்றும் மன்னரின் படைவீரர்கள் மக்களுடன் சேர்த்துக் கொண்டனர். சுமார் மூன்று நாட்கள் நடைபெற்ற தெருச்சண்டைகளிலும், குழப்பங்களிலும் 300 பேருக்கு மேல் மாண்டனர். பயந்து போன பத்தாம் சார்லஸ் நாட்டை விட்டே ஓடினார். பிரதிநிதிகள் சபை ஜுலை 13-ல்

ஆல்லியன்ஸ் வம்சத்தை சேர்ந்த லூயி பிலிப் (Louis Philippe) என்பவரை பிரெஞ்சு மக்களின் மன்னராகத் தேர்ந்தெடுத்தது. அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம் பிரான்சில் அமைக்கப்பட்டது.

**1830 ஜுலைப் புரட்சியின் முக்கியத்துவம் (விளைவுகள்)**

1. அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி பிரான்சில் ஏற்படுத்தப்பட்டது. மக்களுக்கு மீண்டும் உரிமைகள் வழங்கப்பட்டது. செயின்ட்கிளௌடு அணைகள் ரத்து செய்யப்பட்டன.
2. மெட்டர்னிக் ஒழித்துக்கட்ட நினைத்த தேசியம், விடுதலை எண்ணம் ஆகியவை உறுதியுடன் நிலை நாட்டப்பட்டன.
3. வீயன்னா மாநாடு ஒரு போலிக் கட்டடிடம் என்பதை இப்புரட்சி நிரூபித்தது. பெல்ஜியம் சுதந்திரம் அடைந்தது. ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளில் கிளர்ச்சி ஏற்றபட்டது. அது தேசியத்திற்குக் கிடைத்த பெரிய வெற்றியாகும்.
4. மக்களாட்சி முறை வலுப்பெற இப்புரட்சி உதவியது.
5. புரட்சி இயக்கங்கட்கு பிரான்சும் இங்கிலாந்தும் அதரவு காட்டியதால், தேசிய விடுதலை இயக்கங்கள் தடையின்றி வளர்ச்சியடைந்தன.
6. இப்புரட்சி மெட்டர்னிக் திட்டத்திற்கு கிடைத்த ஒரு பெரிய தோல்வியாகும்.
7. இப்புரட்சியின் விளைவாக இங்கிலாந்தில் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன.
8. மக்களின் ஆளுமை அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டன.

## ஐரோப்பாவில் ஜுலைப் புரட்சியின் பிரதிபலிப்புகள்:

**1. போலந்தில் கிளர்ச்சி:**

வீயன்னா ஏற்பாட்டிற்குப் பின்னர் ரஷ்யாவின் முதலாம் சார் அலெக்ஸாந்தர் அரசியலமைப்புக்கு உட்பட்டு போலந்தை ஆட்சி செய்தார். தனி நிர்வாகத்தையும், அதன் தனி ராணுவத்தையும் அமைத்திருந்தார். ஆனால் மக்களுக்கு அதிருப்தி இருந்தே வந்தது.

ஆனால் 1825-ல் பதவி ஏற்ற அவரது சகோதரர் சார் முதலாம் நிக்கோலஸ் மக்களின் உரிமைகளை நசுக்க முற்பட்டார். எனவே ஜுலைப் புரட்சியைப் பின்பற்றி போலந்திலும் கிளர்ச்சி எற்பட்டு நாடு முழுவதும் பரவியது. வார்சாவில் ஒரு மாகாண ஆட்சியை புரட்சியாளர் அமைத்தனர். எனவே ரஷ்யப்படைகள் போலந்துக்குள் புகுந்து புரட்சியாளர்களை கொன்று குவித்தது.

சரியான தலைவர் இல்லாததாலும், புரட்சியாளரிடையே கருத்து வேறுபாடு காணப்பட்டதாலும் புரட்சியாளர் சரணடைந்தனர். போலந்து ரஷ்யாவுடன்

இணைக்கப்பட்டது. அது தனது தேசியத் தன்மையை இழந்தது. ரஷ்யாவின் ஒரு மாநிலமாக மாற்றப்பட்டது. இவ்வாறு ஜுலைப் புரட்சியினால் போலந்து என்ற ஒரு நாடே இல்லாமல் போய்விட்டது.

**2. இத்தாலியில் கிளர்ச்சி:**

ஜுலைப் புரட்சியின் பிரதிபலிப்பாக இத்தாலியிலுள்ள ரகசியக் கழகங்கள் சுறுசுறுப்படைந்தன. பார்மா, மாடனா, டஸ்கனி அகிய பகுதிகளில் ஆஸ்திரிய ஆட்சியை எதிர்த்து கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆனால் மெட்டர்னிக்கின் படைகள் புரட்சியை ஒடுக்கின. இதன் மூலம் ஆஸ்திரியாவின் மீது இத்தாலி மக்களின் வெறுப்பு அதிகமாகியது.

**3. ஜெர்மனியில் கிளர்ச்சி:**

ஜுலைப் புரட்சியைப் பின்பற்றி, வடஜெர்மன் நாடுகளான சாக்ஸனி, ஹனோவா, பிரன்ஸ்விக், ஹெஸ்ஸி ஆகியவற்றிலும், பவேரியா, வூரம்பர்க் போன்ற தென்ஜெர்மன் நாடுகளிலும், மக்கள் புரட்சி செய்து அரசியலமைப்புக்கு உட்பட்ட ஆட்சியை அமைக்க கோரினர். சிற்றரசர்கள் மக்கள் கோரிக்கைகட்கு பணிந்து ஒத்துக்கொண்டனர். ஆனால் மெட்டர்னிக் கார்ல்ஸ்பர்ட் ஆணைகளை பயன்படுத்தி புரட்சியை அடக்கி வெற்றி கண்டார்.

**4. பெல்ஜிய விடுதலைப் போர்:**

வீயன்னா மாநாடு ஹாலந்து நாட்டுடன் பெல்ஜியத்தை இணைத்தது. இதற்குக் காரணம், பிரான்ஸின் அக்கிரமிப்பைத் தடுக்க ஹாலந்து பலப்படுத்தப்பட வெண்டும் என்பதே ஆகும். அனால் மொழி, மதம், கலாச்சாரம், பொருளாதாரம் ஆகியவற்றில் முற்றிலும் வெறுபட்ட பெல்ஜியம் மக்கள் தாங்கள் பிரிக்கப்பட்டு தனிநாடாக செயல்படவே விரும்பினர். மக்கள் தொகையில் குறைவான ஹாலந்து தங்களை ஆட்சி செய்வதை விரும்பவில்லை. அத்துடன் தங்கள் மீது டச்சு மொழி திணிக்கப்படுவதையும் எதிர்த்தனர்.

இவர்களது விருப்பதற்கு மன்னர் முதலாம் வில்லியம் இணங்கவில்லை. எனவே ஜுலைப் புரட்சியின் விளைவாக மக்களும் புரட்சியில் ஈடுபட்டனர். புரட்சிக்கு ஆதரவாக, பிரான்சும் இங்கிலாந்தும் படைகளை அனுப்பி வைத்தன. புரட்சிப்படையினர் வில்லியத்தின் படைகளை விரட்டியடித்தனர். பெல்ஜியப் புரட்சி வெற்றியடைந்தது. பெல்ஜியம் விடுதலை அடைந்தது.

**லண்டன் மாநாடு:**

பெல்ஜியத்தின் எதிர்காலம் பற்றி ஆலோசித்து முடிவெடுக்க லண்டனில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. மாநாட்டின் முடிவுப்படி,

a) பெல்ஜியம் சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டது.

b) அதன் நடுநிலை எல்லா ஐரோப்பிய நாடுகளாலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

c) அங்கு அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி அரசு அமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பெல்ஜியம் 1831-ல் தனி சுதந்திர நாடாக உருவானது. சாக்ஸ்கோ பர்க் வம்சத்தைச் சேர்ந்த லியோபோல்ட் பெல்ஜிய மன்னரானார். இது தேசியத் தன்மைக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும். வீயன்னா ஏற்பாட்டிற்குக் கிடைத்த மிகப்பெரிய தோல்வியாகும். மெட்டர்னிக் திட்டத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய மரண அடியாகும். இத்தாலி, ஜெர்மனி, போலந்து போற்ற நாடுகளில் பிற்போக்கு சக்திகள் வெற்றி பெற்றாலும், 1830-ம் வருட ஜுலைப் புரட்சி ஐரோப்பிய மக்களின் உரிமைகள் வலிமையடைய பெரிதும் காரணமாக அமைந்தது.

## 6. 1848-ம் வருட பிப்ரவரிப் புரட்சி

## (**FEBRUARY REVOLUTION,** 1848)

1830-ம் வருட ஜுலைப் புரட்சிக்குப் பின்னர் லூயி பிலிப் பிரெஞ்சு அரியணையில் அமர்த்தப்பட்டார். இவருடைய ஆட்சி ஜுலை முடியரசு என்று அழைக்கப்படுகிறது. இவர் தன்னை குடிமக்களின் மன்னராக (Citizen King) அறிமுகப்படுத்திக்கொண்டார். முடியாட்சியின் அடையாளச் சின்னங்களான கிரீடம், செங்கோல் ஆகியவைகளைத் தூக்கி எறிந்தார். முற்போக்குக் கொள்கைகளைப் பின்பற்றி சில நடவடிக்கைகளை மேற்கொண்டார். லூயிபிலிப் வயது, சொத்துதகுதிகளைக் குறைத்து வாக்காளர் எண்ணிக்கையை அதிகப்படுத்தினார். ஆனாலும் கடைசி வரை அவரால் மக்கள் விருப்பப்படி நடந்துகொள்ள முடியவில்லை. நாட்டில் மக்களின் எதிர்ப்பு நாளக்குநாள் வளர்ந்து வந்து இறுதியில் புரட்சி ஏற்பட்டது. லூயிபிலிப் நாட்டைவிட்டு ஓடினார். பிரான்ஸ் இரண்டாம் முறையாக குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

### 1848 பிப்ரவரிப் புரட்சிக்கான காரணங்கள்:

**1. கட்சிகளின் எதிர்ப்பு:**

லூயி பிலிப்பிற்கு எதிராக பல கட்சிகள் குரல் எழுப்பின. லெஜிடிமிஸ்ட் (டுநபவைஅைளைவள) கட்சியினர், பூர்போன் பரம்பரையே நாட்டை ஆள வேண்டும் என்று நினைத்தனர். போனபார்ட் கட்சியினர் (Bonapartists) நெப்போலியன் காலத்திய அரசு புதுப்பிக்கப்பட வேண்டும் என்று நினைத்தனர். குடியரசுக் கட்சியினர் (Republican) முதலில் லூயி பிலிப்பை ஆதரித்தாலும், மேலும் சீர்திருத்தங்கள் செய்யப்படாததால் அடிக்கடி கலவரம் செய்தனர். இவ்வாறு மக்களிடம் ஒற்றுமையின்மையும், மனக்கசப்பும், உள்ளக் குமுறலும் ஏற்பட்டது.

**2. தொழிலாளர்களிடையே காணப்பட்ட அதிருப்தி:**

தொழிற்புரட்சியின் விளைவாக, நாட்டில் தொழில் வளம் பெருகியது. அனால் தொழிலாளர்களின் கஷ்டங்கள் அதிகரித்தன, வேலையில்லா பிரச்சனை குறைந்த ஊதியம், தொழிற்சங்க உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் போராடினா். அவர்களின் நன்மைக்காக இதுவரை யாரும் புரட்சி செய்யவில்லை. அவர்கள் நலன்களின் அக்கரைப்படவும் இல்லை. எனவே புதிய சோசலிசக் கொள்கைகள் உருவானது.

**3. சோலிச இயக்கத்தின் வளர்ச்சி:**

தொழிலாளர்களின் நலன் பேணும் சோஷலிஸ்ட் கட்சி உதயமானது. தொழில்களின் அமைப்பு, தொழிலாளி முதலாளி உறவு, புதிய சமுதாயம் ஆகிய கருத்துக்கள் அழமாக விவாதிக்கப்பட்டன. இதனால் சோஷலிச இயக்கம் ஆரம்பமானது. சோஷலிச இயக்கத்திற்குத் தலைமை தாங்கியவர்களில் செயின்ட சைமன், ராபர்ட் ஓவன், லூயி பிளாங் ஆகியோர் முக்கியமானவர்கள் ஆவர்.

**1.செயின்ட சைமன் (St. Simon) 1760-1826)**

இவருடைய கருத்துக்கள் சமுதாயச் சீர்திருத்ததிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. செயல்திறன் மிக்க மனிதனால் சமுதாயத்தை நல்வழிப்படுத்த முடியும். ஏழைகளும், பணக்காரர்களும் ஒன்றுபட்டு உழைத்தால் சமுதாயம் முன்னேறும். தொழிற்சாலைகளை அரசே ஏற்று நடத்தவேண்டும். உழைப்புக் கேற்ற ஊதியம் வேண்டும் போன்ற தன் கருத்துக்களை வெளியிட்டார். Labour according to capacity and reward according to services என்ற முறையில்தான் தொழிற்துறை நிறுவனங்கள் சீரமைக்கப்பட வேண்டும் என்றார். இதனால் ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டது.

**2. ராபர்ட் ஓவன்: (1771-1858)**

பிரிட்டிஷ் சோசலிச இயக்கத்தின் தந்தை எனப்படும் ராபர்ட் ஓவன் தொழிலாளர் பிரச்சனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். கூட்டறவு சங்கங்களின் மூலம் வேலை இல்லாதவர்கட்கு உதவி அளிக்கும் முறையை அதரித்தார். இவ்வாறு கூட்டுறவு இயக்கங்களின் வளர்சிக்கு பாடுபட்டார். இவருடைய கருத்துக்கள் பிரெஞ்சு தொழிலாளர்களிடையே பிரபலமாகியது.

**3. லூயி பிளாங் (Louis Blanc)**

லூயி பிளாங் சோசலிச இயக்கதிற்கு ஓர் திட்டவட்டமான கொள்கையை வகுத்துக் கொடுத்தார். தன்னுடைய தொழிலாளர்களின் சீரமைப்பு என்ற நூலில் ஒவ்வொரு மனிதனுக்கும் வேலை செய்யும் உரிமை இருக்கிறது அந்த உரிமையைக் கொடுப்பதும், பாதுகாப்பதும் அரசாங்கத்தின் கடமையாகும் என்ற குறிப்பிட்டார்.

அரசாங்கமே முதலீடு செய்து தொழிற்சாலைகளை ஆரம்பித்து, அதில் தொழிலாளர்களின் நிர்வாகத்தை ஏற்படுத்தி லாபத்தைப் பிரித்துக் கொள்ளலாம். என்றும்

கூறினார். இக்கருத்துக்கள் பிரெஞ்சு தொழிலாளரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது. தங்கள் பிரச்சனைகளைத் தீர்க்கவும், உரிமைகளைப் பெறவும் போராடினார் லூயி பிளாங்.

4. ஹைசாட் (**Guizot**):

இவர் 1840-ல் முதல் அமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் அரசனுக்கு ஆலோசகராவும் செயலபட்டார். இவர் பதவி ஏற்ற பிறகு தொழிலாளர்களின் கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்டன. பழைய சட்டங்கட்கும் சபைகட்கும் உயிரூட்டினார். நாட்டின் பிரச்சனைகளைப் பற்றி இவர் கவலைப்படவில்லை.

அப்போது பிரதிநிதிகள் சபையில் முக்கியத் தலைவராகத் திகழ்ந்தவர் தையர்ஸ் (Thiers) என்பவராவார். இவருக்கும் ஹைசாட்டுக்கும் பல விஷயங்களில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. தையர்ஸ் சிறந்த சிந்தனையாளர். தாராளக் கொள்கைகளை ஆதரித்தார். அரசனின் தன்னாட்சி முறைக்கு எதிர்ப்பு தெரிவித்தார். வாக்குரிமை விரிவுபடுத்தப்பட வெண்டுகோள் விடுத்தார். ஆனால் ஹைசாட் இதனை எதிர்த்தார்.

நாட்டில் சட்டமன்ற சீர்திருத்தமும், தேர்தல் முறையிலும், வாக்குரிமையிலும் சீர்திருத்தங்கள் கேட்டு 1848-ம் வருட துவக்கத்தில் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆனால் கிளர்ச்சிகளை அதிகப்படுத்தும் அளவிற்கு ஹைசாட் ஒரு சொற்பொழிவு ஆற்றினார். மக்களின் குறைபாடுகள் கண்மூடித்தனமானவை. அவர்கள் கேட்கும் அரசியல் மாற்றங்கள் மாறுபட்ட மனப்பான்மை கொண்டு எழுந்தவை என்று பேசினார். இதனால் நாட்டின் எல்லாக் கட்சிகளும் அரசுக்கு எதிராக ஒன்று சேர்ந்தன.

3. சீர்திருத்த விருந்தும், பிப்ரவரிப் புரட்சியும் (**Reform banquets**):

ஹைசாட்டின் பேச்சிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும், ஜனநாயக ரீதியிலான அரசு அமைய வேண்டுமென்றும், வாக்குரிமை விரிவுபடுத்தப்படவும், நாடெங்கிலும் சீர்திருத்த விருந்துக்கு தையர்சும், அவரின் ஆதரவாளர்களும் ஏற்பாடு செய்தனர்.

இத்தகைய கூட்டம் ஒன்று பாரிசு நகரில் 1848 பிப்ரவரி 22-ம் தேதி நடக்க இருந்தது. ஆனால் இக்கூட்டத்தை அரசு தடைசெய்து. எனவே கோபமடைந்த பொதுமக்கள் ஹைசாட்டை பதவி விலக்கக் கோரினர். ஹைசாட் மாளிகை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது பாதுகாப்புப் படையினர் சுட்டதில் 23 பேர் கொல்லப்பட்டனர். எனவே நாட்டில் அமைதி இன்மை எற்ப்பட்டது. பல இடங்களில் தீவட்டி ஊர்வலம் நடத்தப்பட்டது. இச்சூழ்நிலையில் ஹைசாட் பதிவி விலகினார். மகிழ்ச்சியடைந்த மக்கள் மன்னரைப் பதவியிலிருந்து விரட்டி பிரான்சில் குடியரசை அமைக்க எண்ணினர். கிளர்ச்சியை அடக்க அனுப்பப்பட்ட படையினரும் மக்களுடன் சேர்ந்து கொண்டனர். எனவே லூயிபிலிப் முடிதுறந்து 1848 பிப்ரவரி 24-ல் இங்கிலாந்துக்கு ஓடினார். பிரான்ஸில் இரண்டாவது குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது.

## 1848-ம் வருட பிப்ரவரி புரட்சியின் பிரதிபலிப்புகள்:

### 1. ஆஸ்திரியாவில் புரட்சி:

பிப்ரவரிப் புரட்சி முதலில் ஆஸ்திரியாவில் எதிரொலித்தது. ஏற்கனவே ஆஸ்திரியாவில் மெட்டர்னிக்கின் அடக்கு முறைக்கு எதிராக நாட்டின் பல பகுதிகளில் கிளர்ச்சிகள் நடைபெற்று வந்தன. இப்போது பிப்ரவரிப் புரட்சியின் தூண்டுதலால் பொஹிமியா, செக்கோஸ் லோவாகியா, ஹங்கேரி ஆகிய பகுதிகளில் புதிய அரசியலமைப்பை ஏற்படுத்த மக்கள் பொங்கி எழுந்தனர்.

தொழிலாளர்களும் மாணவர்களும் புரட்சியாளர்களுடன் சோந்து கொண்டனர். மெட்டர்னிக்கினால் புரட்சியை அடக்க அனுப்பப்பட்ட படை மக்களுடன் சேர்ந்து கொண்டது. நிலைமையை சமாளிக்க முடியாத மெட்டர்னிக் நாட்டை விட்டு ஓடினார். அத்துடன் மெட்டர்னிக் சகாப்தமும் முடிந்தது.

பின்னர் பேரரசர் முதலாம் பெர்டினாண்டு, பொஹிமியாவிலும் ஹங்கேரியிலும் புரட்சி இயக்கங்களை நசுக்கினார். அனாலும் சிறபான்மை இனத்தவர்கட்கு சில உரிமைகளும் நாட்டில் சில சீர்திருத்தங்களும் கொண்டுவரப்பட்டன.

### ஜெர்மனியில் புரட்சி:

1848-பிப்ரவரி புரட்சியின் விளைவாக ஜெர்மானிய சிற்றரசுகளிலும் புரட்சி இயக்கம் பரவியது. மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெறவும், புதிய அரசியலமைப்பை உருவாக்கவும், ஜெர்மானிய ஐக்கியத்தை ஏற்படுத்தவும் புரட்சியாளர்கள் கோரிக்கை வைத்தனர். சாக்ஸனி, ஹனோவர், பவேரியா ஆகிய பகுதிகளில் மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டது. பிரஷ்ய அரசர் பிரடரிக் வில்லியம் ரஷ்ய மன்னரின் உதவியுடன் கிளர்ச்சியை அடக்க முயன்றார். ஆனால் கிளர்ச்சி தீவிரமடையவே பல சீர்திருத்தங்களை அறிவித்தார். தேசியவாதிகள் 1848-ல் பிராங்பர்ட் என்னுமிடத்தில் கூடி, ஐக்கிய ஜெர்மனிக்கு புதிய அரசியலமைப்பை உருவாக்க முயற்சித்தனர். ஆனால் அரசர் அதனை எற்றுக்கொள்ள மறுத்தார். தேசீயவாதிகள் கைது செய்யப்பட்டனர். புரட்சி அடக்கப்பட்டது.

### 2. இத்தாலியில் புரட்சி:

பிப்ரவரிப் புரட்சியின் விளைவாக இத்தாலியிலும் புரட்சி தோன்றியது. முதலில் சிசிலி பகுதியில் தோன்றியது. பின்னர் ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டில் உள்ள லம்பார்டி, வெனிஷியா ஆகிய பகுதிகளில் மக்கள் கிளர்ந்தெழுந்து ஆஸ்திரியப் படைகளை விரட்டியடித்தனர். பீட்மாண்ட் அரசர் மக்களுக்குப் புதிய சலுகைகளை வழங்கினார். வெனிஷியாவிலும் புதிய குடியரசு நிறுவப்பட்டது.

ஆனால் இத்தாலியப் பகுதிகளில் ஏற்பட்ட புரட்சி இயக்கங்களை ஆஸ்திரியத் துருப்புக்கள் அடக்கியது. புரட்சி இயக்கங்கட்கு தலைமை தாங்கிய சார்டீனிய, பீட்மாண்டின் அரசர் சார்லஸ் ஆல்பர்ட்டின் படைகளை ஆஸ்திரியப் படைகள் தோற்கடித்தது. எனவே அவர் முடிதுறந்தார். அவருக்குப்பின் அவர் மகன் இரண்டாம் விக்டர் இம்மானுவேல் பதவி ஏற்றார். இவர் மட்டுமே அரசியலமைப்பை கலைக்க மறுத்தார், பின்னர் இவர் தலைமையில் இத்தாலி ஐக்கியமடைய வழிவகுத்தார்.

**1830, 1848-ம் வருடப் புரட்சிகளைப் பற்றிய ஒப்பீடும், மதிப்பீடும்:**

**1) நோக்கங்கள் வேறுபட்டவை:**

1830-ம் வருடப் புரட்சி பத்தாம் சார்லஸின் பிற்போக்குக் கொள்கைகளை எதிர்த்து ஏற்பட்ட புரட்சியாகும். அப்புரட்சி முடியாட்சியின் வல்லாட்சியைத் தான் எதிர்த்தது. முடியாட்சியை எதிர்க்கவில்லை. எனவேதான் புரட்சியின் முடிவில் முடியாட்சியின் வல்லாட்சி ஒழிந்து அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி ஏற்பட்டது.

ஆனால் 1848-ம் வருடப் புரட்சியோ, ஜனநாயகக் கொள்கையுடன் சேர்ந்த சமதர்ம இயக்கத்தின் புரட்சியாகும். வாக்குரிமையை விரிவுபடுத்தவும், சமுதாயத்தில் சீர்திருத்தம் ஏற்படவும் நடந்த புரட்சியாகும். சமதர்மம், குடியாட்சிமுறை இரண்டுமே இப்புரட்சியின் குறிக்கோள்கள் ஆகும். எனவேதான் இப்புரட்சியின் முடிவில் பிரெஞ்சு மன்னர் லூயிபிலிப் விரட்டப்பட்டு பிரான்ஸ் நாடு ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

2) இரண்டு புரட்சிகளுமே ஐரோப்பாவில் எல்லா நாடுகளிலும் எதிரொலித்தது. 1830-ம் வருடப் புரட்சியின் போது அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கங்கள் அமையவே கிளர்ச்சிகள் ஏற்பட்டன. பெல்ஜியத்தில் தேசிய இயக்கம் உருவெடுத்து அது விடுதலை அடைந்தது. பலந நாடுகளில் மக்களாட்சியுகம் பிறந்தது.

ஆனால் 1848-ம் வருடப் புரட்சி நடுத்தர வகுப்பினரின் அட்சியை ஒழித்து அரசியல் சமத்துவத்தை எற்படுத்தியது. வயது வந்தோர் யாவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டு குடியரசுக் கொள்கையில் ஒரு புதுயுகம் ஆரம்பமானது. தேசிய உணர்வு பல நாடுகளில் தூண்டிவிடப்பட்டது.

3) மொத்தத்தில் இரண்டு புரட்சிகளுமே தோல்வியடைந்தன. புரட்சியாளர்கள் அடக்கப்பட்டனர். 1830-ம் வருடப் புரட்சியினால் போலந்து என்ற நாடே மறைந்து போனது. 1848-ம் வருடப் புரட்சியின் இறுதியிலும் பிரஷ்யா, சார்டீனியா தவிர மற்ற நாடுகளில் புரட்சியினால் நேரடி பலன் எதும் கிட்டவில்லை.

4) இப்புரட்சிகளின் விளைவாக ஐரோப்பிய ஆட்சியாளர்கள் சிலர் அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டனர். இந்த வகையில் பார்க்கும்போது இப்புரட்சியின் அரசியலில் முன்னேற்றக் கருத்துக்களைப் புகுத்தியதாகக் கருதலாம். ஆஸ்திரியாவில் அடிமை வியாபாரம் நிறுத்தப்பட்டது.

பிரஷ்யாவிலும் சார்டீனியாவிலும் அரசியலமைப்புகள் உருவாக்கப்பட்டன. ஸ்காண்டிநேவிய நாடுகளின் மக்கள் தங்களுக்கென பல உரிமைகள் பெற்றனர். ஹாலந்து சட்ட சபைக்கு அதிக அதிகாரங்கள் கிடைத்தன. சுவிட்சர்லாந்து நாட்டில் மக்களுக்கு அதிக அதிகாரங்கள் உள்ள புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இங்கிலாந்தில் பெரும்பான்மை நடுத்தர வர்க்கத்தினருக்கு வாக்குரிமை வழங்கும் விதத்தில் வாக்காளர் சொந்தமாக வைத்திருக்கும் சொத்தின் அளவு குறைக்கப்பட்டது. கிரேக்க நாடும் பெரும்பான்மை இலத்தீன் அமெரிக்க நாடுகளும் சுதந்திரமடைந்து விட்டன. சுருங்கக் கூறினால் 1830, 1848-ல் நடைபெற்ற புரட்சிகள் தோற்றவைகளாகக் காட்சியளிப்பினும் தேசியப்பற்றும், மக்களாட்சி முறையும் எல்லா எதிர்ப்புகளையும் உடைத்துத் தள்ளி மெதுவாக முன்னேறி வந்தன என்பதே உண்மை.

## 7. மூன்றாம் நெப்போலியன்
## (Nepoleon III-1848-1870)

1848-ம் வருடப் பிப்ரவரிப் புரட்சிக்குப் பின்னர் பிரான்ஸ் ஒரு குடியரசு நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது. தற்காலிக அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்த புதிய குடியரசிற்கு அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அதன்படி 1848 டிசம்பர் 19-ம் தேதி தேர்தல் நடந்தது. அதில் புகழ்பெற்ற நெப்போலியன் போனபார்ட்டின் சகோதரரும் ஹாலந்து நாட்டின் மன்னராக நியமிக்கப்பட்டவருமான லூயி போனபார்டடின் புதல்வாரன லூயி நெப்போலியன் பெருவாரியான வாக்குகள் வெற்று வெற்றி பெற்றார். பின்னர் 1852-ல் தன்னை மூன்றாம் நெப்போலியன் என்ற பெயருடன் பேரரசராக மாற்றிக் கொண்டார். அப்போது இவர் ஐரோப்பாவில் மிக அதிக வலிமை பெற்ற அதிகாரம் உடையவராக விளங்கினார். 1870-ம் ஆண்டு வரை பிரான்ஸை ஆண்ட மூன்றாம் நெப்போலியனின் ஆட்சியில் வெற்றியும் தோல்வியும் மாறிமாறி காணப்பட்டன. 1870-ல் மூன்றாம் நெப்போலியன் வீழ்ச்சியடைந்தார்.

### 1848 பிப்ரவரி புரட்சிக்குப்பின் பிரான்ஸ்:

1848-ம் வருட பிப்ரவரி புரட்சிக்குப்பின் அமைக்கப்பட்ட புதிய அரசாங்கத்தில் சமதர்மவாதிகளின் செல்வாக்கு அதிகமாயிருந்தது.எனவே அவர்கள் வேலை கேட்பது மக்களின் உரிமை வேலை கொடுப்பது அரசின் கடமை என்ற கொள்கையைச் செயல்படுத்தினார்கள். நாடு முழுவதும் பல வேலை வாய்பபு ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டன. ஆனால் இச்செயல்களைக் குடியரசுவாதிகள் எதிர்த்தனர். 1848-ல்

எப்ரலில் வயது வந்தோருக்கு வாக்குரிமை அடிப்படையில் தேசிய சட்டமன்றத்திற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சட்டமன்றம் மே 4-ம் தேதி கூடியது. இந்த புதிய சட்டமன்றத்தில் குடியரசுவாதிகள் பெரும்பான்மை பெற்றிருந்தனர். எனவே அவர்கள் சமதர்ம வாதிகட்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். வெறுப்படைந்த சமதர்ம வாதிகள் 1848, ஜுன் மாதம் பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சியைத் தளபதி கெவக்நாக் என்பவர் இரும்புக்கரம் கொண்டு நசுக்கினார். சமதர்ம இயக்கம் நசுக்கப்பட்ட பின்பு பிரெஞ்சுக் குடியரசுக்குப் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. அதன்படி,

a) பிரான்ஸ் நாட்டின் குடியரசுத் தலைவர் நான்கு ஆண்டு காலத்திற்கு மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

b) புதிய சட்டமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்று முடிவானது. இதன் அடிப்படையில் 1848 டிசம்பர் 19-ம் தேர்தல் நடைபெற்றது. குடியரசுக் கட்சியின் சார்பில் தளபதி கெவக்நாக் (General Cavagnac) போட்டியிட்டார். நெப்போலியன் போனபார்ட்டின் சகோதரன் மகனும், அப்போது நெப்போலியன் குடும்பத்தில் மூத்த பிரதிநிதியாக இருந்தவருமான லூயி நெப்போலியனும் போட்டியிட்டார்.

**குடியரசுத் தலைவராக லூயி நெப்போலியன்:**

தேர்தலில் லூயி நெப்போலியனுக்கு ஆதரவான முறையில் இவர் பெயரே உர்ந்ததாக இருந்தது. தனது பெரியப்பா மாவீரன் நெப்போலியனைப் போல பிரான்ஸ் நாட்டின் பெருமையை உயர்த்துவார் என்று மக்கள் நம்பினர். அத்துடன் லூயி நெப்போலியன் பலதரப்பட்ட மக்களுக்கும் பல்வேறு வாக்குறுதிகளை வாரி வழங்கியிருந்தார். எனவே பிரெஞ்சு மக்கள் நெப்போலியன் போனபார்ட்டின் பெருமையை மனதில் வைத்துக்கொண்டு லூயி நெப்போலியனுக்கு ஓட்டுப் போட்டுவிட்டனர். இவருக்கு ஐந்தரை மில்லியன் ஓட்டுக்கள் கிடைத்தன. மற்ற எல்லா வேட்பாளர்கட்கும் சேர்த்து இரண்டு மில்லியன் ஓட்டுக்கள் கூட கிடைக்கவில்லை.

**பிரெஞ்சுப் பேரரசராக லூயி நெப்போலியன்:**

குடியரசுத் தலைவராக இரந்த லூயி நெப்போலியன் விரைவிலேயே பேரரசரானார். நடைபெற்று முடிந்த தேர்தலில் குடியரசுக் கட்சியினரின் தோல்வி, மக்கள் குடியரசுக் கொள்கை மீது நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்று காட்டுவதாக கருதிய லூயி நெப்போலியன், பிரான்சில் மீண்டும் மன்னராட்சியை எற்படுத்தத் திட்டமிட்டுச் செயல்பட்டார். பிரெஞ்சுக் கத்தோலிக்க மக்களையும் குடியானவர்களையும் திருப்திப்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். வயதுவந்தவர்கட்கு வாக்குரிமை அளிப்பதில் முனைப்புடன் ஈடுபட்டார். இதனை சட்டமன்றம் எதிர்த்தது. குடியரசுத் தலைவர் பதவியை இரண்டாம் முறையாகவும் வகிக்க அனுமதிக்குமாறு சட்ட சபையிடம் கோரினார். இதற்கும் சட்டசபை ஆதரவுதர மறுக்கவே 1851-டிசம்பர் 2-ம் தேதி ஒரு

திடீர்ப் புரட்சியைத் தோற்றுவித்து எதிர்க்கட்சித் தலைவர்களைச் சிறைபிடித்தார். சட்டமன்றத்தைக் கலைத்தார். விக்டர்ஹுகோ, தியர்ஸ் உட்பட ஆயிரக்கணக்கான தனது அரசியல் விரோதிகளை நாடு கடத்தினார்.

அதன்பின் குடியரசுத் தலைவரின் பதவிக் காலத்தைப் பத்தாண்டு காலத்திற்கு நீடிக்கவும், அரதசியலமைப்பைத் திருத்தியமைக்கவும் 1851-டிசம்பர் 20-ல் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தினார். இதற்கு ஆதரவாக ஏழரை மில்லியன் மக்கள் வாக்களித்தார்கள். லூயி நெப்போலியனது இந்த வெற்றி மிக உயர்வானதாயும் அதிகாரமிக்கதாயுமிருந்தது. 1852-ஜனவரியில் புதிய அரசியலமைப்பு செயல்படுத்தப்பட்டது. அதன்பின் அனைத்து அதிகாரங்களையும் தன்வசப்படுத்திக்கொண்டு, தான் பேரரசராக இருப்பதா இல்லையா என்று மக்களின் இசைவைப் பெற 1852- நவம்பர் 21-ல் வாக்கெடுப்பு நடத்தினார். பேரரசராக ஆவதற்கு ஆதரவாக 78 லட்சம் பேர் வாக்களித்தனர். இரண்டு லட்சத்து மூவாயிரம் பேரே எதிராக வாக்களித்தனர். எனவே லூயி நெப்போலியன் 'பேரரசர் மூன்றாம் நெப்போலியன்' என்ற பெயருடன் 1852-டிசம்சர் 2-ம் தேதி முடிசூட்டிக் கொண்டார். இவ்வாறு பிரான்சில் குடியரசு மறைந்து இரண்டாவது பேரரசு உதயமானது. மூன்றாம் நெப்போலியன் பதினெட்டு ஆண்டுகள் (1852-1870) பிரெஞ்சுப் பேரரசராக ஆட்சி புரிந்தார்.

## மூன்றாம் நெப்போலியனின் உள்நாட்டுக் கொள்கை:

மூன்றாம் நெப்போலியன் ஒரு சிறந்த ராஜதந்திரி. தான் பேரரசர் ஆவதற்குக் காரணம் நெப்போலியன் போனபார்ட்டின் சகோதரன் மகன் என்ற தகுதி மட்டுமே இருந்ததுதான் என்பதனை நன்றாகவே உணர்ந்திருந்தார். மேலும் மக்கள் தன்னிடம் விருவிருப்பான ஆட்சியையும் எதிர்பார்க்கிறார்கள் என்றும் உணர்ந்தார். எனவேதான் எதேச்சதிகாமாக நடந்து கொண்டாலும், மக்களின் நன்மைக்காகவும் பிரான்ஸ் நாட்டின் புகழுக்காகவும், துணிச்சல் மிக்க, வெற்றி தரக்கூடிய கொள்கைகளைப் பின்பற்றினார்.

1. **புதிய அரசியலமைப்பு:**

மூன்றாம் நெப்போலியனால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பில் மன்னரின் அதிகாரமே மேலோங்கி இருந்தது. சட்டமன்றத்திற்கு உண்மையான அதிகாரம் இல்லை. மந்திரிகளை அரசரே நியமித்தார். அரசியலமைப்பிற்கு உட்பட்ட அரசாங்கம் போலத் தோன்றினால் அதிகாரங்கள் அனைத்தும் அரசரின் கையிலேயே இருந்தது. ஆனால் மக்கள் கண்டனக் குரல் எழுப்பவே 1860-க்குப் பிறகு அரசியலமைப்பில் தாராளப் போக்குடைய மாற்றங்களைச் செய்தார்.

2. **கிறிஸ்தவ சபைகட்குச் சலுகை:**

மூன்றாம் நெப்போலியன் அரசாங்கத்திற்கும் மதத்திற்கும் தொடர்பு உண்டாக்க விரும்பினார். கத்தோலிக்கத் திருச்சபைகள் ஊக்குவிக்கப்பட்டன. பலகலைக்கழகங்கள் மற்றும் அரசாங்கப் பள்ளிகளின் மீது திருச்சபையின் ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டது.

3. **தொழிற் வளர்ச்சி:**

தொழில்துறை வளர்ச்சிக்கு மூன்றாம் நெப்போலியன் ஆதரவு அளித்தார். தொழில் அபிவிருத்திக்காக குறைந்த வட்டிக்குக் கடன் வழங்கவும் தவணை முறையில் திருப்பிச் செலுத்தப்படவும் வசதி செய்து கொடுக்கப்பட்டது.

4. **தொழிலாளர்கட்கு வசதி:**

தொழிலாளர்களின் நலன் பேணிப் பாதுகாக்கப்பட்டது. வயோதிக காலத்திலும் விபத்தினபோதும் தொழிலாளர்கட்குப் பாதுகாப்பு அளிக்க இன்ஷுரன்ஸ் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அவர்களுக்காக தொழிலாளர் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டன. தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டது. முதலாளி-தொழிலாளி பிரச்சினையைத் தீர்க்க சமரசக் கழகம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டன.

5. **விவசாயம், வாணிபம்:**

நாட்டில் விவசாயத்தையும் வாணிபத்தையும் பெருக்க மூன்றாம் நெப்போலியன் நடவடிக்கைகளை மேற்கொண்டார். விவசாயிகட்குக் கடன் வழங்கும் சங்கங்கள் நிறுவப்பட்டன. பாரிசிலும் வேறுசில மாகாணங்களிலும் நில வங்கிகள் அமைக்கப்பட்டன. விவசாயக் கழகங்கள் விரிவுபடுத்தப்பட்டன. சதுப்பு நிலங்கள் சாகும்படிக்குக் கொண்டு வரப்பட்டன. இதனால் விவசாய உற்பத்தி பெருகியது. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் வியாபார ஒப்பந்தம் செய்யப்பட்டது. அயல்நாட்டு வாணிபம் செழிப்பதற்காக பிரெஞ்சு அடலாண்டிக் கம்பெனி என்ற அமைப்பு ஒன்ற எற்படுத்தப்பட்டது. இதனால் நாட்டின் பொருளாதார நிலை உயர்ந்தது.

6. **போக்குவரத்து:**

மூன்றாம் நெப்போலியன் காலத்தில் பிரான்சில் போக்குவரத்து வசதி அதிகரிக்கப்பட்டது. துறைமுகங்கள் விரிவாக்கப்பட்டன. புதிய கால்வாய்கள் வெட்டப்பட்டது. இரயில் பாதைகள் விரிவுபடுத்தப்பட்டன. இதனால் தொழில் நகரங்கட்கு மூலப்பொருட்கள் வேகமாகவும் எளிதாகவும் கொண்டு செல்ல வசதி ஏற்பட்டது. தபால் தந்தி துறையும் வளர்ச்சியடைந்தது.

7. **பாரிசு நகரத்தின் வளர்ச்சி:**

பாரிசு நகரில் புதுமை அம்சங்கள் கொண்ட, கலைத்திறனுடன் கூடிய கட்டிடங்கள் கட்டப்பட்டன. சுகாதார வசதிகள் அதிகப்படுத்தப்பட்டது. நகரே புதுமைக் கோலம் பெற்றது. ஐரோப்பாவிலெயே அழகுமிக்க நகரம் என்ற பெயர் பெற்றது. பாரிசு ஐரோப்பிய நாகரிகத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தது.

**மூன்றாம் நெப்போலியனின் வெளிநாட்டுக் கொள்கை:**

**நோக்கங்கள்:**

1. நேப்போலியன் போனபார்ட்டைப் போல புகழடையவும், அவர் அடைந்த உன்னதமான நிலையைத் தானும் அடையவும் விருப்பம் கொண்டார். அவர் விட்டுச் சென்ற அரும்பணிகளைத் தொடர்வதும் பிரெஞ்சுப் புரட்சியின் பெரும் லட்சியங்களை அடைவதுமே தன் நோக்கம் என்றார் மூன்றாம் நெப்போலியன்.
2. பிரான்சு நாட்டிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்ட தேசிய உணர்ச்சியை மதிக்கவும் அதன் வெற்றிக்காக உழைக்கவும் விரும்பினார்.
3. வீயன்னா மாநாட்டின் ஏற்பாடுகளை உடைத்து அதனைத் தோல்வியடையச் செய்ய நினைத்தார்.
4. பிரான்ஸ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் வாணிபத்திற்கும் வசதியாக குடியேற்றப் பகுதிகளை பிரான்சுக்கு எற்படுத்த நினைத்தார்.
5. நெப்போலியன் போனபார்ட்டின் தோல்விக்குக் காரணம் அவர் இங்கிலாந்தை விரோதித்துக் கொண்டார் என்பதால், தானும் அந்தத் தவறைச் செய்யாமல் இங்கிலாந்துடன் நட்புடன் இருக்க நினைத்தார்.
6. ரஷ்யாவின் முதலாம் சார் நிக்கோலஸ் மூன்றாம் நெப்போலியனின் பதவியை அங்கீகரிக்கவில்லை. மேலும் ரஷ்யா தான் நெப்போலியன் போனபார்ட்டின் தோல்விக்குக் காரணம் என்று நினைத்து ரஷ்யாவை வெறுத்தார். அதற்காக வஞ்சம் தீர்க்கவும் எண்ணினார்.

**வெளிநாட்டுக் கொள்கையின் செயல் உருவம்:**

மேற்கண்ட நோக்கங்களின் அடிப்படையில் மூன்றாம் நெப்போலியன் தனது வெளிநாட்டுக் கொள்கைளை அமைத்துக் கொண்டார். முதலில் விருவிருப்பான சில வெற்றிகள் கிடைத்தது. இவரது சில வெளிநாட்டு நடவடிக்கைகள் வினோதமாகவும், நிலையற்றதாகவும் நாணயமற்றதாகவும் இருந்தது. எனவே இறுதியில் அவருடைய கொள்கைகள் நாட்டை அழிவிலும், அவமானத்திலும் கொண்டுபோய்விட்டது.

1. **கிருமியப்போர்** (1854-59):

துருக்கியின் ஆதிக்கத்திலிருந்த பாலஸ்தீனத்திலுள்ள கிறிஸ்தவப் புண்ணியஸ்தலங்களைப் பாதுகாப்பது குறித்து துருக்கிக்கும் ரஷ்யாவிற்குமிடையே எழுந்த

பிரச்சனையில் மூன்றாம் நெப்போலியன் தலையிட்டார். இந்த விவகாரத்தில் ரஷ்யாவின் தலையீட்டை வெறுத்தார். காரணம் இதனால் ரஷ்யாவின் செல்வாக்கும், பலமும் வளரக்கூடும் என்று பயந்தார். மேலும் இதில் தலையிடுவதன் மூலம் பிரான்சிலுள்ள கத்தோலிக்கர்களின் நல்லெண்ணத்தைப் பெறலாம் என்றும், நெப்போலியன் போனபார்ட் ரஷ்யாவில் அடைந்த தோல்விக்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ளலாம் னன்றும் நினைத்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, வீரம் பொருந்திய இராணுவச் செயலைச் செய்வதின் மூலம் தனது அதிகாரம புகழடையும் என்ற எண்ணத்துடன் கிருமியப் போரில் கலந்துகொண்டாார்.

ரஷ்யா கப்பற்படை ஒன்றை அனுப்பி வாலாச்சியா மோல்டேவியா ஆகிய துருக்கியப் பகுதிகளைக் கைப்பற்றியதுடன் போர் ஆரம்பித்தது. துருக்கிக்கு ஆதரவாக இங்கிலாந்தும் பிரான்சும் தங்கள் படையை அனுப்பின. இதனால் போரில் ரஷ்யா தோற்கடிக்கப்பட்டது. 1856-மார்ச் 3-ம் தேதி மூன்றாம் நெப்போலியன் தலைமையில் பாரிசில் அமைதி மாநாடு கூட்டப்பட்டது. அதன் முடிவில் பாரிசு உடன்படிக்கை கையெழுத்தானது. இப்போரினால் பிரான்ஸ் ஒரு லாபத்தையும் அடையாமலிருந்தாலும், மூன்றாம் நெப்போலியனின் பெருமை உயர்ந்தது. மக்கள் மத்தியில் அவர் செல்வாக்கு அதிகமானது.

**2. மூன்றாம் நெப்போலியனும் இத்தாலிய இணைவும்:**

ஐரோப்பாவில் தோன்றிய தேசிய இயக்கங்கட்கு மூன்றாம் நெப்போலியன் முழு ஆதரசு அளித்தார். அப்போது இத்தாலியில் தோன்றிய தேசிய இயக்கத்திற்கு உதவ எண்ணினார். இத்தாலியின் சுதந்திர இயக்கத்தில் உண்மையான இரக்கம் நெப்போலியனிடமிருந்தது. அதனுடன் பிரான்சின் அதிகாரத்தையும், தனது அரசியல் தந்திரத்திறமையையும் வெளிக்காட்ட இதனை சிறந்த வாய்ப்பாக எடுத்துக கொள்ள ஆவலுள்ளவராக இருந்தார். 1858, ஜுலையில் இத்தாலிய இணைவிற்குப் பாடுபட்ட கவுண்ட்கவூருடன் மறைவானதும் புகழ்பெற்றதுமான பிளாம்பியர்ஸ் சந்திப்பை மேற்கொண்டார். அந்த சந்திப்பின் போது மத்திய, வட இத்தாலியிலிருந்து ஆஸ்திரியரை விரட்ட இரண்டு லட்சம் வீரர்களைக் கொண்ட படையை அனுப்பி உதவி செய்வதாகவும் அதற்குப் பதிலாக நைஸ், செவாய் ஆகிய பகுதிகளைப் பெற்றுக் கொள்வதாகவும் கவூருடன் ‘பிளாம்பியர்ஸ் உடன்படிக்கை’ செய்துகொண்டார்.

மூன்றாம் நெப்போலியனின் உதவியுடன் இத்தாலியர் மெகன்டோ, சால்வரினோ ஆகிய இடங்களில் ஆஸ்திரியர்களைத் தோற்கடித்தனர். லம்பார்டியிலிருந்து ஆஸ்திரியா விரட்டப்பட்டது. இச்சூழ்நிலையில் பிரஷ்யா இப்பேரில் தலையிடும் அபாயம் ஏற்பட்டுவிடும் என்று பயந்து திடீரென ஆஸ்திரிய அரசர் பிரான்சிஸ் ஜோசப்புடன் ‘வில்லா பிராங்கா’ என்ற இடத்தில் உடன்பாடு செய்துகொண்டு போரை முடித்துக் கொண்டார் மூன்றாம் நெப்போலியன். இவ்வாறு அரை குறையாக உதவியது, இத்தாலியர்கட்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. மேலும் தம் ஒப்பந்தத்தின்படி முழுமையான உதவி

அளிக்காமலிருந்தும் அதற்கு ஈடாகப் பேசிய செவாய் நைஸ் ஆகிய பகுதிகளைத் தமக்கு கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தி நெப்போலியன் பெற்றக்கொண்டதும் இத்தாலியர்கட்கு கடுங்கோபத்தை அளித்தது. மூன்றாம் நெப்போலியனின் இச்செயலை இத்தாலியர்களுக்கு இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகம் என்று கூறி சினங்கொண்டார் கவுண்ட்கவூர். இங்கிலாந்தும் நெப்போலியனின் இச்செயலை வெறுத்தது. மூன்றாம் நெப்போலியனின் ஒழுங்கற்ற, நிலையற்ற வெளிநாட்டுக் கொள்கைக்கு இதுவே சான்று ஆகும்.

**3. குடியேற்றங்களை அமைத்தல்:**

பிரான்ஸ் நாட்டிற்குக் குடியேற்றங்களைப் பெறுதில் மிகவும் அக்கறை கொண்டார். மேற்கு ஆப்பிரிக்க நாடான அல்ஜீரியாவை பிரான்சின் ஆதிக்கத்திற்குட்படுத்தினார். இந்தோசீனாவில் 1857-ல் குடியேற்றம் அமைக்க பிரெஞ்சுப் படைகளை அனுப்பினார். 1863-ல் கம்போடியா பிரெஞ்சுக் குடியேற்றம் ஆனது. மேலும் சீனாவுக்குப் பிரெஞ்சுத் துருப்புக்களை அனுப்பி அங்கு வியாபார மத உரிமைகளை 1860-ல் டீன்ஸ்டின் (Tienstin) உடன்படிக்கைப்படி பெற்றார்.

**3. மூன்றாம் நெப்போலியனும், போலந்துப் புரட்சியும்:**

1863-ல் போலந்தில் ரஷ்ய ஆதிக்கத்தை எதிர்த்து மக்கள் பெரும் புரட்சி செய்தனர். தங்களுக்கு உதவி செய்யுமாறு புரட்சிக்காரர்கள் நெப்போலியனைக் கேட்டுக்கொண்டனர். போலந்தில் கத்தொலிக்க மக்களே அதிகம் என்பதால் முதலில் புரட்சிக்காரர்கட்கு உதவிசெய்ய நினைத்தார். ஆனால் அப்படி உதவினால் ரஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நாடுகளுடன் போர் செய்யவேண்டிய நிலை எற்பட்டு விடலாம் என்று பயந்தார். எனவே போலந்துப் புரட்சியாளர்கட்கு ஆதரவாக சார் இரண்டாம் அலெக்ஸாந்தருக்கு ஒரு கடிதம் எழுதியதுடன் நிறுத்திக் கொண்டார். போலந்துப் பரட்சியாளர்கள் ரஷ்யாவில் கொடூரமாக நசுக்கப்பட்டனர். போலந்துக்குப் பரிவு காட்டியதால் ரஷ்யாவின் வெறுப்பையும் கோழைத்தனமாக இவர் நடந்து கொண்டதால் பிரெஞ்சுக் கத்தோலிக்கர்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டார்.

**4. மெக்ஸிகோ விவாகாரத்தில் தலையீடு:**

தனது இத்தாலியக் கொள்கையினால் இழந்த புகழை மீண்டும் பெற அசட்டுத்தனமாக ஒரு காரியத்திலி இறங்கினார் மூன்றாம் நெப்போலியன். 1863-ல் அவர் புதுமையான மெக்ஸிகோத் துணிகரச் செயலில் ஈடுபட்டார். இதன் மூலம் மக்கள் ஆதரவைப் பெறமுடியும் என்ற நம்பினார். ஸ்பெயின் நாட்டிடமிருந்து விடுதலையடைந்த மெக்ஸிகோ தான் கடன்பட்ட நாடுகட்குக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. மேலும் உள்நாட்டில் மீண்டும் மீண்டும் ஏற்பட்ட புரட்சிகளால் தொல்லையுற்றிருந்தது. கடனை வசூல் செய்வதற்காக இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின் ஆகிய மூன்று நாடுகளும் கூட்டாக ஆக்கிரமிப்பதாக இருந்தது. ஆனால் இங்கிலாந்து

ஸ்பெயின் ஆகிய நாடுகள் ஆக்கிரமிப்புச் செயலிலிருந்து விலகிச் சென்றன. ஆனால் மூன்றாம் நெப்போலியனின் ராணுவ நடவடிக்கை மூலம் மெக்ஸிகோவில் நேரடியாகத் தலையிட்டார். இது வெறி கொண்டதும், பகட்டானதுமான ஒரு திட்டமாகும்.

1863-ல் பிரெஞ்சுப் படையை மெக்ஸிகோவிற்கு அனுப்பி அந்நாட்டைக் கைப்பற்றினார் மூன்றாம் நெப்போலியன். மெக்ஸிகோ அதிபர் ‘பெனிட்டோஜ்வாரஸ்’ நாட்டைவிட்டே ஓடினார். மெக்ஸிகோ ஒரு குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. ஆஸ்திரியப் பேரரசரின் சகோதரரான மாக்ஸிமிலியன் என்பவரை மெக்ஸிகோவின் பேரரசராக்கினார் மூன்றாம் நெப்போலியன். ஆனால் இந்தப் புதிய எற்பாட்டை மெக்ஸிகோ மக்கள் சிறிதும் ஏற்றுக் கொள்ளவில்லை.எனவே புதிய அரசை எதிர்த்துப் போராட ஆரம்பித்தனர். கொரில்லாப்போர் முறையால் பிரெஞ்சுப் படைகள் அல்லல்பட்டன.

இச்சூழ்நிலையில் அமெரிக்காவில் உள்நாட்டுப்போர் முடிந்து அங்கு சமாதானம் ஏற்பட்டது. மன்றோக் கோட்பாட்டின் அடிப்படையில் அன்னியத் துருப்புக்கள் அமெரிக்க மண்ணிலிருந்து வெளியேற வேண்டுமென்று அமெரிக்கா கேட்டுக் கொண்டது. இதனால் 1867-ல் பிரெஞ்சுப் படைகள் திருப்பி அழைக்கப்பட்டன. நெப்போலியனால் கைவிடப்பட்ட மாக்ஸிமிலியன், புரட்யாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். நெப்போலியனின் வெளிநாட்டுக் கொள்கை இங்கே படுதொல்வி அடைந்தது. மூன்றாம் நெப்போலியனின் மெக்ஸிகோத் துணிகரச் செயல் அவர் பெயருக்கும், புகழுக்கும் களங்கம் ஏற்படுத்தியது. பெரும் அவமானமடைந்தார். நாட்டிற்குப் பெரும் பொருள் இழப்பு எற்பட்டது. பிரான்சின் கௌரவும் மிகவும் பாதிக்கப்பட்டது.

**5. பிராங்கோ பிரஷ்யப் போரும் நெப்போலியனின் வீழ்ச்சியும்:**

ஐரோப்பாவில் பிரஷ்யாவின் வலிமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. புரட்டஸ்தாந்து நாடான பிரஷ்யா வலிமையடைந்தால் தங்கள் நாட்டிற்கு ஆபத்து என்று பிரெஞ்சு கத்தோலிக்க மக்கள் பயந்தனர். ஜெர்மானியக் கூட்டமைப்பிலிருந்த பிரான்ஸின் கட்டுபாட்டிலுள்ள பகுதிகளைப் பெற பிரஷ்யா முயற்சித்தது. இச்சூழ்நிலையில் தனது தோல்விகளைத் திசை திருப்ப ஒரு போர் அவசியம் என்பதனை மூன்றாம் நெப்போலியன் உணர்ந்தார். போரில் வெற்றி பெறுவது வாயிலாக வீழ்ச்சியடைந்துவரும் தனது அதிகாரத்தை நிலையான அடிப்படையில் நிலை நிறுத்தலாம் என மூன்றாம் நெப்போலியன் எண்ணினார்.

இச்சூழ்நிலையில் ஸ்பானிய அரியணை குறித்து பிரஷ்யாவிற்கும் பிரான்சிற்குமிடையே பகைமை ஏற்பட்டு அதன் விளைவாக போர் எற்பட்டது. (ஜெர்மானிய இணைவில் விரிவாகத் தரப்பட்டுள்ளது) போரில் பிரெஞ்சுப்படைகள் செடான் போர்களத்தில் பிரஷ்யப் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. 1870, செப்டம்பர் 1-ம் தேதி பதினேழாயிரம் வீரர்களை இழந்தபின் 1,04,000 வீரர்களுடன் மூன்றாம்

நெப்போலியன் பிரஷ்யப் படைகளிடம் சரணடைந்தார். பிரான்சில் அடால்ப் தியர்சின் (Adolphe Thiers) தலைமையில் மூன்றாவது குடியரசு நிறுவப்பட்டது.

நெப்போலியன் போனபர்ட்டின் புகழால் உயர்ந்த மூன்றாம் நெப்போலியன் திறமையற்றவராகக் காணப்பட்டார். நெப்போலியன் போனபார்ட்டிடம் காணப்பட்ட மன உறுதியும், அரசியல் தெளிவும், பிடிவாத குணமும் இவரிடம் காணப்படவில்லை. அத்துடன் அரசியல் சமூகம் ஆகியவைகளில் அவருக்கிருந்த பரந்த நோக்கும் இராணுவ அறிவாற்றலும் இவரிடம் சிறிதளவும் இல்லை. சில நேரங்களில் மட்டுமே இவரது கனவுகள் நனவானதுடன் அரசியல் தந்திரம், அரசியல் வல்லமை ஆகிய இவைகளில் இவரது அறிவாற்றல் ஒளி வீசியது.

மூன்றாம் நெப்போலியனின் திட்டங்கள் ஒழுங்கற்றதாகவும் கொள்கைகள் உறுதியற்றதாகவும் காணப்பட்டன. தாராளக் கொள்கைகளை உடையவராக இருந்தாலும் அனைத்து மக்களின் தனது ராஜதந்திரமற்ற நடவடிக்கைகளால் தோல்வியடைந்தார். கடைசிவரை புரிந்துகொள்ளவும், அறிந்துகொள்ளவும் முடியாத ஒரு புதிராகவே இருந்தார். தன்னுடைய நிலையற்ற, நாணயமற்ற கொள்கைகளாலும், உலகின் உண்மைகள் சாத்தியக் கூறுகள் இவற்றைப் பற்றித் தேவையான அளவு புரிந்துகொள்ளாததாலும் இறுதியில் மூன்றாம் நெப்போலியன் வீழ்ச்சியடைந்தார்.

## 8.இத்தாலிய இணைவு

## (UNIFICATION OF ITALY)

பழங்கால இத்தாலி ரோமானியப் பேரரசின் கீழ் ஒன்றாக இணைந்த ஒரே நாடாக விளங்கியது. ஆனால் மத்திய காலத்தில் அது பல மாகாணங்களாகப் பிரிந்து கிடந்தது. நெப்போலியன் பொனபார்ட் தன்னுடைய படையெடுப்புகளின் மூலம் இத்தாலிய மாகாணங்களைக் கைப்பற்றி ஓரளவு ஒற்றுமைப்படுத்தி வைத்திருந்தார்.அனால் 1815-ம் வருட வீயன்னா மாநாடு இத்தாலியைக் கீழ்க்கண்டபடி மீண்டும் துண்டு துண்டாகப் பிரித்து அதன் ஐக்கியத்தைக் குலைத்துப் போட்டது தேசிய உணர்வை நசுக்கியது.

a) சார்டீனியா, பீட்மாண்ட ஆகிய இரண்டு பகுதிகள் இத்தாலியச் சிற்றரசரான முதலாம் விக்டர் இமானுவேலிடம் கொடுக்கப்பட்டது.

b) லம்பார்டி, வெனிஷ்யா, இல்லீரியா ஆகிய பகுதிகள் ஆஸ்திரியப் பேரரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்பட்டது.

c) பார்மா, மாடனா, டாஸ்கனி ஆகிய பகுதிகள் ஆஸ்திரியாவின் மறைமுக ஆதிக்கத்தின்கீழ் வைக்கப்பட்டது.

d) நேப்பிள்ஸ், சிசிலி அகிய பகுதிகள் பூர்போன் சிற்றரசர்களிடம் கொடுக்கப்பட்டது.

e) போப்பின் பகுதிகள், ரொமாக்னோ ஆகியவை போப்பாண்டவரின் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டது.

இவ்வாறு இத்தாலியில் அந்நிய ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. இத்தாலி என்பது ஒரு நிலவியல் சொல்லாகவே (Geographical expression) இருந்தது. ஆனால் இப்பகுதிகளில் இத்தாலிய தேசப்பற்று வீழ்சசியுறவில்லை. ஆஸ்திரியாவின் அதிக்கத்தை இத்தாலிய மக்கள் எற்றுக்கொள்ளவில்லை.1848-க்குப் பிறகு, நடைபெற்ற பல நிகழ்ச்சிகளின் விளைவாக இத்தாலியப் பகுதிகள் எல்லாம் ஒன்றாக இணைந்து ஒரே நாடானது.

**இத்தாலிய இணைவிற்கு இருந்த தடைகள்:**

இத்தாலியப் பகுதிகள் மீது இருந்த ஆஸ்திரியாவின் ஆதிக்கமே இத்தாலிய இணைவிற்கு மிகப்பெரிய தடையாக இருந்தது. 1830, 1848-ம் வருடப் புரட்சிகளின் பிரதிபலிப்புகள் இத்தாலியிலும் காணப்பட்டன. ஆனால் ஆஸ்திரியாவின் சான்சலா் மெட்டா்னிக்கின் படைகள் புரட்சியாளா்களை அடக்கின. புரட்சிகள் தோல்வியடைந்தன. எனவே இத்தாலி இணைய வேண்டுமானால் இத்தாலியில் அந்நியா் ஆதிக்கம் குறிப்பாக ஆஸ்திரியாவின் ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும்.ஏனெனில் ஆஸ்திரியாவின் பிற்போக்கு சக்தி இத்தாலியில் உறுதியாக வேரூன்றியிருந்தது. எனவே இத்தாலி மக்களிடையே தேசிய உணா்வை மேலும் வளா்ச்சியடையச் செய்ய வேண்டும்.

**இத்தாலிய இணைவு ஏற்படுவதற்கான காரணங்கள்:**

இத்தாலியிலிருந்த அந்நிய அரசுகள் புரட்சி இயக்கங்களையும் தேசியக் கருத்துக் கொண்டவா்களையும் அடக்க முற்பட்டன. முற்போக்குக் கருத்துக் கொண்டவா்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டாா்கள். மெட்டானிக்கின் பிற்போக்கு ரதம் இத்தாலியின் தலையையும், வாலையும் நசுக்கிப்போட்டது. ஆனாலும் தேசிய உணா்வு மக்களிடம் சிறிதுசிறிதாக வளா்ந்து வந்தது. விழிப்புணா்வு எற்பட்டது. தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த அவா்களிடம் தீவிர உணா்ச்சி ஏற்பட்டது. கீழ்க்கண்ட காரணங்கள் இத்தாலிய இணைவு எற்பட வழிவகுத்தன.

**1. காா்பொனாரி (Carbonari):**

நாட்டின் ஒருமைப்பாட்டை உருவாக்கவும், அடக்குமுறை ஆட்சியை விரட்டவும் இத்தாலியில் பல இரகசியக் கழகங்கள் அமைக்கப்பட்டன. அவைகள் தேசியமும் விடுதலையும் கோரி கிளா்ச்சி செய்தன. அவைகளில் ஒன்று தான் 'காா்பொனாரி' என்ற ரகசியக் கழகமாகும். இக்கழகம் முதன் முதலில் 1820-ல் நேப்பிள்ஸ் நகரிலும் 1821-ல் பியட்மாண்டிலும் நடைபெற்ற புரட்சிகளுக்குப் பெரிதும் துணைபுரிந்தது.

அந்நியர் ஆதிக்கத்தை இத்தாலியிலிருந்து அகற்றுவது, நாட்டை ஐக்கியப்படுத்தி அரசியல் சுதந்திரம் பெறுவது ஆகியவையே இதன் முக்கியப் பணி ஆகும். விடுதலை எண்ணம் கொண்ட வீரமிக்க இளைஞர்கள் இக்கழகத்தில் அதிகமாகச் சேர்ந்தார்கள். இக்கழகத்தின் கிளைகள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டன.

**2. இத்தாலியத் தத்துவ ஞானிகளும், கவிஞர்களும்:**

இத்தாலிய தேசிய சுதந்திரப் போராட்டத்திற்கு இலக்கியமும் துணை புரிந்தது. இத்தாலியத் தத்துவ ஞானிகளும், கவிஞர்களும் மக்களிடையே புரட்சிக் கருத்துக்களைப் பரப்புவதில் முக்கியப் பங்காற்றினார்கள். இத்தாலிய ஐக்கியம் எற்படும் முன்பு மக்கள் அனைவரும் ஒருமித்த அரசியல் கருத்துக்களை கொண்டிருக்க வேண்டுமென்று மஜினி, கியோபெர்ட்டி, டிசாங்டிஸ் ஆகியோர் விரும்பினர். மான்சோரி (Manzori) என்பவர். ஐபிராமசி சோசி (I-PROMESISOSSI) என்ற நூலிலும், ஸில்வியோ பெல்லிஸ் (SILVIO PELLICE) என்ற தனது சுயசரிதையிலும் மக்கள் மனதில் தேசிய உணர்வை எற்படுத்தும் விதமாக எழுதினார். நாவலாசிரியரான விக்டர்ஹுகோ (VICTOR HUGO) தனது நாவல்கள் மூலமாக குடியரசுக் கொள்கைகளைப் பரப்பினார்.

**3. ரிஸ் ஆர்க்கி மென்டோ (Risorgimento)**

இத்தாலியக் கவிஞர்களும் எழுத்தாளர்களும் தங்கள் கருத்துக்கள் மூலம் மக்கள் மனதில் தேசிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். அதன் மூலம் இத்தாலியில் ஒரு புத்துயிர்ப்பு இயக்கம் தோன்றியது. இத்தாலியில் வேகமான வளர்ந்துவந்த தேசிய இயக்கம் முழுவதுமே, ரிஸ்ஆர்க்கிமென்டோ அல்லது புத்துயிர்ப்பு என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. 1847-ல் கவுண்ட்கவூர் ரிஸ் ஆர்க்கிமென்டோ என்ற பெயரில் ஒரு பத்திரிக்கையை ஆரம்பித்து தேசியக் கருத்துக்களைப் பரப்பினார். ரிஸ் ஆக்கிமென்டோ என்ற சொல் இத்தாலிய மக்களின் பழங்காலப் பெருமைகளையும், ரோமானியப் பேரரசின் புகழையும் பண்பாட்டையும், கவிஞர் தாந்தே (Dante)யின் பாடல்களையும், மறுமலர்ச்சிக்கான கலை, விஞ்ஞான வளர்ச்சியையும், மக்களுக்கு நினைவூட்டியது. இந்த எண்ணங்களின் அடிப்படையில் அரசியல் ஒற்றுமையை தற்போது ஏற்படுத்த மக்கள் ஆர்வம் கொண்டனர்.

**4. ஜோசப் மஜினியின் தூண்டுதல்**

**(Joseph Mazzini,** (1805-1875)

இவர் ஒரு சிறந்த சிந்தனையாளர், ஜெனோவா நகரவாசியான மஜினி, இத்தாலியின் ஒற்றுமையின்மையையும், நாட்டின் சீரழிந்த நிலையினையும் கண்டு கருஞ்சட்டை அணிந்து கொண்டார். இளமையில் கார்பொனாரி கழகத்தில் சேர்ந்து தீவிரமாகப் பணியாற்றினார். இவர் ஆஸ்திரியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில்

ஈடுபட்டதால் நாடு கடந்தப்பட்டார். இவருடைய நோக்கம் இத்தாலி இணைக்கப்பட்டு, சுதந்திர நாடாக ஆவது எவ்வளவு முக்கியமோ அது போல இத்தாலி ஒரு ஜனநாய குடியரசு நாடாகவும் அவது முக்கியம் என்பதாகும். தாய்நாட்டின் விடுதலைக்காக ஒவ்வொருவரும் போராடக் கடமைப்பட்டவர்கள் என்று கூறினார். இவர் 1831-ம் வருடத்தில் மார்சிலஸ் (Marseilles) என்ற இடத்தில் இளம் இத்தாலிய இயக்கம் ஒன்றை ஆரம்பித்தார். இரண்டு வருடத்தில் அதில் 60,000 உறுப்பினர்கள் சேர்ந்தார்களா.

### 5. இளம் இத்தாலிய இயக்கம் (**Young Italy movement)**

ஜோசப் மஜினியினால் 1831-ல் அரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம் தீவிரவாதத் தன்மை கொண்டது. இதன் நோக்கங்கள் பின்வருமாறு. இத்தாலிய மக்களிடையே ஒற்றுமை,தேசியம் ஆகிய லட்சியங்களைப் பரப்புதல்.

a) அந்நிய நாடுகளின் ஆதிக்கத்தை ஒழித்து இத்தாலியை இணைத்தல்.

b) நாட்டிற்காகத் தியாகம் செய்யும் உணர்வை மக்களிடம் வளர்த்தல்.

c) மக்களிடையே கல்வி அறிவை ஊட்டி நாட்டின் பழங்காலப் பெருமையையும், தற்போதையச் சிறுமையையும் எடுத்துக்கூறுதல்.

d)இத்தாலியில் ஜனநாயகக் குடியரசு ஒன்றை நிறுவுதல்.

இளம் இத்தாலியில் இயக்கம் மக்களின் அதரவைப் பெற்று பலமடைந்தது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்து இத்தாலிய இணைவிற்குத் தங்களை அர்பணித்துக் கொண்டார்கள். இவ்வாறு இத்தாலிய இணைவிற்காக அரும்பாடுபட்டவர் மஜினி என்று புகழப்படுகிறார்.

### 6. சார்லஸ் ஆல்பர்ட் (**Charles Albert**):

இவரை இத்தாலிய இணைவின் முன்னோடி என்று கூறலாம். 1831-ல் சார்டீனியாவின் அரசரானார். 1848-ம் ஆண்டின் தொடக்கத்தில் இத்தாலிய தேசிய இயக்கத்தின் சிறந்த தலைவராக மதிக்கப்பட்டார். 1848-ம் வருடப் பிப்ரவரிப் புரட்சியின் விளைவாக இத்தாலியின் பல பகுதிகளில் புரட்சி எற்பட்டது. அப்போது இத்தாலிய மக்களும் தேசியவாதிகளும் சார்லஸ் ஆல்பர்ட் ஆஸ்ரியா மீது படையெடுத்து அவர்களை இத்தாலியிலிருந்து விரட்ட வேண்டும் என்ற கேட்டுக் கொண்டனர். அதன்படி 1848, மார்ச் 23-ல் ஆஸ்திரியா மீது போர் தொடுத்தார். ஆனால் 1848 ஜுலை 25-ல் கஸ்டோஸா (Custozza) என்ற இடத்தில் ஆஸ்திரியர்களால் தோற்கடிக்கப்பட்டார். அவர் 1849-ல் மீண்டும் படையெடுத்த

போது 1849 மார்ச் 23-ல் நொவரா (Novarra) என்ற இடத்தில் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டார். இதனால் தனது அரச பதவியை இழந்தார். அதன்பின் இவரது மகன் இரண்டாம் விக்டர் இமானுவேல் அரசரானார். சார்லஸ் ஆல்பர்ட்டின் முயற்சிகள் வெற்றியடையாமல் போனாலும் பின்னர் அவரது மகன் தலைமையில் ஆஸ்திரியா தோற்கடிக்கப்பட்டு இத்தாலி ஐக்கியமடைந்தது.

### 7. இரண்டாம் விக்டர் இமானுவேல் (Victor Emmanuel II)

சார்லஸ் ஆல்பர்ட்டுக்குப்பின் சார்டீனிய மன்னராகப் பதவி ஏற்றவர் இரண்டாம் விக்டர் இமானுவேல் ஆவார். இவர் துணிவு மிகுந்தவராகவும், நேர்மையான அரசியல்வாதியாகவும் இருந்தார். பொதுவாழ்வில் கண்ணியமிக்கவர். போரில் வெற்றியோடு திரும்பும் வல்லமை பெற்றவர். இவரது தலைமையின்கீழ் பியட்மாண்ட் பிரதேசம் மட்டும் தன்னாட்சி பெற்று விளங்கியது. இந்த சார்டீனிய பியட்மாண்ட் அரசிலிருந்தே ஐக்கிய சுதந்திர இத்தாலி உருவாகியது என்று கூறலாம். இத்தாலி இணைந்த பிறகு நாட்டின் தலைவராக பணியாற்ற சம்மதித்தார். ஆஸ்திரியாவுடன் தனக்கிருந்த உறவுகளை எல்லாம் முறித்துக்கொண்டார். இவர் மீது இத்தாலியத் தேசியவாதிகள் நம்பிக்கை வைத்தனர்.

### 8. கவுண்ட்கவூர் (Count Camillo Bensoi de Cavour, 1810-1861)

பியட்மாண்டில் ஓர் உயர்குடியில் பிறந்த கவூர் முதலில் எதேச்சதிகார கொள்கையின் சார்பாளராகவே இருந்தார். படையில் சேர்ந்து பணியாற்றினார். பின்னர் படையிலிருந்து விலகி தனது கொள்கைகளை மாற்றிக் கொண்டு ஜனநாயக, தாராள கொள்கைகளைப் பின்பற்றினார். பல இடங்களுக்குச் சென்று அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அரசியலை கற்று அறிந்தார். சார்டீனிய பர்ராளுமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பியட்மாண்டில்திருச்சபை பெற்றிருந்த பொருளாதார, சட்ட சலுகைகளை சாடினார். 1852-ல் விக்டர் இமானுவேலின் தலைமை அமைச்சராகப் பதவியேற்றார். இவர் சார்டீனிய அரசரின் கீழ் இத்தாலி இணைவதை விரும்பினார். கவூர் இரண்டு சக்திகளை உடையவராக இருந்தார். ஒன்று இத்தாலியின் மீது பற்று மற்றொன்று பியட்மாண்டின் படை. ஆனால் இத்தாலி ஐக்கியமடைய இவை போதாது என்றார். ஐரோப்பிய அரசுகளின் ஆதரவாலும் கூட்டுறவாலுமே,

முக்கியமாக பிரான்ஸின் துணையுடனே இத்தாலிய இணைவை ஏற்படுத்த முடியும் என்று நம்பினார். இதுவே கவூரின் ராஜதந்திர யுக்தியாகும். இந்த யுக்திதான் இறுதியில் வெற்றியைத் தேடித் தந்தது. தனது கொள்கைகளை செயல்படுத்தும் முகமாக முதலில் பியட்மாண்டை நவீனப்படுத்தினார். அங்கு பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். இத்தாலிய ஐக்கியத்திற்கு அது தலைமை ஏற்கும்படியாக பியட்மாண்டை வலிமைப்படுத்தினார். மஜினி, கரிபால்டி ஆகியோரின் ஆதரவையும், பல ரகசியக் கழகங்கள் மற்றும் இளைஞர்களின் ஆதரவையும் பெற்று இத்தாலியை ஐக்கியப்படுத்தினார். இத்தாலிய ஐக்கியத்திற்காக தமது உயிரையே கொடுத்தார். இத்தாலிய இணைவிற்குக் காரணமான கவூர் ''இத்தாலியின் பிஸ்மார்க்'' என்ற அழைக்கப்படுகிறார்.

9. கரிபால்டி (**Giuseppe Garibaldi**):

இத்தாலிய இணைவு இயக்கத்தில் பெரும்பங்கு எடுத்துக் கொண்ட வீரர் கெசப்போகரிபால்டி ஆவார். 1807-ல் நைசில் (Nice) பிறந்த இவர் மஜினியின் சீடராவார். தீராத தேசப்பற்றும் தணியாத விடுதலை வேட்கையும் கொண்டவர். இளம் இத்தாலிய இயக்கத்தில் சேர்ந்து பல புரட்சிகளில் ஈடுபட்டார். தென் இத்தாலிய (நேப்பிள்ஸ், சிசிலி) விடுதலைக்குக் காரணமானவர் இவரே. தனது தலைமையின் கீழ் திறமை வாய்நத சுமார் முப்பதாயிரம் வீரர்களைக் கொண்ட படையை உருவாக்கினார். இப்படை வீரர்கள் சிறந்த தேசிய உணர்ச்சி கொண்டவர்கள். நாட்டுக்காக தங்கள் உயிரையும் தியாகம் செய்ய தயாராக இருந்தார்கள். தங்கள் வலிமையின் அறிகுறியாக செஞ்சட்டை அணிந்தார்கள். எனவே அவர்கள் 'செஞ்சட்டையினர்' (Red Shirts) என்று அழைக்கப்பட்டனர். 'இத்தாலிய இணைவின் போர் வீரர்' என்று கரிபால்டி அழைக்கப்படுகிறார்.

**இத்தாலிய இணைவின் பல்வேறு நிலைகள்**

இத்தாலிய இணைவு கீழ்க்கண்ட ஆறு நிலைகளில் நிறைவேறியது.

1. கிருமியப் போர் (**Grimean war**) : 1853-56

1854-ல் தொடங்கிய கிருமியப் போரில் இங்கிலாந்தும் பிரான்சும் ரஷ்யாவுக்கு எதிராகப் போரிட்டன. இப்போரில் இங்கிலாந்தையும் பிரான்சையும் ஆதரிக்கும்படி விக்டர் இமானுவேலிடம் ஆலோசனை கூறினார் கவூர். இப்போரில் சார்டீனியா உதவி

செய்தால் போருக்குப்பின் ஐரோப்பிய நாடுகளின் அரசியலில் முக்கிய இடத்தைப் பிடிக்க முடியுமென்றும் பின்னர் இத்தாலியிலுள்ள ஆஸ்திரியர்களை விரட்ட முடியுமென்றும் பின்னர் இத்தாலியிலுள்ள ஆஸ்திரியர்களை விரட்ட பிரான்சிடம் உதவி கேட்க முடியும் என்று நம்பினார் கவூர். அதன்படி பிரான்சுக்கு ஆதரவாக 15,000 சார்டீனிய வீரர்கள் அனுப்பப்பட்டனர். கிருமியாவில் செர்னயா (Cernaya) என்ற இடத்தில் சார்டீனிய வீரர்கள் வெற்றியடைந்தனர். கிருமியப் போரில் பிரான்ஸ் வெற்றியடைந்தது. 1856-ல் நடைபெற்ற பாரிசு மாநாட்டில் பங்குகொண்ட கவூர் இத்தாலியப் பிரச்சனைகளை பிற ஐரோப்பிய நாடுகளுக்குத் தெரியப்படுத்தினார். எவ்வாறு இத்தாலி வடக்கிலும் தெற்கிலும் மோசமாக ஆளப்படுகிறது என்று கூறினார். இதனால் பிற ஐரோப்பிய நாடுகளின் அனுதாபத்தைப் பெற்றார். இங்கிலாந்தின் வெளி உறவு அமைச்சர் கிளாரிண்டன் (Clarindon) கவூருக்கு ஆதரவு தெரிவித்தார். பிரான்ஸின் மூன்றாம் நெப்போலியன் இத்தாலிய இணைவிற்கு உதவுவதாக வாக்களித்தார். சார்டீனியா இப்போது ஐரோப்பிய ராஜதந்திர நடவடிக்கைகளின் மைய இடமானது. கவூரின் ராஜதந்திரயுக்தி எதிர்பார்த்த பலனைத் தந்தது.

**2. ஆஸ்திரிய-சார்டீனியப்போர் (1859-60) (லம்பார்டி-இணைக்கப்படுதல்)**

கிருமியப் போரின் மூலமாக பிரெஞ்சுப் பேரரசர் மூன்றாம் நெப்போலியனின் நட்பு கபூருக்குக் கிடைத்தது. இத்தாலிய சுதந்திர இயக்கத்தில் உண்மையான இரக்கம் நெப்போலியனிடமிருந்தது. அதனுடன் பிரான்சின் அதிகாரத்தையும், தனது அரசியல் தந்திரத் திறமையையும் ஐரோப்பா முழுவதிற்குமே காட்டிக் கொள்வதில் ஆவல் உள்ளவராய் இருந்தார். இந்த வாய்ப்பை கவூர் பயன்படுத்திக்கொண்டார். 1858 ஜுலை மாதம் பிளாம்பியர்ஸ் (Plombiors) என்ற நகரில் நெப்போலியனுடன் மறைவானதும் புகழ் பெற்றதுமான சந்திப்பை மேற்கொண்டார். பேச்சுவார்த்தையின் இறுதியில் டிசம்பர் மாதம் ரகசிய உடன்படிக்கை ஒன்ற செய்து கொள்ளப்பட்டது அதன்படி.

a) இத்தாலியின் வடபகுதியிலுள்ள லம்பார்டி, வெனிஷியா ஆகிய பகுதிகளிலிருந்து ஆஸ்திரியாவை வெளியேற்றி அவைகளைச் சார்டீனியாவுடன் இணைப்பதற்கு பிரான்ஸ் உதவி செய்யும்.
b) சார்டீனியாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் போர் மூண்டால் இரண்டு லட்சம் போர் வீரர்களை சார்டீனியாவுக்கு ஆதரவாக அனுப்புவதாக நெப்போலியன் வாக்களித்தார்.
c) நெப்போலியன்செய்யும் உதவிக்குப் பரிசாக செவாய்நைஸ் (Savoy, Nice) ஆகிய பகுதிகள் நெப்போலியனுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

d) லம்பார்டி, வெனிஷியா தவிர மீதி உள்ள இத்தாலியப் பகுதிகள் எல்லாம் இணைக்கப்பட்டு போப்பாண்டவரின் தலைமையில் ஒரு கூட்டமைப்பாக வைக்கப்படவேண்டும்.

e) ஏதேனும் ஒரு காரணத்தைக் காட்டி கவூர்தான் போரை ஆரம்பித்து வைக்கவேண்டும்.

இந்த உடன்படிக்கைக்குப் பிறகு, விக்டர் இமானுவேல் தமது பாராளுமன்றத்தைக் கூட்டி அதில் 'தான் இத்தாலி முழுவதிலுமுள்ள மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யப் போவதாக' அறிவித்தார். இதனைக் கேட்ட ஆஸ்திரியப் பேரரசர் வெகுண்டெழுந்து 1859, ஏப்ரல் 19-ம் தேதி பியட்மாண்டின் மீது படையெடுத்தார். போர் ஆரம்பமானது. பிளாம்பியர்ஸ் உடன்படிக்கைப்படி சார்டீனியாவுக்கு உதவுவதற்காக பிரெஞ்சுப்படை ஒன்றை அனுப்பிபனார் மூன்றாம் நெப்போலியன். 1859 ஜுன் 4-ல் மெஜண்டா (Megenta) என்ற இடத்தில் நடைபெற்ற கடும் சண்டையில் ஆஸ்திரியப் படைகளை ஜுன் 24-ம் தேதி சால்பரினோ (Soldferino) என்ற இடத்தில் பிரெஞ்சு சார்டினியக் கூட்டுப்படைகள் தோற்கடித்தன. லம்பார்டி, வெனிஷியா ஆகிய பகுதிகளிலிருந்து ஆஸ்திரியா விரட்டப்பட்டது.

இந்த வெற்றிகளுக்குப்பின் திடீரென போரை முடித்துக் கொண்டார் மூன்றாம் நெப்போலியன். ஏனெனில் அவர் சக்தி வாய்ந்த இத்தாலியை உருவாக்க விரும்பாததே காரணமாகும். தனது தளபதி புளுரி (Fleury) என்பவரை ஆஸ்திரியப் பேரரசர் பிரான்சிஸ் ஜோசப்பைச் சந்திக்க அனுப்பினார். அவரும் போரை முடிக்க விருப்பம் கொண்டவராக இருந்தார். 1859, ஜுலை 11-ம் தேதி நெப்போலியனை வில்லாபிராங்கா (Villafranca) என்ற இடத்தில சந்தித்து அவருடன் உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டது. இந்தப்பேச்சு வார்த்தையிலே சார்டீனியா சேர்த்துக் கொள்ளப்படவில்லை. வில்லாபிராங்கா உடன்படிக்கை 1859 நவம்பர் 10-ல் சூரிச் அமைதி ஒப்பந்தப்படி (Peace of Zuriich) உறுதிப்படுத்தப்பட்டது.

**வில்லாபிராங்கா உடன்படிக்கைபடி.**

a) லம்பார்டி மூன்றாம் நெப்போலியன் மூலம் விக்டர் இமானுவேலுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

b) வெனிஷியாவை ஆஸ்திரியாவே வைத்துக் கொள்ள வேண்டும்.

c) பிரான்சும், ஆஸ்திரியாவும், போப்பாண்டவரின் தலைமையில் ஐக்கிய இத்தாலி உருவாக்கப்பட உதவி செய்ய வேண்டும்.

d) பார்மா, மாடனா, டஸ்கனி ஆகிய பகுதிகளிலிருந்து விரட்டப்பட்ட அரசர்கள்மீண்டும் அங்கு அமர்த்தப்பட வேண்டும்.

e) போப்பாண்டவர் தனது ஆட்சிப் பகுதியில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும்.

f) நெஸ், செவ்வாய், ஆகிய பகுதிகள் பிரான்சுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

இந்த உடன்படிக்கையினால் மூன்றாம் நெப்போலியன் இத்தாலிய மக்களால் நம்பத்தகாதவர் என்ற தூற்றப்பட்டார். இத்தாலி இணைவதை இவ்வுடன்படிக்கைத் தடுக்கிறது என்றும் எனவே இதனை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும் இமானுவேலிடம் கவூர் கூறினார். ஆனால் இமானுவேல் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே பதவியை கவூர் ராஜினாமா செய்தார். ஆஸ்திரிய சார்டீனியப் போரின் விளைவாக லம்பார்டி சார்டீனிய-பியட்மாண்ட அரசுடன் இணைக்கப்பட்டது.

## 3. பார்மா, மாடனா, டஸ்கனி, ரொமாக்னா ஆகியவை இணைதல் (Modena, Tuscany, Romagna):

ஆஸ்திரிய சார்டீனியப் போரில் மூன்றாம் நெப்போலியன் இத்தாலிக்கு துரோகம் செய்தார் என்றாலும் அது இத்தாலிக்குப் பல வழிகளில் நன்மையாகவே முடிந்தது. வில்லாபிராங்கா உடன்படிக்கையின்படி, பார்மா, மாடனா, டஸ்கனி, ரொமாக்னா ஆகிய பகுதிகளில் வைக்கப்பட்ட பழையஆட்சியாளர்களை, மக்கள் எற்றுக்கொள்ளவில்லை. அந்தப்பகுதிமக்களிடம் மேலோங்கி நின்றவை கவூர், கரிபால்டி, மஜினி ஆகியோரின் பெயர்களே ஆகும். கவூரின் நெருங்கிய நண்பரான பரினி (Farini) மாடனாவிலும் பார்மாவிலும் ரிகாசோலி (Ricasoli) என்பவர் டஸ்கனியிலும் புரட்சிக் கருத்துக்களைப் பரப்பினர். அங்கு தங்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். அதன் விளைவாக அங்கிருந்த ஆட்சியாளர்கள் ஓடிவிட்டனர். 1859-ஆகஸ்ட் மாதம் பிளாரன்ஸ் நகரில் கூடிய பாராளுமன்றம், டஸ்கனி இமானுவேலின் தலைமையை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தது. 1860-ஜனவரியில் மீண்டும் பதவியேற்றிருந்த கவூர் இந்த மத்திய இத்தாலியப் பிரதேசங்கள் அங்குள்ள மக்களின் விருப்பப்படியே இணைக்கப்படும் என்றார். மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இத்தாலியுடன் இணைவதற்கு ஆதரவாக 3,86,000 ஓட்டுகளும், எதிராக 15,000 ஓட்டுகளும் கிடைத்தன. எவ்விதப் போரும் இல்லாமல் பார்மா, மாடனா, டஸ்கனி,ரொமாக்னா ஆகிய மத்திய இத்தாலியப் பகுதிகள் பியட்மாண்ட சார்டீனிய அரசுடன் இணைக்கப்பட்டன.

### 4. நேப்பிள்ஸ், சிசிலி போப்பின் பகுதிகள் இணைக்கப்படுதல்:

இத்தாலி முழுமையாக இணைக்கப்பட வேண்டும் என்ற கவூரின் எண்ணம் நிறைவேற வேண்டுமானால் போப்பின் பகுதிகளும் இத்தாலியின் தென்பகுதியிலுள்ள

நேப்பிள்ஸ், சிசிலி ஆகியவைகளும் இத்தாலியுடன் இணைக்கப்படவேண்டும். போப்பாண்டவர் 9-ம் பயஸ் இத்தாலியின் விடுதலை மற்றும் ஐக்கியத்தை எதிர்ப்பவரானார். நேப்பிள்சும், சிசிலியும் 1859-ல் பதவி ஏற்ற இரண்டாம் பிரான்சிஸ் என்ற போர்பான் மன்னரின் கொடுமை வாய்ந்த பிற்போக்கான அரசரின் கீழ் இருந்தன. இப்பகுதிகளை வெற்றிகரமாக இணைத்துக் கொடுத்த பெருமை கரிபால்டியையே சாரும். கவூரின் வேண்டுகோளுக்கிணங்க நோபிள்சையும், சிசிலியையும் கைப்பற்ற கரிபால்டி 1136 செஞ்சட்டை வீரர்களுடன் 1860 மே 5-ம் தேதி ஜெனாவா துறைமுகத்திலிருந்து இரண்டு கப்பல்களில் புறப்பட்டார். மே 11-ம் தேதி சிசிலியிலுள்ள மர்சலா (Marsala) என்ற இடத்தில் வந்து இறங்கினார். பின்னர் ராணுவத் தலைமையிடமாகத் திகழந்த பாலர்மோவை (Palermo) நோக்கி முன்னேறினார். சிசிலி மக்களின் ஆதரவுடன் ராணுவத்தளபதி லான்சா (Lanza) வை மிக எளிதில் மர்சலாவுக்கு வெளியே தோற்கடித்தார் கரிபால்டி.

இதே நேரத்தில் நேப்பிள்சிலும் தேசிய இயக்கம் வலுவடைந்தது. தேசியவாதிகள் கரிபால்டியை உதவிக்கு அழைத்தார்கள். எனவே செஞ்சட்டையினர் டிரெனியன் கடலைக் கடந்து நேப்பிள்சில் தென்பகுதியில் நுழைந்தனர். நேப்பிள்ஸ் மன்னர் இரண்டாம் பிரான்சிஸ் 1860-செப் 6-ல் நாட்டை விட்டு ஓடி ரோமில் தஞ்சமடைந்தார். போர்பான் வம்ச அரசர் தூக்கி எரியப்பட்டதால் கவூர் மகிழ்ச்சி அடைந்தார். நேப்பிள்ஸ், சிசிலி ஆகிய பகுதிகளை இத்தாலியின் பெயராலும், விக்டர் இமானுவேலின் பெயராலும் ஆளப்போவதாக கூறிவிட்டார் கரிபால்டி. சார்டீனியாவுடன் இவை இணைக்கப்படும் என்று அறிவிக்க மறுத்துவிட்டார் கரிபால்டி.

எனவே கரிபால்டியின் எண்ணம் மீது ஐயம் கொண்ட கவூர், அவருக்கு முன்பு போப்பின் பகுதிகள் மீது படையெடுக்க முற்பட்டார். இதற்கிடையில் போப்பின் பகுதிகளிலுள்ள மார்ச்சஸ் (Marches).உம்பிரியா (Umbira) ஆகிய இடங்களில் புரட்சி தோன்றியது. போப்பின் படைகள் இக்கிளர்ச்சிகளை அடக்க முற்பட்ட போது கவூர் போப் ஒன்பதாம் பயசுக்கு (Pius IX)“புரட்சியாளர்களை அடக்க முற்பட்டால் அதனைத் தடுக்க சார்டீனியா அரசுக்கு உரிமை உண்டு’’ என்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல் அதனையே காரணமாகக் கொண்டு இத்தாலியப் படைகளைப் போப்பின் அரசுக்குள் அனுப்பினார். போப்பின் படைகள் கேசில்பிடார்டோ(Casteifidardo) என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டது. ரோம் நீங்கலாக போப்பின் பகுதிகள் இணைக்கப்பட்டது. இதன் பின்னர் விக்டர் இமானுவேலின் வெற்றிப்படைகள் நேப்பிள்ஸ் நோக்கி வந்தன. அவரைச் சந்தித்த கரிபால்டி தனது வெற்றிகளை இத்தாலிய இணைவிற்கு அர்ப்பணித்தார்.

எவ்விதப் பிரதிபலனும் எதிர்பாராமல் தனது சொந்த ஊரான கெப்ரேரா (Caprera) போய்ச் சேர்ந்தார். நேப்பிள்சிலும் சிசிலியிலும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மக்களின் பேராதரவுடன் அவை இத்தாலியுடன் இணைக்கப்பட்டன.

1861, பிப்ரவரி 18-ம் தேதி இத்தாலியப் பாராளுமன்றம் டூரின் (Turin) நகரில் கூட்டப்பட்டது. இதுவரை சார்டீனிய அரசாக இருந்தது இப்போது இத்தாலிய அரசாக (Kingdom of Italy) மார்ச 17-ம் தேதி'இத்தாலிய அரசராகப்' பிரகடனப்படுத்தப்பட்டது.இரண்டாம் விக்டர் இமானுவேல் 'இத்தாலி அரசராகப்' பிரகடனப்படுத்தப்பட்டார். பதினெட்டு மாதங்களில் உருவான புதிய இத்தாலிய அரசு 22 மில்லியன் மக்களைக் கொண்டதாக இருந்தது. ஆனாலும் இத்தாலி அரசு முழுமையடைய எஞ்சியுள்ள வெனிஷியாவும், ரோம் நகரும் இத்தாலியுடன் இணைக்கப்பட வேண்டும்.

### 5. வெனியா இணைக்கப்படுதல் (ஆஸ்திரிய பிரயப்போர்): 1866

இத்தாலி இணைவிற்காகப் பாடுபட்ட கவூர் 1861-ஜுன் மாதம் மரணமடைந்தார். அவரது எண்ணங்கள் கிட்டத்தட்ட எல்லாம் நிறைவேறி விட்டன. இத்தாலிய ஐக்கியம் நிறைவடைய வேண்டுமானால் எஞ்சியுள்ள ரோமைச் சுற்றியிருந்த போப்பின் பகுதியும், வெனிஷியாவும் இணைக்கப்பட வேண்டும். 1866-ல் ஏற்பட்ட ஆஸ்திரிய-பிரஷ்யப் போரின் விளைவாக வெனிஷியா இணைக்கப்பட்டது. மத்திய ஐரோப்பாவில் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த பிரஷ்யா ஆஸ்திரியாவைத் தோற்கடிக்க பல ராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அதன் சான்சலரான பிஸ்மார்க்நட்பு நாடுகளைப் பெறுவதில் ஆர்வம் கொண்டார். "வெனிஷியாவிலுள்ள ஆஸதிரியர்களை இத்தாலி தாக்குமானால் அச்சமயத்தில் ஆஸ்திரியா தன் கவனத்தையெல்லாம் வெனிஷியாவில் வைத்திருக்கும் அவ்வேளையில் பிரஷ்யாவை ஆஸ்திரியாவால் வலிமையாக எதிர்க்க முடியாது" என்று முடிவு செய்த பிஸ்மார்க் இமானுவேலின் நட்பை நாடினார். "போர் ஆரம்பித்தவுடன் பிரஷ்யாவுக்கு ஆதரவாக இத்தாலியப் படைகள் வெனிஷியாவிலுள்ள ஆஸ்திரியர்களைத் தாக்க வேண்டுமென்றும், அதற்காக ஆஸ்திரியர்களை தோற்கடித்தபின் வெனிஷியாவை இமானுவேலுக்குக் கொடுப்பதாக" உறுதியளித்தார் பிஸ்மார்க்.

1866-ஏப்ரலில் போர் மூண்டது. அப்போது இத்தாலியில் திறமைமிக்க படைத்தலைவர்களும் இல்லை படையில் ஒழுங்குமில்லை. படையெடுப்பைக் குறித்து திட்டமான நடவடிக்கைகளும் இல்லை. எனவே இத்தாலியப்படைகள் சரியாகப் போரிடவில்லை. ஜுலை 24-ல் கஸ்டோசா (Custozza) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் இத்தாலிய ராணுவம் தோற்கடிக்கப்பட்டது. இத்தாலியக் கப்பற்படை லிசா

(Lissa) என்ற இடத்தில் தோற்றுப்போனது. ஆனால், பிஸ்மார்க்கின் கணிப்பின்படி, ஆஸ்திரியாவின் பெரியபடை ஒன்றை இத்தாலியில் தங்கியிருக்கச் செய்துவிட்டதின்படி பிரஷ்யாவுக்கு மதிப்பிட முடியாத உதவியைச் செய்தனர் இத்தாலியர். இப்போரில் பிரஷ்யா வெற்றியடைந்தது. போரின் முடிவில் 1866 ஆகஸ்ட் 23-ல் ஏற்பட்ட பிரேக் (Prague) உடன்படிக்கையின்படி வெனிஷியா இத்தாலிக்குக் கொடுக்கப்பட்டது. வெனிஷியாவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 6,40,000 வாக்குகள் ஆதரவுடன்இத்தாலியுடன் வெனிஷியா இணைந்தது.

### 6. ரோம் இணைக்கப்படுதல்: 1870

எஞ்சிய பகுதியான ரோம் மட்டும் ஐக்கிய இத்தாலியில் இணைக்கப்படாமல் இருந்தது. காரணம் 1849-ம் வருடம் முதல் பிரெஞ்சுப் படை ஒன்றை போப்பாண்டவருக்குப் பாதுகாப்பாக ரோமில் வைத்திருந்தார் மூன்றாம் நெப்போலியன். ரோமை இணைக்க இமானுவேல் விரும்பினாலும் அதற்காக பிரான்சுடன் போர் தொடுக்க விரும்பவில்லை. இதற்கிடையில் போப்பாண்டவர் 9-ம் பயஸ் மிதவாத எதிர்ப்பு சக்திகளுடன் சேர்ந்தார். 1864 டிசம்பரில் 'முன்னேற்றம், மிதவாதம், புதிய இத்தாலிய அரசு ஆகியவையுடன் இணங்கி நடக்க வேண்டும் என்பது தவறு' என்று தெரிவித்திருந்தார்.

1870-ல் பிரான்சுக்கும் பிரயாவுக்குமிடையே போர் எற்பட்டதால் ரோம் நகரில் வைக்கப்பட்டிருந்த படைகளை திரும்ப அழைக்கும் நிலை மூன்றாம் நெப்போலியனுக்கு ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட இமானுவேல் 1870 செப் 20-ம் தேதி ஒரு படையை அனுப்பி ரோமைக் கைப்பற்றினார். ரோமில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மக்களின் ஆதரவுடன் இத்தாலியுடன் ரோம் இணைக்கப்பட்டது. ரோம் நகர் ஐக்கிய இத்தாலியின் தலைநகராக அறிவிக்கப்பட்டது.

இவ்விதமாக இத்தாலிய இணைவு முற்றுப் பெற்றது. இத்தாலியர் மகிழ்ச்சியடைந்தனர். தாந்தே முதல் மஜினி காலம் வரையிலுள்ள இத்தாலியத் தலைவர்களின் கனவு நனவாகியது. இரண்டாம் விக்டர் இமானுவேலின் தலைமையும், கவூரின் ராஜதந்தரமும், மஜினியின் இலட்சியக் கோட்பாடுகளும், கரிபால்டியின் செயல் திறனுமே வலிமையான, சுதந்திரமான ஐக்கிய இத்தாலி உருவாகக் காரணமாக அமைந்தது.

## 9. ஜெர்மானிய இணைவு

## (UNIFICATIN OF GERMANY)

கி.பி. 1800-ம் ஆண்டுக்கு முன்பு ஜெர்மனி 360-க்கும் மேற்பட்ட பல சிறுசிறு நாடுகளைக் கொண்டிருந்தது. இந்த நாடுகளுக்கெல்லாம் தலைமை வகித்திருந்தவர் புனித ரோமானியப் பேரரசர் ஆவார். ஆனால் பெயரளவுக்குத் தான் ரோமானியப் பேரரசர் தலைவராக இருந்தார். இந்த ஜெர்மானிய நாடுகள் அனைத்தும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் சுதந்திரமான கொள்கைகளையே பின்பற்றி வந்தன. 18-ம் நூற்றாண்டின் இறுதியில் ஜெர்மானியர்களிடம் தேசிய உணர்வு ஏற்ப்பட்டது. அதனை ஜெர்மானிய எதேச்சதிகார மன்னர்கள் நசுக்கினர். மக்களால் சாதிக்க முடியாததை ஜெர்மானிய நாடுகளில் வலிமை பெற்று விளங்கிய பிரஷ்யாவின் தலைமையில் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜெர்மானிய நாடுகள் அனைத்தும் இணைந்து 'ஐக்கிய ஜெர்மனி' உருவானது. இதற்கு முக்கியக் காரணமானவர் பிரஷ்யாவின் சான்சலர் பிஸ்மார்க் என்பவராவார். 'நவீன ஜெர்மானியை உருவாக்கியவர்' என்று பிஸ்மார்க் புகழப்படுகிறார்.

## ஜெர்மானிய இணைவு ஏற்படச் சாதகமாக இருந்த சூழ்நிலைகள்.

### 1.நெப்போலியனின் பங்கு:

நெப்போலியன் போனபார்ட் சிதறுண்டு கிடந்த சுமார் 360 ஜெர்மானிய நாடுகளை வென்றார். பின்னர் அவைகளை 39 நாடுகளாக ஒன்று சேர்த்து அதற்கு 'ரைன் கூட்டமைப்பு' நாடுகள் என்று பெயரிட்டார். இவ்வாறு தன்னையும் அறியாமலேயே ஜெர்மானிய இணைவுக்கு உதவினார் நெப்போலியன். ஜெர்மானிய மக்களிடம் தேசிய உணர்வு எற்படக் காரணமாக இருந்தார்.

### 2. வீயன்னா மாநாடு:

1815-ல் கூடிய வீயன்னா மாநாடு நெப்போலியனால் உருவாக்கப்பட்ட ரைன் கூட்டமைப்பைக் கலைக்கவில்லை. அதன் பெயர் மட்டும் ஜெர்மானியக் கூட்டமைப்பு நாடுகள் என்று மாற்றப்பட்டது. ஆனால் இந்த கூட்டமைப்பு ஆஸ்திரியாவின் தலைமையில் வைக்கப்பட்டது. இவ்வாறுவீயன்னா மாநாடும் ஜெர்மானிய நாடுகளின் இணைவுக்கு ஒரளவு உதவியது.

### 3. தேிசய உணர்வு:

பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் தேசிய உணர்வு ஐரோப்பாவெங்கும் பரவியது. இத்தேசிய உணர்ச்சி மக்களிடையேயும் பரவியது. 1830-ம் வருட ஜுலைப் புரட்சி,1848-ம் வருட பிப்ரவரிப் புரட்சி ஆகியவற்றின் பிரதிபலிப்புகள் ஜெர்மானிய நாடுகளிடமும் காணப்பட்டது. தேசியமும், விடுதலை உணர்வும் மக்களிடம் வேகமாக வளர்ந்தன.

### 4. ஜெர்மானிய அறிஞர்களின் பங்கு:

ஜொ்மானிய மக்களிடம் தேசிய உணர்வை ஏற்படுத்தியதில் ஜொ்மானிய அறிஞர்கட்குப் பெரும் பங்கு உண்டு. அறிஞர்களான காண்ட், பிட்சே, ஹெய்ன். பீதோவன், ரிச்சா்ட் வாக்னா் (Kant, Fitche, Heine, Beethovan, Richard, Wagnar) பொன்றவர்கள் தாங்கள் எழுதிய நூல்களின் மூலம் மக்களிடையே முற்போக்குக் கருத்துக்களைப் பரப்பினார்கள். அவர்கள் ஐக்கிய ஜொ்மனியை உருவாக்கவும் ஒரு குடியரசை ஏற்படுத்தவும் ஆதரவு தெரிவித்தார்கள். ஜொ்மானிய ஐக்கியம், தேசியம் ஆகிய கருத்துக்கள் பலகலைக் கழகங்கள் மூலமாகவும் வளர்ந்தன. மாணவர்களும், கல்லூரிப் பேராசிரியர்களும் புரட்சி இயக்கங்கட்கு ஆதரவு தெரிவித்தனர். இவை ஜொ்மானிய இணைவிற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கியது.

### 5. பிரஷ்யாவின் எழுச்சி:

பிரஷ்யாவின் எழுச்சி ஜொ்மானிய இணைவு ஏற்பட முக்கியமான காரணமாகும். பல சிதறுண்ட பகுதிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட பிரஷ்யா ஹோகன் சொலா்ன் குடும்பத்தைச் சேர்ந்த மன்னா்களால் ஆளப்பட்டு மாபெரும் சக்தியாக ஐரோப்பாவில் விளங்கியது. முதலாம் பிரடரிக் வில்லியத்தின் காலத்தில் (1713-1740) பிரஷ்யாவில் ராணுவ சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டது. மாமன்னா் (1740-86) பிரடரிக் தன்னுடைய நாட்டை ஐரோப்பாக் கண்டத்திலேயே வலிமை வாய்ந்த நாடாக மாற்றியமைத்தார். எனவேதான் வலிமையான பிரஷ்யாவின் தலைமையில் மற்ற ஜொ்மானிய நாடுகள் இணைய முடிந்தது.

### 6. பிராங்பர்ட் பாராளுமன்றம்:

1848-ம் ஆண்டு பிப்ரவரிப் புரட்சியின் விளைவாக ஜொ்மானிய நாடுகளில் இருந்த விடுதலை இயக்கத் தலைவா்களும், தேசிய இயக்கத்தினரும் சட்டவரம்புக்குட்பட்ட ஆட்சி வேண்டுமென்று கேட்டனா். பிரஷ்யா மன்னா் நான்காம் பிரடரிக் வில்லியமும், தேசீய இயக்கத்தினா் கேட்டவற்றைக் கொடுக்க சம்மதித்தார். ஜொ்மனிக்குப் புதிய அரசியல் சட்டம் இயற்றும் நோக்கத்துடன் பிராங்பர்ட் (Frankfurt) என்னுமிடத்தில் நாடாளுமன்றம் ஒன்று ஜொ்மானிய இளவரசா்களால் கூட்டப்பட்டது. அதில் ஜொ்மானிய ஒருமைப்பாட்டிற்காக ஒரு அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டது. அதன்படி ஆஸ்திரியா நீங்கலாக ஜொ்மானிய நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்த ஜொ்மானியப் பேரரசை உருவாக்கவும், அதன் தலைவராக ‘ஜொ்மானியப் பேரரசைத்’ தோ்ந்தெடுக்கவும் முடிவு செய்யப்பட்டது. 1849, மார்ச் மாதம் இப்புதிய தலைமையையும், பதவியையும் பிரஷ்ய மன்னா் நான்காம் பிரடரிக் வில்லியத்திடம் அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால் நான்காம் பிரடரிக் வில்லியம் ஜொ்மானிய இளவரசா்கள் தந்த பதவியையும், ஜொ்மானிய நாடுகளின் தலைமையையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

இதற்குக் காரணம், ஜொ்மானியப் பேரரசராக முடிசூட்டிக் கொண்டால் ஆஸ்திரியா தனது நாடான பிரஷ்யா மீது படையெடுக்கும் என்று பயந்ததே ஆகும். இவ்வாறு அவா் மறுத்துவிட்டதால் பிராங்பா்ட் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. ஆனால் அதிலிருந்து ஜொ்மனி ஐக்கியம் அடைய வேண்டுமென்ற எண்ணம் நாடெங்கிலும் பரவியது. பெரும்பாலானவா்கள் வன்முறையால் ஜொ்மானிய இணைவை ஏற்படுத்த முடியும் என்று கூட நம்பினா்.

## 7. சால்வரின் (Zollverin or Customs Union)

ஜொ்மானிய இணைவிற்கு முதல்படியாக விளங்கியது சால்வரின் என்ற ‘‘சுங்க ஐக்கியமாகும்’’. பொருளாதார ரீதியிலான இந்த அமைப்பு 1818-ல் மிகச்சிறிய அளவில் ஏற்படுத்தப்பட்டது. ஜொ்மானிய நாடுகளுக்கிடையே வணிகக் கட்டுப்பாடுகள் அதிகமிருந்தது. ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு எடுத்துச் செல்லப்படும் பொருட்களுக்கு சுங்கவரி போடப்பட்டதால் பொருளாதார வளா்ச்சி பாதிக்கப்பட்டது. கள்ளக் கடத்தல் அதிகமாகியது. எனவே பிரஷ்யா பல ஆண்டுகள் முயற்சி செய்து இந்த சுங்க வரி விதிப்பை நீக்கி தடையிலா வாணிப முறையை 1818-ல் எற்படுத்தியது. இதற்கு சால்வரின் என்று பெயா்.

இதன்படி பிரஷ்யாவின் தலைமையில் ஜொ்மன் நாடுகள் தங்களுக்குள் இருந்த பொருளாதாரத் தடையை விலக்கி ஒற்றுமையை ஏற்படுத்தின. ஆஸ்திரியா இதில் சோ்த்துக் கொள்ளப்படவில்லை. இந்த சால்வரின் அமைப்பின்படி ஜொ்மானிய வியாபாரிகளும் உற்பத்தியாளா்களும் பயன் அடைந்தனா். சால்வரினில் அங்கம் வகிக்காத நாடுகள் மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. 1834-ல் பவேரியாவும், சாக்சனியும் சோ்ந்தன. பிரஷ்யாவின் தலைமையில் உருவான இந்த அமைப்பின் விளைவுகளைப் பற்றி காலங்கடந்து உணா்ந்து கொண்ட மெட்டா்னிக் 1834-ல் எதிா்ப்பை ஏற்படுத்தினாா். அது பலன் ஏதும் அளிக்கவில்லை. 1844-க்குள் ஹனோவா், ஒல்டன்பா்க் மெக்லன்பா்க், தவிர எல்லா ஜொ்மன் நாடுகளும் சால்வரினில் சோ்ந்துவிட்டன.

இவ்வாறு ஜொ்மானிய நாடுகள் பிரஷ்யாவுடன் பொருளாதார வலையால் பின்னப்பட்டன. அந்த வலை வலிமையாகவும் இணைப்பு நெருக்கமாகவும் வளா்ந்தது. 1848-க்குள் பிரஷ்யா ஜொ்மனியில் பொருளாதார மேன்மை பெற்றுவிட்டது. பின்னா் இதுவே அரசியல் ஒற்றுமையை எற்படுத்தி ஜொ்மானிய இணைவுக்கு வழிவகுத்தது.

## 8. பிரஷ்ய மன்னா் முதலாம்வில்லியம்:

1860-ம் ஆண்டுகளில் ஐரோப்பிய அரசியல் நடவடிக்கைகளின் மைய இடமாக விளங்கியது பிரஷ்யாவும், ஜொ்மனியுமே ஆகும். 1861-ல்பிரஷ்யாவின் மன்னராக முதலாம்

வில்லியம் பதவி ஏற்றதிலிருந்து பிரஷ்ய அரசியலில் புதிய சகாப்தம் தொன்றியது. இவர் ஹோகன் சோலர்ன் வம்ச மன்னர்களின் கொள்கைகளை அப்படியே பின் பற்றினார். “இந்த மணிமுடி கடவுளிடமிருந்தே வந்தது. கடவுளின் கைகளிலிருந்தே நான் இதனைப் பெற்றுக் கொண்டேன்” என்றார். ஆனால் ஜெர்மானிய நாடுகளின் ஒற்றுமை உணர்வுக்கு மதிப்பளித்தார். அப்போது பிரஷ்யாவில் இருந்த தேசிய சங்கத்தின் கோஷமான “ஒற்றுமையாக இரு ஒற்றுமையாக இரு” என்பதை இவர் எதிர்க்கவில்லை. இவருடைய தலைமையில் தான் ஐக்கிய ஜெர்மனி உருவானது.

9. பிஸ்மார்க்(**Otto von Bismark**)

பிரஷ்யமன்னர் முதலாம் வில்லியம் ஆட்சியில் மக்கள் அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் கேட்டுப் போராடினார்கள். பிரச்சனைகளைத் தீர்க்க முடியாத வில்லியம் 1862-ல் பிஸ்மார்க் என்பவரை முதலமைச்சராக நியமித்தார். அளவற்ற துணிவும், ஆற்றலும்பெற்றவர் பிஸ்மார்க். இவர் பதவி ஏற்றது ஜெர்மானிய வரலாற்றில் புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தது. பிஸ்மார்க் பிரஷ்யாவின் தலைமையில்தான் ஜெர்மனி ஐக்கியப்பட வேண்டும் என்று விரும்பினார். அப்போது ஜெர்மனியில் பரவிய தேசிய இயக்கத்தை மிகக் கவனமாக அணுகினார். ஏனெனில் அந்த இயக்கத்தில் ‘அரசியலமைப்பு சார்ந்த அரசு அமைக்கும் எண்ணமும், ஜெர்மானிய ஒற்றுமையை ஏற்படுத்தும் உணர்வும்’ கலந்திருந்ததுதான் காரணம். இரண்டாவது கோரிக்கைகாக மட்டுமே போராடும்படி மக்களைக் கேட்டுக் கொண்டார் பிஸ்மார்க்.மேலும் ஜெர்மானிய நாடு ஆஸ்திரியாவின் நேரடி, மறைமுகக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்ததால், ஆஸ்திரியாவை ஜெர்மனியைவிட்டு விரட்டினால்தான் ஜெர்மானிய இணைவு நடைபெறும் என்று நம்பினார். இதற்காக இவர் பின்பற்றிய கொள்கைதான் இரும்பும் குருதியும் (Blood and Iron) என்பதாகும். “வெறும் பாராளுமன்ற விவாதங்களினாலோ, பெரும்பான்மை வாக்களிப்பாலோ எந்தப் பிச்சனையையும் தீர்க்க முடியாது. இரும்பும் குருதியுமெ சாதனைகளைப் படைக்கும்” என்று கூறி பலாத்காரத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்தார். அதன்படியே ஜெர்மானிய இணைவிற்காக கீழ்க்கண்ட மூன்று பொர்களில் ஈடுபட்டார் பிஸ்மார்க்.

## ஜெர்மானிய இணைவை ஏற்படுத்திய மூன்று போர்கள்:

1. டென்மார்க்குடன் போர் (**War with Denmark),** 1864:

மிகவும் பழைமை வாய்ந்த, மதிப்பு மிகுந்த முடியாட்சியைக் கொண்ட நாடு டென்மார்க் ஆகும். அதன் தென்பகுதியின் எல்லையில் இருந்தவைதான் செலஸ்வீக்,

ஹொல்ஸ்டீன் (Schlewin, Holstein) என்ற இரு பகுதிகள் ஆகும். அவை டென்மார்க்கின் பகுதிகளாக இல்லையென்றாலும் நீண்ட காலமாகவே டென்மார்க்கைச் சார்ந்தே இருந்தன. செலஸ்விக்கில் டென்மார்க்கியர்கள் அதிகமாகவும், ஹோல்ஸ்டீனில் ஜெர்மானியர் பெரும்பான்மையினராகவும் இருந்தனர். இந்த இரண்டும் தனிததனியாகவே இருந்தாலும் பொதுவான மந்திரிசபையே செயல்பட்டு வந்தது. 1815-ம் வருட வீயன்னா ஏற்பாட்டின்படி ஹோல்ஸ்டீன் ஜெர்மானிய நெகழ் கூட்டமைப்பில் ஒரு அங்கமாக அங்கீகரிக்கப்படடிருந்தது.

1848-ம் வருட பிப்ரவரிப் புரட்சி இந்த இரண்டு பகுதிகளிலும் பரவியது. டென்மார்க்கிடமிருந்து பிரிந்து செல்ல முயற்சிக்கப்பட்டது. ஆனால் டென்மார்க் மன்னரான மூன்றாம் பிரடரிக் அம்முயற்சியினை முறியடித்தார். பின்னர் 1852-ல் பிரான்ஸ், பிரஷ்யா, ஆஸ்திரியா, ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் லண்டனில் கூடி டென்மார்க்கின் எதிர்காலம் பற்றிய லண்டன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டன. அதன்படி வாரிசு இல்லாத டென்மார்க் மன்னர் மூன்றாம் பிரடரிக் காலத்திற்குப்பின் ஒன்பதாம் கிறிஸ்தியான் (Christian IX) என்பவர் அரசாவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. பிரடரிக் இறந்த பின் 1863-ல் ஒன்பதாம் கிறிஸ்தியான் டென்மார்க்கின் மன்னரானார். ஆனால் இந்த ஏற்பாட்டை பிராங்பர்ட்டிலிருந்த ஜெர்மானிய பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. அத்துடன் செலஸ்விக், ஹோல்ஸ்டீன் பகுதிகள் அகஸ்டன்பர்க் கோமகனான பிரடரிக் என்ற ஜெர்மானியருக்குத்தான் சேர வேண்டும் என்று கூறியது. ஜெர்மானியரின் தேசிய உணர்வைப் பயன்படுத்தி இந்த இரண்டு பகுதிகளையும் பிரஷ்யாவுடன் இணைக்க திட்டம் தீட்டிவிட்டார் பிஸ்மார்க். அவருடைய எண்ணம் நிறைவேறும் சந்தர்ப்பமும் சீக்கிரமே வந்தது. அரசரானவுடன் ஒன்பதாம் கிறிஸ்தியான் செய்த முதல் வேலை செலஸ்விக், ஹோல்ஸ்டீன் பகுதிகளின் சுயாட்சித் தன்மையை மதிக்காமல் ஒரு பிரகடனத்தின் மூலம் அவைகளை டென்மார்க்குடன் இணைத்ததேயாகும். இதனால் இவ்விரு பகுதிகளிலும் பலத்த எதிர்ப்பு எற்பட்டது. மேலும் ஜெர்மானிய நெகிழ் கூட்டமைப்பின் ஒரு பகுதியாக ஹோல்ஸ்டீன் இருந்ததால் விளைவுகள் மோசமாக விட்டது.

இப்போது பிஸ்மார்க் தனது ராஜதந்திர நடவடிக்கைகளை ஆரம்பித்தார். அவசர அவசரமாக ஆஸ்திாயாவுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டார். இரண்டு நாடுகளும் சேர்ந்து செலஸ்விக்கையும், ஹோல்ஸ்டீனையும் டென்மார்க்கின் பிடியிலிருந்து விடுவிக்க முடிவு செய்தன. 48 மணி நேரத்துக்குள் இப்பகுதிகளை டென்மார்க்குடன் இணைக்கும் பிரகடணத்தை ரத்து செய்யும் படி ஒன்பதாம் கிறிஸ்தியானுக்குக் கெடு விதித்தார் பிஸ்மார்க். இந்த கெடுவை டென்மார்க் மன்னர் நிராகரிக்கவே ஆஸ்திரிய-

பிரஷ்யக் கூட்டுப்படைகளினால் எவ்வித எதிர்ப்புமின்றி செலஸ்விக்கும் ஹோல்ஸ்டீனும் 1864-ல் கைப்பற்றப்பட்டன. போர் எளிதாகவும் விரைவாகவும் முடிந்துவிட்டது.

டென்மார்க் மன்னர் ஐரோப்பிய அரசுகளிடம் முறையிட்டார். பலன் எதும் இல்லை. நார்வே, ஸ்வீடன் ஆகியவை டென்மார்க்கின் மீது இரக்கப்பட்டன. இங்கிலாந்தின் பால்மெஸ்டன் எதுவும் பேசவில்லை. மூன்றாம நெப்போலியனோ மெக்ஸிகோ பிரச்சனையில் மூழ்கிக்கிடந்தார். ஜெர்மானியத் தேசியவாதிகளோ, பிஸ்மார்க்கின் செயல்களை ஜெர்மானிய இணைவிற்கான நடவடிக்கைகளாகக் கருது வாய்மூடி மவுனிகளாக இருந்தனர். ரஷ்யா நடுநிலை வகித்தது. பிஸ்மார்க்கின் செயலைக் கண்டிக்க சர்வதேச சங்கமோ, ஐ.நா. சபையோ அப்போது இல்லை. இவ்வாறு பிஸ்மார்க்கின் நடவடிக்கைகளை ஐரோப்பாவில் கேட்பார் யாரும் கிடையாது.

போர் முடிந்தவுடன் சமாதான உடன்படிக்கையையும் வேகமாகச் செய்து கொண்டார் பிஸ்மார்க், 1864 அக். 30-ல் வீயன்னா உடன்படிக்கை டென்மார்க்குடன் செய்து கொள்ளப்பட்டது. அதன்படி போட்டியாளர் அகஸ்டன்பர்க் கோமகன் பிரடரிக் டென்மார்க் அரசராக அங்கீகரிக்கப்படார். பிரஷ்ய, ஆஸ்திரிய அரசர்களுக்காக செலஸ்விக், ஹோல்ஸ்டீன் பகுதிகளின் மீது உள்ள உரிமையை டென்மார்க் விட்டுவிட வேண்டும். இவ்வாறு செலஸ்விக் ஹோல்ஸ்டீன் பகுதிகள் பிரஷ்யா, ஆஸ்திரியாவால் கூட்டாக ஆக்கிரமிக்கப்பட்டது. இந்த ராஜதந்திர வெற்றி முழுவதும் பிஸ்மார்க்கையே சாரும். அதன்பின் 1865 ஆகஸ்ட 14-ல் 'கேஸ்டீன் எற்பாட்டின்' படி (Convention of Gastein) தந்திரமாக செலஸ்விக்கை தான்வைத்துக் கொண்டு, ஜெர்மானியர்கள் அதிகம் வாழ்ந்த ஹோல்ஸ்டீன் பகுதியை ஆஸ்திரியாவுக்குக் கொடுத்தார் பிஸ்மார்க். இந்த இரண்டு பகுதிகளின் எதிர்காலம் மிகத் தெளிவாக்கப்படாததால் இன்னும் இரண்டு ஆண்டுகளில் பிஸ்மார்க் ஆஸ்திரியாவுடனே போர் புரிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

### 2. ஆஸ்திரிய பிரஷ்யப் போர் (Seven weeks War): 1866

ஜெர்மானிய இணைவு எற்பட வேண்டுமானால், ஜெர்மானிய சிற்றரசுகளிலிருந்து ஆஸ்திரியாவின் ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும் என்று திட்டமாக நம்பினார் பிஸ்மார்க். எனவே ஆஸ்திரியாவுடன் ஒரு போர் அவசியம் தேவை என்பதனை உணர்ந்து செயல்பட்டார் பிஸ்மார்க். தான் ஆரம்பிக்கப் போகும் போரின் போது, ஆஸ்திரியாவைத் தோற்கடிப்பதற்காக தனது ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டார் பிஸ்மார்க்.

### பிஸ்மர்க்கின் இராஜதந்திர நடவடிக்கைகள்

அப்போது பிரான்சின் மூன்றாம் நெப்போலியன் ஐரோப்பாவில் சமாதானத்தை நிலை நாட்டும் தூதுவராக தன்னை எண்ணிக் கொண்டு கனவுலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாா். 1865, அக்டோபரில் பயரிட்ஸ் (Biarritz) என்ற இடத்தில் நெப்போலியனைச் சந்தித்தாா் பிஸ்மாா்க். அவருடன் பேசி அவரது நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொண்டாா். ‘‘பிரஷ்யாவும், பிரான்சும் ஐரோப்பாவிலுள்ள் ஒத்த கருத்துக்களைக் கொண்ட இரு நட்பு நாடுகளாகும்’’ என்று வாய் கூசாமல் பேசினாா் பிஸ்மாா்க். (ஐந்து வருடங்களுக்குப் பின்இதே பிரான்சைத்தான் செடானில் தோற்கடித்து,மூன்றாம்நெப்போலியனை ஒழித்துக் கட்டினாா்). போலந்து கிளா்ச்சியில் ரஷ்யாவுக்கு உதவி செய்ததால் ஆஸ்திரிய-பிரஷ்யப் போரில் நடுநிலை வகிக்க ரஷ்யா ஒப்புக்கொண்டது. நடுநிலை வகிக்க மூன்றாம் நெப்போலியனும் ஒப்புக்கொண்டாா். அதற்கு ஈடாக ரைன்நதிப் பகுதிகள் சிலவற்றைக் கொடுப்பதாக வாக்களித்தாா் பிஸ்மாா்க். ஆஸ்திரியாவின் எதிரியான சா்டீனிய அரசுடன் உடன்படிக்கை செய்து கொண்டு, போரின் இறுதியில் சாா்டீனியாவுக்கு வெனிஷியாவைக் கொடுப்பதாக வாக்களித்தாா். ‘‘வெனிஷியா இத்தாலிக்குக் கிடைக்காத எந்த ஒரு சமாதானத்தையும் செய்து கொள்ள போவதில்லை’’ என்று பிஸ்மாா்க் அடித்துக் கூறினாா்.

**போரின் ஆரம்பம்:**

எப்படியாவது ஆஸ்திரியாவின் மீது போா் தொடுக்க நினைத்து பிஸ்மாா்க், ஹோல்ஸ்டினை ஆஸ்திரியா நிா்வகிக்கும்முறை சரியல்ல என்று கூறி ஹோல்ஸ்டீனுக்கு ஒரு படையை அனுப்பினாா். கலக்கமடைந்த ஆஸ்திரியா பிரச்சனையை ஜொ்மன் டயட்டில் முறையிட்டது. உடனே, கேஸ்டின் எற்பாட்டை ஆஸ்திரியா மீறிவிட்டதாகக் குற்றம் சாட்டினாா் பிஸ்மாா்க். ஆஸ்திரியா மீது போா் தொடுக்க இப்பிரச்சனையே காரணமானது.

1966 ஜுன் மாதம் ‘‘தற்போது உள்ள ஜொ்மன் டயட் கலைக்கப்பட வேண்டுமென்றும், புதிய தோ்தல் நடத்தப்பட்டு ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்க தேசிய சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும்’’ என்றும் பிஸ்மாா்க் கூறினாா். உடனே ஆஸ்திரியா ‘‘பிஸ்மாா்க்கின் இந்த பிரேரணைகள் 1864-ம் வருட வீயன்னா உடன்படிக்கையையும், 1865-ம, வருட கேஸ்டின் ஏற்பாட்டையும் மீறிய செயலாகும் என்று குற்றம் சாட்டி பிரஷ்யாவுக்கு எதிராகப் படைகளைத் திரட்டியது. பிஸ்மாா்க் நினைத்தது நடந்தது. போா் ஆரம்பமானது ஆஸ்திரியாவுக்கு பவேரியா சாக்சனி, ஹனோவா், பேடன் ஆகிய ஜொ்மானிய நாடுகள் ஆதரவு அளித்தன. ஆஸ்திரியப்படைகளுக்கு பெனடக் (டீநநெனநம) என்பவா் தலைமை தாங்கினாா். பிரஷ்யப் படைகளுக்கு மோல்ட்கே

தலைமை வகித்தார. போர் 1866 ஜுன் 16-ல் ஆரம்பம் ஆனது. பிரஷ்யப் படைகள் ஹனோவரியப் படைகளை ஜுன் 28-ல் லாங்கன்சால்சா (Langensalsa) என்ற இடத்தில் தோற்கடித்தது. எவ்வித எதிர்ப்புமில்லாமல் பிரஷ்யப்படைகள் முன்னேறின. ஏழுவாரங்களே நீடித்த இப்போரின் இறுதியில் ஜுலை 3-ல் ஆஸ்திரியப் படைகளை சடோவா (Sadowa) என்ற இடத்தில் முழுமையாகத் தோற்கடித்து, வீயன்னாவை நொக்கி முன்னேறியது பிரஷ்யப்படை. “பிரஷ்யாவும் ஆஸ்திரியாவும் சமமான படைபலம் கொண்டவை என்றும், எனவே போர் எற்பட்டால் அது அதிக நாள் நீடிக்கும் என்றும், அப்போது தான் தலையிட்டு பிரான்சுக்காகப் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்” என்று நினைத்திருந்த மூன்றாம் நெப்போலியன் அதிர்ச்சியடைந்தார். ஏமாற்றமடைந்தார். ஆனால் இச்சூழ்நிலையிலும் சமரசம் செய்து வைக்க முன்வந்தார். தனது தூதரான பெனடிட்டி (Beneditte) என்பவரை நிக்கோல்ஸ்பார்க் (Nickolsburg) என்ற பிரஷ்ய ராணுவ தலைமையிடத்துக்கு அனுப்பினார். ஆனால் பிரான்ஸ் தலையிடுமுன், வீயன்னாவை நோக்கி சென்ற படையை நிறுத்தி ஆஸ்திரியாவுடன் 1866 ஆகஸ்ட 23-ல் பிரேக் உடன்படிக்கை செய்து கொண்டு போரை முடித்துக் கொண்டார் பிஸ்மார்க்.

## பிரேக் உடன்படிக்கை (Treaty of Prague):

**பிரேக் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் பின்வருமாறு:**

1. செலஸ்விக்-ஹோல்ஸ்டின் பகுதிகள் பிரஷ்யாவுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் செலஸ்விக் பகுதியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மக்கள் விரும்பினால் டென்மார்க்குடன் இது இணைக்கப்பட வேண்டும். (ஆனால் இந்த வாக்கெடுப்பு 1919 வரை நடத்தப்படவேயில்லை. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் 106-114 ஷரத்துப்படி வாக்கெடுப்பு நடத்தப்பட்டு செலஸ்விக்கின் வடபகுதி மட்டும் டென்மார்க்குடன் இணைக்கப்பட்டது.)

2. ஹனோவர், ஹெஸ்ஸி-கேசல், நாசா, பிராங்பார்ட். ஆகியவைகளை பிரஷ்யா இணைத்துக்கொண்டது. ஒரு வட ஜெர்மானியக் கூட்டமைப்பு நிறுவப்பட வேண்டும். அதனுடன் தென்ஜெர்மானிய நாடுகள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். பழைய ஜெர்மானிய கூட்டமைப்பு கலைக்கப்பட வேண்டும்.

இத்தாலிக்கு வெனிஷியா கொடுக்கப்பட்டது.

**போரின் முக்கியத்துவம்:**

1. ஜெர்மானிய இணைவிற்கு இப்போர் வழி வகுத்துக்கொடுத்தது. வடக்கிலிருந்த 22 ஜெர்மானிய அரசுகள் கூடி வடக்கு ஜெர்மன் நெகிழ் கூட்டமைப்பு (North German Confederation) ஒன்றை அமைத்துக் கொண்டு பிரஷ்யாவின் அரசரை தங்கள் தலைவராக எற்றுக்கொண்டன. இன்னும் பதினாறு தென்ஜெர்மன் நாடுகளே பிரஷ்யாவின் தலைமையை ஏற்காமல் தனித்து நின்றன. ஆனால் அவை பிரான்சுடன் சேர்ந்துவிடாதபடி மிகக் கருணையுடன் நடந்து கொண்டார்பிஸ்மார்க்.

2. ஆஸ்திரியா தோற்கடிக்கப்பட்டதால் பழைய ஜெர்மன் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது. புதிய கூட்டமைப்பில் ஆஸ்திரியாவின் பலமும், மதிப்பும் வீழ்ச்சியடைந்தது. ஆஸ்திரியா ஜெர்மனியில் தலைமைப் பதவியை இழந்தது.

3. இத்தாலிக்கு வெனிஷியா கொடுக்கப்பட்டதால் இத்தாலிய இணைவிற்கு வழி ஏற்பட்டது.

4. போரில் ஆஸ்திரியா தோற்கடிக்கப்பட்டதால் ஆஸ்திரியாமீது கடுமையான நிபந்தனைகள் விதித்திருக்கலாம். ஆனால் பிஸ்மார்க் ராஜதந்திரத்துடன் நடந்துகொண்டார். ஏனெனில் வருங்காலத்தில் ஆஸ்திரியா ஜெர்மனியுடன் நட்பு நாடாக மலரும் என்று நம்பினார். அதன்படியே நடந்தது.

5. இப்போரின் மூலம் பிஸ்மார்க்கின் புகழ் நாடெங்கிலும் பரவியது. யேவழையெட ர்நசழ-வாக ஆனார்.பிஸ்மார்க்கின்சகாப்தம் ஆரம்பமானது.

6. பிரஷ்யாவின் வெற்றி பிரான்சுக்கு பேரிடியாகும். ‘‘சடோவா போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டது ஆஸ்திரியா அல்ல. பிரான்சே’’ என்று கூறப்பட்டது. பிரஷ்யாவின் மின்னல் வேக வளர்ச்சியைக் கண்டு பிரான்ஸ் பொறாமைப்பட்டது. பயமடைந்தது. அதுவே பிராங்கோ பிரஷ்யப் போர் எற்பட வழிவகுத்தது.

**பிற உடன்படிக்கைகள்:**

**1. செயின்ட் ஜெர்மைன் உடன்படிக்கை:**

**(Treaty of St. Germain)** செப் 10-1919

நேச நாடுகள் தோற்கடிக்கப்பட்ட ஆஸ்திரியாவுடன் செயின்ட் ஜெர்மைன் என்ற இடத்தில் 1919 செப்டம்பர் 10-ம் தேதி உடன்படிக்கை செய்து கொண்டன. இதன்படி ஆஸ்திரியாவும் ஹங்கேரியும் தினத்தனி நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. உடன்படிக்கையின் 88-வது பிரிவின்படி அவை திரும்ப இணைவது “தடுக்கப்பட்டது. மேலும் நேச நாடுகளுக்கு ஏற்படுத்திய இழப்புகளுக்கு ஆஸ்திரியா பொறுப்பேற்க வேண்டும். மூன்று

இயந்திரப் படகுகள் தவிர ஆஸ்திரியாவின் கப்பற்படை முழுவதும் பறித்துக் கொள்ளப்பட்டது. ஆஸ்திரிய படைகளின் எண்ணிக்கை முப்பது ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. புதிதாக படையின் வீரர்கள் சேர்த்துக் கொள்ளப்படககூடாது. ஆஸ்திரியாவின் குடியேற்ற நாடுகள் அனைத்தும் அதனிடமிருந்து எடுக்கப்பட்டது. ஆஸ்திரியா நேச நாடுகட்குப் பூர்த்தி செய்யப்படாத காசோலையை போர் இழப்பீடாக அளித்தது. மேலும் ஆஸ்திரியப் போர்க் கைதிகளை விசாரனை செய்யவும் அனுமதியளித்தது. செயின் ஜெர்மைன் உடன்படிக்கையின் விளைவாக ஆஸ்திரியாவுக்கு பெரும் பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டது. தனது வளமான பகுதிகளை இழந்து பிற நாடுகளிடன் கடன்வாங்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டது. தனது பழைய பேரரசின் பாதிப்பகுதிகளை ஆஸ்திரியா இழந்தது.

### 2. டிரயனான் உடன்படிக்கை: (**Treaty of Trianon**) ஜுன் 4, 1920.

நேசநாடுகள் ஹங்கேரியுடன் வெர்செய்ல்ஸிலுள்ள டிரயனான் மாளிகையில் உடன்படிக்கை ஒன்று 1920, ஜுன் 4-ம் தேதி செய்து கொண்டன. ஆஸ்திரியாவைப் போன்றே ஹங்கேரியும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டது. ஹங்கேரி ஆஸ்திரியாவிடமிருந்து பிரிக்கப்பட்டது. 1,25,000 சதுர மைலும், 22 மில்லியன் மக்கள் தொகை கொண்ட ஹங்கேரி 30,000 சதுர மைல் கொண்டதாகவும் எட்டு மில்லியன் மக்கள் தொகை கொண்டதாகவும் குறைக்கப்பட்டது. அதன் பிரான்ஸில் வேனியாப் பகுதி ருமேனியாவிற்கும், குரேஷியா யுகோஸ்லெவியாவிற்கும், ஸ்லோவேக்கியா, செக்கோஸ்லேவியாவிற்கும் கொடுக்கப்பட்டது. ஹங்கேரியப் படைவீரர்களின் எண்ணிக்கை 35 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. அதன் போர்க் கப்பல்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது. இவை தவிர ஹங்கேரி போர் இழப்பீட்டுத் தொகையும் நேச நாடுகளுக்குக் கொடுக்க வேண்டும்.

### 3. நியுலி உடன்படிக்கை: (**Treaty of Neuilly**) ஜுன் 27, 1919

பாரிசு அமைதி மாநாட்டில் பல்கேரியா ஒரு வேண்டுகோள் விடுத்தது. போரில் பல்கேரிய இறங்குவதற்கு முடிதுறந்து ஓடிய மாஜி அரசர் பெர்டினாண்டுதான் காரணம் என்றும், எனவே பல்கேரியா தண்டிக்கப்படக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டது. அதை நேச நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. 1919 நவம்பர் 27-ம் தேதி பல்கேரியாவுடன் நியுலி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதன்படி பல்கேரியா பெரும் நிலப்பரப்பை இழந்தது. பல்கேரியர்கள் அதிகமாக வாழ்ந்த மேற்குப்பகுதி யூகோஸ்லேவியாவிற்கும், மேற்கு திரேஸ், ஈஜியன் கடற்கரைப் பகுதிகள் கிரீஸுக்கும் கொடுக்கப்பட்டது. பல்கேரியப் படைகளின் எண்ணிக்கை இருபது ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. அதன்

கடற்படை ஒழிக்கப்பட்டது. பல்கேரியா மீது பெருமளவில் போர் இழப்பீட்டுத் தொகை விதிக்கப்பட்டது. இவ்வாறு நியுலி உடன்படிக்கை பல்கேரியாவை பால்கன் பகுதியில் ஒரு வலிமையற்ற நாடாக்கியது.

4. **செவ்ரஸ் உடன்படிக்கை (Treaty of Sevres) ஆகஸ்ட்** 20, 1920

தோற்கடிக்கப்பட்ட துருக்கியுடன் உடன்படிக்கை செய்து கொள்வதில் நேச நாடுகளுக்குப் பல பிரச்சனைகள் ஏற்பட்டது. எனவே பேச்சு வார்த்தை நீடித்து இறுதியாக 1920-ஆகஸ்ட் 20-ம் தேதி துருக்கியுடன் செவ்ரஸ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதன்படி சிரியா, பாலஸ்தீனம், மெசபடோமியா ஆகிய நாடுகளையும், எகிப்தின் மீது கொண்டிருந்த ஆதிக்கத்தையும் துருக்கி இழந்துவிட்டது. ஆசியாமைனர், திரேஸ், அட்ரியநோபிள், கலிபோலி ஆகியவை கிரிஸ் நாட்டிற்குக் கொடுக்கப்பட்டன. துருக்கியப் படைகளின் எண்ணிக்கை ஐம்பது ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. அதன் விமானப்படை முழுவதையும் நேசநாடுகள் எடுத்துக் கொண்டன. கான்ஸ்டாண்டி நோபிள், அலெக்ஸாண்டிரியா ஆகிய நகரங்கள் பன்னாட்டுக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டன.

5. **சிறுபான்மையோர் பற்றிய உடன்படிக்கைகள் (Minority treaties)**

முதல் உலகப்போரின் விளைவாக போலந்து, செக்கோஸ்லோவேகியா, ரூமேனிய, கிரீஸ் போன்ற பல புதிய சுதந்திர நாடுகள் தோன்றின. அந்த நாடுகள் தங்கள் ஆட்சியின் கீழ் வாழ்ந்து வந்த சிறுபான்மை மக்களின் இன, சமய, மொழி அரசியல் சுதந்திரங்களைக் காக்கும் பொருட்டு நேச நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையிலும் சிறுபான்மையினரின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனாலும், போலந்து செக்கொஸ்லோவேகியா, யுகோஸ்லேவியா ஆகிய நாடுகளில் வாழ்ந்து வந்த சிறுபான்மை ஜெர்மானியர்கட்குப் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. இது இரண்டாம் உலகப்போர் ஏற்படும் சமயம் பெரும் பிரச்சனையை ஏற்படுத்தியது.

## 10. சர்வதேச சங்கம்

## (LEAGUE OF NATIONS)

முதல் உலகப் போரினால் மக்களின் உயிர் உடமை அனைத்திற்கும் பேரழிவு ஏற்பட்டது. எனவே போர் ஏற்படாமல் உலகத்தைக் காக்கவும், உலக நாடுகளிடையே சமாதானத்தை ஏற்படுத்தவும் உலகத் தலைவர்கள் விரும்பினார்கள். அதன் விளைவாகத்

தோன்றியதே சர்வதேச சங்கம். அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சனின் பதினான்கு அம்சங்களில் கடைசியானது சர்வதேச சங்கம் அமைப்பதாகும். அவரது சீரிய முயற்சியினாலேயே சர்வதேச சங்கம் நிறுவப்பட்டது. எனவே சர்வதேச சங்கம் உட்ரோ வில்சனின் சிந்தனையில் பிறந்த குழந்தை (Brain child of Woodrow Wilson) என்று சொல்லப்படுகிறது.

**சர்வதேச சங்கத்தின் நோக்கம்:**

சர்வதேச சங்கத்தின் சாசனம் பாரிசு அமைதி மாநாட்டில் உருவாக்கப்பட்டது. அதன் நோக்கங்கள் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் முதல் ஆறு ஷரத்துக்களுடன் இணைக்கப்பட்டது. 1920 ஜனவரி 10-ம் தேதி பாரிஸ் நகரில் முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது. இதன் அலுவலகம் ஸ்விட்சர்லாந்திலுள்ள ஜெனிவாவில் அமைக்கப்பட்டது. சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்ட போது 42 நாடுகள் உறுப்பினராக இருந்தன. 1935-ல் அதன் உறுப்பினர் எண்ணிக்கை 62 ஆக உயர்ந்தது. இச்சங்கம் 1936ம் ஆம் ஆண்டு வரைதான் செயலாற்ற முடிந்தது. சர்வதேச சங்கம் கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டது.

1. உலக நாடுகளிடையே கூட்டுறவு மனப்பான்மையை வளர்த்து உலக சமாதானத்தை நிலைநாட்டுவது.

2. உலக நாடுகள் தங்களுக்குள் ஏற்படும் தகராறுகளைத் தீர்ப்பதற்குப் பொரில் ஈடுபடாமல் சமாதான முறையில் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

3. வலுச்சண்டைக்கு செல்லும் நாட்டுடன் உறுப்பினர் நாடுகள் வாணிபத் தொடர்பை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

4. உறுப்பினர் நாடு ஒன்று ஆக்கிரமிக்கப்பட்டால் அது பிற உறுப்பு நாடுகளையும் ஆக்கிரமித்தது போன்றே எண்ணப்படும். ஆக்கிரமிப்பு நாட்டுக்கு விரோதமாக படைபலம் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

5. உறுப்பினர் நாடுகள் ஒன்றுக்கொன்று மரியாதையுடனும், நட்பு மனப்பான்மையுடனும் நடந்துகொள்ள வேண்டும். உலகின் பின் தங்கிய நாடுகளை முன்னேற்ற வேண்டும்.

**சர்வதேச சங்கத்தின் அமைப்பு:**

சர்வதேச சங்த்தில் கீழ்க்கண்ட ஐந்து முக்கிய அமைப்புகள் செயல்பட்டு வந்தன.

**பொதுச்சபை (புநநெசயட யுளளநஅடிடல):**

பொதுச்சபைக்கு அங்கத்தினா் நாடுகள் ஒவ்வொன்றும் மூன்று பிரிதிநிதிகளை அனுப்பும். ஆனால் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு வாக்கு தான் உண்டு. இச்சபை ஜெனிவாவில் ஒவ்வொரு ஆண்டும் செப்படம்பா் மாதத்தில் முதல் திங்கட்கிழமை கூடும். அங்கத்தினா் நாடுகளின் அரசியல், சமூக அரசியலமைப்பு, மற்றும் பொதுவான பிரச்சனைகள் பற்றி விவாதித்து முடிவெடுக்கும். பன்னாட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளையும் பொதுச்சபையே தேர்ந்தெடுக்கும்.

**பாதுகாப்பு சபை (Security Council):**

இதுதான் சர்வதேச சங்த்தின் நிர்வாக சபையாகும். இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகிய ஐந்து நிரந்தர உறுப்பினர்களும் நான்கு நிரந்தரமற்ற உறுப்பினர்களும் இருந்தார்கள். நிரந்தரமற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 1936-ல் பதினொன்று ஆக்கப்பட்டது. இந்த சபை ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு முறை கூடி உலக அமைதியையும் பாதுகாப்பையும் பற்றி விவாதிக்கும். சங்கத்தின் பொதுச் செயலரை நியமனம் செய்வது பாதுகாப்பு சபையே ஆகும். சங்கத்தின் சட்டங்களை மீறி நடக்கும் உறுப்பினர்களை வெளியேற்றும் உரிமை பாதுகாப்பு சபைக்கு உண்டு. பொதுவாக தீர்மானங்கள் அனைத்தும் ஏகமனதாக எடுக்கப்பட வேண்டும்.

**சர்வதேச நீதிமன்றம் (International court of Justice):**

ஒரு நிரந்தர சர்வதேச நீதிமன்றம் நெதர்லாந்திலுள்ள ஹேக் நகரிலுள்ள அமைதி மாளிகையில் நிறுவப்பட்டது. இதில் 15 நீதிபதிகள் பணியாற்றினார்கள். அவர்களின் பதிவிகாலம் ஆறு ஆண்டுகள், ஆகும். உறுப்பினா் நாடுகளிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைப்பது. பாரிசு மாநாடடில் செய்யப்பட்ட உடன்படிக்கைகளுக்கு விளக்கம் அளித்து அவை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பது, பன்னாட்டுச் சட்டங்களுக்கு விளக்கம் அளிப்பது மனிதாபிமானத்துடன் கூடிய நேர்மைக்கு புகலிடம் கொடுப்பது போன்ற முக்கிய நோக்கங்களைக் கொண்டிருந்தது. இது சுமார் 65 வழக்குகளை விசாரித்து அதில் 32 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கியது. மேலும் 200 ஆணைகளைப் பிறப்பித்தது. இருபத்தி ஏழு ஆலோசனைக் கருத்துக்களை வழங்கியது.

**தலைமைச் செயலகம் (Secretariat):**

சர்வதேச சங்கத்தின் தலைமைச் செயலகம் ஒரு பொதுச் செயலரையும், மற்றும் 600 பன்னாட்டு அதிகாரிகளையும் கொண்டிருந்தது. சர்வதேச சங்கத்தின் முதல் பொதுச் செயலர் எரிக்ட்ருமாண்ட் என்பவராவார். சங்த்தின் நிர்வாக அலுவல்கள் முழுவதும் தலைமைச் செயலகமே செய்து வந்தது. மாண்டேட்டுகளின் நிர்வாகம், சிறுபான்மையோர் பிரச்சனைகள், படைக்குறைப்பு ஆகிய அலுவல்களைக் கவனித்து வந்தது. மேலும் பொதுச்சபை பாதுகாப்பு சபை செயல்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும், அதன் முடிவுகளைச் செயல்படுத்துவதும் இதன் முக்கியப்பணிகளாகும்.

**பன்னாட்டுத் தொழலாளர் அமைப்பு (ILO):**

பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பை ஏற்படுத்துவதற்காக பாரிசு அமைதி மாநாட்டில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின பரிந்துரைகளை 1919 ஏப்ரல் 28-ல் மாநாடு ஏற்றுக் கொண்டு, வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் 13வது பிரிவில் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு சேர்த்துக் கொள்ளப்பட்டது. இது ஒரு பொதுக்குழுவையும், நிர்வாகக் குழுவையும் பன்னாட்டுத் தொழிலாளர் அலுவலகத்தையும் கொண்டது. இது ஜெனிவாவில் அமைக்கப்பட்டது. உலகத் தொழிலாளர்களின் நலன், ஊதியம், உழைப்பு மற்றும் அவர்களின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை ஆராய்ந்து அவர்கள் நலன்களைப் பேணும் சட்ட திட்டங்களை இயற்றும். 1940-ல் இதன் தலைமையிடம் ஜெனிவாவிலிருந்து மாண்டரீல் நகருக்கு மாற்றப்பட்டது. பின்னர் தோன்றிய ஐ.நா. சபை இதனை தனது அங்கமாக அப்படியே ஏற்றுக்கொண்டது.

**மாண்டேட்டுகள் (Mandates):**

ஜெர்மனியின் பழைய குடியேற்ற நாடுகளும், துருக்கியிடமிருந்த மீட்ட பாலஸ்தீனம் உட்பட சில பகுதிகளும் மாண்டேட்டுகள் என்று அழைக்கப்பட்டன. அவை தென்மேற்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, மத்தியக்கிழக்கு மற்றும் பிசிபிக் கடற்கரைப் பகுதியிலும் இருந்தன. இந்த குடியேற்ற நாடுகள் அனைத்தும் நேசநாடுகளின் பாதுகாப்பில் பிரித்து வைக்கப்பட்டன. இதுவே மாண்டேட் முறையாகும். நேச நாடுகள் இவைகளைப் பராமரிக்கும் உரிமை பெற்றிருந்தனவே தவிர அப்பகுதிகளைச் சொந்தமாக வைத்துக்கொள்ள அனுமதியில்லை. அவை ஆண்டுதோறும் தங்கள் நிர்வாகம் பற்றிய அறிக்கையை சர்வதேச சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அதில் அந்தப்பகுதிகள் எப்படி ஆளப்படுகிறது, அரசியல், பொருளாதார சமூக முன்னேற்றம் எப்படி உள்ளது எனக்குறிப்பிட வேண்டும். சரியான நேரம் வருகின்ற போது, இந்த நாடுகளுக்கு சுயாட்சி வழங்கப்படும். இந்த மாண்டேட்டுகள் முறை சங்கத்தின் கீழ் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது.

**சர்வதேச சங்கத்தின் சாதனைகள்: (Achievements)**

சமாதனத்தைக் சுட்டிக்காக்கும் பெரும் நோக்கத்துடனும், போரைத்தடுக்கும் எண்ணத்துடனும் சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. முதல் உலகப்போர் முடிவடைந்த பிறகு நேச நாடுகளிடம் காணப்பட்ட போர்க்கால ஒற்றுமை மறைந்தது. அவைகளிடம் பல பிரச்சனைகள் தோன்றின. சர்வதேச சங்கம் சுமார் நாற்பது அரசியல் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தது. பல பொருளாதார சமுதாய மனிதாபிமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

1. யூபென், மால்மெடி ஆகிய பகுதிகள் பெல்ஜியத்துடன் இணைவதை எதிர்த்து, சங்கத்திடம் முறையிட்டது ஜெர்மனி. இதனை விசாரித்து இறுதியாக, பெல்ஜியத்துடன் இரண்டு பகுதிகளும் இணைவதை சங்கம் அங்கீகரித்து.

2. 1920-ல் ஆலந்து தீவுகள் மீது ஆளுகை செலுத்துவதில் பின்லாந்திற்கும், ஸ்வீடனுக்கும் சர்ச்சை ஏற்பட்டது. இது பற்றி விசாரிக்க சங்கம் ஒரு குழுவை அமைத்தது. அக்குழு நேரடி விசாரணை செய்து ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது. அதன்படி, ஆலந்து தீவுகள் மீதான பின்லாந்தின் உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதே சமயம் அங்கு வாழந்து வந்த ஸ்விடன் மக்களின் தனித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும். இதனை இரண்டு நாடுகளும் ஏற்றுக் கொண்டன.

3. 1920-ல் லிதுவேனியாவிற்கும் போலந்திற்குமிடையே வில்னா என்ற பகுதியைக் குறித்து பிரச்சனை வலுத்தது. வில்னா போலந்துக்குரியது என்று நேச நாடுகள் அங்கீகரித்தன. ஆனால் ரஷ்யாவின் ஆதரவுடன் லிதுவேனியா, போலந்து மீதான போர் நடவடிக்கையில் ஈடுபட்டது. 1927-ல் லிதுவேனியர்கள் வில்னாவிலிருந்து விரட்டப்பட்டனர். இதனை சர்வதேச சங்கம் விசாரித்து, இரண்டு நாடுகளுக்கிடையிலான பதட்ட நிலையை தணித்தது.

4. 1923-ல் இத்தாலிக்கும் கிரீசுக்குமிடையே போர் ஏற்படும் சூழ்நிலை காணப்பட்டது. எல்லைப்புற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இத்தாலியத் தளபதி டெலினி என்பவரும் மேலும் மூன்று அதிகாரிகளும் கிரேக்கத் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். கோபமடைந்த இத்தாலி பதில் நடவடிக்கையாக கிரீசுக்குச் சொந்தமான கொர்பு (ஊழசகர) தீவைக் கைப்பற்றியது. மேலும் ஐந்து மில்லியன் இத்தாலிய நாட்டின் கரன்சி கொடுக்கப்பட வேண்டும் என்றது. இதனை எதிர்த்து கிரீஸ் சர்வதேச சங்கத்திடம் முறையிட்டது. அதனை விசாரித்த சங்கம் கொர்புதீவை கிரீசுக்குத் திரும்பக் கொடுத்தது.

இத்தாலி கேட்ட நஷ்டத்தையை தொகையை கிரீஸ் கொடுக்க சம்மதித்தது. போர் ஏற்படுவது தடுக்கப்பட்டது.

5. கிரீசுக்கும் பல்கேரியாவிற்கும் 1925-ல் ஏற்பட்ட பிரச்சனையை தீர்த்து வைத்தது. கிரேக்க ராணுவத் தளபதி ஒருவர் பல்கேரியர்களால் எல்லைப்பகுதியில் கொல்லப்பட்டதால், கிரேக்கப் படைகள் பல்கேரியப் பகுதிக்குள் நுழைந்தன. இதனை எதிர்த்து பல்கேரியா சர்வதேச சங்கத்திடம் முறையிட்டது. இதனைப் பற்றி விசாரிக்க சங்கம் ஒரு விசாரணைக்குழுவை அனுப்பி பிரச்சனையைத் தீர்த்து வைத்தது. கிரேக்கப் படைகள் பல்கேரியாவிலிருந்து வாபஸ் பெற்றன. போர் ஏற்படுவது தடுக்கப்பட்டது.

6. உலகத்தில் கொடிய வியாதிகளைக் கட்டுப்படுத்த நிரந்தர சுகாதார நிறுவனம் ஒன்றை 1923-ல் சர்வதேச சங்கம் ஏற்படுத்தியது. அதே ஆண்டு மலேரியா தடுப்புக்குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. 1931-ல் இந்த சுகாதார நிறுவனம் ஒரு மாநாடு கூட்டி கிராமப்புற சுகாதாரம் பற்றி ஆய்வு செய்தது. அதில் இருபத்தி மூன்று நாடுகள் கலந்து கொண்டன.

7. சார் பள்ளத்தாக்கில் நேர்மையான வாக்கெடுப்பு நடத்தி அதனை ஜெர்மனிக்கு மீண்டும் அளித்தது. டான்சிக் பட்டணத்தை வெற்றிகரமாக நிர்வகித்தது. மாண்டேட் நிர்வாகத்தையும் திறமையாக மேற்கொண்டது சர்வதேச சங்கம்.

8. 1920-ல் பன்னாட்டு நிதி மாநாடு ஒன்றை புரூசல்ஸில் சர்வதேச சங்கம் கூட்டியது. அதில் 39 நாடுகள் பங்கு கொண்டன. இந்த மாநாட்டில் பணவீக்கம், பன்னாட்டு வியாபாரத் தடைகளின் நீக்கம், போக்குவரத்து வசதிகளைப் பெருக்குதல் ஆகியவை பற்றி விவாதிக்கப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. 1927-ல் உலகப் பொருளாதர மாநாடு ஒன்று புரூசல்ஸில் கூட்டப்பட்டது.

9. குழந்தைகள் நலன்களைப் பேணிக்காப்பதற்கும், பெண்கள் இழிவாக நடத்தப்படுவதைத் தடுப்பதற்கும் பல நடவடிக்கைகளை சங்கம் எடுத்தது. 1926-ல் அடிமை வியாபார முறையைத் தடுப்பதற்கு ஒரு பன்னாட்டுச் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டது.

10. லட்சக்கணக்கான போர்க கைதிகள் சர்வதேச சங்கத்தால் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டனர்.

## சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள்:

சுமார் இருபது வருடங்கள் பல நற்காரியங்கள் செய்து உலக அமைதியை ஏற்படுத்தினாலும் இறுதியில் சர்வதேச சங்கம் வீழ்ச்சியடைந்தது. இதற்கு முக்கியக் காரணம் அது நல்ல முறையில் இயங்குவதற்கு வழிமுறைகள் இல்லாமல் போனதேயாகும். கீழ்க்கண்டவை சர்வதேச சங்கத்தின் தோல்விக்கு முக்கியமான காரணங்களாகும்.

1. **சங்கத்தின் சாசனம் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையுடன் இணைக்கப்பட்டிருந்தது:**

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை பழிவாங்கும் உணர்வு, சுயநலம் பேராசை ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அதனுடன் சர்வதேச சங்கத்தின் சாசனம் இணைக்கப்பட்டது துரதிஷ்டமாகும். மேலும் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை நடை முறைப்படுத்தும் பொறுப்பும் சங்கத்திற்குத் தரப்பட்டிருந்தது. எனவே கட்டாயப்படுத்தி எற்றுக் கொள்ள வைக்கப்பட்ட உடன்படிக்கையை ஜெர்மனி மீறியது. அது சங்கத்தின் தோல்விக்கு வழி வகுத்தது.

2. **சங்கத்தில் அமெரிக்கா சேராமல் விலகி நின்றது:**

அமரிக்க ஜனாபதிபதி உட்ரோவில்சனின் பதினான்கு அம்சத்திட்டத்தின் அடிப்படையிலே தான் சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டது. ஆனால் அவரது அமைதித் திட்டத்தை அமெரிக்கக் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே சங்கத்தில் அமெரிக்கா அங்கம் வகிக்கவில்லை. அதனால் அமெரிக்காவின் அரசியல் ஆலோசனை மற்றும் பொருளதார உதவி கிடைக்காத சர்வதேச சங்கம் மாலுமி இல்லாத கப்பல் போன்று காட்சியளித்தது.

3. **சங்கத்தின் விதிமுறைகளில் காணப்பட்ட குறைபாடுகள்:**

சர்வதேச சங்கம் தோல்வியடைய முக்கியக் காரணம் அதன் விதிமுறைகளில் காணப்பட்ட குறைபாடுகளே காரணம் ஆகும். முக்கியமாகப் பாதுகாப்பு சபையில் எல்லாத் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற விதி முக்கியத் தீர்மானங்களை உடனடியாக எடுக்க முடியாதபடி செய்துவிட்டது. உறுப்பினர் நாடுகளுக்கு சங்கம் வெறும் ஆலோசனை மட்டுமே கூறமுடியும். சங்கத்தில் எந்த நாடும் பிரச்சனை குறித்து முறையிட்டால்தான் சங்கம் நடவடிக்கை எடுக்க முடியும். எது ஆக்கிரமிப்புப் போர், எது தற்காப்புப் போர், என்று தெளிவாக சங்கவிதி முறைகள் வரையறுத்துக் கூறவில்லை. மேலும் எந்த நாடும் எந்த நேரத்திலும் சங்கத்திலிருந்து விலகலாம் போன்ற விதிகள் சங்கத்தின் அழிவுக்கு வழிவகுத்தது.

**4.ஆயுதக் குறைப்பை ஏற்படுத்துவதில் தோல்வி:**

சர்வதேச சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகள் போர் ஆயுதங்களை உற்பத்தி செய்வதைக் குறைத்து விடுகிறோம் என்று உறுதிமொழிப் பத்திரத்தின் மூலம் வாக்குறுதியளித்தன. ஆனால் இந்த வாக்குறுதியை எல்லா நாடுகளும் கடைப்பிடிக்கவில்லை. 1921 முதல் 1934-ம் ஆண்டு வரை நடைபெற்ற எல்லா ஆயுதக் குறைப்பு மாநாடுகளும் தோல்வியடைந்தன. எனவே மீண்டும் ஆயத உற்பத்திப் போட்டி ஏற்பட்டது.

### 5. முடிவுகளைச் செயல்படுத்த படை வலிமை இல்லை:

சர்வதேச சங்கத்திடம் தனது முடிவுகளைச் செயல்படுத்த தற்கால ஐ.நா. சபையிடம் உள்ளது போல பன்னாட்டு ராணுவமோ கப்பற்படையோ இல்லை. மேலும் அப்படி செயல்படுத்த உறுப்பினா் நாடுகள் ஒத்துழைத்தால் தான் முடியும் என்ற நிலையிருந்ததால், சங்கத்தினால் தனது முடிவுகளை செயல்படுத்த முடியவில்லை.

### 6. ஜொ்மனியின் வெறுப்புணா்வு:

சர்வதேச சங்கத்தில் ஜொ்மனி 1926-ல் சேர்த்துக்கொள்ளப்பட்டது. தன்னைப் பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டதே சர்வதேச சங்கம் என்று கருதி அதன் புனிதமான சட்டதிட்டங்களை மதிக்காமல் தனது மனம் போனபடி செயல்பட்டது. ஜொ்மனியின் மீது விதிக்கப்பட்ட நிபந்தனைகளை ஹிட்லா் ஒவ்வொன்றாக மீறிய போது சர்வதேச சங்கத்தினால் கண்டிக்க முடியவில்லை. ஹிட்லரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் சங்கத்திற்கு சாவுமணி அடித்தது.

### 7. அனைத்து நாடுகளின் சங்கமாகக் காணப்படவில்லை:

சர்வதேச சங்கம் ஆரம்பிக்கப்பட்ட போது அமெரிக்கா அதில் சேரவில்லை. 1926-ல் ஜொ்மனி சேர்ந்தது. ஆனால் 1933-ல் சங்கத்திலிருந்து விலகியது. ஜப்பான் 1937-ல் மஞ்சூரியப் படையெடுப்பிற்கு பின் விலகியது. இத்தாலி 1937-ல் விலகியது. ரஷ்யா 1934-ல் தான் சேர்ந்தது. ஆனால் பின்லாந்தை ஆக்கிரமித்ததால் சங்கத்திலிருந்து அது விலக்கப்பட்டது. இவ்வாறு அனைத்து நாடுகளும் ஒரே நேரத்தில் சங்கத்தில் அங்கம் வகிக்காது அதன் தோல்விக்கு முக்கிய காரணம் ஆகும்.

### 8. ஐரோப்பாவில் சர்வாதிகார ஆட்சிகளின் தோற்றம்:

முதல் உலகப்போருக்குப் பின்னர் இத்தாலி, ஜப்பான், ஜொ்மனி ஆகிய நாடுகளில் தோன்றிய எதேச்சதிகார அரசுகள் ஐரோப்பியக் கூட்டுப் பாதுகாப்பு முறை செயல்படாமல் செய்துவிட்டன. இந்த நாடுகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டன. ஜொ்மனி

ஹிட்லரின் தலைமையிலும், இத்தாலி முசோலினியின் தலைமையிலும் ஆக்கிரமிப்பு செயல்களில் ஈடுபட்டன. 1936-ல் ஸ்பெயினிலும் ஜனநாயகம் வீழ்ச்சியடைந்து பிராங்கோ தலைமையில் ராணுவ ஆட்சி ஏற்பட்டது. ஜப்பான் தூரக்கிழக்குப் பகுதியில் வலிமையடைந்தது. அது சங்கத்தின் விதிமுறைகளை மீறி சீனாவில் உள்ள மஞ்சூரியாவைக் கைப்பற்றியது. இந்த நிகழ்ச்சிகள் சர்வதேச சங்கத்தின் வலிமையின்மையையும், அதன் தோல்வியையும் காட்டுகின்றன.

### 9. பலம் பொருந்திய நாடுகளின் ஆதிக்கம்:

சர்வதேச சங்கம் பெரும்பாலும் பலம் பொருந்திய நாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளை நம்பியே இருந்தது. ஆனால் அந்த நாடுகள் அதிகமான குடியேற்ற நாடுகளைக் கொண்டிருந்ததால் சங்க நடவடிக்கைகளில் அதிக அக்கரை காட்டவில்லை. மேலும் சீனா, எத்தியோப்பியா, அல்பேனியா போன்ற நாடுகள் உதவியற்ற நிலையிலிருந்தன. சிறிய நாடுகளுக்குப் பாதுகாப்பு இல்லை. எனவே தான் சர்வதேச சங்கம் "League of Victors" என்றும், "An Association of Satisfied என்றும் "a conspiracy of the west against Russia" என்றும் பலவாறாக குற்றம் சாட்டப்பட்டது.

### 10. அகில உலக நட்பு மனப்பான்மை இல்லாமை:

சங்கத்தின் உறுப்பினர் நாடுகளிடையே அகில உலக நட்பு மனப்பான்மை காணப்படவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் தேசிய உணர்வு மேலோங்கி இருந்தது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு நாடும் தன்னலம் கருதியே சங்கத்தில் செயல்பட்டன. எனவே சர்வதேச சங்கம் அகில உலக நட்பு மனப்பான்மையை உறுப்பினர் நாடுகளிடையே ஏற்படுத்தத் தவறிவிட்டது.

மேற்கண்ட பல காரணங்களால் சர்வதேச சங்கம் 1938-க்கு முன்பே செயலற்று, இதயமற்ற உடலாகக் காட்சியளித்தது. இரண்டாம் உலகப்போருக்கு முன்பாகவே அது வீழ்ச்சியடைந்தது எனலாம். சர்வதேச சங்கம் தோல்வியடைந்தாலும் 1945-ல் ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்படுவதற்கு அது வழி கோலியது "League of Nations is dead; Long live United Nations" என்று கூறினார் செசில் பிரபு (Lord Cecil)

## 11. ரஷ்யப் புரட்சி

## (THE RUSSIAN REVOLUTION, 1917)

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வரலாற்று நிகழ்ச்சிகளில் முதன்மையானது 1917-ம் ஆண்டில் நடைபெற்ற ரஷ்யப் புரட்சியாகும். இங்கிலாந்தில்

ஏற்பட்ட தொழிற்புரட்சிகளைக் காட்டிலும், பிரான்சு நாட்டில் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சியைக் காட்டிலும், அவைகளின் தன்மையிலும் தாக்கத்திலும் மிகுந்த அளவு மாறுதல்களை ஏற்படுத்தியது. ரஷ்யப் புரட்சியாகும். இது மனக்குறைவுற்ற ஏழை மக்களின் புரட்சி. பண்பாடற்ற சார்மன்னர்களின் அரசியல் போலித்தனத்திற்கும், பழமை வாதிகளின் குருட்டு நம்பிக்கைகளுக்கும் சமாதி கட்டிய புரட்சி தான் ரஷ்யப்புரட்சி. இது பொதுவுடைமைக் கோட்பாட்டிற்குக்கிடைத்த முதலாவது வெற்றி. இது ரஷ்யாவில் பழைய நாகரிகத்தை ஒழித்து புதிய சமுதாயத்தை ஏற்படுத்தியது. ரஷ்யப் வில் மட்டுமல்லாது உலக அரசியலில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியது.

## புரட்சி ஏற்படக் காரணங்கள்:

### 1. சார்மன்னர்களின் ஏதேசச்திகாரம்:

**ரஷ்யப்** நாட்டு சார் மன்னர்கள் ஆட்சி வல்லாட்சியாகவேயிருந்தது. இரண்டாம் அலக்ஸாந்தர் (1855-1881) முதல் இரண்டாம் நிக்கோலஸ் (1894-1917) வரை அனைவரது ஆட்சியும் எதேச்சதிகாரத்துக்கும், கொடுங்கோன்மைக்கும் பெயர் பெற்றது. மன்னர்களே அரசியல் தலைவராகவும், சமயத்தலைவராகவும் விளங்கினர். ஏழ்மையினாலும், நோயினாலும் வாடும் மக்களைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. உதட்டளவில் வெளியிடப்பட்டு, பெயரளவில் செயல்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் மக்களுக்கு எவ்வகையிலும் பலனிளிக்கவில்லை. புரட்சிக் கருத்துக்களையும், புதுமை இயக்கங்களையும் இரும்புக்கரம் கொண்டு நசுக்கினார்கள் இந்த சார் மன்னர்கள். அடிக்கடி போர்களில் ஈடுபட்டு அதில் தோல்வியும் அடைந்து நாட்டிற்கு அவமானத்தை ஏற்படுத்தினார்கள். எனவே சார் மன்னர்களின் எதேச்சிதிகார ஆட்சிதான் ரஷ்யப் புரட்சிக்கு அடிப்படைக் காரணமாகும்.

### 2. பிரதிநிதி சபைகள் மீது மக்களுக்கு ஏற்பட்ட பற்றுதல்:

ரஷ்யப் பாராளுமன்றமான டூமாவின் (Duma) அதிகாரத்தை சார் மன்னர்கள் பறித்துக் கொண்டார்கள். தங்களுடைய கருத்துக்களை ஏற்காத டூமாவைக் கலைத்தார்கள். சார் இரண்டாம் நிக்கோலஸ் அதிக சீர்திருத்தங்களைக் கேட்ட முதலாவது டூமாவை 1906 ஜூலை 22-ல் கலைத்தார். பின்னர் ஏற்பட்ட டூமாக்கள் அரசர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட மக்களாட்சி முறை போன்று தாங்களும் ஆட்சியில் பங்கு கொள்ள விரும்பினார்கள் ரஷ்ய மக்கள், எனவே மக்களாட்சி முறைக் கோட்பாடுகளின் அடிப்படையில் பிரதிநிதி சபைகள் அமைக்கப்பட வேண்டும் என்று முற்போக்கு சிந்தனை கொண்ட

ரஷ்ய மக்கள் கேட்டபோது சார் மன்னர்கள் அவற்றை வெறுத்தார்கள். மக்களின் அதிருப்தி புரட்சியாக வெடித்தது.

3. **குடியானவர்களின் தாழ்ந்த பொருளாதார நிலை:**

ரஷ்ய சமுதாயத்தில் பெரும்பான்மை மக்கள் கல்வியறிவு அற்ற விவசாயிகளாக இருந்தார்கள். சமூக பொருளாதார வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தார்கள். அவர்களுக்கு நிலமில்லாத காரணத்தினால் குலக்குகள் என்றழைக்கப்பட்ட விவசாய முதலாளிகளிடம் அடிமைகளாக வாழ்ந்தார்கள். நிலமில்லாத பண்ணை அடிமைகளின் அவலநிலை நாட்டின் பொருளாதார நிலையைப் பெரிதும் பாதித்தது. பசியும், பட்டினியும் தலை விரித்தாடியது. பருவமழை பெய்யாதபோது பட்டினியால் ஆயிரக்கணக்கில் இறந்தார்கள். ஆனால் நில பிரபுக்களும் செல்வந்தர்களும் மேலும் செல்வந்தர்களானார்கள். இரண்டாம் அலக்ஸாந்தரின் விடுதலைச் சட்டங்கள் வெறும் காகித விடுதலையை அளித்ததே தவிர வறுமையிலிருந்து விடுதலை பெற நிலம் அளிக்கவில்லை. சமுதாயத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடியானவர்கள் இதனால் புரட்சியில் இறங்கினர்.

4. **தொழிலாளர்களின் துன்பங்கள்:**

தொழிற்புரட்சியின் விளைவாக ரஷ்யாவில் பல மாற்றங்கள் ஏற்பட்டது. புதிய தொழிற்சாலைகள் நவீன இயந்திரங்கள் ஆகியவற்றால் தொழில் வளர்ச்சியடைந்தது. இந்த வளர்ச்சியினால் தொழிலாளர்வர்க்கம் என்ற புதிய பிரிவு ஏற்பட்டது. வேலை தேடி நகரம் வந்த ஏழைத் தொழிலாளர்களை, முதலாளிகள் குறைந்த கூலிக்கு அமர்த்தினர். சுகாதாரமற்ற நிலையில் அதிக வேலை வாங்கினார்கள். தங்களது நலன்களைப் பாதுகாக்க தொழிலாளர்கள் சங்கம் அமைத்த போது முதலாளிகள் அவற்றை ஒழித்தனர். இதனால் தொழிலாளி-முதலாளி என்ற புதிய அமைப்பு உருவானது. உழைப்புக்குத் தகுந்த ஊதியம், தொழில் பாதுகாப்பு, வேலை உணர்வு ஆகியவை கிடைக்காத காரணத்தினால் தொழிலாளர்கள் ஏழ்மையில் வாடினார்கள். பிரச்சனைகட்குத் தீர்வு புரட்சிதான் என தொழிலாளர்கள் முடிவு செய்தார்கள்.

5. **கார்ல் மார்க்ஸின் தாஸ் காபிடல் (Das Capital):**

அறியாமை இருட்டில் அமைதிகிட்டாது அல்லலுற்ற மக்களை தட்டியெழுப்பி உயர் கருத்தை அவர்கள் உள்ளத்தில் பதித்து புரட்சிப பாதையை நோக்கி அவர்களை இட்டுச் செல்ல, கார்ல் மார்க்ஸ், டால்ஸ்டாய், மாக்சிம் கார்க்கி, பிரடரிக் எங்கல்ஸ் போன்ற எழுத்தாளர்கள் புரட்சிக் கருத்துக்களை மக்களிடையே பரப்பினார்கள். பிரெஞ்சு

எழுத்தாா்களான வால்ட்ா், ரூசோ போன்று புகழ்பெற்றவா் காா்ல் மாா்க்ஸ் (Karl Marx) ஆவாா்.

காா்ல் மாா்க்சின் தாஸ் காபிடல் (மூலதனம்) என்ற நூல் முதலாளித்துவத்தின் தீமையையும ரஷ்யாவில் தொழிலாளா்களின் அவல நிலைமையும் சுட்டிக் காட்டியது. அவா், மூலதனத்தை மட்டும் வைத்துக் கொண்டு எவ்வித வேலையும் செய்யாமல் முதலாளிகள் லாபம் பெறுவதையும், ஏழை மேலும் ஏழையாக மாறுவதையும் செல்வந்தா்கள் மேலும் பணக்காரா்கள் ஆவதையும் பற்றிக் குறிப்பிட்டாா். முக்கியமாகத் தொழிலாளா்களின் உழைப்பை முதலாளிகள் எவ்வாறு சுரண்டுகிறாா்கள் என்பதைத் தெளிவாக விளக்கினாா்.

தாஸ் காபிடலில் புரட்சிக்குப் பின்னா் செல்வந்தா்களின் சொத்துக்களை என்ன செய்வது என்று காா்ல் மாா்க்ஸ் எடுத்துக் கூறினாா். முதல், நிலம், வீடு, சுரங்கங்கள், தொழிற்சாலைகள் அனைத்தும் அரசாங்கத்திற்கே சொந்தமாக்கப்பட வேண்டும் என்றாா். மூலதனம் எல்லோராலும் சொந்தமாக்கப்படுகின்ற ஆங்கில வாா்த்தையான ‘Common’ என்ற சொல்லிலிருந்த பிறந்த (Communism) கம்யூனிசம் என்ற கருத்தை வெளியிட்டாா். கம்யூனிச அரசாங்கம் ஒன்றைப் புரட்சியின் மூலமே அமைக்க முடியுமென்றாா்.

காா்ல்மாா்க்ஸின் தாஸ்காபிடல் ரஷ்யப் புரட்சியின் வேதநூல் என்று அழைக்கப்படுகிறது. இது தவிர தன்னுடைய கருத்துக்களைக் கட்டுரையாகவும் புத்தகங்களாகவும் வெளியிட்டாா். இவரது பொதுவுடமைக் கொள்கை அறிக்கை (Communist manifesto) சோசலிச அறிக்கைகளில் அனைத்திலும் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. உலகத் தொழிலாளா்களே ஒன்றுபடுங்கள். நீங்கள் இழக்கவிருப்பது உங்கள் அடிமைத்தளங்களை மட்டுமே. நீங்கள் வெல்லவோ இப்பொருலகமே காத்து நிற்கிறது என்ற மாா்க்ஸின் முழக்கம் தொழிலாளா்களின் தாரக மந்திரமாயிற்று. இதனை ஏற்றுக்கொண்ட மக்கள் புரட்சிக்குத் தயாராயினா்.

### 6. சாா் இரண்டாம் நிக்கோலஸின் எதேச்சதிகாரம்: 1984-1917

முதல் உலகப்போா் ஆரம்பித்த போது ரஷ்யாவின் மன்னராக இருந்தவா் இரண்டாம் நிக்கோலஸ் ஆவாா். இவா் திறமையற்றவா். மக்களின் நிலையை உணராமல் தன்னிச்சைப்படிச் செயல்பட்டாா். இவரது அழகிய மனைவி அலக்ஸாந்திரா பியோதரவ்னா (Alexandra Fyodoroyna) நாட்டின் அரசியலில் ஆதிக்கம் கொண்டிருந்தாா். ஆனால் இருவரும் கிரிகோரி ரஸ்புதின் என்ற சொ்பியத் துறவியின் ஆலோசனைப்படியே ஆட்சி புரிந்தனா். ரஸ்புதின் ஹிப்னாடிச முறையில் நோய்களைக் குணப்படுத்தும்

வல்லமை கொண்டவர். இவர் நிக்கோலஸின் மகனை நோயிலிருந்து குணப்படுத்தியதால் அரச குடும்பத்தின் மதிப்புமிக்க நண்பரானார்.

ரஸ்புதின் பொறுப்பும் திறமையும் வாய்ந்த அதிகாரிகளையும் தளபதிகளையும் பதவி நீக்கம் செய்து தனக்குச் சாதகமானவர்களை அப்பதவியில் அமர்த்தினார். தனக்கு எதிராக எழுந்த எதிர்ப்புகள் அனைத்தையும் ஈவு இரக்கமின்றி நசுக்கினார். **ரஷ்யப்** முடியாட்சியின் சீர்கேட்டிற்கு இந்த கிறுக்குத்துறவியே காரணம் என்று உயர்குடியினர் நம்பினர். எனவே ரஸ்புதினை ஒழித்துக்கட்டத் திட்டம் தீட்டினர். பல கொலை முயற்சிகட்குத் தப்பிய ரஸ்புதீன் 1916 டிசம்பர் 17-ல் படுகொலை செய்யப்பட்டார். இதனால் கோபமடைந்த நிக்கோலஸ் மக்களைக் கொடுமைப்படுத்தினார். எனவே மக்கள் அரசுக்கெதிராகப் புரட்சியில் ஈடுபட்டனர்.

### 7. முதல் உலகப் போரில் ரஷ்யாவின் பங்கு:

முதல் உலகப்போரில் **ரஷ்ய** நேச நாடுகளின் ஆதரவில் ஜெர்மனியை எதிர்த்துப் போரிட்டது. ஆனால் போரில் ரஷ்ய ஈடுபட்டதின் விளைவுகளை மக்கள் நேரடியாக அனுபவிக்க வேண்டியதாயிற்று, சண்டையிட்ட ரஷ்யப்படைகள் பல இடங்களில் தோல்வியடைந்தது. இது சார் ஆட்சியின் பலவீனத்தை வெளிப்படுத்தியது. அத்தியாவிசயப் பொருட்களின் விலை ஏறியது. பயிரிடுவோரே போர்க்களமும் செல்லவேண்டியதிருந்ததால் உணவுப் பொருட்களின் உற்பத்தி குறைந்தது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததால் தொழில்துறை உற்பத்தியும் சரிந்தது. படையில் பணி புரிய பலர் மறுத்தனர். படை வீரர்களின் மனவலிமையும், உடல் வலிமையும் குன்றியது. எனவே அவர்கள் புரட்சியர்ளர்களொடு சேர்ந்துகொண்டு மன்னரை எதிர்த்தாகள். புரட்சி ஆரம்பமானது.

### 8. லெனினின் பிரச்சாரம்:

கார்ல் மார்ஸின் கொள்கைகளைப் பின்பற்றிய ரஷ்யப் புரட்சியாளர் லெனின் அவார். இளமையிலேயே அறிவுக் கூர்மையும் நல்லொழுக்கமும் நிரம்பப் பெற்றவர். மார்க்சிய சிந்தனைகளை ஆழ்ந்து படித்த லெனின் சார் மன்னர்களின் கொடுங்கோன்மையிலிருந்து ரஷ்யப் நாட்டை விடுவிக்க வேண்டுமானால் பாட்டாளி மக்களை ஒன்று திரட்டி ஒரு சோசலிசப் புரட்சியை நடத்துவதின் மூலமே முடியும் என்ற முடிவுக்கு வந்தார். தூங்கிக்கிடந்த ரஷ்யப் சமுதாயத்தை தனது புரட்சிக் கருத்துக்கள் மூலம் தட்டி எழுப்பினார். பொதுவுடமை சமுதாயத்தை ரஷ்யாவில் ஏற்படுத்த அரசாங்கம் லெனினை நாடு கடத்தியது. வெளிநாடுகளில் இருந்து கொண்டே ரஷ்யப் மக்களைப் புரட்சிக்கு

ஆயத்தப்படுத்தினார். முதல் உலகப் போர் நடந்து கொண்டிருந்த சமயத்தில், நாட்டில் அதிர்ப்தி மேலோங்கி இருந்த சமயம் பார்த்து சிங்கம் போல ரஷ்யாவினுள் நுழைந்து புரட்சியை ஏற்படுத்தினார். போர்வீரர்கள் பேர் செய்ய மறுத்தனர். தொழிலாளர் வேலை செய்ய மறுத்தார்கள் புரட்சி வெடித்தது.

**பிப்ரவரிப் புரட்சியின் போக்கு:**

ரஷ்யப் புரட்சி இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. முதல் புரட்சி 1917 பிப்ரவரி மாதம் 23-ம் தேதி தொடங்கியது. அப்போது 6,70,00 தொழிலாளர்கள் வேலை நிறுத்துத்தில் ஈடுபட்டார்கள். கலகங்கள், தெருக் கிளர்ச்சிகள், விவசாயிகளின் போராட்டங்கள, ஊர்வலங்கள் என சங்கிலித் தொடராக நடைபெற்றன. பெட்ரோகிரேட் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பிப்ரவரி 27-ம் தேதி பெட்ரோகிரேட் தொழிலாளர்களுடன் மன்னரின் படைகள் சேர்ந்து கொண்டன. புரட்சிப் படையினர் தங்கள் துப்பாக்கிகளை மன்னராட்சி மீது திருப்பினார். பிப்ரவரி 28-ல் பெட்ரோகிரேட் நகர் முழுவதும் புரட்சியாளர் கட்டுப்பாட்டில் வந்தது. ஒரு தற்காலிக சட்டமன்ற ஆட்சிக்குழு அமைக்கப்பட்டது. அதில் மென்சிவிக்குகளும், சமதர்மப் புரட்சியாளர்களும் பெரும்பான்மையினாராக இருந்தனர்.

சட்டமன்றப் பிரதிநிதிகள் இரண்டு பேர் நிக்கோலஸைச் சந்தித்து பதவி துறக்குமாறு வற்புறுத்தினர். 1917 மார்ச் 2-ம் தேதி மாலை தனது சகோதரர் மைக்கேலை அரசராக நியமித்து விட்டு முடிதுறப்புப் பத்திரத்தில் கையெழுத்திட்டார். அப்பத்திரத்தைக் கொண்டு வந்த பிரதிநிதி தலைநகர் திரும்பியபோது மன்னர் மைக்கேல் நீடூழி வாழ்க என்றார். இதைப்பற்றி ட்ராட்ஸ்கி குறிப்பிட்ட போது முடியாட்சியை வெகுவேகமாக நாடு வாந்தி எடுத்துவிட்டது. அது மீண்டும் மக்கள் தொண்டைக்குள் ஒரு போது இறங்காது என்றார். மைக்கேல் மன்னர் பதவியை ஏற்க மறுத்து விட்டார். இவ்வாறு முதல் புரட்சியில் ரஷ்யாவில் மன்னர்களின் பரம்பரை ஆட்சி முடிவுற்றது. மார்க்ஸிய கருத்துக்களும் ஜனநாயக் கருத்துக்கட்குமிடையிலான ஒரு மிதவாத கருத்துக் கொண்ட அரசு ஏற்படுத்தப்பட்டது.

**புதிய அரசு:**

1917, மார்ச் 3-ம் தேதி ஜார்ஜ் லிவாவ் (George Lvov) தலைமையில் தற்காலிக அரசு ஒன்று பதவி ஏற்றது. மிலயுகோவ் வெளிநாட்டு அமைச்சராகவும், குக்கோவ் போர்த்துறை அமைச்சராகவும் தரஸ்செங்கோ நிதியமைச்சராகவும், நெக்ரசோவ் செய்தித்துறை அமைச்சராகவும், பெட்ரோகிரேட் சோவியத்தின் துணைத் தலைவரான

கெரன்ஸ்கி நீதித்துறை அமைச்சராகவும் பதவி ஏற்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி போன்ற நட்பு நாடுகள் இந்த அரசாங்கத்தை அங்கீகரித்தன.

ஆனால் இந்த அரசு பெட்ரோகிரேட் சோவியத்துடன் இணைந்தே செயல்பட வேண்டும் என்று கூறப்பட்டது. நாடெங்கிலும் சோவியத் என்ற அமைப்புகள் உருவாயின. அரசின் ஆணைகளை நடைமுறையில் செயல்படுத்தும் அதிகாரம் இந்த சோவியத்களிடம் இருந்தது. ஆட்சி பீடத்தில் அமர்ந்த தாரளத் தன்மைக் கொண்ட புதிய அரசு எதையும் செயலாற்றிடும் வகையின்றி இருந்தது. சமுதாயத்தைக் கட்டுபாட்டில் வைக்கத் தவறியது. படையினரின் ஒழுங்கும் கட்டுப்பாடும் சீர்குலைந்து போயிற்று. இச்சூழ்நிலையில் மில்யுகோவ், குக்கோவ் ஆகியோர் ராஜினாமா செய்துவிட்டனர். அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்ட போது ஆறு பேர் இடம் பெற்றனர். அதில் கெரன்ஸ்கி, தரஸ்செங்கோ, நெக்ரசோவ் ஆகியோரே வலிமை பெற்றிருந்தனர்.

புதிய போர்த்துறை அமைச்சரான கெரன்ஸ்கி சிறந்த சொற்பொழிவாளர். நல்ல வழக்கறிஞர். தனது மின்காந்தச் சொற்பொழிவுகள் மூலம் மக்களைக் கவர்வதில் வல்லவர். ஆட்சியில் அமர்ந்தவர்களிடையே வேற்றுமையும், குழப்பமும் காணப்பட்டபோது கெரன்ஸ்கி பிரபலமானார். பிரதமர் ஜார்ஜ் லிவாவ் பதவி விலகிய பின் கெரன்ஸ்கி புதிய பிரதமரானார். அக்டோபர் புரட்சியின் போது ரஷ்ய பிரதமராக இருந்தவர் கெரன்ஸ்கி ஆவார்.

### அக்டோபர் புரட்சி (**October Revoloution**):

ரஷ்யாவில் இரண்டாவது புரட்சி 1917 அக்டோபரில் ஏற்பட்டது. இதுதான் அக்டோபர் புரட்சி என்றும், கம்யூனிசப் புரட்சி என்றும் அழைக்கப்படுகிறது. ஆட்சி பீடத்தில் அமர்ந்த தாராளத் தன்மை கொண்ட புதிய மிதவாத அரசு எளிதில் செயலாற்றிடும் வகையின்றி இருந்தது. சுவிட்சர்லாந்திலிருந்த லெனின் 1917, மார்ச் 27-ல் புறப்பட்டு ஏப்ரல் 3-ம் தேதி பெட்ரோகிரேட் வந்து சேர்ந்தார். சமதர்மப்புரட்சி வாழ்க என்ற முழக்கத்துடன் உரை நிகழ்த்தினார்.

புதிய அரசாங்கத்தில் மக்கள் அதிக நம்பிக்கை வைக்கவில்லை. முதல் உலகப் போரைத் தொடர்ந்து நடத்தியது புதிய அரசு. போர் வீரர்கள் சலிப்படைந்தனர். போர் நீடித்ததின் காரணமாக மீண்டும் உணவுப் பஞ்சமும் உற்பத்தித் தடையும் ஏற்பட்டன. அரசாங்கத்தின் மிகுந்த வெறுப்பை லெனின் தலைமையிலான இடது சாரி அமைப்பான போல்சிவிக்குகள் பயன்படுத்திக் கொண்டனர். மக்களுக்கு சமாதானம், உணவு, நிலம் (Peace, bread and Land) ஆகியவற்றை வழங்குவதாக வாக்குறுதி அளித்தனர்.

தொழிலாளர்களின் அரசை அமைப்பதாகக் கூறினார் லெனின். மிதவாதிகளின் ஜனநாயகமும், பாராளுமன்றமும் குடியரசும் நமக்கு தேவையில்லை. நமக்கு வேண்டிய அரசாங்கம் விவசாயிகளாலும் தொழிலாளர்களாலும் தான் அமைக்கப்பட வேண்டும் என்றார்.

டிராட்ஸ்கி என்பவர் பெட்ரோகிரேட் சோவியத்தின் தலைவர். இவர் லெனின் கொள்கைகளின் தீவிர அதரவாளராக மாறினார். கெரன்ஸ்கியின் ஆட்சியைக் கடுமையாக சாடினார். பெட்ரோகிரேடில் அமைக்கப்பட்ட இராணுவப்புரட்சிக் குழுவுக்கு அவர் தலைவரானார். புதிய புரட்சிக்கான ஏற்பாடுகளை டிராட்ஸ்கியே விரைந்து செயலாற்றினார். அக்டோபர் 2-ம் தேதி பெட்ரோகிரேட் வந்த லெனின் புரட்சியை உடனடியாகத் துவக்கினார். அக்டோபர் 24-ம் தேதி ஆயுதம் தாங்கிய 25,000 போல்சிவிக் கட்சியினர் புரட்சியில் கலந்து கொண்டனர். புரட்சியின் மையமான குளிர்கால மாளிகை தாக்கப்பட்டது. அரசாங்க படைகள் புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டன. கெரன்ஸ்கி தப்பி ஓடினார். மாளிகை வீழ்ந்தது. இதுவே அக்டோபர் புரட்சியாகும். தொழிலாளர்களின் சர்வாதிகார அரசு (governemtn of the Proletariate) ஒன்று லெனின் தலைமையில் அமைக்கப்பட்டது. இவ்வாறு உலகத்தின் முதல் கம்யூனிச அரசாங்கம் தோன்றியது.

## ரஷ்யப்புரட்சியின் விளைவுகள்:

1. ரஷ்யாவில் பரம்பரை மன்னராட்சி ஒழிக்கப்பட்டது. 1918 ஜுலை 16-ம் தேதி கடைசி மன்னரான இரண்டாம் நிக்கோலசும் அவரது குடும்பத்தினரும் கொலை செய்யப்பட்டனர்.

2. இதுவரை கொள்கையளவிலேயே இருந்து வந்த பொது உடமைத் தத்துவம் முதல் முதலாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. கார்ல்மார்க்ஸின் தத்துவங்களின் அடிப்படையில் ரஷ்யாவில் அரசியல் பொருளாதார மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.

3. ரஷ்யாவில் தொழிலாளர்களின் நிலை உயர்ந்தது. அவர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெற்றார்கள். கூட்டுப் பண்ணை விவசாயம் மூலம் உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டது.

4. எல்லாத துறைகளிலும் வளர்ச்சி பெற்று உலக அளவில் ரஷ்யா மாபெரும் வல்லரசாக விளங்குவதற்கு ரஷ்யப் புரட்சி வழி வழிவகுத்தது.

5. கம்யூனிசக் கருத்துக்களை உலகம் முழுவதும் பரப்புவதற்கு ரஷ்யா பல வழிகளைக் கையாண்டது. அதன் விளைவாக உலக நாடுகள் கம்யூனிச நாடுகள் என்றும் முதலாளித்துவ நாடுகள் என்றும் இரு அணியாக பிரிந்தது.

6. பொதுவுடமை இயக்கத்திற்கு எதிராக பல இயக்கங்கள் தோன்றின. இத்தாலியில் பாசிசமும், ஜெர்மனியில் நாசிசமும் கம்யூனிசத்தை எதிர்த்துத் தோன்றின.

7. இறுதியாக ரஷ்யப்புரட்சியின் விளைவாக ரஷ்யாவில் அறியாமை ஒழிக்கப்பட்டு புதிய சமுதாயம் அமைக்கப்பட்டது. விஞ்ஞானம் மற்றும் கலைத்துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது.

## 12. லொக்கார்னோ உடன்படிக்கை

## (LOCARNO PACT, 1925)

முதல் உலகப் பேரில் ஜெர்மனியைத் தோற்கடித்த பிரான்ஸ், ஜெர்மனி எந்த நேரமும் தம்மைத் தாக்கக்கூடும் என்று அஞ்சியது. ஜெர்மனியின் பலத்தையும் தனது பலவீனத்தையும் பிரான்ஸ் நன்கு உணர்ந்திருந்தது. எனவே தனக்கு பாதுகாப்பு மற்றும் படையுதவி உத்திரவாதம் வேண்டுமென்று நேசநாடுகளிடம் கோரியது. ஆனால் நேசநாடுகள் முக்கியமாக இங்கிலாந்து, அமெரிக்கா ஆகியவை பிரான்சுக்கு எந்த உதவியையும் அளிக்க முன்வரவில்லை. எனவே 1920-ம் ஆண்டு முதல் பிரான்ஸ் நாடு தனது அண்டை நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்து கொள்ள முயற்சித்தது. அதன் விளைவாக ஏற்பட்டவையே லொக்கார்னோ ஒப்பந்தங்களாகும்.

### லொக்கார்னோ உடன்படிக்கை ஏற்பட்ட சூழ்நிலை:

பிரான்ஸ் நாடு தனக்குப் பாதுகாப்புத் தேடும் முயற்சியைத் தீவிரப்படுத்தியது. பன்னாட்டு அரசியலில் கூட்டுப் பாதுகாப்பு முறை தோல்வியடையவே, வட்டார அளவில் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. 1922-ல் ஜெர்மனியும் ரஷ்யாவும் ராபெல்லா என்ற உடன்படிக்கை செய்து கொள்ளவே, ஜெர்மனியையும் ரஷ்யாவையும் பிரிக்கவும், பிரான்சுக்கும் ஜெர்மனிக்குமிடையே ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தவும் இங்கிலாந்து முயற்சித்தது. இதுவே லொக்கார்னோ ஒப்பந்தங்கள் ஏற்படுத்துவதற்கு அடிப்படைக் காரணமாகியது.

1925-ம் ஆண்டு அக்டோபரில் ஜெர்மனி, இத்தாலி, போலந்து, பிரான்ஸ், இங்கிலாந்து, பெல்ஜியம், செக்கோஸ்லோவேகியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ஸ்வீட்சர்லாந்து நாட்டிலுள்ள மாகியோர் (Maggiore) ஏரிக்கரையிலுள்ள லொக்கார்னோ என்ற

இயற்கையழகு நிறைந்த இடத்தில் கூடி பேச்சுவார்த்தைகள் நடத்தினர். 1925 டிசம்பர் 1-ம் தேதி லண்டனின் ஒப்பந்தங்களின் நகல் கையெழுத்தானது. லெக்கார்னோ ஒப்பந்தங்களின் முக்கிய விதிமுறைகள் வருமாறு:

1. பிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் இடைப்பட்ட எல்லைப் பகுதிக்கும், பெல்ஜியத்திற்கும் பிரான்சிற்கும் இடைப்பட்ட எல்லைப் பகுதிக்கும் இங்கிலாந்து உத்திரவாதம் அளித்தது. பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி அகிய மூன்று நாடுகளும் போர் செய்வதில்லை என்று முடிவு செய்தன.

2. ஜெர்மனியின் மேற்கு எல்லை மீறப்படுமானால் ஒப்பந்த நாடுகள் அதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஜெர்மனியின் கிழக்கு எல்லையைப் பாதுகாக்கும் பொருட்டு பிரான்ஸ், பெல்ஜியம், செக்கோஸ்லோவேகியா, போலந்து ஆகிய நாடுகள் ஜெர்மனியுடன் உடன்பாடுகளை செய்து கொண்டன. ஆனால் இந்த எல்லைக்கு இங்கிலாந்து உத்திரவாதம் அளிக்கவில்லை.

3. பெல்ஜியமும், பரான்சும் ஜெர்மனியுடனான தங்கள் பிரச்சனைகளை அமைதி வழியில் தீர்த்துக் கொள்ள முடிவு செய்து கொண்டன.

4. பிரான்ஸ், செக்கோஸ்லோவேகியா, போலந்து ஆகிய நாடுகள் ஆபத்துக் காலங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டுமென முடிவு செய்து கொண்டன.

லொக்கார்னோ ஒப்பந்தங்கள் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் இடையே நிலவிவந்த பகைமையைத் தணித்து புதிய உணர்வை ஏற்படுத்தியது. இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் சேம்பர்லேன், லொகர்னோ ஒப்பந்தம் போர்க்காலத்திற்கும் அமைதிக் காலத்திற்கும் இடைப்பட்ட எல்லை வரைகோடு என்றார். வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளாத ஜெர்மனி இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் தான் இழந்த தேசிய கௌரவத்தை மீண்டும் பெற்றுக் கொண்டது. இந்த உடன்படிக்கையின் கட்டுப்பாடுகளை சம்பந்தப்பட்ட நாடுகள் ஏற்றுக்கொண்டன. அமைதிக்காலம் ஆரம்பித்துவிட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது.

ஆனால் லொக்கார்னோ ஒப்பந்தம் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கைக்கும், சர்வதேச சங்கத்தின் விதிமுறைகளுக்குக் கிடைத்த பெரிய அடியாகும். இதற்கு முக்கியக் காரணம் பன்னாட்டுக் கூட்டுப் பாதுகாப்பு முறையை இந்த உடன்படிக்கை தவிடுபொடியாக்கியது ஆகும். ரஷ்யா இந்த உடன்படிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படாததால், தனக்கெதிராக மேற்கத்திய நாடுகள் செய்த சதி என்று லொக்கார்னா உடன்படிக்கையை வர்ணித்தது. லொக்கார்னோ உடன்படிக்கையினால்

அதிக நன்மையடைந்த நாடு ஜெர்மனிதான். ஜெர்மனி மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் சம அந்தஸ்து நிலைமை பெற்றதோடு மட்டுமல்லாமல், தனது படை பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும் ஜெர்மனிக்கு சந்தர்ப்பம் கிடைத்து. ஜெர்மனி சர்வதேச சங்கத்தில் சேரவும், அதன் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினராக சேரவும் அனுமதியளிக்கப்பட்டது.

### கெல்லாக்-பிரையண்ட ஒப்பந்தம் 1928

### (Kellogg-Briand Pact)

பிரான்ஸ் நாட்டின் வெளியுறவு அமைச்சரான அரிஸ்டைட் பிரையண்ட், (Aristide Briand) அமெரிக்க நாட்டின் வெளியுறவுச் செயலரான பிராங்க் கெல்லாக் (Frank Kellogg) என்பவருடன் தொடர்பு கொண்டு போர் என்பது சமூகத்திலிருந்து விலக்கப்பட்டதாகச் சொல்லி ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினர். கெல்லாக் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டாலும் பிற உலக நாடுகளும் போரை தங்கள் நாட்டு தேசியக் கொள்கையின் ஒரு கருவியாகக் கொள்வதில்லை என ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று கூறினார். அதன்படி 1928 ஆகஸ்ட் 27ம் தேதி சுமார் 15 நாடுகள் ஒப்பந்தம் பாரிசில் கூடி ஒன்றைச் செய்து கொண்டன. அதற்கு கெல்லாக் பிரையண்ட் ஒப்பந்தம் என்று பெயர். அதன் ஷரத்துக்கள் பின்வருமாறு:

1. ஒப்பந்த நாடுகள் அனைத்தும் தங்கள் நாட்டு தேசியக் கொள்கையில் போரைச் சட்டப்படி அமைந்துள்ள ஒரு கருவியாக தாங்கள் கருதவில்லை என அறிவித்தன.

2. தங்களுக்குள் ஏற்படும் எல்லாப் பிரச்சனைகளையும் சமாதான முறையில் தீர்த்துக் கொள்வதாகவும், போர் செய்வதில்லை என்றும் ஒப்புக்கொண்டன.

கெல்லாக்-பிரையாண்ட் ஒப்பந்தத்தில், கையெழுத்திட்ட நாடுகளில் முக்கியமானவை. அடிமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா, ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியவையாகும். இவ்வொப்பந்தம் உலகப்போருக்குப் பின்பு பிரான்ஸ் நாடு பின்பற்றிய வெளிநாட்டுக் கொள்கையின் பிரதிபலிப்பாகும். இது சர்வதேச சங்கத்தின் செயல் பாடுகளுக்குத் துணை புரிந்தது. ஆனாலும் இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளைச் செயல்படுத்த சிறந்த விதிமுறைகள் பின்பற்றப்பட்டதால், இவ்வொப்பந்தம் பயனுள்ள விளைவுகளை ஏற்படுத்த வில்லை.

## 13. நிக்கோலய் லெனின்

## (NIKOLAI LENIN, 1870-1924)

**நிக்கோலாய் லெனினின் வாழ்க்கைக் குறிப்பு:**

ரஷ்யப் புரட்சியின் சிற்பியான லெனின் 1870, ஏப்ரல் மாதம் 10-ம் தேதி ரஷ்யாவிலுள்ள வோல்க நதியருகிலுள்ள சிம்பிரிஸ்க் (Simbirisk) என்ற ஊரில் பிறந்தார். இவரது இயற்பெயர் விளாடிமிர் இலியச்யூலியனோவ் (Viladimir llyich Ulyanov) ஆகும். மிகவும் சாதாரணக் குடும்பத்தில் பிறந்த லெனினுக்கு இரண்டு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உண்டு. இவரது சகோதரர் அலெக்சாணடர் என்பவர் சார் இரண்டாம் நிக்கோலசைக் கொல்லச் சதி செய்ததாகக் கூறி 1887-மார்ச்சில் தூக்கிலிடப்பட்டார். இந்த நிகழ்ச்சி லெனின் மனதில் ஆறாத புண்ணாகிவிட்டது.

தனிப்பட்ட மனிதர்களின் பயங்கரவாதத்தின் மூலம் சமுதாயத்தில் எந்த மாற்றத்தையும் கொண்டுவர முடியாது என்ற கருத்து அவரது மனதில் ஆழமாகக் பதிந்தது. ஒரு அமைப்பு அல்லது நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் அதிகாரத்தைப் பெற்று சமுதாய மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்று உணர்ந்தார்.

தன சகோதரன் இறந்த ஆறு மாதம் கழித்து ஹாசன் (Kazan) பல்கலைக்கழகத்தில் சட்டம் பயில 1887-ல் சேர்ந்தார். ஆனால் மாணவர்களுடன் சேர்ந்து கொண்டு போராட்டத்திலும், ராக்கிங்கிலும் பங்கு கொண்டார் என்று கூறி வெளியேற்றப்பட்டார். எனவே 1980-ல் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் ஒரு வெளி மாணவராகச் சேர்ந்து படித்து 1881-ல் பட்டம் பெற்றார். ஆனால் சட்டப் பயிற்சியில் ஈடுபடாமல் மார்க்ஸியக் கருத்துக்களை ஆழமாகக் கற்றார். தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டம் பற்றி படித்துணர்ந்தார்.

லெனினின் மனைவி பெயர் நடேஷ்டா கான்ஸ்டான்டிநோவா கிருப்ஸகயா (Nadezda Konstantinova Krupskaya) என்பதாகும். இவர் எழுதிய என்ற புத்தகத்திலிருந்து லெனினைப் பற்றிய பல உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம். 1895-ல் பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார் லெனின். அந்த நாடுகளில் தொழிலாளர் விடுதலைக்கான போராட்ட சங்கம் ஒன்றை அமைத்தார். எனவே கைது செய்யப்பட்டார். 1897-ல் சைபீரியாவுக்கு மூன்று ஆண்டு நாடு கடத்தப்பட்டார். 1900 ஜனவரியில் லெனின் நாடு திரும்பினார். அப்போது அவருக்கு வயது முப்பது ஆகும். தனது இயற்பெயரை விட்டுவிட்டு 1900, பிப்வரியில்தான் நிக்கோலாய் லெனின் என்று பெயரை மாற்றிக் கொண்டார். 1900-ம் ஆண்டு முதல் 1917 வரை ஸ்விட்சர்லாந்தை தலைமையிடமாக வைத்துக் கொண்டு ரஷ்யாவில் மார்க்ஸிய

கருத்துக்களைப் பரப்பி வந்தார். 1917-ஏப்ரல் மாதம் ரஷ்யாவுக்குத் திரும்பி வந்து புரட்சிக்கு தலைமை வகித்தார்.

இவரது முயற்சியின் காரணமாகவே ரஷ்யாவில் மன்னர் ஆட்சி தூக்கி எறியப்பட்டு பாட்டாளி மக்களின் அரசாங்கம் நிறுவப்பட்டது. இவரது தலைமையில் பதவி ஏற்ற கம்யூனிச அரசாங்கம் ரஷ்யாவில் பல மாற்றங்களை ஏற்படுத்தி ரஷ்யாவை ஓர் உலக வல்லரசாக்கியது.

### லெனினும் ரஷ்யப்புரட்சியும்:

லெனின் தன்னுடைய கருத்துக்களைப் பரப்ப பத்திரிக்கை ஒன்று ஆரம்பிக்க நினைத்தார். அதன் விளைவாக இஸ்க்ரா சாரியாஆகிய பத்திரிக்கைகள் முறையே 1900 1909-ஆகிய ஆண்டுகளில் வெளிவந்தது. அதில் மார்க்ஸிய கருத்துக்களை வெளியிட்டு வந்தார். 1917-பிப்ரவரியில் ரஷ்யாவில் மென்ஸ்விக் புரட்சி ஏற்பட்டபோது லெனின் சுவிட்சர்லாந்தில் இருந்தார். ஜெர்மனியின் ஆதரவுடன் 1917 ஏப்ரல் 16-ம் தேதி பெட்ரோகிரேட் வந்து சேர்ந்தார். மறுநாள் போல்சிவிக் கட்சியினருக்கு ஒரு புதிய திட்டத்தை வெளியிட்டார். அதற்கு ஏப்ரல் குறிப்புகள் என்று பெயர். அதில் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

முதலாளித்துவம் சார்ந்த மாகாண அரசுகளுக்கு அதிகாரம் அளித்தல் கூடாது எல்லா அதிகாரங்களும் சோவியத்துகள் கையில் கொடுக்கப்பட வேண்டும். போரில் ரஷ்யா தோல்வியடைந்ததால் போரிலிருந்து விலக வேண்டும். நிலச்சுவான்தார்களின் நிலங்கள் எடுக்கப்பட்டு நிலமற்ற விவசாயிகட்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு தொழிற்சாலை நிர்வாகங்களில் பங்களிக்க வேண்டும். ரஷ்யாவில் வாழும் பலதரப்பட்ட இனத்தவர்களுக்கு சுய நிர்ணய உரிமை கொடுக்கப்பட வேண்டும்.

இந்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமானால் புரட்சியின் மூலம் அரசியல் அதிகாரங்கள் அனைத்தும் போல்சிவிக்குகள் கைக்குக் கிடைக்க வேண்டும் என்றார் லெனின். இவருடைய தலைமையில் 1917 அக்டோபர் 25-ல் கெரன்ஸ்கி தலைமையிலான மிதவாத அரசு தூக்கி எறியப்பட்டது. புதிய அரசாங்கம் லெனின் தலைமையில் அமைக்கப்பட்டது. ட்ராட்ஸ்கி வெளியுறவு கமிஷனராகவும், லெனினின் சீடரும், பிராவ்தா பத்திரிக்கையின் முதல் எடிட்டருமான ஸ்டாலின் தேசிய இனங்களின் தலைவராகவும் புதிய அரசில் பங்கேற்றனர். இவ்வாறு உலகத்தின் முதல் கம்யூனிச அரசு நிறுவப்பட்டது.

### லெனினின் உள்நாட்டுக் கொள்கை

(லெனின் ரஷ்யாவுக்கு ஆற்றிய பணிகள்)

புரட்சியின் போது லெனின் தான் அளித்த வாக்குறுதியைச் செயலாக்கும் வண்ணம் புதிய திட்டங்களை அறிவித்தார். தனது கொள்கை கோட்பாடுகளை இடையூறின்றிச் செயல்படுத்தினார்.

1. புதிய ஆணைகள்:

முதலாவதாக, வரிசையாகப் பல ஆணைகள் வெளியிடப்பட்டது. அவைகளின்படி தனியாரின் பண்ணைகள், மன்னரின் குடும்பப் பணணைகள், திருச்சபை நிலங்கள் நாட்டுடமை ஆக்கப்பட்டது. நிலமனைத்தும் மறு பங்கீட்டுக்கு உட்படுத்தப்பட்டு சமத்துவ முறையில் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அனைத்துத் தொழிற்சாலைகளிலும் எட்டுமணி நேர வேலை, அனைவருக்கும் இலவசக்கல்வி ஆகியவை பற்றி ஆணை வெளியிடப்பட்டது. சமுதாயத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட்டன. வங்கிகளும், பங்கு மாற்றக்களங்களும் நாட்டுடமையாக்கப்பட்டன. ஆண்களைப் போலவே பெண்களும் சம உரிமைகள் பெற்றனர்.

2. உயர்குடியினரின் உரிமை ஒழிக்கப்பட்டது:

லெனின் உயர் குடியினர் அனுபவித்து வந்து தனி உரிமைகளை அறவே வெறுத்தவர். எனவே அவர்களை அறவே ஒழிக்க நினைத்து செக்கா என்ற அமைப்பின் மூலம் வன்முறையை அவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விட்டார். எண்ணற்ற உயர் குடியினர் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் ஆதிக்கம் அறவே ஒழிக்கப்பட்டது. 1922-ம் வருடத்தில் மட்டும் சுமார் 50,000 போர் செக்கா அமைப்பினால் கொல்லப்பட்டனர். அடுத்த வருடமே இந்த செக்கா அமைப்பு கலைக்கப்பட்டு அதற்குப் பதிலாக ஒக்பு (OGPU) என்ற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் 45,000 உளவு ஏஜெண்டுகள் பணியாற்றினர்.

3. லெனினும் உள்நாட்டுப் போரும்:

ட்ராஸ்கியின் முயற்சியால் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் கொண்ட செஞ்சேனை ஒன்று அமைக்கப்பட்டது லெனின் தனது அடக்கு முறையின் மூலம் தனது அதிகாரத்தை நிலை நாட்டினார். ஒடுக்கப்பட்ட ராணுவத் தலைவர்களும், உயர் குடியினரும் ஒன்று சேர்ந்து புதிய புரட்சி அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள். அவர்களுக்கு, ரஷ்யாவில் புதிய கம்யூனிச அரசு வளர்வதை விரும்பாத மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகள் உதவி செய்தன. எதிர் புரட்சியாளர்களின் தலைவரான அலக்சயேவ், பழைய மன்னர்களின் படை அதிகாரிகளையும் வீரர்களையும் கொண்ட

வலிமையானதோர் படையை உருவாக்கினார். அதற்கு வெண்சேனை என்று பெயர். ஆனால் ட்ராட்ஸ்கியினால் உருவாக்கப்பட்ட செஞ்சேனை இந்த எதிர்ப்புகளை உறுதியாக ஒடுக்கியது. வெண்சேனை தோற்கடிக்கப்பட்டது. எதிர்ப்புரட்சி அடக்கப்பட்டது.

### 4. போர் பொதுவுடைமை: (**War Communism**)

உள்நாட்டுக் குழப்பங்களை முடிவுக்குக் கொண்டு வரவும், நாட்டின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், லெனின் பின்பற்றிய தீவிர நடவடிக்கைகள் போர் பொதுவுடைமை எனப்பட்டது. இதன் விளைவாக ரஷ்யா ஒரு ராணுவக் கூடாரமாக மாறியது. போர்ப் பொதுவுடைமையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

ரஷ்யாவில் புதிய விவசாயச் செல்வந்தர்கள் **குலக்குகள்** (Kulaksrich Peasants) என்றழைக்கப்பட்டனர். அவர்கள் தங்களிடம் மீதியிருந்த உணவுப் பொருட்களை விற்க மறுத்ததன் மூலம் அரசை நெருக்கடிக்குத் தள்ளினர். குலக்குகளின் தான்தோன்றித் தனமான போக்கை எதிர்க்கவும் அவர்களின் சுரண்டலிலிருந்து ஏழை விவசாயிகளைக் காக்கவும், தடையின்றி உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்யவும், ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தொலை தூரக் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

சிறு தொழில்கள், கைத்தொழில்கள் தேசிய உடைமையாக்கப்பட்டன. மக்கள் அனைவரும் தங்கள் தேவைக்கு அதிகப்படியான உற்பத்திப் பொருட்களை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கும் விலைக்கு அரசிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படிக் கொடுக்காதவர்கள் புரட்சியின் எதிரிகளாகக் கருதப்பட்டனர்.

ரஷ்யாவில் சுதந்திரமான அமைதியான தனி வியாபாரம் தடை செய்யப்பட்டது. உற்பத்தி, பகிர்வு ஆகிய அனைத்திலும் தேசிய உடைமை புகுத்தப்பட்டது. தொழிலாளர்கட்குச் சமத்துவ அடிப்படையில் கூலி வழங்கப்பட்டது. கூலி பொருட்களாகக் கொடுக்கப்பட்டது. உழைக்காதவர்களுக்கு உணவு இல்லை என்பதே போர்ப் பொதுவுடமைக் காலத்தின் முக்கியக் குறிக்கோளாக விளங்கியது. தொழிற்சங்கங்களின் உரிமைகள் நசுக்கப்பட்டன. மக்களின் அரசாங்கம் என்று கருதப்பட்டதால் வேலை நிறுத்தம் சட்ட விரோதம் என்று கூறப்பட்டது! போர்ப் பொதுவுடமைக் கருத்துக்கள் மூலம் ரஷ்யாவில் தொழிலாளர்களின் சர்வாதிகார அரசு நிறுவப்பட்டது.

### 5. லெனின் புதியபொருளாதாரக் கொள்கை:

### (**New Economic Policy**)

லெனின் எதிர்பார்த்த அளவு போர்ப் பொதுவுடைமைக் கொள்கை வெற்றியடையவில்லை. ரஷ்ய ரூபிளின் மதிப்பு குறைந்தது. விலைவாசி உயர்ந்தது. தொழிலாளர்களிடம் அதிருப்தி ஏற்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் பட்டடினியால் இறந்தனர். எனவே போர்ப் பொதுவுடைமைக் கொள்கையை விலக்கி, புதிய பொருளாதாரக் கொள்கையை அறிவித்தார் லெனின்.

அதன்படி விவசாயிகளிடம் கட்டாயக் கொள்முதல் நிறுத்தப்பபட்டது. வெளிச்சந்தையில் தங்கள் உபரி தானியங்களை விற்க உரிமை கொடுக்கப்பட்டது. விசாயிகள் தங்கள் நிலத்தைப் பிறருக்கு குத்தகைக்கு விடலாம். விவசாயத் தொழிலாளர்களைக் கூலியாட்களாகவும் அமர்த்திக் கொள்ளலாம். ஏழை விவசாயிகட்கு வரிச்சலுகைகளும் அளிக்கப்பட்டன. இச்சலுகையெல்லாம் தனியுடமைக் கொள்கையின் பிரதிபலிப்பாக இருந்தாலும், நாட்டின் எதிர்கால நலனில் லெனின் கொண்டிருந்த நம்பிக்கையே இது காட்டியது.

தொழில்துறை நிர்வாகிகள் தங்கள் தொழிற்சாலை உற்பத்தி பொருட்களின் விற்பனையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ள சலுகைகள் அளிக்கப்பட்டன. சிறு தொழில்கள் சில தனியார் துறையில் செயல்பட அனுமதிக்கப்பட்டது. அதன் விற்பனையும் தனியார் துறையைச் சேர்ந்த வணிகர்களே மேற்கொள்ளலாம். இதன் மூலம் தொழில் துறை நிலைமை ஓரளவு சீரடைந்தது. புதிய பொருளாதாரக் கொள்கை நுகர்வோர் கூட்டுறவுகளின் இயங்கும் தன்மையையும் மாற்றியமைத்தது. போர்ப் பொதுவுடைமை காலத்தில் அவை உணவு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கின. இப்போது அவை நேரடியாக அனைத்து உற்பத்திப் பொருட்களை வாங்கவும், நகர, கிராமப்புறங்களில் விற்பனை செய்யவும் அனுமதிக்கப்பட்டது.

சீர்திருத்தப்பட்ட நாட்டு நாணயம் நிலை நிறுத்தப்பட்டதால் ரூபிளின் வாங்கும் சக்தி உயர்ந்தது. அரசு வங்கியும், கடன்முறையும், தடையற்ற பொருளாதார நடமாட்டமும் மீண்டும் உயிர் பெற்றன. தனியார் துறையிலும், அரசுத் துறையிலும் இயங்கிய நிறுவனங்களின் போட்டியைத் தவிர்க்கவும், உற்பத்தியை அதிகரிக்கவும், அனைத்து நிறுவனங்களின் அணைப்புச் செயல்களின் மூலம் பொருளாதாரக் கட்டுக்கோப்பினைக் காக்கவும் புதிய தேசீயத்திட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதுவே வரலாற்றில் புகழ்பெற்ற காஸ்பிளான் என்பதாகும். லெனினின் இந்த நடவடிக்கைகள் மூலம் ரஷ்யப் பொருளாதாரம் சீர்திருந்தி விரைவிலேயே சுயபலத்தில் செயலாற்றும் வலிமையைப் பெற்றது.

## லெனினின் வெளிநாட்டுக் கொள்கை:

1. பிரஸ்ட்-லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை 1918: (**Treaty of Brest-Litovsk**)

லெனின் பதவியேற்றதும் எடுத்த முக்கியமான நடவடிக்கை முதல் உலகப்போரில் ரஷ்யாவை ஈடுபடாமல் நிறுத்தச் செய்ததேயாகும். புரட்சியின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதியை இவ்வாறு நிறைவேற்றினார். 1917, அக்டோபர் 26-ம் தேதி அரசாங்க ஆணை ஒன்றை வெளியிட்டு ஜெர்மனியுடன் போர் நிறுத்த உடன்பாட்டை செய்தார். பின்னர் பல எதிர்ப்புகளையும் மீறி ஜெர்மனியுடன் 1918, மார்ச் 3-ம் தேதி பிரஸ்ட்-லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கையை தனது நம்பிக்கைக்குரிய ட்ராட்ஸ்கி மூலம் செய்து கொண்டார். இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் மிகக் கடுமையானதாக இருந்தாலும் நாட்டின் நலன் கருதி ஏற்றுக்கொண்டார்.

இந்த உடன்படிக்கைப்படி ரஷ்யா, போலந்து, பின்லாந்து, லிதுவேனியா, எஸ்தோனியா, பெஸ்ஸரொபியா, பைலோரஷ்யா ஆகிய பகுதிகளை இழந்தது. பின்லாந்து, உக்ரெய்ன் பகுதிகளின் விடுதலையை அங்கீகரித்தது. 300 மில்லியன் தங்க ரூபிள் நாணயம் ஜெர்மனிக்கு இழப்பீடாக கொடுக்க சம்மதித்தது. இவ்வாறு இந்த உடன்படிக்கையின் மூலம் 13 லட்சம் சதுர மைல் நிலப்பரப்பை ரஷ்யா இழந்தது. நாட்டின் 34 சதவீத மக்கள் தொகையையும் 90 சதவீத நிலக்கரி வளங்களையும், 32 சதவீத விவசாய நிலங்களையும் இழந்தது. ஆனாலும் பின்னர் உலகப் போரில் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டதால் இந்த உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

2. ரஷ்யாவில் தலையிட்ட அந்நியப்படைகளுடன் போர்:

பிரஸ்ட்-லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கையை விரும்பாத மேலை நாடுகள் ரஷ்யா மீது கோபம் கொண்டன. மேலும் ரஷ்யாவில் வளர்ந்து வரும் கம்யூனிசக் கொள்கைகளை நசுக்க விரும்பின. எனவே அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் நாடுகளின் கூட்டுப்படைகள் ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 1918 மார்ச் மாதம் இந்தக் கூட்டுப் படைகள் ஆர்க் ஏஞ்சல் துறைமுகத்தைக் கைப்பற்றி ரஷ்யாவுக்குள் புகுந்தது. ஜப்பானியப்படை ஒன்று விளாடி வாஸ்டா நகரைத் தாக்கியது. இவ்வாறு ரஷ்யாவின் நட்பு நாடுகளே ரஷ்யா மீது போர் தொடுத்தது. அனால் தேசப்பற்று மிகுந்த செஞ்சேனை நேசப்படைகளை எதிர்த்து பெரும் வெற்றிபெற்றது. 1920-க்குள் ரஷ்யா மீது போர் தொடுத்த அனைத்துப் படைகளையும் தோற்கடித்துப் பின்வாங்கச் செய்தார் லெனின். செஞ்சேனை வென்றது. இது லெனினின் மாபெரும் சாதனையாகும்.

3. இங்கிலாந்து ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் உடன்படிக்கை: 1921

1921-ல் லெனின் இங்கிலாந்துடன் வியாபார உடன்டிக்கை ஒன்றைச் செய்து கொண்டார். அதன்படி இங்கிலாந்து ரஷ்யாவை அங்கீகரித்தது. அதே ஆண்டு ஜெர்மனியுடனும் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி ஒருவருக்கொருவர் போர் தொடுப்பதில்லை என்றும், பழைய உடன்படிக்கைகள் செல்லத்தக்கவையல்ல என்றும் முடிவு எடுத்தனர்.

### 4. ரப்பெல்லோ உடன்படிக்கை (**Treaty of Rapallo**): 1922

இந்த உடன்படிக்கை ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்குமிடையே ஏற்பட்டதாகும். இதன்படி முதல் உலகப்போரின் விளைவாக ஒருவருக்கொருவர் போர் இழப்பீடு கேட்பதில்லையென்றும், தங்கள் நாடுகளுக்கிடையே ராஜந்திர உறவை ஏற்படுத்திக் கொள்வது என்றும் முடிவு எடுத்தன. இந்த உடன்படிக்கை உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தது.

### 4. அண்டை நாடுகளுடன் சமாதான உறவு:

லெனினின் தலைமையிலான ரஷ்யா, அண்டை நாடுகளுடன் சமாதான உறவை ஏற்படுத்தியது. 1921-ல் தனது அண்டை நாடுகளான பின்லாந்து, லிதுவேனியா, எஸ்தோனியா ஆகிய நாடுகளின் சுதந்திரத்தை அங்கீகரித்தார் லெனின். போலந்துடனும் சமாதான உறவை ஏற்படுத்தினார் லெனின். பல கிழக்கத்திய நாடுகளுடனும் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். 1921 பிப்பரவரியில் பெர்சியாவுடனும், ஆப்கானிஸ்தானுடனும், மார்ச் மாதம் துருக்கி நாட்டுடனும் உடன்படிக்கை செய்து கொண்டார். இவருடைய வெளிநாட்டுக் கொள்கையின் விளைவாக பல நாடுகள் ரஷ்யாவை அங்கீகரித்தன. உலக அரங்கில் ரஷ்யாவின் செல்வாக்கு பெருகியது.

### லெனின் பற்றிய மதிப்பீடு:

நாட்டுப் பணியே உயிர்மூச்சென வாழந்த லெனினின் உடல் நலம் பாதித்தது. வாத நோய் அவரைத் தாக்கியது. சிறிது சிறிதாக உடல் நிலைமோசமாகி 1924 ஜனவரி 21-ம் தேதி தனது 53-ம் வயதில் லெனின் உயிர் நீத்தார். அவரது நினைவாக பெட்ரோகிரேடு நகருக்கு லெனின்கிரேடு என்ற பெயர் சூட்டப்பட்டது. அவரது உடல் பதப்படுத்தப்பட்டு செஞ்சதுக்கத்திலுள்ள மியுசியத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. கம்யூனிசப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தியவர் லெனின் சோவியத் யூனியன் என்ற கூட்டு அரசை நிறுவினார். புதிய பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றி நாட்டின் உற்பத்தியைப் பெருக்கினார். புரட்சிக்குப் பின் ஏற்பட்ட நெருக்கடியான ஆட்சியை வெற்றிகரமாகச் சமாளித்து 1918 முதல் 1924 வரை நிலையான ஆட்சியை அமைத்தார். உலக அரங்கில்

ரஷ்யாவுக்கு உன்னதமான நிலையைப் பெற்றுத் தந்தார். இவரது வெற்றிக்குக் காரணமாக இருந்தவை வலிமை மற்றும் ஒழுக்கம் நிறைந்த கம்யூனிசக் கட்சி, திறமை வாய்ந்த ரகசியக் காவல் துறை. தேசப்பற்று மிகுந்த செஞ்சேனை ஆகியவையாகும்.

## 14. முஸ்தாபா கமால் பாஷா

## (MUSTAFA KAMAL PASHA)

முதல் உலகப் போரில் தொல்வியடைந்த துருக்கியுடன் நேச நாடுகள் 1920-ல் செவ்ரஸ் உடன்படிக்கையைச் செய்து கொண்டன. துருக்கியப் பேரரசு கலைக்கப்பட்டது. துருக்கியின் ஐரோப்பியப் பகுதிகள் நேச நாடுகளின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டன. மேலும் துருக்கிக்குச் சொந்தமான சிரியா, பாலஸ்தீனம், மெசபடோமியா ஆகியவையும் வல்லரசுகளின் கட்டுப்பாட்டில் விடப்பட்டன. இதனால் துருக்கியின் பெருமை குறைந்தது. துருக்கியின் அழிவுகாலம் நெருங்கிவிட்டது எனறே கருதப்பட்டது. ஆனால் துருக்கிக்கு ஏற்பட்ட அவமானத்தைப் போக்கி, அதனை அழிவினின்று காப்பாற்றி, நவீனத் துருக்கியாக்கிய பெருமை முஸ்தாபா கமால் பாஷாவையே சாரும், இவர் நவீன துருக்கியின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

### துருக்கியில் தேசியப்புரட்சி ஏற்படக் காரணங்கள்:

### 1. இளம் துருக்கியர் இயக்கமும், தேசிய எழுச்சியும்:

துருக்கிய ஆட்சியிலிருந்து கிரீஸ், செர்பியா, பல்கேரியா, ருமேனியா ஆகிய நாடுகள் சுதந்திரம் பெற்றதை இளம் துருக்கியர் இயக்கம் விரும்பவில்லை. இந்த இயக்கம், பொதுமக்கள், ராணுவ அதிகாரிகள் ஆகியோரின் உள்ளங்களில் தேசிய உணர்ச்சியை ஏற்படுத்தி தேசிய ஜனநாயக அரசை ஏற்படுத்த முயற்சி செய்தது.

### 2. சுல்தான் ஆறாவது முகமதுவின் ஆட்சியின் மீது வெறுப்பு:

துருக்கிய சுல்தான் ஆறாவது முகமதுவின் பிற்போக்குக் கொள்கையும், அவரது திறமையற்ற நிர்வாகமுமே முதல் உலகப் போரில் துருக்கி தோல்வியடையக் காரணமாக அமைந்தது. செவ்ரஸ் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டால் துருக்கி இல்லாமல் போய்விடும் என்று கமால்பாஷா போன்ற ராணுவ அதிகாரிகள் எச்சரித்தார்கள், சுல்தானின் எதேச்சதிகார ஆட்சியை விட்டு துருக்கியக் குடியரசை நிறுவ தேசியப் பற்றுக் கொண்ட துருக்கியர்கள் தக்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தார்கள்.

3. **நேசப்படையின் ஆக்கிரமிப்பு:**

முதல் உலகப்போரில் துருக்கி தோல்வியடைந்த பின்னா் இத்தாலியப் படை 1919, ஏப்ரல் மாதம் அடேரியா, அனட்டேரியாவில் இறங்கியது. அதே ஆண்டு மே மாதம் கிரேக்கப்படை சிமிா்ணாவைக் கைப்பற்றியது. ஆனால் சுல்தான் ஆறாவது முகமது ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின் கீழ் கான்ஸ்டாண்டிநோபிளில் பாதுகாப்பாக இருந்தாா். எனவே சுல்தானின் ஆட்சியை அகற்றவும், அன்னியரின் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் இளம் துருக்கியா் இயக்கம் முயன்றது. இச்சூழ்நிலையைக் கமால்பாஷா பயன்படுத்திக் கொண்டு புரட்சியில் ஈடுபட்டாா்.

4. **செவ்ரஸ் உடன்படிக்கை மீது ஏற்பட்ட அதிருப்தி:**

செவ்ரஸ் உடன்டிக்கைப்படி துருக்கி கடுமையாகத் தண்டிக்கப்பட்டது. அது துருக்கியா் நலன்களுக்கு விரோதமாக அமைந்ததால் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த உடன்படிக்கையின் மீதுள்ள வெறுப்பினால் துருக்கி சுல்தானுக்கெதிரான புரட்சி வலுவடைந்தது.

**புரட்சியின் போக்கு:**

**எா்சீரமில் தேசிய காங்கரஸ்:**

முஸ்தாபா கமால் பாஷா தலைமையில் 1919-ம் ஆண்டு ஜுலை மாதம் தேசியத் துருக்கியா்கள் கிளா்ச்சி செய்தனா். அந்நியரை விரட்டவும். துருக்கியின் நிலைமையை உயா்த்தவும் எா்சீரமில் கூடிய தேசிய காங்கிரஸ் முயற்சிகளை மேற்கொண்டது.

**மாகாண அரசு:**

நேச நாடுகளின் தூண்டுதலின் பேரில் சுல்தான் ஆறாம் முகமது தேசியத் தலைவா்களைக் கைது செய்தாா். ஆனால் கமால் பாஷா அனட்டோரியாவிலுள்ள அங்காராவைத் தலைநகராகக் கொண்டு 1920 ஏப்ரலில் ஒரு மாகாண அரசை ஏற்படுத்தினாா். அங்காராவிலுள்ள இராணுவத்தை தனது ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டாா். சுல்தான் இந்த தேசியவாதிகளின் படையை அடக்க அனுப்பிய படை தோற்கடிக்கப்பட்டது. 1921-ல் துருக்கிய தேசியப் படை ஆா்மீனியரைத் தோற்கடித்தது. 1921 ஜனவரியில் ஜனாதிபதியையும், பொறுப்பாளா்களையும், ஒரு மந்திரி சபையையும் ஒரு மக்கள் மன்றத்தையும் உருவாக்கியது மாகாண அரசு.

**கிரேக்க நாட்டிற்கு எதிரான மாகாண அரசின் போா்:**

1921-ல் சுமிர்னாவைக் கைப்பற்றிய கிரீஸ் கமாலுக்கு எதிராகப் படையெடுத்தது. அங்காராவுக்கு அருகில் பெரிய போர் ஏற்பட்டது. இப்போரில் காமால்பாஷா பெரும் வெற்றி பெற்றார். 1922 ஆகஸ்டில் கிரேக்கப்படை அழிக்கப்பட்டது. செப்டம்பரில் சிமிர்னா கைப்பற்றப்பட்டது. இந்தப்படையெடுப்பினால் துருக்கியப் பகுதியிலிருந்த கிரேக்க வீரர்களும் மக்களும் விரட்டப்பட்டனர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தான் நேசப்படைகள் துருக்கியுடன் சமாதானம் செய்து கொள்ள முன் வந்தன. தான் இழந்த பகுதிகளை துருக்கி மீண்டும் பெற்றுக்கொண்டதால் துருக்கியின் மதிப்பு உயர்ந்தது. அதற்குக் காரணமான கமாலின் பெருமை உயர்ந்தது. சுல்தானின் புகழ்மங்கியது. நாட்டின் தலைமை அங்காராவில் அமைக்கப்பட்ட மாகாண அரசு வசம் வந்தது.

**சுல்தானின் ஆட்சியின் முடிவு:**

1922-ம் ஆண்டு நவம்பர் மாதம் அங்காராவில் கூடிய தேசிய சபையில் காலி.ஃ.பா பதவி சுல்தானில் பதவியிலிருந்து பிரிக்கப்பட்டது. அதன்பின் சுல்தான் பதவி ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் நாட்டின் உண்மையான அரசியல் தலைமை மக்களிடம் உள்ளது என்று அறிவிக்கப்பட்டது. கடைசி கால.ஃ.பா சுல்தானான ஆறாம் முகமது பதவி விலக்கப்பட்டார். அவர் ஓர் ஆங்கிலப் போர் கப்பலில் ஏறி மால்டாவிற்குத் தப்பி ஓடினார்.

**லாசேன் உடன்படிக்கை: 1923, ஜூலை 24**

போர் செய்து அலுத்துப் போயிருந்த எந்த வல்லரசும் துருக்கியுடன் போர் புரிவதை விரும்பவில்லை. எனவே 1923-ல் ஸ்விட்சர்லாந்திலுள்ள லாசேனில் மாநாடு ஒன்று கூட்டப்பட அழைப்பு விடுக்கப்பட்டது. இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ரஷ்யா, ஜப்பான், பல்கேரியா, ருமேனியா, யூகோஸ்லேவியா, கிரீஸ் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் இதில் கலந்து கொண்டன. கமால் பாஷாவுடன் புதிய உடன்படிக்கை ஒன்றை 1923 ஜூலை 24-ல் செய்துகொண்டன. அதற்கு லாசேன் உடன்படிக்கை என்று பெயர். அதன்படி துருக்கி, எதிர்னே, சிலிசியா, அடாலியா, கிழக்கு திரேஸ், அட்ரியநோபிள், ஏஜியன் தீவுகளிலுள்ள டெனிடாஸ் இம்பிராஸ் மற்றும் டொனிக்கனிஸ் ஆகிய பகுதிகளை துருக்கி பெற்றுக்கொண்டது. டார்டனல்லஸ் துருக்கியின் ஆட்சியிலே விடப்பட்டது. இங்கிலாந்தும், துருக்கியும் தங்களுக்கிடையே உள்ள பிரச்சனையை முக்கியமாக மோசலின் எல்லைப் பகுதி பற்றிய பிரச்சனையை பேச்சு வார்த்தை நடத்தித் தீர்த்துக்கொள்ள வேண்டும். துருக்கியில் வெளிநாட்டினர் அனுபவித்து வந்த சலுகைகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டது. போருக்கு முன்பு துருக்கிக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை நேசநாடுகள் ஏற்றுக்கொண்டன. இவ்வாறு லாசேன் உடன்படிக்கை துருக்கியின் மதிப்பை

மீண்டும் உயர்த்தியது. கமால் பாஷாவின் தலைமையில் ஒரு ஐக்கியமடைந்த வலுவான துருக்கி உருவானது.

**துருக்கி குடியரசாதல்: 1923**

1923 அக்டோபர் 29-ம் தேதி அங்காராவிலிருந்த தேசிய மன்றம் துருக்கியை ஒரு குடியரசு என்று அறிவித்தது. அதே நாளில் முஸ்தாபா கமால் பாஷா குடியரசின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆட்டோமான் பேரரசு ஒழிந்தது. தேசியப் புரட்சி வெற்றியடைந்தது. கமால்பாஷாவின் தலைமையில் துருக்கியக் குடியரசு நிறுவப்பட்டது.

**கமால் பாஷாவின் தலைமையில சாதனைகள்:** (துருக்கியக் குடியரசின் சாதனைகள்)

முஸ்தாபா கமால்பாஷாவின் 1881-ம் ஆண்டு சலோனிகா என்ற இடத்தில் ஒரு ஏழை நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார். இஸ்தான்புல் ராணுவப் பள்ளியில் பயிற்சி பெற்றார். இவர் கணிதத்திலும், சொற்பொழிவாற்றும் வன்மையிலும் புகழ்பெற்று விளங்கினார். துருக்கியப் புரட்சியில் தீவிரமாக ஈடுபட்டார். இத்தாலிக்கு எதிராக நடைபெற்ற போர்களிலும், பால்கன் போர்களிலும் கலந்து கொண்டார். முதல் உலகப்போர் ஆரம்பித்த போது அவர் சோ.ஃ.பியாவில் ராணுவத் தூதராக நியமிக்கப்பட்டார். பின்னர் அரசாங்கத்தின் நம்பிக்குரிய ராணுவத் தளபதியானார். 1918-ம் வருடத்திற்குள்ளாக ஒவ்வொரு துருக்கியப் போர் முனைகளிலும் படைகளுக்குத் தலைமை தாங்கி திறமையுடன் போரிட்டார்.

முஸ்தாபா கமால்பாஷா ஒரு மாபெரும் தாலைவர். புத்திக் கூர்மையும், தரமான வேலையைத் தாமே செய்வதற்கும் பிறரைச் செய்ய வைப்பதற்குமான ஆற்றலையும் பெற்றிருந்தார். எதைச் செய்தாலும், அதில் குறையிருக்கக்கூடாது என்று வற்புறுத்தினார். ஆடம்பரத்தையும் அர்த்தமற்ற வெற்றுச் சடங்குகளையும் அவர் விரும்பவில்லை. அசைக்க முடியாத மனஉறுதி, ஆற்றல், கைக்கூலி வாங்காத குண இயல்பு ஆகியவற்றைப் பெற்ற ஒரு முதல்தரத் தேசியவாதியாக விளங்கினார். எனவேதான் மக்களின் ஆதரவைப் பெற்று புரட்சி மூலம் துருக்கியைக் குடியரசாக்கினார். துருக்கியக் குடியரசின் தலைவரான முஸ்தாபா பல சீர்திருத்தங்களை மேற்கொண்டு துருக்கியைப் பலப்படுத்தி நவீனமாக்கினார். எனவே மக்கள் இவரை கமால் அட்டாடர்க் (Ataturk- துருக்கியர்களின் தலைவர்) என்று பெருமையுடன் அழைத்தனர்.

**உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்: Kamalism.**

**கமாலிசம் அல்லது கமாலின் ஆறு கோட்பாடுகள்:**

கமால்பாஷாவின் சீர்திருத்தங்கள் மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் தொடுவதாக அமைந்தது. தன்னுடைய சீர்திருத்தங்களை வரிசைப்படுத்தி ஆறுகோட்பாடுகளாக வெளியிட்டார். அவைகளைக் கமாலிசம் (Kamalism) என்று துருக்கியர்கள் குறிப்பிட்டனர். அவை பின்னர் 1937-ம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டன. கமாலிசத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

1. குடியாட்சி
2. தேசப்பற்று
3. மக்களின் இறைமை
4. அரசுடைமை
5. மதசார்பின்மை
6. புரட்சிகரமான சீர்திருத்தங்கள் ஆகியவையாகும்.

Republicanism, Nationalism, Populism Etatism, Secularism, Revolutionis இந்த ஆறு அம்சங்களைக் குறிக்கும்படியாக சிகப்பு நிறப் பின்னணியில் ஆறு வெள்ளை அம்புகள் கொண்ட சின்னத்தை தனது ஆட்சியின் அடையாளமாக வைத்துக் கொண்டார் கமால் பாஷா.

### 1. குடியாட்சி (**Republicanism)**

துருக்கியில் முடியாட்சி அகற்றப்பட்டு, அது ஒரு குடியரசாக அறிவிக்கப்பட்டது. 1924, ஏப்ரல் 20-ம் தேதி புதிய குடியரசின் அரசியலமைப்புச் சட்டம் ஒன்று பிரகடனம் செய்யப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட குடியரசை வலிமைபடுத்துவதற்காக பல புதியச் சட்டச் சீர்திருத்தங்களைப் புகுத்தினார் கமல்பா துருக்கியக் குடியரசின் நீதித்துறை அமைப்பு இருபதாம் நூற்றாண்டின் சூழ்நிலைக்கு உகந்ததாக இருக்கவில்லையென்று கூறினார். எனவே துருக்கிய வழக்கறிஞர்களுக்கும், நீதிபதிகளுக்கும் மேலை நாட்டுச் சட்டங்களில் பயிற்சி அளிப்பதற்காக அங்காராவில் 1926-ல் சட்டக் கல்லூரி ஒன்று திறக்கப்பட்டது. சிவில் மற்றும் கடன் சட்டத் தொகுப்பு சுவிட்சர்லாந்துச் சட்டங்களின் அடிப்படையிலும், குற்றவியல் சட்டத்தொகுப்பு இத்தாலியச் சட்டங்களின் அடிப்படையிலும், வாத்தகச் சட்டத்தொகுப்பு ஜெர்மானியச் சட்டங்களின் அடிப்படையிலும் தொகுக்கப்பட்டன.

### 2. தேசப்பற்று (**Nationalism)**

தேசப்பற்று கமாலிசத்தின் இரண்டாவது அம்சமாகும். கமால்பாஷா இயல்பாகவே தேசப்பற்று மிக்கவர். தான் ஒரு துருக்கியர் என்று கூறிக்கொள்வதில் பெருமை கொண்டார். துருக்கியர் அனைவரையும் தங்கள் இனத்திலும், மரபுரிமையிலும் பழங்கால வரலாற்றிலும் பெருமைகொள்ளும்படி செய்தார். துருக்கிய மொழிக்கு இதுவரை அராபிய எழுத்து வடிவமே இருந்து வந்தது. அது அவ்வளவு எளிமையாக இல்லை. எனவே 1928-ல் லத்தீன் மொழயின் அடிப்படையில் துருக்கி எழுத்து வடிவம் உருவாக்கப்பட்டு 1929 முதல் அது கட்டாயமாக்கப்பட்டது. அடுத்து பத்தாண்டு காலத்துக்குள் நாட்டின் 50மூ மக்கள் இந்த எழுத்து வடிவத்தை எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டார்கள். லத்தீன் எழுத்து முறையில் உருவாக்கப்பட்ட புதிய துருக்கிய மொழியில் துருக்கிய வரலாறு எழுதப்பட்டது. அதில் துருக்கியர்களின் பழம்பெருமை எடுத்துக் கூறப்பட்டது. துருக்கிய இலக்கியங்களில் வழக்கமாகப் பின்பற்றப்பட்டு வந்த அராபிய எழுத்துக்கள் நீக்கப்பட்டன. பழங்கால தூய்மையான துருக்கியர் சொற்கள் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. துருக்கிய மொழி குடியரசின் ஆட்சிமொழியாக்கப்பட்டது. ஒவ்வொரு வரையும் அவர்களின் குடும்பப் பெயர்களைப் பயன்படுத்துமாறு கட்டாயப்படுத்தினார். துருக்கி துருக்கியர்க்கே, துருக்கியர்கள் துருக்கிக்கே என்ற கமால் பாஷாவின் கோஷம் மக்களால் பெருமையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு மக்களிடையே தேசப்பற்றை வளர்த்தார் கமால்

### 3. மக்களின் இறைமை (**Populism**):

"Soverignity springs from the people" என்று கூறினார் கமால்பாஷா, புதிதாக 1924-ல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் இறைமை மக்களிடமே உள்ளது என்று திட்டவட்டமாக அறிவித்தது. எல்லாத் துருக்கியர்களும் இன சமய வேறுபாடின்றி சரிசமமானவர்கள். பேச்சுரிமை, சிந்திக்கும் உரிமை, எழுத்துரிமை, நடமாடும் உரிமை ஆகியவை மக்களுக்கு வழங்கப்பட்டது. எனவே மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட்டு, அவர்களின் வலிமை உணர்ந்தப்பட்டது.

### 4. அரசுடமைச் சீர்திருத்தங்கள் (**Etatism**):

துருக்கியின் பொருளாதார நிலையை உயர்ந்தவும் மூலப் பொருட்களைப் பெருக்கிக் கொள்ளவும், நாட்டில் அந்நியர்கள் செல்வாக்கைக் குறைக்கவும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். கமாலபா, நாட்டில் தீக்குச்சி, தேயிலை, சிகரெட்டுகள், பருத்தி மதுபானங்கள், உப்பு, பருத்தி, கம்பளி, எ∴கு, போக்குவரத்து, சுரங்கத்தொழில் ஆகியவை அரசுடமையாக்கப்பட்டன. தனியார் கம்பெனிகள் மீது அரசின் கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டது. துறைமுகங்கள் நீராவிக் கப்பல்கள் ஆகிய அரசாங்கத்தாலேயே

நடத்தப்பட்டன. 1933-ல் அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்கென்று ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டியது. இவை தவிர குடியானவர்களுக்கு மீது விதிக்கப்பட்டிருந்த 'டைத்' (Tithe) என்ற பத்தில் ஒரு பங்கு தீர்வை ரத்து செய்யப்பட்டது.

### 5. மதசார்பின்மை **(Secularism)**

முஸ்தாபா கமால் பாஷா நாட்டின் சமயத்துறையில் பெரும் மாறுதல்களைக் கொண்டு வந்தார். அரசியலில் மதம் சேர்ந்திருப்பது நாட்டின் வளர்ச்சியைத் தடைசெய்யும் என்று நினைத்தார். எனவே துருக்கியக் குடியரசு 'ஒரு மத சார்பற்ற அரசாக' இருக்க வேண்டும்மென்று பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். காலம் காலமாக இருந்து வந்த காலி∴பா (Caliphate) பதவி ஒழிக்கப்பட்டது. சமய நீதிமன்றங்கள் ஒழிக்கப்பட்டன. புதிதாக ஒரு சமயத்துறை அமைக்கப்பட்டு அது பிரதம அமைச்சரின் மேற்பார்வையில் வைக்கப்பட்டது. நாட்டில் சமயப் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டன. புனிதக் கல்லறைகளும் மூடப்பட்டன. 1928-ல் 'துருக்கி ஒரு இஸ்லாமிய நாடு' என்ற வார்த்தை அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் முஸ்லீம் மதபோதனை நிறுத்தப்பட்டது. 1939க்குள் துருக்கி ஒரு சமய சார்பில்லாத நாடாகியது.

### 6. புரட்சிகரமான சீர்திருத்தங்கள் **(Revolutionism)**

கமால்பாஷா புரட்சிகரமான சீர்திருத்தங்களை துருக்கியில் புகுத்தி, நாட்டை மேற்கத்திய மயமாக்கினார். மக்கள் ∴பெஸ் (Fez) என்ற பழைமை வாய்ந்த தொப்பியை அணியக்கூடாது என்றும், மேலை நாட்டினர் அணியும் தொப்பியை (Hat) அணிய வேண்டும் என்று உத்தரவிட்டார் கமால். 1926-லிருந்து முஸ்லீம் நாட்காட்டி பின்பற்றப்படுவது கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக மேலை நாடுகளிலுள்ள கிரிகோரியன் நாட்காட்டி முறை பின்பற்றப்பட்டது. வெள்ளிக்கிழமை அரசு விடுமுறைக்குப் பதிலாக ஞாயிறு விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது. நாட்டில் லஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் குற்றம் என்ற கூறப்பட்டது. அது நிரூபிக்கப்பட்டால் லஞ்சம் வாங்கிய அதிகாரிகள் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

பெண்கள் அந்தஸ்து உயர்வதற்கு பெண்கள் மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், அதிகாரிகளாகவும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும் ஆக வேண்டும் என்று கூறினார் கமால்பாஷா. பலதார மணம் தடைசெய்யப்பட்டது. 1934-ல் பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டது. 1935-ல் நடைபெற்ற தேர்தலில் 35 பெண்கள்

சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவ்வாறு கமால்பாஷா பல புரட்சிகரமான சீர்திருத்தங்களை மேற்கொண்டு துருக்கியை நவீனப்படுத்தினார்.

**கமாலின் வெளிநாட்டுக் கொள்கை:**

**மோல் விவகாரம்:**

மோசல் என்பது ஒரு எண்ணை வளம் நிறைந்த துருக்கியப் பகுதியாகும். இந்தப்பகுதிக்கு துருக்கியும், பிரிட்டனின் கீழிருந்த ஈராக்கும் உரிமை கொண்டாடின. இதனை விசாரித்த சர்வதேச சங்கம் மோசல் பகுதியை ஈராக்குக்கு அளித்ததால் துருக்கிக்கும் இங்கிலாந்துக்குமிடையே மனக்கசப்பு ஏற்பட்டது.

**ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுடன் உடன்படிக்கை:**

மோசல் தனக்குக் கிடைக்காததால் வெறுப்படைந்த துருக்கி ரஷ்யாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டது. இதனால் ரஷ்யாவின் அரசியல் பொருளாதார ஆதரவு துருக்கிக்கு கிடைத்தது. 1926-ல் இங்கிலாந்துடன் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி மோசல் பகுதியிலிருந்து கிடைக்கும் எண்ணை வள லாபத்தில் ஒரு பகுதியை துருக்கிக்குக் கொடுக்க ஈராக் ஒப்புக் கொண்டது. 1928-ல் ஆப்கானிஸ்தானத்துடன் கமால் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்.

**மதிப்பீடு:**

இவ்வாறு கமால்பாஷா எண்ணற்ற சீர்திருத்தங்களைப் புகுத்தி நாட்டை நீவனமயமாக்கினார். துருக்கிய மக்களுக்கு எது நன்மை பயக்கும் என்பதையும், அதை எவ்வாறு அடையமுடியும் என்பதையும் அறிந்திருந்தார். துருக்கிய மக்களின் நலனில் அவருக்கு ஆழ்ந்த அக்கரையிருந்தது. இந்த வகையில் அவர் துருக்கியின் நலம் நாடும் சர்வாதிகாரியாகவே செயல்படடார். ஐரோப்பாவின் நோயாளியாக இருந்த துருக்கி, முஸ்தாபா கமால்பாஷாவின் சீர்திருத்தங்களாலும், கொள்கைகளாலும் ஒரு முன்னேற்றமடைந்த வலிமையான நாடானது. எனவே தான் கமால்பாஷா ‘நவீன துருக்கியின் தந்தை’ என்று அழைக்கப்படுகிறார்.

## 15. இத்தாலியில் பாசிசம்

## (FASCISM IN ITALY)

முதல் உலகப் போரில் இத்தாலி நேசநாடுகளின் சார்பாக ஜெர்மனிக்கு எதிராகப் போரிட்டது. முதலில் நடுநிலை நாடாக இருந்தாலும், 1915-ல் நேச நாடுகளுடன்

லண்டனில் ஒரு ரகசிய உடன்படிக்கை செய்து கொண்டு போரில் நேச நாடுகளின் சார்பாக இறங்கியது. முதல் உலகப் போருக்குப் பின்னர் நடைபெற்ற பாரிசு மாநாட்டில் லண்டன் ரகசிய உடன்படிக்கைப்படி தனக்கு வாக்களிக்கப்பட்ட பகுதிகள் கிடைக்காமல் போனதால் ஏமாற்றமடைந்தது. இதன் விளைவாக இத்தாலியில் குழப்பங்கள் ஏற்பட்டன. மக்களிடம் அதிருப்தி நிலவியது. இதன் விளைவாக மக்களிடம் பாசிசக் கருத்துக்கள் வேகமாகப் பரவின. பெனிடோ முசோலினியின் தலைமையில் இத்தாலியில் பாசிச அரசு அமைக்கப்பட்டது. இந்த பாசிச அரசாங்கம், ஜெர்மனியின் நாசிச அரசாங்கத்துடன் சேர்ந்து ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு இரண்டாம் உலகப் போருக்குக் காரணமானது. இரண்டாவது உலகப்போரில் இத்தாலி தோற்கடிக்கப்பட்டது. முசோலினி கொல்லப்பட்டார். அத்துடன் பாசிசமும் அழிந்தது.

## இத்தாலியில் பாசிசம் வளர்ந்ததற்கான காரணங்கள்:

### 1. பாரிசு அமைதி நாட்டில் இத்தாலியின் ஏமாற்றம்:

1915-ம் வருட லண்டன் ரகசிய உடன்படிக்கையின்படி நேசநாடுகள், போர் முடிவடைந்தபின், தைரால், டிரிஸ்டி, தால்மேஷியப்பகுதிகள், வலோனோ, ஆப்பரிக்க ஜெர்மனியக் காலனிகளில் சில பகுதிகள் ஆகியவற்றை இத்தாலிக்கு கொடுப்பதாக வாக்களித்திருந்தன. பாரிசு மாநாட்டில் இந்தப் பகுதிகளை நேச நாடுகள் இத்தாலி வழங்காததால், இத்தாலி பெருத்த ஏமாற்றம் அடைந்தது. இத்தாலி மிகவும் விரும்பிய ∴பியூம் (குரஅந) கிடைக்கவில்லை. எனவே இத்தாலியத் தலைவர்கள் ஏமாற்றமடைந்தனர். மக்கள் நாட்டின் தலைமையின் மீதும் ஜனநாயக இயக்கங்களின் மீதும் வெறுப்படைந்து, பாசிசக் கருத்துக்கள் மீது நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தனர்.

### 2. விடுதலை வீரர் டி அனுன்சியோ (D' Anunzio):

டி அனுன்சியோ என்பவர் இத்தாலியின் தேசபக்தர். உலகப்போருக்குப் பின் இத்தாலிக்கு நன்மை ஏதும் கிடைக்காததால் ஏமாற்றம் அடைந்தவர்களில் இவரும் ஒருவர். எனவே இவர் தனது ஆதரவாளர்களுடன் ∴பியூம் துறைமுகத்திற்கு கப்பலில் சென்று அதனைக்கைப்பற்றினர். ஆனால் இத்தாலியப் பிரதமர் ஜியோலிட்டி (புழைடவைவை) டி அனுன்சியோவின் செயல்களால் ஆத்திரமடைந்து ∴பியூமிலிருந்து அவரை வெளியேற்ற ஒரு போர்க்கப்பலை அனுப்பினார். இது இத்தாலியத் தேசியவாதிகளிடையே மனவருத்தத்தை ஏற்படுத்தியது. இதனால் இத்தாலிய ஆட்சியாளர்கள் தேசபக்திக்கு எதிரானவர்கள் என்ற உணர்வு மக்களிடையே ஏற்பட்டது.

### 3. ஜனநாயக அரசு மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு:

இத்தாலியத் தேசியவாதிகள் முதல் உலகப் போருக்குப்பின் ஜனநாயக அரசு மீது நம்பிக்கை இழந்தனர். இத்தாலியில் வேலை நிறுத்தங்களும் கிளர்ச்சிகளும் அடிக்கடி நிகழ்ந்து வந்தன. அமைதியை நிலை நிறுத்துவது அரசாங்கத்தின் கடினமான பணியானது. நாட்டு மக்களிடம் வலிமையான, பாரம்பரியமிக்க ஜனநாயக உணர்வு இல்லாததாலும, பல கட்சி ஆட்சி முறையின் குறைபாடுகளினாலும், ஜனநாயக நிறுவனங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்தனர். 1919 முதல் 1922 வரைக்குள் இத்தாலிய அரசில் ஆறு முறை மாற்றங்கள் ஏற்பட்டது. எனவே நிலையான, நல்ல ஆட்சியை வழங்குவதாகக் கூறிய பாசிசக் கருத்துக்கள் வளர்ச்சியடைந்தன.

**4. மோசமான பொருளாதார நிலை:**

முதல் உலகப் போரினால் இத்தாலி பொருளாதார ரீதியாக பெருநஷ்மடைந்தது. வெளிநாட்டு வியாபாரம், சுற்றுலாப் பயணிகள் மூலம் கிடைத்த அந்நியச் செலாவணி ஆகியவை பாதிக்கப்பட்டன. இத்தாலிய நாணயமான லியர் மதிப்பு வீழ்ச்சியடைந்தது. இந்தப் பிரச்சனைகளை அரசாங்கத்தினால் தீர்க்க முடியவில்லை, வேலை நிறுத்தம் கதவடைப்பு ஆகியவை அதிகரித்தது. இப்படிப்பட்ட குழப்பமான பொருளாதார நிலை பாசிசக் கருத்துக்களின் வளர்ச்சியை வேகப்படுத்தியது.

**5. வேகமாகப் பரவிய கம்யூனிசக் கொள்கை:**

இத்தாலியில் நிலவிய மோசமான பொருளாதார நிலையால் அங்கு கம்யூனிசக் கருத்துக்கள் வேகமாகப் பரவின. தொழிலாளர்களிடம் இந்த புரட்சி கொள்கைகள் வேகமாகப் பரவியது. பல தொழிற்சாலைகள் கம்யூனிசத்தின் கட்டுப்பாட்டில் வந்தது. இதைக் கண்டு பயந்த நிலச்சுவான்தாரர்கள், முதலாளிகள் ஆகியோர் முசோலினியிடம் பாதுகாப்புப் பெற்றார்கள். கம்யூனிசக் கருத்துக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முசோலினி மேற்கொண்டதால் அவரது பாசிசக் கட்சி வேகமாக வளர்ச்சியடைந்தது.

**6. மக்களைக் கவர்ந்த பாசிசக் கட்சியின் கொள்கைகள்:**

முசோலினியின் பாசிசக் கட்சி, மக்களைக் கவரும் விதத்தில் கொள்கைகளை வெளியிட்டது. அது அனைத்துப் பிரிவு மக்களையும் திருப்திப்படுத்துவதாக அமைத்தது. கம்யூனிசத்திற்கு எதிர்ப்பு, தொழிற்சாலைகளைத் தேசியமயமாக்குதல், நிர்வாகத்தில் தொழிலாளர்கட்குப் பங்கு, வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே ஒழித்தல், பண்டைய ரோமானிய மரபுகளைக் காத்தல், ஃபியூம் டால்மேஷியா ஆகிய பகுதிகளை மீண்டும் இத்தாலியுடன் இணைத்தல் ஆகிய பாசிசத்தின் கொள்கைகள் மக்களை வெகுவாகக் கவர்ந்தன. பாசிசத்தைப்பற்றி முசோலினி கூறியதாவது: “Fascism is a Faith-it is one of

those spiritual forces which renovates the history of great people" இதனால் கவரப்பட்ட அனைத்துத் தர மக்களும் பாசிசக் கட்சியில் சேர்ந்தார்கள். பாசிசக் கட்சி வளர்ச்சியடைந்தது.

**7. முசோலினியின் வாக்குறுதிகள்:**

முதல் உலகப் போருக்குப் பின்னர் இத்தாலியில் நிலையான ஆட்சி இல்லை. பல இடங்களில் தெருச்சண்டைகள் நடைபெற்றன. இதனை அரசால் அடக்க முடியவில்லை. மேலும் கம்யூனிச அபாயத்தினால் அரசாங்கம் நிலை குலைந்து காணப்பட்டது. இந்த நிலையில் தான் முசோலினி நாட்டில் வலிமையான, நிலையான அரசாங்கத்தை அமைப்பதாக வாக்குறதி அளித்தார். தொழிற்சாலைகளில் அமைதியை ஏற்படுத்துவதாகவும், நாட்டில் சோசலிசம், கம்யூனிசம், முதலாளித்துவம் ஆகிய கொள்கைகளை நசுக்குவதாகவும் வாக்களித்தார். இதனால் இவரது கொள்கைகள் வேகமாக வளர்ச்சியடைந்தது.

**8. ரோம் நகரை நோக்கி முசொலினியின் பயணம்: 1922**

இத்தாலியில் வேகமாக வளர்ந்த பாசிசக் கட்சி பல தேர்தல்களில் பங்கு கொண்டாலும், பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீது அதற்கு நம்பிக்கை இல்லை. நம்பு, பணிசெய், போரிடு என்பதே பாசிசத்தின் தாரக மந்திரமாகும். பாசிசக் கட்சியினர் கருஞ்சட்டை அணிந்தனர். எப்போதும் துப்பாக்கி ஏந்தியே அலைந்தனர். கம்யூனிஸ்ட்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டார்கள். 1922 செப்டம்பர் மாதம், ரோம் நகரை நோக்கிப் புறப்படு (March to Rome) என்ற கோஷத்தை வெளியிட்டார் முசோலினி. 1922 அக்டோபர் 27-ம் தேதி பாசிச கருஞ்சட்டை ராணுவ வீரர்கள் ரோம் நகரை நோக்கிப் புறப்பட்டார்கள்.

ரோமில் ஆட்சி புரிந்து வந்த மூன்றாம் விக்டர் இமானுவேல் இந்த பிரமாண்டமான ஊர்வலத்தைக் கண்டு பயந்து முசோலினியை இத்தாலியில் ஆட்சியமைக்க வருமாறு அழைத்தார். இதற்கு முக்கியக் காரணம் இத்தாலியில் கம்யூனிசப் புரட்சி எற்பட்டு விடுமோ என்ற இமானுவேலின் பயமே ஆகும். 1922-ல் அரசாங்கத்தை அமைத்த முசோலினி, பிரதமராகி, பின்னர் சர்வாதிகாரியானார். மிகச் சீக்கிரத்தில் நாட்டை பாசிச மயமாக்கினார். 1936-ல் பாசிசக் கோட்பாடுகளை வெளியிட்டார் முசோலினி.

மேற்கண்ட சூழ்நிலைகள்தான் இத்தாலியில் முசோலினி தலைமையில் பாசிசக் கட்சி வளர்வதற்கும் பாசிச ஆட்சி ஏற்படுவதற்கும் காரணமாக அமைந்தது.

பாசிசத்தின் முக்கியக் கோட்பாடுகள்:

1. நாட்டின் உயர்வு (**State**):

பாசிசக் கோட்பாட்டின்படி நாடே உயர்வானது ஆகும். தனிப்பட்ட நபர்களைவிட, அவர்களின் விருப்பு வெறுப்பை விட நாடு உயர்வானது ஆகும். அது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆன்மீக நிறுவனமாகும். மக்களைப் பாதுகாக்கும் ஒரு பாதுகாப்பு நிறுவனமாகும். கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றையும் இணைக்கும் ஓர் உன்னத நிறுவனமாகும். முசோலினியின் கூற்றுப்படி, “Everything in the State, nothing outside the State, nothing against the State.”

2. நாடே அனைத்து அதிகாரங்களையும் கொண்டது:

நாடே அனைத்து அதிகாரங்களையும் கொண்டது. ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வும் நாட்டிற்குக் கட்டுப்பட்டது ஆகும். எனவே மனிதனைக் கட்டுபபடுத்துகின்ற முழு உரிமையும் நாட்டிற்கு உண்டு. மனிதன் வாழ்வது இயங்குவது அனைத்துக்கும் காரணம் நாடுதான் என்று கூறப்பட்டது.

3. போரின் பெருமை:

முசோலினி போரைப் பெருமைப்படுத்தினார். ஒரு பெண்ணுக்குக் குழந்தைப்பேறு எவ்வளவு முக்கியமானதோ, அதைப் போல ஆணுக்கு போர் முக்கியமானது ஆகும். சமுதாயத்தை உயர்த்துவதே போர் தான் என்றார். அமைதியாக இருந்தால் மனித இனமே அழிந்து விடும் என்றார் முசோலினி!

4. ஏகாதிபத்தியம்:

பாசிசக் கோட்பாட்டின் முக்கிய அம்சமே அதன் ஏகாதிபத்தியக் கோட்பாடு ஆகும். இத்தாலியப் பேரரசை விரிவுபடுத்துவதே தனது நோக்கம் என்றார் முசோலினி. இத்தாலிய விரிவாக்கம் என்பது வாழ்வா, சாவா என்பதைப் போன்றது. ஆக்கிரமிப்புப் போர் நடவடிக்கைகளையும், ஏகாதிபத்திய விரிவாக்கத்தையும் போதித்தார். பன்னாட்டு அமைதி என்பது கோழைகள் காணும் கனவு என்றார். எனவே பாசிசக் கொள்கையானது பன்னாட்டுத் தொடர்புகளுக்கு எதிரானதாகவும், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரமாகவும் அமைந்தது.

5. ஜனநாயக எதிர்ப்பு:

பாசிசம் என்பது ஜனநாயகத்திற்கு எதிரான கோட்பாடு ஆகும். முசோலினியின் கூற்றுப்படி, பாராளுமன்றம் ஒரு பேசும் படையாகும். நாட்டில் தனிமனிதனுக்கென்று எந்த உயர்வும் கிடையாது. நாட்டிற்கு அடிபணிவதே மனிதனின் உயர்ந்த பணியாகும். எனவேதான் இத்தாலியில் ஜனநாயகம் நசுக்கப்பட்டது. உரிமைகள் பறிக்கப்பட்டன. தனிமனித சுதந்திரம் பறிக்கப்பட்டது. ஒரு பயங்கரமான எதேச்சதிகாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. ‘Give the administration to a good man and believe him’ என்றார் முசோலினி.

## முசோலினி உள்நாட்டுக் கொள்கை:

(முசோலினியின் சாதனைகள் அல்லது பணிகள்)

### 1. பெனிடோ முசோலினியின் வாழ்க்கைக் குறிப்பு:

பெனிடோ முசோலினி 1833-ல் ரொமாக்னாவிலுள்ள பிரிடப்பியா (ீசநனயீியை) என்ற இடத்தருகே பிறந்தார். இவரது தந்தை தீவிர சோசலிச கருத்துக்களைக் கொண்ட ஒரு கொல்லர் (டிடயஉமளஅவைா) ஆவார். இவருடைய தாயார் ஒரு பள்ளி ஆசிரியை, அவரது சம்பளத்தில் தான் குடும்பமே வாழும் நிலை. தாயாரின் விருப்பப்படி முசோலினி ஆசிரியரானார். ஆனால் சீக்கிரமே வேலையை விட்டுவிட்டு 1902-ல் தனது 19-ம் வயதில் மேற்படிப்புக்காக சுவிட்சர்லாந்து சென்றார். அங்கு பல பத்திரிக்கைகளில் சமதர்ம கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகள் எழுதினார்.

சுவிட்சர்லாந்தில் முசோலினி கடுந்துன்பமடைந்தார். பாலத்துக்கடியிலும், சில சமயம் பொதுக்கழிப்பறைகளிலும் படுத்துக் தூங்கினார். குறைந்த கூலியில் தினவேலை செய்தார். கடைசியில் லாசேனில் தொழிற்சங்கம் ஒன்று அமைத்தார். முசோலினி இயற்கையாகவே நல்ல எழுத்தாளர். மார்க்ஸ், சோபன்ஹார், நீட்சே, கிராப்ட்கின், லாசேல் (Marx, Schopenhure, Nietzsche, Kroptkin, Lassalle) ஆகிய அரசியல் ஞானிகளின் தத்துவங்களைப் படித்தார். அரசாட்சி, பாதிரியார்கள், வீரர்கள், பேங்கர்கள் ஆகிய அனைவரையும் கண்டித்து கட்டுரைகள் பல எழுதினார். இவர் தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு போராட்டம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார்.

1914-ல் மீண்டும் இத்தாலி வந்தபோது மிலானிலிருந்து முனிசிபல் கவுன்சிலின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பல போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றார். “IL popolo d Italia” என்ற பத்திரிக்கையின் எடிட்டரானார். முதல் உலகப் போரின்

போது ஒரு படை வீரராகச் சேர்ந்து காயமடைந்து 1517-ல் வீடு திரும்பினார். அதிலிருந்தே இவர் பாசிசப் புரட்சிக் கருத்துக்களைப் பின்பற்றினார்.

இவர் பின்பற்றிய கொள்கைகளுக்குப் பாசிசம் (Fascism) என்ற பெயர். இந்தச் சொல் லத்தீன் சொல்லான "Fasces" என்பதிலிருந்து வந்ததாகும். இதற்கு இருப்புக் கழிகளாலான ஒரு கட்டு (Bundel of rods) என்று பெயர். எனவே இச்சொல் கட்டுப்பாடு, வலிமை, ஒற்றுமை ஆகிய மூன்றையும் குறிப்பாதாகும். ரோமானியப் பேரரசின் தலைமை அதிகாரிகள் செல்லும் போது அவர்கட்கு முன்னால் அவர்களது அதிகாரத்தின் சின்னமாக விக்டர்களால் தூக்கிச் செல்லப்பட்ட பாசல்ஸ் என்ற கழிகளைக் குறிக்கும் சொல்லாகும். இரும்புக் கழிகளாலான கட்டும், கோடாலியும் பாசிஸ்டுகளின் சின்னமானது. (Bundle of rods surrounded by axe)

மேலும் Fascio என்றால் இத்தாலிய மொழியில் ஒரு குழுவைக் Group குறிக்கும் சொல்லாகும். 1919 அக்டோபரில் முசோலினி மிலானில் முதல் பாசிசக்குழுவை (Fasci di combattimento-the Fascist group of fighters) அமைத்தார். இந்த அமைப்பு முதலில் நகரங்களில் பரவி பின் கிராமங்களில் ஊடுருவியது. இந்த இயக்கத்தில் உலகப் போரில் பங்குகொண்ட வீரர்கள், மாணவர்கள், நடுத்தர வகுப்பு இளைஞர்கள் அதிகமாகச் சேர்ந்தார்கள். அவர்களுக்கு ராணுவ முறையிலான பயிற்சி அளிக்கப்பட்டது. பாசிச இயக்கத்தின் உறுப்பினர்கள் கருஞ்சட்டை அணிந்தனர். எனவே இதற்கு கருஞ்சட்டை இயக்கும் (Black shirts) என்ற பெயரும் ஏற்பட்டது. 1919-ல் முதல் பாசிச மாநாடு நடைபெற்றபோது நாடு முழுவதிலும் இருந்த 22 பாசிசக் குழுக்களில் 17 ஆயிரம் உறுப்பினர்கள் இருந்தார்கள். 1920-ல் பாசிசக் குழுக்களின் எண்ணிக்கை 118 ஆனது. அவைகளில் முப்பதாயிரம் உறுப்பினர்கள் இருந்தனர். 1921-ல் நாடு முழுவதிலும் இருந்த 2200 பாசிசக் குழுக்களில் மூன்று லட்சம் உறுப்பினர்கள் இருந்தனர். னுந டீழழெஇ னுந ஏநநஉாை ஆகிய முக்கிய பாசிசத் தலைவர்கள் இந்த இயக்கத்தை வளர்த்தனர்.

பாரிசு உடன்படிக்கை ஏமாற்றத்தைக் கொடுத்தாலும் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிற பிரச்சனைகளாலும் மக்களின் வாழ்க்கை ஸ்தம்பித்திருந்த போது முசோலினி தனது தீவிரவாதக் கருத்துக்களைப் பரப்பி மக்களின் ஆதரவைப் பெற்றார். மக்களால் னுரஉந (தலைவர்) என்று செல்லமாக அழைக்கப்பட்ட தலைவர் முசோலினி எண்ணிக்கையில்லாத பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். ஆனால் அவர் மக்களின் தலைவராக இருந்தபடியால் எல்லாம் மறைக்கப்பட்டன.

**2. இத்தாலியில் எதேச்சதிகார அரசை நிறுவுதல்:**

1922-ம் ஆண்டு அக்டோபர் மாதம் அதிகாரத்தைக் கைப்பற்றிய முசோலினி, உள்நாட்டு நிர்வாகத்தைப் பாசிசமயமாக்கினார். தனக்கு எதிராக அரசாங்கத்திலிருந்த அனைத்து சக்திகளையும் ஒவ்ரா (Ovra) என்ற ரகசிய பாதுகாப்புப் படையின் உதவியுடன் நசுக்கினார். 1924 எப்ரலில் நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மை பெற்ற பிறகு பல தீவிரமான நடவடிக்கைகளை மெற்கொண்டார் முசோலினி.

இத்தாலியில் போராட்டங்கள் தடைசெய்யப்பட்டது. பத்திரிக்கை சுதந்திரம் பறிக்கப்பட்டது. நகராட்சி நிறுவனங்கள் அரசியல் உரிமைகளை இழந்தன. பாசிசக் கட்சி தவிர எல்லா எதிர்கட்சிகளும் தடை செய்யப்பட்டன. சட்டங்களை இயற்றுவதற்கும் அதனைச் செயல்படுத்துவதற்கும் முசோலினிக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. 1921-ல் புதிய தண்டனைச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டு முசோலினி அரசருக்கு சமமானவர் என்றும், அவரைக் கொலை செய்ய முயலுபவர்கட்கு மரண தண்டனை வழங்கப்படும் என்றும் கூறப்பட்டது. நாட்டிலுள்ள தொழிற்சங்கங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டது. விவசாயம், தொழில், வாணிபம், உள்நாட்டுப் போக்குவரத்து, கடல், வானவழிப் போக்குவரத்து, வங்கித்துறை ஆகியவைகளின் செயல்பாடுகள் ஒருமுகப்படுத்தப்பட்டு தேசியக் கவுன்சிலின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது.

இவ்வாறு நாட்டிலுள்ள ஜனநாயக இயக்கங்கள் ஒழிக்கப்பட்டன. தனிமனித உரிமை நசுக்கப்பட்டது. எல்லாம் நாட்டின் நலனுக்காவே என்ற கோட்பாட்டின் அடிப்படையில் எதேச்சதிகார அரசை அமைத்தார். இவரை எதிர்த்தவர்கட்கு சிறைவாசம், நாடுகடத்தல், மரணதண்டனை ஆகிய தண்டனைகள் வழங்கப்பட்டன.

**3. பொருளாதார சீர்திருத்தங்கள்:**

முசோலினி, பொருளாதாரத்தில் இத்தாலியை ஒரு சுய சார்புடைய நாடாக மாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார். எனவே விவசாயத்துறை வளர்ச்சியில் ஆர்வம் கொண்டார். உற்பத்தியை அதிகரிக்க தானியத்திற்காக யுத்தம் (War for grain) என்ற கோஷத்தை எழுப்பினார். சதுப்பு நிலங்கள் திருத்தப்பட்டன. ரசாயன உரங்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. விசாயிகட்கு உதவ விவசாயக் கடன் வங்கி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

தொழில் உற்பத்தியிலும் இத்தாலி உலகத்தில் முதலிடம் வகித்தது. சர்வதேசச் சந்தையில் இத்தாலியில் செய்யப்பட்ட கார்கள் பெருமதிப்பு பெற்றன. இத்தாலியில் சுற்றுலா வளர்ச்சியை முசோலினி ஆதரித்தார். இதனால வருமானம் அதிகமாகக் கிடைத்தது. இவர் காலத்தில் கடல் போக்குவரத்து மூலமாகவும் அதிக வருமானம்

கிடைத்தது. இவ்வாறு முசோலினியின் பொருளாதார நடவடிக்கைகளால் இத்தாலியின் பொருளாதார நிலை உயர்ந்தது.

4. **லேட்டரன் உடன்படிக்கை:**

முசோலினியின் தலைமையிலான பாசிச அரசாங்கத்தின் தலைசிறந்த சாதனையாக கருதப்படுவது லேட்டரன் உடன்படிக்கையாகும். போப்பாண்டவருக்கும் முசோலினிக்கும் இடையே ஏற்பட்டதே லேட்டரன் உடன்படிக்கையாகும். மதத்தை அரசுக்கு ஆதரவாகப் பயன்படுத்தவே முசோலினி லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். இந்த உடன்படிக்கை போப்பாண்டவர் பதினொன்றாம் பயஸ் என்பவருக்கும் இத்தாலிய அரசாங்கத்துக்குமிடையே ரோம் நகரிலுள்ள லேட்டரன் என்ற அரண்மனையில் 1929, பிப்ரவரி 11-ம் தேதி கையெழுத்தானது. இந்த உடன்படிக்கையின்படி

1) போப்பாண்டவர் ரோம் நகரத்தின் மீதான தனக்கிருந்த உரிமையை விட்டுக் கொடுத்தார். அத்துடன் ரோமை, இத்தாலிய அரசாங்கத்தின் தலைமை இடமாக ஏற்றுக் கொண்டார்.

2) அதற்குப் பதிலாக இத்தாலிய அரசு போப்பாண்டவரின் முழுமையான அதிகாரத்திலுள்ள வாடிகன் நகரை தனி இறைமை உள்ள சுதந்திரப் பகுதியாக அங்கீகரித்தது.

3) கத்தோலிக்க மதம் தெசிய மதமாக அங்கீகரிக்கப்பட்டது. போப்பாண்டவரின் ஆணைகளை இத்தாலிய நாட்டு மக்கள் மீது நடைமுறைப்படுத்த அரசு ஒப்புக்கொண்டது.

4) போப்பாண்டவர் இத்தாலியை ஆண்டுவரும் செவாய் அரச குடும்பத்தை அங்கீகரித்தார்.

இந்த லேட்டரன் உடன்படிக்கை மூலம் 1870-ல் போப்பின் பகுதிகள் இத்தாலியுடன் இணைக்கப்பட்டதிலிருந்து போப்பாண்டவருக்கும், இத்தாலிய அரசாங்கத்திற்குமிடையே இருந்து வந்த தகராறு முடிவுக்கு வந்தது. எனவே கத்தோலிக்கரின் அதரவைப் பெற்றார் முசோலினி. இவ்வாறு பாசிஸ்டகளும் கத்தோலிக்கர்களும் ஒன்றுபடவே, முசோலினியின் கரங்கள் வலுவடைந்தன.

## முசோலினியின் வெளிநாட்டுக் கொள்கை:

**(ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்)**

முசோலினி தனது வெளிநாட்டுக் கொள்கையில் கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டிருந்தார்.

1. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் இத்தாலிக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை உடைத்தெறிவது.

2. இத்தாலியில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பதற்குச் சந்தையை ஏற்படுத்தவும், அதிகரித்து வரும் மக்கள் தொகைக்குத் தேவைப்படும் உறைவிடத்தை அளிக்கவும், புதிய குடியேற்றங்களை ஏற்படுத்துவது.

3. இத்தாலியின் பழமைவாய்ந்த புகழையும் பெருமையையும் உயர்த்தி, பன்னாட்டு அளவில் இத்தாலிக்கு மீண்டும் உரிய அந்தஸ்தைப் பெற்றுத் தருவது.

4. பல பகுதிகளைக் கைப்பற்றி, இத்தாலிய எல்லைகளை விரிவாக்குவது, மத்தியதரைக் கடல் பகுதியில் இத்தாலியின் ஆதிக்கத்தை ஏற்படுத்தி அதனை இத்தாலிய ஏரியாக மாற்றுவது ஆகியவையாகும். தனது மேற்கண்ட வெளிநாட்டுக் கொள்கைகளைச் செயல்படுத்த கீழ்க்கண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார் முசோலினி. தனது நொக்கங்களை அடைய போர் ஒன்றே வழி என்று வெளிப்படையாக அறிவித்தார். சர்வதேச சங்கத்தின் கட்டுப்பாடுகளை மீறி, பிற நாடுகளின் உரிமைகளை மதிக்காமல் கீழ்க்கண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு இரண்டாம் உலகப்போருக்குக் காரணமானார்.

**1. கொர்பூ (Corfu) நிகழ்ச்சி: 1923**

1923-ல் கிரேக்க நாட்டுடனான எல்லைக் கோடு நிர்ணய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒரு இத்தாலியத் தளபதி கிரேக்கத் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதால், கிரீசுக்குச் சொந்தமான கொர்பு தீவைக் கைப்பற்றினார் முசோலினி, நஷ்ட ஈடும் கேட்டார். சர்வதேச சங்கம் தலையிட்டு 50 மில்லியன் லயர் நஷ்ட ஈட்டுத் தொகையை முசோலினிக்கு வாங்கிக் கொடுத்தது. எனவே கொர்பு தீவை கிரீசுக்குத் திரும்ப அளித்தார் முசோலினி. இந்த நிகழ்ச்சி முசோலினியின் ஆக்கிரமிப்புச் செயல்களின் ஆரம்பத்தையும், எந்த நாட்டிற்கும் கட்டுப்படாமல் எந்தச் செயலிலும் ஈடுபடும் அவரது தைரியத்தையும் வெளிப்படுத்தியது.

**3. ஃபியூம் ஆக்கிரமிப்பு: 1924**

முதல் உலகப்போரின் முடிவில் கூட்டப்பட்ட பாரிசு மாநாட்டில் இத்தாலிக்குத் துறைமுக நகரமான ஃபியூம் கொடுக்கப்படாததால் இத்தாலிய மக்கள் ஏமாற்ற

மடைந்தனர். நேச நாடுகள் மீது அதிக கோபம் அடைந்தார்கள். இத்தாலியத் தேசிய வாதிகள் டி அனுன்சியோ என்பவரின் தலைமையின் கீழ் ∴பியூம் நகருக்குள் நுழைந்தார்கள். இந்தப் பிரச்சனையை முசோலினி தீர்த்து வைத்தார். 1924- ஜனவரி 27-ல் யூகோஸ்லேவியாவுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டு, ∴பியூமின் பெரும் பகுதியை இத்தாலியுடன் இணைத்தார். எஞ்சிய பரோஸ் என்ற சிறு பகுதி மட்டும் யூகோஸ்லேவியாவிற்குக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு ∴பியூம் இத்தாலியுடன் இணைக்கப்பட்டது.

### 3. அல்பேனியா இணைக்கப்படல்: 1939

அல்பேனியா சம்பந்தமாக இத்தாலிக்கும் யூகோஸ்லேவியாவிற்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது. சுதந்திர நாடான அல்பேனியா 1920-ல் சர்வதேச சங்கத்தில் உறுப்பினராகியது. முசோலினி அல்பேனியாவிற்கு பொருளாதார ராணுவ உதவிகளைத் தாராளமாகச் செய்து அதன் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டார். அல்பேனியா இத்தாலியின் கட்டுப்பாட்டில் வந்து விட்டால், யூகோஸ்லேவியாவிற்கு மத்தியத் தரைக்கடல் பகுதிக்கு போகும் வழி அடைப்பட்டு விடும் என்று திட்டமிட்டார் முசோலினி. 1926 நவம்பர் 27-ல் அல்பேனியாவுடன் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டார். அதைத் தொடர்ந்து அல்பேனியாவுக்கும், யூகோஸ்லேவியாவிற்கும் போர் ஏற்பட்டது. அதன் விளைவாக அல்பேனியாவில் உள்நாட்டுக் குழப்பங்கள் நிலவி வந்தது. 1939-ம் வருடம் பெரிய வெள்ளிக்கிழமையன்று திடீரென முசோலினின அல்பேனியா மீது போர் தொடுத்து இத்தாலியுடன் இணைத்துக்கொண்டார். அல்பேனியா அரசர் சாக் (Zog) என்பவர் நாட்டை விட்டு ஓடிவிட்டார்.

### 4. ஸ்ட்ரெஸ்ஸா முன்னனி (**Stressa front**): 1935

1935-ம் ஆண்டு மார்ச் 19-ம் தேதி வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை மீறி ராணுவத்தில் ஆள்சேர்ப்பதற்கான உத்தரவை வெளியிட்டார் ஹிட்லர். இதனை எதிர்த்து உடனடியாக இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து ஏப்ரல் மாதம் ஸ்ட்ரெஸ்ஸா மாநாடு ஒன்றைக் கூட்டினார்கள். இந்த மாநாட்டடில் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையைத் தன்னிச்சையாக மீறும் நாடுகள் கண்டிக்கப்பட்டன. அத்துடன் சர்வதேச சங்கத்தின் கீழ் செயல்படும் கூட்டுப்பாதுகாப்பு முறைக்கு (Collective Security) ஆதரவு தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த ஸ்ட்ரெஸ்ஸா முன்னணி அதிக காலம் நீடிக்கவில்லை. ஜுன் மாதத்தில் இங்கிலாந்திற்கும் ஜெர்மனிக்கும் இடையே ஒரு கடற்படை உடன்படிக்கை ஏற்பட்டது. இதனைக் கண்டு முசோலினி அதிர்ச்சியடைந்தார். இந்த நிகழ்ச்சியிலிருந்து பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளுடனான நட்பிலிருந்து

விலகி, ஜெர்மனி, ஹங்கெரி, துருக்கி ஆகிய நாடுகளுடன் கூட்டுச் சேர முற்பட்டார் முசோலினி.

## 5. முசோலினியின் அபிசீனியப் படையெடுப்பு: (எத்தியோப்பியப் படையெடுப்பு 1936)

**படையெடுப்பிற்கான காரணங்கள்:**

1. அபிசீனியா அல்லது எத்தியோப்பியா என்ற நாடு கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதியிலிருந்த ஒரே சுதந்திர நாடாகும். அபிசீனியா மீது இத்தாலியின் கண் அதிக காலமாகவே இருந்து வந்தது. பேரரசர் மெனலிக் காலத்தில் இத்தாலியர்கள் அபிசீனியா மீது படையெடுத்தார்கள். ஆனால் 1986-ல் நடைபெற்ற அடோவாப் போரில் அபசீனியாவால் இத்தாலி தோற்கடிக்கப்பட்டது. முசோலினியின் தலையில் ஏற்பட்ட பாசிச அரசு அடோவாவில் இத்தாலிக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைப்பதற்காக, அபிசீனியா மீது மீண்டும் படையெடுப்பதை ஒரு கௌரவப் பிரச்சனையாக எடுத்துக்கொண்டது.

2. அபிசீனியாவில் பெருமளவில் காணப்பட்ட தாது வளங்களும், இயற்கை வளங்களும், பெரும் செல்வமும் இத்தாலியைக் கவர்ந்தன.

3. மேலும், இத்தாலியில் பெருகி வந்த ஜனத்தொகையைக் குடியமர்த்துவதற்குத் தகுந்த இடமாக அபிசீனியா அமைந்திருப்பதாக இத்தாலி கருதியது.

4. ஐரோப்பாவில் அப்போது நிலவி வந்த அரசியல் சூழ்நிலையும் முசோலினி அபிசீனியா மீது படையெடுப்பதை ஊக்குவித்தது. காரணம் 1931-ல் மஞ்சூரியாவைத் தாக்கி ஜப்பான் கைப்பற்றிய போது ஐரோப்பிய நாடுகள் முக்கியமாக இங்கிலாந்து சாந்தப்படுத்துதல் கொள்கையையே (Policy of appeasement) பின்பற்றின. மேலும் 1935-ல் ஹிட்லர் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை மீறி படைப்பெருக்கத்திற்கு உத்தரவிட்ட போது எந்த எதிர்ப்பும் வலிமையாகத் தெரிவிக்கப்படவில்லை. இச்சூழ்நிலைகளை முசோலினி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

**அபசீனியா மீது தாக்குதல்:**

அபிசீனியா மீது படையெடுப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கினார் முசோலினி. அதற்காக இத்தாலியப் படைகளை அபிசீனியப் ˙படைகள் மீது சிறு சிறு தாக்குதல்களைத் தொடுக்குமாறு ஏவிவிட்டார். 1934 டிசம்பர் 5-ல் வால்வல் (றுயடறயட)

என்ற கிராமத்தில் நடைபெற்ற தாக்குதல்களின் விளைவாக இருபது இத்தாலியப்படை வீரர்கள் கொல்லப்பட்டார்கள். இதற்கு நஷ்டஈடு தரும்படி அபிசீனியாவிடம் கேட்டார் முசோலினி. இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்த அபிசீனியா முன்வந்தபோது முசோலினி ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே சர்வதேச சங்கத்தின் 10,11,15-ம் விதிகளின்படி, அபிசீனியா 1935 ஜனவரி 5-ல் சங்கத்திடம் முறையிட்டது.

ஆனால் மேற்கத்திய நாடுகள் ஜெர்மனியின் எதிர்கால ஆக்கிரமிப்பைத் தடுப்பதைப் பற்றிய சிந்தனையிலேயே இருந்தன. எனவே இந்த நாடுகள் அபிசீனியப் பிரச்சனையில் அதிக ஈடுபாடு காண்பிக்கவில்லை. இந்த நாடுகள் சர்வதேச சங்கத்தில் இத்தாலியைக் கண்டித்து அதனுடைய ஆக்கிரமிப்பைப்பற்றி நீண்ட விவாதம் செய்து முடிப்பதற்குள் அபிசீனியாவைக் கைப்பற்றிவிடத் திட்டம் தீட்டினார் முசோலினி. அபிசீனிய விவகாரத்தில் தலையிட அமெரிக்காவும் முன்வராதது, முசோலினிக்கு அதிக தைரியத்தைக் கொடுத்தது. உண்மையில் முசோலினியின் அபிசீனியப் படையெடுப்பு, 1935, அக்டோபர் 3-ம் தேதி, சர்வதேச சங்கம் இப்பிரச்சனை பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும்போது நடந்தது. இத்தாலியின் மீது சர்வதேச சங்த்தின் திட்டங்களை மீறி செயல்பட்டுவிட்டது என்றும், அது ஒரு ஆக்கிரமிப்பாளர் என்றும் கண்டனம் தெரிவித்து அக்டோபர் 19-ல் தீர்மானம் ஒன்றை சங்கம் இயற்றியது. அதன்பின் இத்தாலியின் பொருளாதார, ஆயுதத்தடை விதிக்கப்பட்டது. ஆனால முசோலினி எதையும் பொருட்படுத்தாமல் அபிசீனியப் படையெடுப்பைத் தொடர்ந்து நடத்தினார். 1936 மே மாதம் இத்தாலியப் படைகள் அபிசீனியத் தலைநகர் அடிஸ் அபாபாவினுள் நுழைந்தது. அபிசீனிய அரசர் ஹெய்லிசெலசி முடிதுறந்து நாட்டை விட்டு ஓடினார். இத்தாலியப் பேரரசர் மூன்றாம் விக்டர் இமானுவேல் அபிசீனியாவின் பேரரசராகவும் பிரகடனப்படுத்தப்பட்டார்.

**அபிசீனியப் படையெடுப்பின் முக்கியத்துவம்:**

1. முசோலினியின் அபிசீனியப் படையெடுப்பு சர்வதேச சங்த்தின் சட்ட திட்டங்கட்கு எதிரானதாகும். இந்த நிகழ்ச்சி முசோலினியின் தைரியத்தை வெளிப்படுத்தியது.

2. ஆக்கிரமிப்புச் செல்களில் ஈடுபடும் நாடுகளைக் கண்டிக்க முடியாமல், செயல் இழந்து நிற்கும் வலிமையற்ற சர்வதேச சங்கத்தின் உண்மை நிலையை இது வெளிப்படுத்தியது. இதுவே பின்னர் சர்வதேச சங்கம் அழிந்து போகவும் காரணமானது.

3. அபிசீனியப் படையெடுப்பு பிரானஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளின் ராஜதந்திரத் தோல்வியைக் காட்டுகிறது. ஜெர்மனிக்கு எதிராக அமைந்த ஸ்ட்ரெஸ்ஸா முன்னணியின் வீழ்ச்சியை உணர்த்துகிறது.

4. இந்தப் படையெடுப்பிற்குப் பின்னர் இங்கிலாந்து பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளிடமிருந்து இத்தாலி விலகி, ஜெர்மனியுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டது.

5. ஹிட்லர் பின்னர் ஆஸ்திரியாவை இணைத்துக்கொள்வதற்கு அபிசீனியப் படையெடுப்பு முக்கிய காரணமாகும்.

### 6. ஸ்பானிய உள்நாட்டுப் போரில் தலையீடு:

1936-ம் ஆண்டு ஜுலை மாதம் ஜெனரல் பிராங்கோ என்பவர் ஸ்பானிய அரசுக் கெதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டார். அவருக்கு ஆதரவாக ராணுவமும் சேர்ந்து கொண்டது. ஸ்பெயினில் உள்நாட்டுப்போர் நடைபெற்றது. இதில் ஜெனரல் பிராங்கோவிற்கு முசோலினி படைஉதவி செய்தார். இத்தாலியும் ஜெர்மனியும் ஒன்று சேர்ந்து ரகசியமாக பிராங்கோவை ஆட்சியிலமர்த்த உறுதிகொண்டன. சுமார் ஒரு லட்சம் இத்தாலியப் படைவீரர்கள் ஸ்பெயினில் பிராங்கொவிற்கு ஆதரவாகச் செயல்பட்டார்கள். ஸ்பானிய உள்நாட்டுப் போரில் இத்தாலி தலையிடுவதை சர்வதேச சங்கத்தினால் கண்டிக்க முடியவில்லை. 1939-ல் பிராங்கோ தலைமையில் ஒரு பாசிச அரசாங்கம் ஸ்பெயினில் நிறுவப்பட்டது. இது பாசிஸ்ட்டுகளின் வலிமையை ஐரோப்பாவில் உறுதிப்படுத்தியது. கூட்டுப் பாதுகாப்பு முறை ஐரோப்பாவில் வீழ்ச்சியடைந்ததைக் காட்டியது. இங்கிலாந்து பிரான்ஸ் போன்ற ஜனநாயக நாடுகளின் பலவீனத்தை வெளிப்படுத்தியது.

### 7. ரோம்-பெர்லின் அச்சு ஒப்பந்தம்:

முசோலினியின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஹிட்லர் வெகுவாகப் பாராட்டினார். இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் எதிர்ப்பு இல்லாததால் துணிந்து ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இறங்கிய இரண்டு நாடுகளும் நெருங்கி வந்தன. இவ்வாறு பரஸ்பர நன்மைகட்காகவும், கம்யூனிசத்தை எதிர்க்கவும் இரண்டு நாடுகளும் அச்சு ஒப்பந்தம் ஒன்றை 1936-ல் செய்து கொண்டன. இதற்கு ரோம்-பெர்லின் அச்சு ஒப்பந்தம் என்று பெயர். பின்னர் இந்த ஒப்பந்தத்தில் ஜப்பான் சேர்ந்ததும் ரோம்-பெர்லின்-டோக்கியோ ஒப்பந்தம் என்றழைக்கப்பட்டது.

### 8. இரண்டாம் உலகப் போரும் முசோலினியின் வீழ்ச்சியும்:

இரண்டாம் உலகப்போா் 1939, செப்டம்பரில் தொடங்கிய போது இத்தாலி நடுநிலை வகித்தது. போரில் நேச நாடுகள் களைப்படையும் போது அவைகளைத் தாக்க முசோலினி திட்டமிட்டார். அதன்படி 1940-ல் பிரான்ஸ் வீழ்ச்சியடையும் நிலையிலிருந்த போது அதனைத் தாக்கினார். பின்னர் இங்கிலாந்து, கிரீஸ், எகிப்து, சூடான், கென்யா ஆகிய நாடுகள் மீது படையெடுத்தார். 1942-ல் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் எதிராக போர் தொடுத்தார்.

1943 ஜுலை மாதம் நேசநாடுகள் இத்தாலியைத் தாக்கிய போது இத்தாலியின் பாசிச உயர்நிலைக்குழு முசோலினி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியது. படைத்தலைமையை அரசரிடம் ஒப்படைக்குமாறு முசோலினியிடம் கூறியது. முசோலினி மன்னரைச் சந்திக்கச் சென்றபோது கைது செய்யப்பட்டார். முதலில் சார்டீனியா, பின்னர் எல்பா, கிரன்சசோவில் சிறை வைக்கப்பட்டார். ஆனால் ஜெர்மானிய பாராசூட் கேப்டன் ஸ்கோர்ஸினி (Skorzeny) என்பவர் கிரன்சசோவில் இறங்கி முசோலினியைக் காப்பாற்றி ஜெர்மனி கொண்டு சென்றார். இதன்பின் வடஇத்தாலியில் முசோலினி தலைமையில் புதிய பாசிச அரசு நிறுவப்பட்டது.

**9. முசோலினியின் இறுதிக் காலம்:**

முசோலினியின் புதிய அரசாங்கம் கார்டா ஏரிக்கரையிலுள்ள (Lake Garda) சலோ (Salo) என்ற சிறிய நகரத்தில் செயல்பட்டு வந்தது. உண்மையில் இந்த அரசு ஹிட்லரின் கையிலிருந்த ஒரு பொம்மை அரசேயாகும்! 1945-ல் நேசப்படைகள் இத்தாலியைத் தோற்கடித்தன. வடஇத்தாலியில் இருந்து ஜெர்மானிய வீரர் போல வேஷம் போட்டுக் கொண்டு தப்பி ஓடினார் சர்வாதிகாரி முசோலினி! ஆனால் அவர் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு மறுபடியும் கைது செய்யப்பட்டார்.

Count Bellini Delle Stelle- என்ற இடத்தில் சிறை வைக்கப்பட்டார் முசோலினி. ஆனால் கோபமடைந்த மக்கள் கர்னல் வலினி (Colonel Veleni) என்பவர் தலைமையில் போய் முசோலினியையும், அவருடைய மனைவி (கடைசி மனைவி) கிளாரிட்டா பெடாசி (Claretta Patacci) என்பவரையும் பிடித்து வந்து டோங்கோ (Dongo) என்ற இடத்தில் 1945 ஏப்ரல் 28-ல் தெருவில் வைத்து சுட்டுக் கொன்றனர். இவர்கள் இருவர் மற்றும் பதினாறு பேர்களின் உடல்கள் மிலானுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள Piazzle Loreto என்ற இடத்தில் தலைகீழாகச் கட்டி தொங்கவிடப்பட்டன. பல சிறுமைகளுக்கு உள்ளான முசோலினியின் உடல் முசாக்கோ (Mussoco) என்ற கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது. நிபந்தனையின்றி இத்தாலி சரணடைந்தது. அத்துடன் பாசிசமும்

வீழ்ச்சியடைந்தது. முடியாட்சி ஒழிக்கப்பட்டு 1946 ஜுன் 10-ம் தேதி இத்தாலி ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

## 16. வெய்மார் குடியரசு
## (WEIMAR REPUBLIC)

முதல் உலகப்போரின் முடிவில் நேசநாடுகள் ஜெர்மனியுடன் செய்து கொண்ட வெர்செய்ல்ஸ் உடன்படிக்கைப்படி, ஜெர்மனி இழிவான நிலைக்குத் தள்ளப்பட்டது. அதன் பொருளாதார நிலை படுமோசமானது. ஜெர்மனியின் ராணுவ பலம் ஒடுக்கப்பட்டது. வளமான ஜெர்மானியப் பகுதிகள் நேசநாடுகளின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டன. இச்சூழ்நிலையில் ஜொமானிய மக்களிடம் பெரும் அதிருப்தி நிலவியது. நெதர்லாந்துக்குத் தப்பி ஓடிய இரண்டாம் கெய்சர் வில்லியத்திற்கு எதிராகக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. சுருக்கமாகக் கூறினால் வெய்மார் குடியரசு ஜெர்மனியில் தோன்றுவதற்கு முன்னால் ஒரு உள்நாட்டுப் போரே நடைபெற்றது. 1919-ல் தோற்றுவிக்கப்பட்ட வெய்மார் குடியரசு மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாததால் தோல்வியடைந்தது. அதே சமயம் ஹிட்லரின் தலைமையில் நாசிசக் கருத்துக்கள் வளர்ச்சியடைந்து ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

**வெய்மார் குடியரசு தோன்றுதல்:**

முதல் உலகப்போரில் தோல்வியடைந்து கொண்டிருந்த ஜெர்மனி உள்நாட்டுப் பிரச்சனைகளில் சிக்கித் தவித்தது. 1918 நவம்பரில் கீல் கடற்படைத்தளத் தொழிலாளர்கள் புரட்சி செய்தார்கள். அதனைத் தோடர்ந்து பவேரியா, பெர்லின் ஆகிய தொழிற்கூடங்களில் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றது. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி கம்யூனிசவாதிகள் குழப்பத்தை ஏற்படுத்தி ஆட்சியைப் பிடிக்க முயற்சித்தார்கள். இந்த ஜெர்மானிய போல்சிவிக்குகள் ஸ்பார்டகஸ் (Spartacus) என்று அழைக்கப்பட்டார்கள். ஆனால் ஹெர்எபர்ட் (Herr Ebort)-டின் தலைமையினால் சோசலிச ஜனநாயகக் கட்சியினர் போல்சிவிக்குகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை நசுக்கினார்கள். அதன்பின் 1919 பிப்பரவரி 6-ம் தேதி வெய்மார் என்ற நகரில் தேசிய சபையை அமைத்து புதிய அரசியலமைப்பை உருவாக்கினார்கள். இதற்கு வெய்மார்

அரசியலமைப்பு என்று பெயர். அந்த அரசியலமைப்பின்படி ஜெர்மனியில் முடியாட்சி ஒழிக்கப்பட்டு குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்கு வெய்மார் குடியரசு என்று பெயர். எபர்ட் ஜனாதிபதியாக ஏழு ஆண்டு காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டு சபைகளைக் கொண்ட ரீஸ்டாக் என்ற ஜெர்மானியப் பாராளுமன்றம் அமைக்கப்பட்டது. ஒரு நீதிமன்றமும் அமைக்கப்பட்டது. மக்களுக்கு அடிப்படை உரிமைகள் கொடுக்கப்பட்டன.

**வெய்மார் குடியரசு எதிர்நோக்கிய பிரச்சனைகள்:**

புதிதாகப் பதவியேற்ற அரசாங்கம் பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. முக்கியமாக,

1. தீவிரவாதிகளின் நாடு தழுவிய கிளர்ச்சி

2. போரில் வெற்றியடைந்த நாடுகளுடன் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திடுவது.

3. ஜெர்மனிக்கு நிரந்தரமான ஒரு அரசியலமைப்பை உருவாக்குதல் ஆகியவையாகும். கம்யூனிசவாதிகள் கிளர்ச்சிகளை ஒடுக்க ராணுவ வீரர்களுடன் உடன்படிக்கை ஒன்று செய்துகொள்ளப்பட்டு கிளர்ச்சி நசுக்கப்பட்டது. நேச நாடுகள், ஜெர்மனிக்கு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட கெடு விதித்திருந்ததால் வேறு வழியில்லாமல் அதனை எற்றுக் கொண்டு கையெழுத்திட்டது. புதிய அரசியலமைப்பு எழுதப்பட்டு அதன்படி புதிய ஜெர்மன் கூட்டாட்சி நிறுவப்பட்டது. அதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி எபர்ட்டின ஆட்சிக்காலம் 1925-ம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டது. தேசிய சபையின் தலைமையிடம் பெர்லின் நகருக்கு மாற்றியமைக்கப்பட்டது.

**வெர்செய்ல்ஸ் உடன்படிக்கைக்கு எதிர்ப்பு:**

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட அரசாங்கத்தை மக்கள் எதிர்த்தார்கள். உடன்படிக்கையின் ஷரத்துக்களை வெறுத்தார்கள். எனெனில் அதில் ஜெர்மனி ஒரு போர்க்குற்றவாளி என்று கூறப்பட்டிருந்தது. மேலும் வளமிக்க பகுதிகளை ஜெர்மனி இழந்தது. பல குடியேற்ற நாடுகளை இழந்தது. இதனால் தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. உடன்படிக்கைக்கு எதிரான கிளர்ச்சிகளால் நாட்டில் எங்கும் குழப்பம் நிலவியது.

**வெய்மார் குடியரசைக் கவிழ்க்க முயற்சி:**

பல உள்நாட்டுப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாமல் தள்ளாடிக் கொண்டிருந்த வெய்மார் குடியரசை எதிர்த்து ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி நடைபெற்றது. நாட்டின் அரசியல் நிலைமை சீரடையாததாலும், மக்கள் புண்பட்டிருந்ததாலும், நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு கப்புட்ஸ் என்பவர் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் இந்த கவிழ்ப்பு முயற்சி முறியடிக்கப்பட்டது. இச்சமயத்தில்தான் 1920-மார்ச் மாதம் தேசிய ஜெர்மானியத் தொழிலாளர் கட்சி ஒன்று ஜெர்மனியில் உருவாகியது. இதில் ஹிட்லர் உறுப்பினராகச் சேர்ந்தார். இக்கட்சி கம்யூனிச விரோதக் கட்சியாகச் செயல்பட்டது. விரைவில் ஹிட்லர், லூடன்டார்ப் (Ludendorff) ஆகியயோர் தலைமையில் இன்னொரு கவிழ்ப்பு முயற்சி 1923 நவம்பர் 9-ல் நடந்தது. ஆனால் அரசு அதனையும் முறியடித்து ஹிட்லரை ஒன்பது மாதம் ஜெயிலுக்கு அனுப்பியது. அங்குதான் ஹிட்லரை ஒன்பது மாதம் ஜெயிலுக்கு அனுப்பியது. அங்குதான் ஹிட்லர் எனது போராட்டம் (மேயின் காம்ப்) என்ற நூலை எழுதினார். இவ்வாறு வெய்மார் குடியரசு பிரச்சனைகளில் சிக்கித் தவித்தது.

**ரூர் பள்ளத்தாக்கை பிரான்ஸ் கைப்பற்றுதல்: 1923**

